11–11–2008

உள்ளடக்கம்

		பக்கங்கள்
1.	**வினாக்கள்–விடைகள்—**	
	(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்	5-50
	(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1, 2, 3, 4 மற்றும் 5)	51-388
2.	**தகவல் கோரல்—**	
	உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்	389, 395-396, 398-404, 410-413
3.	**முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2008–2009, அளித்தல்—**	389-395
	மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்	389-395
4.	**அறிவிப்புகள்—**	
	(அ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2008-2009— மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்	396
	(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்	396
	(இ) திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக்குழுவிற்கு உறுப்பினர் தேர்வு	397
	(ஈ) இன்று எடுத்துக்கொள்ளப்படவிருந்த உறுப்பினர்களின் மூன்று அறிவிப்புகளை நாளை எடுத்துக்கொள்ளுதல்	450-451
	(உ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 (ஆஇ.)	456

		பக்கங்கள்
5.	**சிறப்புக் கவன ஈர்ப்பு—**	
	(அ) தமிழகத்தில் ஊரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை	399-400 419-427
	திரு. கே.ஏ. செங்கோட்டையன்	399-400, 420-421
	திரு. சி. ஞானசேகரன்	422
	*மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்	422-427
	(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் தண்ணீர் வருவதை கேரள அரசு தடுத்து வருவதால் சுமார் 1000 எக்டேர் பயிர்கள் கருகுவது	427-450
	*திரு. எஸ். ஜாண் ஜேக்கப்	428-429
	திரு. ஞா. ஜாண் ஜோசப்	429-432
	திரு. ஜி.கே. மணி	433-435
	திரு. கே.ஏ. செங்கோட்டையன்	435
	*மாண்புமிகு திரு. துரைமுருகன்	435-444, 446-447, 449-450
	செல்வி கே. பாலபாரதி	434, 444-445,447
	திரு. ஓ. பன்னீர்செல்வம்	447-450
6.	**இலங்கையில் தமிழர் பகுதிகளில் நடைபெறும் போரினால் அங்குள்ள தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு—**	404-410, 413-419
	திரு. சி. ஞானசேகரன்	404-405
	திரு. வை. சிவபுண்ணியம்	406-407
	திரு. சி. கோவிந்தசாமி	408-409

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

6. இலங்கையில் தமிழர் பகுதிகளில் நடைபெறும் போரினால் அங்குள்ள தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு—தொடர்ச்சி

திரு. ஜி.கே. மணி 409-410

திரு. ஓ. பன்னீர்செல்வம் 410,418-419

திரு. டி. சுதர்சனம் 413-414

திரு. நா. இராமகிருஷ்ணன் 415,417,418

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் 416-417

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, 2008 451-452

(ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 452

(இ) தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 453

(ஈ) தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 2008 453-454

(உ) பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 454-455

(ஊ) தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2008 455-456

(எ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 456-457

(ஏ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 457-458

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 458-466

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2039, ஐப்பசி 26

2008 நவம்பர் 11, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9—30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.”

மிக்க உறுதியுடன் காக்கப்பட வேண்டியது அடக்கமாகும். அடக்கத்தைவிட ஆக்கம் தரக்கூடியது வேறொன்றும் இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

1—

மென்பொருள் ஏற்றுமதி

***15005—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் மென்பொருள் ஏற்றுமதியை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 நவம்பர் 11

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவை நகரத்தை மேம்படுத்தும்விதமாக கோயம்புத்தூர் மாவட்டம், விளாங்குறிச்சி கிராமம், மருத்துவக் கல்லூரி வளாகத்தில் முதற்கட்டமாக 29.08 ஏக்கர் நிலமும், இரண்டாம் கட்டமாக 32.51 ஏக்கர் நிலமும் ELCOT நிறுவனத்தின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்திற்கு சிறப்புப் பொருளாதார மண்டலமாகச் செயல்படுவதற்கான அனுமதி இந்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. அரசாணை எண் 49, தொழில் துறை, நாள் 21—2—2007-ன்படி கோயம்புத்தூரில் ELCOT, TIDCO, இந்திய தகவல் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் TIDEL Park சென்னை ஆகிய நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் TIDEL Park அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கோவை TIDEL பூங்கா அமைக்க 24—2—2007 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இந்தப் பூங்கா அமைக்கும் பணி டிசம்பர் 2009—க்குள் முடிவடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நகரில் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களை அமைக்க, திருவாளர்கள் Wipro நிறுவனத்திற்கு 10 ஏக்கர் நிலமும், திருவாளர்கள் TCS நிறுவனத்திற்கு 5 ஏக்கர் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்டு சில நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள இடத்தில் சிறப்புப் பொருளாதார மண்டல விதிகளுக்கு உட்பட்டு, தகவல் தொழில்நுட்பவியல் கட்டடங்கள் தவிர, குடியிருப்பு மற்றும் சமூக வசதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப வளாகம் அமைப்பதற்கு ELCOT நிறுவனத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனாக, இப்பகுதியில் உள்ள தகவல் தொழில்நுட்பவியல் வல்லுநர்களுக்கு மிகச் சிறந்த அளவில் வேலைவாய்ப்பு உருவாவதோடு மென்பொருள் ஏற்றுமதியும் அதிகரிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்களுடைய பதில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அங்கே பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதைப்போலவே தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலைகள்

2008 நவம்பர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 2. மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2—

இயற்கை உரம்

***43830—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் இயற்கை உரம் தயாரிக்கும் விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையால் இயற்கை உரங்கள் தயாரிக்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மண் புழு உரம் தயாரிப்பு பற்றிய பயிற்சித் திட்டங்களில், இயற்கை உரங்கள் உபயோகம் பற்றிய வயல்வெளி விளக்கங்களும், மண் புழு உரம் தயாரிப்பு மையம் தொடங்குவதற்கு நபார்டு வங்கி மூலம் தரப்படும் கடனுதவி பெறுவதற்கு வேண்டிய விவரங்களும் விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

முற்பகல் 9—40

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய இரண்டு மாவட்டங்கள்தான் இன்றைக்குப் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. இந்த இரண்டு மாவட்டங்களிலும் பெயர் சொல்கின்ற அளவிற்கு எந்தவிதமான பெரிய தொழிற்சாலைகளும் இல்லை. இங்கு வாழ்கின்ற மக்கள் அனைவரும் விவசாயத்தை மட்டுமே குலத் தொழிலாகக்

கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் சில நேரங்களில் உரத் தட்டுப்பாடு ஏற்படுகின்ற நேரத்தில் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகின்ற அந்த நேரத்தில், அவர்கள் இயற்கை உரங்களைத் தயாரிக்கின்றபோது, அந்த இயற்கை உரங்களை வைத்து விவசாயத்தை மேன்மைப்படுத்துகின்ற அளவிற்கும், அவர்களை உற்சாகப்படுத்துகின்ற அளவிற்கும், அந்த இரண்டு மாவட்டங்களிலும் இயற்கை உரங்களைத் தயாரிக்கின்ற விவசாயிகளை ஊக்குவிக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடை கொஞ்சம் பெரிதாக இருக்கும். இருந்தாலும் பொறுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாடு சுதந்திரம் அடைந்தபோது இந்தியாவினுடைய மக்கள் தொகை 36 கோடி ஆகவும், உணவு உற்பத்தி 520 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும் இருந்தது. மக்கள் தொகைக்கேற்ப உணவு உற்பத்தி இல்லாததால், உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டிய வேளாண் விஞ்ஞானிகளினுடைய கருத்துகளின்படி, வேளாண்மையில் இரசாயன உரங்கள் பயன்படுத்தச் செய்யப்பட்ட பரிந்துரைகளின்படி, இரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்டு, பசுமைப் புரட்சி காணப்பட்டது. தற்போது இந்தியாவின் மக்கள் தொகை 110 கோடியாக உயர்ந்துள்ள நிலையில், இரசாயன உரங்களைப் பயன்படுத்தியதால் உணவு உற்பத்தி 2,046 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. நாளடைவில் இயற்கை உரங்கள் பயன்பாடு குறைந்து, இரசாயன உரங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்ததால், விளைநிலங்களுடைய மண்ணின் தன்மை பாதிக்கப்பட்டுள்ளது. இதனைப் பாதுகாக்க, இயற்கைப் பண்ணையையும், அதாவது, இயற்கை உரங்களைப் பயன்படுத்தவேண்டும் என நவீன விஞ்ஞானிகள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், மைய அரசும் இக்கருத்துகளை ஏற்றுக்கொண்டு, இயற்கைப் பண்ணையையும் கடைப்பிடிக்கத் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. 2003–2004 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் மைய அரசின் திட்டமான தேசிய இயற்கை வேளாண்மைத் திட்டத்தின்கீழ் மண் புழு உற்பத்தி, நுண்ணுயிர் உர உற்பத்தி மையங்கள் மற்றும் பழ, காய்கறிக் கழிவுகள் மூலம் Compost

2008 நவம்பர் 11]

உரம் தயாரிக்கும் மையங்கள் நிறுவும் விவசாயிகளுக்கு 25 சதவீத மானியமும், 50 சதவீதம் வங்கிக் கடன் உதவியும் பெற ஊக்குவிக்கப்படுகிறது. இந்த இயற்கை உரத் தயாரிப்பு மையங்களை நிறுவும் விவசாயிகள் அவர்கள் பங்களிப்பாக 25 சதவீத நிதியை மட்டும் முதலீடாகக்கொண்டு உரத் தயாரிப்பு மையங்களை நிறுவலாம். இதற்கு அரசு உதவி செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் வாழ்கின்ற விவசாயிகள் மிகவும் ஏழ்மையான சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள். அவர்கள் இந்த உரங்களைத் தயாரிக்கின்ற நேரத்தில் அவர்களுக்குப் பொருளாதார வசதி கொஞ்சம் குறைவாக இருக்கிறது. அவர்கள் அதிகமான அளவில் இயற்கை உரங்களைத் தயாரிக்கின்றபோது, அவர்களுக்குத் தேவையான இடம், அதற்குத் தேவையான மூலப்பொருள்கள், அதற்குத் தேவையான பொருளாதார வசதி ஆகியவற்றைப் பெறுவதற்கு மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்து, இந்தப் பகுதிகளில் வாழ்கின்ற ஏழை விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காகவும், அந்த விவசாயத் தொழில்களை மேம்படுத்துவதற்காகவும் வணிக வங்கிகள் மூலமாகவும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் அல்லது விவசாயத் துறை மூலமாகவும் நேரடியாக சில கடன் உதவிகளைச் செய்தால் அவர்கள் மேலும் அதிகமான அளவில் அந்த இயற்கை உரங்களைத் தயாரித்து அந்தப் பகுதிகளில் ஒரு வளமான விவசாயத்தைச் செய்வார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தப் பகுதியிலே இராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட ஏழை விவசாயிகளைப் பாதுகாக்கின்ற வகையில் அந்த இயற்கை உரங்களை மேலும் விரிவுபடுத்துவதற்காக அவர்கள் இந்த உரத்தைத் தயாரிக்க விவசாயிகளுக்குக் கடன் உதவிகளையும், இதர உதவிகளையும் செய்து தருமாறு தங்களைக் கேட்டுக்கொண்டு, அந்த இரண்டு மாவட்ட விவசாயிகளையும் பாதுகாக்க இந்த அரசு முன்வருமா என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 நவம்பர் 11

முற்பகல் 9–45

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதிலிலே முதலிலே சொன்னது, 25 சதவீதம் மானியம் மைய அரசிடமும், 50 சதவீதம் வங்கியிலேயும் கடன் வாங்கிக்கொள்ளலாம். விவசாயிகள், 25 சதவீதம்தான் அவர்கள் பங்காகப் போட்டு, மண் புழு உரம் தயாரிக்கின்ற பணியினைத் தொடங்கலாம். இப்போது, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ்—N.A.D.P. திட்டத்தின்கீழ்—2008–2009 ஆம் ஆண்டில், இயற்கை வேளாண்மை மற்றும் இயற்கை உர உற்பத்தித் திட்டத்தின்கீழ் ரூபாய் 870.75 இலட்சம் செலவில், தமிழகத்தில் சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், திண்டுக்கல், இராமநாதபுரம், கோவை மற்றும் விழுப்புரம் ஆகிய 9 மாவட்டங்களில் உள்ள 129 வட்டாரங்களில், வட்டாரத்திற்கு 5 மண் புழு உர உற்பத்தி நிலையங்களை நிறுவவும், ஒவ்வொரு வட்டாரத்திலும் சுய உதவிக் குழு மூலம் ஒரு இடக் கழிவு மூலம் compost உரம் தயாரிக்கவும், மற்றொரு நுண்ணுயிர் உற்பத்தி மையம் அமைக்கவும் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு எழுப்பிய வினாவின் அடிப்படையில், இராமநாதபுரத்திலே 11 சுய உதவிக் குழுக்களும் இதிலே அடங்கும். அதைப்போல, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் இந்த ஆண்டு முதல் மண் புழு உரம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை சார்பாக, இப்போது விவசாயிகளுக்கு மண் புழு உரமும், வேப்பம்புண்ணாக்கு உரமும் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். சேலம் மாவட்டத்தில், ஆத்தூர் பகுதியில் கொடுத்த மண் புழு உரம் சரியில்லை எனவும், அதேபோல் வேப்பம்புண்ணாக்கு உரமும் கசக்கவில்லை என்றும் அந்தப் பகுதி மக்கள் சொன்னார்கள். இதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் காண்பித்தோம். எனவே, தரமான வேப்பம்புண்ணாக்கு உரமும், மண் புழு உரமும் வழங்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2008 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற புகார் ஒன்றும் அரசுக்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, vermi compost, அதாவது மண் புழு உரம் தயாரிப்பதற்குப் பயிற்சி அளிப்பதாகவும் சொன்னார்கள். ஏற்கெனவே தயாரித்துக்கொண்டிருந்தவர்கள் அதை சுய உதவிக் குழு மூலமாகவும், தனியாராகவும் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் விற்பனை செய்வதற்கு முடியாமல், அதைச் சரியாக நடத்த முடியாமல் தடுமாறிக்கொண்டிருக்கின்றார்கள். அரசே ஏற்றுக் கொண்டு, அதை வாங்கிக்கொள்வதற்கு கருத்துரு அரசின் கவனத்தில் உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி மண் புழு உரம் தயாரிக்கப்பட்டு அவர்களிடத்திலே இருக்குமானால், வேளாண்மைத் துறைக்குத் தெரியப்படுத்தினால், அரசு கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை வேளாண்மையிலே, இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வார் அவர்களும், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பஞ்சகாவியச் சித்தர் டாக்டர் நடராஜன் அவர்களும், பஞ்ச காவியம் என்கின்ற அந்த உரத்தினைத் தயாரித்திருக்கிறார்கள். அது நம்முடைய அமைச்சருக்கும் தெரியும். ஏன் என்று சொன்னால், அவர்கள் தனிப்பட்ட முறையிலே இதுபோன்ற ஓர் இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கு நம்முடைய அரசாங்கம் உதவ முன்வந்து அது நம்முடைய தமிழக அரசினுடைய வேளாண் துறைமூலமாக விநியோகிக்கப்படுமா; அதற்கான ஆதரவு கொடுக்கப்படுமா; அதற்கான ஏற்பாடுகள் உண்டா என்று தங்கள்வாயிலாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்ன அந்தப் பெயர் எல்லாம் எனக்குத் தெரியாது. தந்தை பெரியார், அண்ணா, கலைஞர்தான் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

3—

நெடுஞ்சாலை

***27948—திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, கருப்பா நதி அணைக்குச் செல்லும் தென்காசி—மதுரை நெடுஞ்சாலையை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைத்துப் புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கருப்பா நதி அணை திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ளது. தென்காசி—மதுரை தேசிய நெடுஞ்சாலையில், சொக்கம்பட்டி கிராமத்திலிருந்து கருப்பா நதி அணை வரை செல்லும் 8 கிலோ மீட்டர் நீளமுள்ள அணுகு சாலை, பொதுப் பணித் துறையின் பராமரிப்பிலுள்ளது. இந்த அணுகு சாலையை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைத்துப் புதுப்பிக்க உரிய கருத்துரு அரசுக்கு சமர்ப்பிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்ன அந்தப் பெயர் எல்லாம் எனக்குத் தெரியாது. தந்தை பெரியார், அண்ணா, கலைஞர்தான் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

3—

நெடுஞ்சாலை

***27948—திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, கருப்பா நதி அணைக்குச் செல்லும் தென்காசி—மதுரை நெடுஞ்சாலையை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைத்துப் புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கருப்பா நதி அணை திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ளது. தென்காசி—மதுரை தேசிய நெடுஞ்சாலையில், சொக்கம்பட்டி கிராமத்திலிருந்து கருப்பா நதி அணை வரை செல்லும் 8 கிலோ மீட்டர் நீளமுள்ள அணுகு சாலை, பொதுப் பணித் துறையின் பராமரிப்பிலுள்ளது. இந்த அணுகு சாலையை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைத்துப் புதுப்பிக்க உரிய கருத்துரு அரசுக்கு சமர்ப்பிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

2008 நவம்பர் 11]

முற்பகல் 9—50

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் இருந்து வரக்கூடிய, அணைகளுக்குச் செல்லக்கூடிய அணுகு சாலைகளை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்க வேண்டும் என்கிற அந்தக் கொள்கை முடிவினை இந்த அரசு இதன் மூலமாக எடுத்து அறிவித்திருக்கிறது என்று நான் எண்ணுகிறேன். இந்த நல்ல கொள்கை முடிவுக்கு நான், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், பொதுப் பணித் துறையிடம் இந்தச் சாலைகளை பராமரித்துப் பேணுவதற்கான நிதி வசதி இல்லை. எனவே, இந்தச் சாலைகளைப் பராமரிக்க வேண்டும் என்கிற கோரிக்கை வருகின்றபோது, பொதுப் பணித் துறை அதிகாரிகள், பொறியாளர்கள், எங்களிடம் அதற்கான நிதி ஒதுக்கீடு இல்லை என்று தெரிவித்து, உதாரணமாக இந்தத் தொகுதியில் கருப்பா நதி அணை என்றைக்குக் கட்டி முடிக்கப்பட்டதோ, ஏறக்குறைய 1970—க்குப் பிறகு இதுவரை அந்தச் சாலைகள் புதுப்பிக்கப்படாமல் இருந்ததை இப்பொழுது புதுப்பிப்பதற்கான முயற்சி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கொள்கை முடிவாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் மூலமாக அறிய விரும்புவது என்னவென்று சொன்னால், இந்தச் சாலையைப் பழுது நீக்கி, நல்ல நிலையிலே நெடுஞ்சாலைத் துறையிடம் நீங்கள் ஒப்படைப்பீர்களா அல்லது இன்று இருக்கின்ற அதே நிலையிலே ஒப்படைத்துவிட்டு, இன்னும் அந்தச் சாலைகளைப் பழுது நீக்குவதற்கு நாங்கள் அடுத்த நிதிநிலை அறிக்கை வரை காத்திருக்க வேண்டுமா?

இரண்டாவதாக, எந்த வகைப்படுத்துதலில் இந்தச் சாலைகளை எடுத்துக்கொள்கிறார்கள்? அதாவது, Other District Roads என்கிற முறையிலே எடுத்துக்கொள்கிறார்களா, Rural Roads என்கிற முறையில் எடுத்துக்கொள்கிறார்களா என்பதையும், இதைப்போல் அணைப் பகுதிகளுக்குச் செல்கின்ற சாலைகள், உதாரணமாக மணல் லாரிகள் வருகின்ற காரணத்தினால் அடிக்கடி பழுதாகிவிடுகின்றன. எங்கெல்லாம் மணல் அள்ளப்படுகிறதோ, அந்த இடத்திற்கு வருகின்ற அணுகு சாலைகள், போடப்பட்ட ஒரு மாதம், இரண்டு மாதங்களிலேயே தரம் குறைந்து, பயனற்றதாக ஆகிவிடுகின்றன. இப்பொழுதெல்லாம் மணல் அள்ள வருகின்ற லாரிகள் 14 டயர் போட்டு, Taurus என்கிற லாரிகள் வந்து மணல் அள்ளுகின்றன. நான்

[2008 நவம்பர் 11]

இதை நெடுஞ்சாலைத் துறை அமைச்சரிடமே சொன்னேன்; அவர்களும் என்னிடம் ஒத்துக்கொண்டார்கள். இப்பொழுது நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்று சொன்னால், இதைப்போன்று அந்த அணுகு சாலைகளுக்கு, மணலில் இருந்து வருகின்ற வருவாயில் ஒரு Cess; உதாரணமாக Sugarcane Development Cess—லே அந்தச் சாலைகளுக்குப் பணம் கொடுக்கிறோம். சர்க்கரை ஆலைகள், அந்தச் சர்க்கரை ஆலைகளுக்கு வருகின்ற வருவாயிலிருந்து அந்தச் சாலைகளைப் பழுது பார்ப்பதற்காக அதிலே ஒரு பகுதியை அளிக்கிறார்கள். அதேபோல் அரசாங்கத்திற்கு மணல் மூலம் வருகின்ற வருமானத்தில் ஒரு பகுதியை இதைப்போன்ற அணுகு சாலைகளுக்காக ஒதுக்கீடு செய்வதற்கான கோரிக்கையை அரசு பரிசீலிக்க முன்வருமா என்று இந்த மூன்று வினாக்களுக்கும் நான் பதில் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அணைகளுக்குச் செல்கின்ற சாலைகள் நீண்ட நெடுங்காலமாக செப்பனிடப்படாமல் இருப்பதற்குக் காரணம் இரண்டு வகை. சாலை, பொதுப் பணித் துறையிடம் இருக்கும். ஆனால், பஸ் போக்குவரத்து அதிலே நடைபெறும். ஆகையினாலே பஸ் போகிறபொழுது சாலை வேகமாகப் பழுதடையும். எனவே, நெடுஞ்சாலைத் துறையும் அதனைச் செப்பனிடாது; நிதிநிலை ஆதாரத்தை முன்னிட்டு பொதுப் பணித் துறை கூடுமான வரையில்தான் செய்யும். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். டாப் சிலிப்புக்குப் போகின்ற—பரம்பிக்குளம் மேலுக்குப் போகிறபொழுது பொள்ளாச்சியிலிருந்து வேட்டைக்காரன்புதூர் வழியாகப் போகிற அந்தச் சாலை பொதுப் பணித் துறைக்குச் சொந்தம். ஆனால், நிறைய பஸ்கள் போகின்றன. அவர்களைக் கேட்டால், நெடுஞ்சாலைத் துறை எங்களுடையது இல்லை என்று சொல்கிறார்கள். அதேபோன்று, வால்பாறையிலிருந்து மேல்நீராறுக்குப் போகிற சாலையில் பஸ் போகிறது. ஆனால், அது forest நிலம்; வனத் துறைக்குச் சொந்தம் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களும் எடுக்கவில்லை. ஆகையினால்தான், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தெரிவித்ததைப்போல், எங்கெங்கு இப்படிப்பட்ட சாலைகள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் கணக்கெடுத்து, பொதுப் பணித் துறைச் செயலாளர் அவர்களும், நெடுஞ்சாலைத்

2008 நவம்பர் 11]

துறைச் செயலாளர் அவர்களும், நம்முடைய நிதித் துறைச் செயலாளர் அவர்களும் உட்கார்ந்து பேசி ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். அது எந்த category—ல் வரும் என்று கேட்டார். பஸ் போகிறபோது அதற்கு ஒரு category இருக்கிறது; பஸ் இல்லாமல் இருந்தாலும். அதற்கு ஒரு category இருக்கிறது. ஆகையினால்தான், Other District Road-ஆ, MD Road-ஆ என்பதை, போக்குவரத்தை வைத்து அவர்கள் அதைக் கணக்கிட்டுக்கொள்வார்கள் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாவதாகச் சொன்னார், மணல் எடுத்துச் செல்கிறபொழுது அதனுடைய பாரம் தாங்காமல் சாலைகள் அடிக்கடி பழுதாகின்றன என்று; நான் ஒத்துக்கொள்கிறேன். பெரும் பகுதியான சாலைகள் கிராமச் சாலைகள்தான். ஆற்றிலே இருந்து மேல் ஏறி நெடுஞ்சாலைக்கு வருகிற வழியிலே பெரும் பகுதி கிராமச் சாலைகள். அந்தக் கிராமச் சாலைகளைப் பழுதுபார்ப்பதற்குப் போதிய நிதி ஆதாரம்கூட அந்த உள்ளாட்சித் துறையிடம் இருக்காது. ஆகையினால்தான், வருகிற வருவாயில் ஒரு பகுதியை அந்தக் கிராமங்களுக்குத் தருகிறோம். மீதி அரசாங்கத்திற்கு வருகிறது. ஆகையினால் எந்தெந்தத் துறைக்கு அதனால் பாதகம் ஏற்படுமோ, அந்தந்தத் துறையிலே அதற்கு வேண்டிய பரிகாரம் செய்ய அரசு செய்திருக்கிறது. (குறுக்கீடு) அதாவது, நெடுஞ்சாலைத் துறை எடுக்கிறது என்று முடிவு பண்ணியாகிவிட்டது. அதை எதற்கு சீவி, சிங்காரித்துக் கொடுப்பானேன்? அவர்களே சீவி, சிங்காரித்துக்கொள்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Hon'ble Public Works Minister has passed on the ball to the Highways Minister's court. I don't think there is any reason to ask one more question to him. The next question will be put to the Hon'ble Highways Minister in due course.

முற்பகல் 9—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: பேரவைத் தலைவர் அவர்களே, மணல் ஏற்றிச் செல்கிற பகுதியிலே இருக்கிற சாலைகளை மேம்படுத்திப்

பராமரிப்பதைப்போல, கல் குவாரிகள் இருக்கிற பகுதிகளிலே உள்ள சாலைகள் மிக மோசமடைந்துள்ளன. கல் குவாரிகளிலேயிருந்து அளவுக்கு அதிகமாக லோடுகளை லாரிகள் ஏற்றிச் செல்வதால், அந்தப் பகுதிகளிலே உள்ள சாலைகள் பாதிப்படைகின்றன. அதற்கும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுப் பணித் துறையோடு நெடுஞ்சாலைத் துறை இணைந்து, அந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அதேபோலத்தான், Mines Department—இல் இருந்தும் உள்ளாட்சித் துறைக்குப் பணம் தருகிறார்கள் என்று Mines துறையை வைத்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்கள் என்னிடத்திலே தெரிவிக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியிலே அமைந்திருக்கிற மிருகண்டா நதி அணைக்குச் செல்கின்ற, ஆதமங்கலம் புதூர் கிராமத்திலேயிருந்து அணைக்குச் செல்கின்ற 6 கிலோ மீட்டர் சாலை, ஏற்கெனவே அந்த அணையைக் கட்டுகின்றபோது, பொதுப் பணித் துறையின் சார்பிலே மண் சாலையாக அமைக்கப்பட்டது. தற்பொழுது பெய்த கடுமையான மழையின் காரணமாக அந்தச் சாலை காணாமல் போய்விட்டது. பொது மக்களுடைய வசதிக்காகவும், பொதுப் பணித் துறை அதிகாரிகள் சென்று ஆய்வு செய்வதற்கு வசதியாகவும் அந்தச் சாலையை மீண்டும் பொதுப் பணித் துறையின் சார்பிலே அமைக்க இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதமங்கலம் சாலையை நானும் பார்த்தேன். அப்போது அது சரியாக இருந்தது. ஆனால் இப்பொழுது மழையில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்கிறார். சிறு repair என்று சொன்னால், பொதுப் பணித் துறையே செய்துவிடும். அதில் Bus போகிறது இல்லையா? (குறுக்கீடு) Bus போனால் அது மீண்டும் நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்படும்.

2008 நவம்பர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

4—

கல்லூரிக் கட்டடம்

***32781—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேட்டூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குத் தேவையான கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மொத்த மதிப்பீடாக ரூ.715 இலட்சம் தீர்மானிக்கப்பட்டு, அதிலே முதற்கட்டமாக ரூ.270 இலட்சம் செலவினத்தில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த 270 இலட்சம் ரூபாயில் 170 இலட்சத்தை பல்கலைக்கழகமே ஏற்றுக்கொண்டு, அதனுடைய செலவிலேயே செய்வதற்கு இப்பொழுது ஒப்பந்தம் கோரப்பட்டிருக்கிறது. மீதமிருக்கிற ரூபாய் 100 இலட்சத்திற்கு அரசிடம் அனுமதி கோரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் பகுதியில் பெரியார் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டு, சேலம் மாவட்டத்தினுடைய மேற்குப் பகுதி, தருமபுரி மாவட்டத்தினுடைய எல்லையோரப் பகுதி, ஈரோடு மாவட்டத்தினுடைய ஒரு பகுதியிலே இருக்கக்கூடிய ஏழையெளிய குடும்பங்களின் குழந்தைகள் எல்லாம் தேடி வந்து படிக்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்தக் கல்லூரி தொடங்கியது மக்கள் மத்தியிலே பெரிய வரவேற்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. இப்போது இரண்டாவது ஆண்டு முடித்து, மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைத்து, 1,407 குழந்தைகள்

LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

4—

கல்லூரிக் கட்டடம்

***32781—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேட்டூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குத் தேவையான கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மொத்த மதிப்பீடாக ரூ.715 இலட்சம் தீர்மானிக்கப்பட்டு, அதிலே முதற்கட்டமாக ரூ.270 இலட்சம் செலவினத்தில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த 270 இலட்சம் ரூபாயில் 170 இலட்சத்தை பல்கலைக்கழகமே ஏற்றுக்கொண்டு, அதனுடைய செலவிலேயே செய்வதற்கு இப்பொழுது ஒப்பந்தம் கோரப்பட்டிருக்கிறது. மீதமிருக்கிற ரூபாய் 100 இலட்சத்திற்கு அரசிடம் அனுமதி கோரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் பகுதியில் பெரியார் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டு, சேலம் மாவட்டத்தினுடைய மேற்குப் பகுதி, தருமபுரி மாவட்டத்தினுடைய எல்லையோரப் பகுதி, ஈரோடு மாவட்டத்தினுடைய ஒரு பகுதியிலே இருக்கக்கூடிய ஏழையெளிய குடும்பங்களின் குழந்தைகள் எல்லாம் தேடி வந்து படிக்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்தக் கல்லூரி தொடங்கியது மக்கள் மத்தியிலே பெரிய வரவேற்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. இப்போது இரண்டாவது ஆண்டு முடித்து, மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைத்து, 1,407 குழந்தைகள்

—அதிலே பெண் குழந்தைகள் அதிக எண்ணிக்கையிலே—படித்துக் கொண்டிருக்கின்றார்கள். இப்படி கல்லூரி தொடங்கிய நாள் முதலே அங்கே கல்லூரிக் கட்டடம் கட்டுவதற்கு இடம் வேண்டுமென்று கேட்டு, தனியார் அனுபவித்துக்கொண்டிருந்த இடம் தேர்வு செய்யப்பட்டு, கட்டடம் கட்டுவதற்காக எல்லா நிலையிலும் பணிகள் தொடங்குகிற நிலை உருவானது. அப்படி நிலை உருவாகி, இன்னும் இதுவரையிலே கட்டடம் கட்டி முடிக்கப்படவில்லை. இப்பொழுது அரசு மேல்நிலைப் பள்ளியிலேயும், நகராட்சி துவக்கப் பள்ளியிலேயும் வகுப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய எண்ணம் எல்லாம், அது தனியாருக்குச் சொந்தமான நிலம், அதுசம்பந்தமாக நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள் என்று எல்லாம் சொல்லப்பட்டு—குற்றச்சாட்டுக்காக அல்ல—ஒரு சில அதிகாரிகளினுடைய தலையீட்டின்பேரிலேயே அந்தப் பணி தொடங்கப்படாமல் இன்னும் நிலுவையிலே இருந்துகொண்டிருக்கிறது. இப்பொழுதுகூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பணி தொடங்குவதற்குத் தயார் நிலை என்று சொன்னார்கள். ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 23–7–2008 அன்று ஒப்பந்தப்புள்ளி எல்லாம் திறக்கப்பட்டு, பணி தொடங்குவதாக அறிவிக்கப்பட்டு, இன்னும் அந்தப் பணி தொடங்கப்படவில்லை. 2, 3 மாதங்கள் ஆகிவிட்டன. ஆகவே, இருக்கிற நிலையை நான் சொன்னேன். —குற்றச்சாட்டுக்காக அல்ல—பணியை விரைவாகத் தொடங்க வேண்டும். ஆகவே விரைந்து தொடங்கி, பணியை முடிப்பதற்கு உயர் கல்வித் துறை ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, கல்லூரிகள் வழங்கப்படுகிறபோது, முதலமைச்சருடைய ஆலோசனைக்கேற்ப ஒரு கோடி ரூபாய் பணமும், 5 ஏக்கர் நிலமும் கொடுக்க வேண்டுமென்றுதான் அனைத்து இடங்களுக்கும் வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, தலைவர் கலைஞர் அவர்கள் இதற்கு விதிவிலக்கு அளித்து, மேட்டூருக்கு வழங்கியிருக்கிறார்கள். வழங்கியதன் அடிப்படையிலே அங்கே எடுக்கப்பட்டிருக்கிற நிலம் அரசுக்குச் சொந்தமான நிலம். அதை சில தனியார் ஆக்கிரமித்திருக்கிற காரணத்தால், அவர்களை

வெளியேற்றிவிட்டு. அங்கே கட்டடம் கட்டுவதற்கான ஏற்பாடுகளை அங்கே இருக்கிற வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாகவும் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். ஒப்பந்தமும் கோரப்பட்டிருக்கிறது. உங்களுக்குத் தெரியும்; மலைப் பகுதிகளிலே ஒப்பந்தக்காரர்கள் கிடைப்பது மிகவும் கடினமான ஒன்று. இருந்தாலும்கூட. அந்த ஒப்பந்தக்காரர்களையும் அங்கே வரவழைத்து, அதிலே கலந்துகொள்ளுமாறு ஏற்பாடுகளையும் அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் செய்திருக்கிறார். அதன் அடிப்படையிலே ரூ.170 இலட்சத்திற்கான ஒப்பந்தம் கோரப்பட்டு, விரைவில் அந்தப் பணி துவக்கப்படுவதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசுக்குச் சொந்தமான நிலம். தனியார் ஆக்கிரமிப்பு இருந்து, அந்த ஆக்கிரமிப்பு எல்லாம் அகற்றப்பட்டுவிட்டது. அங்கே வட்டாட்சியருடைய குடியிருப்பு இருக்கிறது; நடுவர் நீதிமன்றத்தினுடைய நீதிபதியினுடைய குடியிருப்பு; மின் வாரியத்திற்குச் சொந்தமான அடுக்கு மாடிக் குடியிருப்புக் கட்டடங்கள் எல்லாம் அங்கே இருந்துகொண்டிருக்கின்றன. முழுக்க, முழுக்க அரசுக்குச் சொந்தமான நிலம். அதிகாரிகளைச் சற்று வேகப்படுத்த வேண்டும். வேறு ஒன்றும் இல்லை. வேகப்படுத்தினால் விரைவிலே பணி முடியும். அதற்கு விரைந்து ஆவன செய்யப்படுமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரியை பெரியார் பல்கலைக்கழகத்தின்மூலம் ஆரம்பிக்க வேண்டும் என்று முதலமைச்சர் உத்தரவிட்டு, அதற்கான இடம் எல்லாம் தேர்வு செய்ய வேண்டும் என்று உயர் கல்வித் துறை அமைச்சர் எங்களிடத்திலே சொல்லி

[2008 நவம்பர் 11

மாண்புமிகு உறுப்பினரையே அழைத்துக்கொண்டு, பல்வேறு இடங்களை நான் சுற்றிப் பார்த்து, பிறகு இப்போது தேர்வு செய்யப்பட்டிருக்கிற இடம்தான் மாணவர்கள் வந்து செல்ல ஒரு பொதுவான இடமாக இருக்கும் என்று முடிவு செய்தபோது, தனியார் அதிலே 30 வருடங்களாக ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருந்தார்கள். அது அரசுக் கல்லூரிக்குத் தேவையென்று நாம் நடவடிக்கை எடுத்து, கையகப்படுத்தியபோது, உண்மைக்கு மாறான தகவலைக் கொடுத்து உயர் நீதிமன்றத்திலே ஒரு வழக்கும் போட்டார்கள். அந்த வழக்கை அரசின் சார்பில் எதிர்த்து வாதாடி, அது அரசுக்குத்தான் சொந்தம், தனியாருக்குச் சொந்தமல்ல என்று தீர்ப்பினைப் பெற்ற பிறகு, மதிப்பீடு எல்லாம் தயாரிக்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டபோது, டெண்டர் எடுப்பதற்கு சில பேர் வரவில்லை. பிறகு ஒப்பந்தக்காரர்களையே, நீங்கள் எடுத்து அந்த வேலையைச் செய்யுங்கள் என்று நாங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இப்போது டெண்டர் விடப்பட்டுவிட்டது, வேலை தொடங்கப்படுகிறது. இதில் எந்தவிதமான சுணக்கமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியில் திருமகள் ஆலை கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரிக்குத் தேவையான கட்டட வசதிகளும், ஆய்வுக் கூட வசதிகளும் இல்லாமல் இருக்கின்றன. மாணவ, மாணவிகளுக்குத் தேவையான கழிப்பறைக் கட்டடங்கள்கூட இல்லாமல் இருக்கின்ற கல்லூரியாக இருப்பதனாலும், நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கல்லூரியில் பணியாற்றியவர் என்ற முறையில் அந்தக் கல்லூரிக்குத் தேவையான கட்டட வசதிகளையும், கழிப்பறை வசதிகளையும் செய்து தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வகுப்பறைகள் அரசுக் கலைக் கல்லூரிகளிலே கட்டப்படுவதற்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் அதுபோல 25 கோடி ரூபாய்க்கு மேல் கட்டடங்கள்

2008 நவம்பர் 11]

கட்டுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடியாத்தம் கல்லூரியிலேயிருந்து இயக்குநரகத்திற்கு அதுபோன்ற விண்ணப்பங்கள் வந்திருந்தால், நிச்சயமாக அவர்களால் பரிசீலிக்கப்பட்டு, கொடுக்கப்படும். அதுவும் குறிப்பாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கழிப்பறைகளைப் பொறுத்தவரையிலும், அதுவும் பெண்கள் கல்லூரிக்காக இருக்கிற சுற்றுச் சுவரைக் கட்டுவதற்கு முன்னுரிமை கொடுத்து, எல்லாக் கல்லூரிகளுக்குமே சுற்றுச் சுவர் கட்டப்பட வேண்டும், கழிப்பறைகள் கட்டப்பட வேண்டும் என்றும் ஆணையிட்டிருக்கிறார். ஆகவே குடியாத்தம் கல்லூரிக்கு அவர்கள் விண்ணப்பம் அனுப்பியிருந்தால் நிச்சயமாக இந்த ஆண்டே நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பின்தங்கிய பகுதியான, கல்வியில் பின்தங்கிய பகுதியான, திசையன்விளையில் ஓர் அரசு கலைக் கல்லூரி அமைப்பதற்கு அங்குள்ள பொது மக்கள் பங்களிப்பாக ஒரு கோடி ரூபாய் கட்டத் தயாராக இருக்கிறார்கள். அதேபோன்று அரசு நிலமும் கல்லூரி கட்டுவதற்குத் தேவையான அளவுக்கு அதிகமாகவே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாட்சியில் நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், வருகின்ற 2009—2010 ஆம் ஆண்டில் திசையன்விளையில் புதிதாகக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்க முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பின்தங்கிய பகுதிகளில் கணக்கெடுத்து, இந்தியா முழுமைக்குமாக கலைக் கல்லூரிகளைக் கட்டுவது என்று முடிவெடுத்து, தமிழகத்திற்கு மட்டும் 27 கல்லூரிகளைக் கட்டுவதாக மத்திய அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறது. விரைவிலே பாராளுமன்றத்திலே அது நிறைவேற்றப்படவிருக்கிறது. அப்படி அந்த 27 கல்லூரிகள் தமிழகத்திற்கு வருகிறபொழுது, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்களுடைய வேண்டுகோளையேற்று, அவர்

தொகுதிக்கு, அந்த ஊரிலேயே அந்தக் கல்லூரி அமைவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியோடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

5—

நீர்வழிப் போக்குவரத்து

***848—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடை அளிப்பாரா—

தமிழ்நாட்டில் நீர்வழிப் போக்குவரத்தை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆனந்த விக்டோரியா மார்த்தாண்டவர்மா (A.V.M.) கால்வாய்த் திட்டம் கேரள மாநிலத்திலுள்ள திருவனந்தபுரத்திலிருந்து, தமிழகத்திலுள்ள கன்னியாகுமரி வரை நீர்வழிப் போக்குவரத்திற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 31 கி.மீ. நீளமுள்ள ஏ.வி.எம். கால்வாயில் நீர்வழிப் போக்குவரத்தை ஏற்படுத்தவும், கால்வாயைப் புனரமைக்கவும், அகலப்படுத்தவும் மற்றும் நீட்டிக்கவும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளது. தமிழ்நாட்டில் பக்கிங்ஹாம் கால்வாயைத் தேசிய நீர்வழிப் பாதையாக மேம்படுத்தும் திட்டம் விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தொகுதிக்கு, அந்த ஊரிலேயே அந்தக் கல்லூரி அமைவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியோடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—4[illegible]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

5—

நீர்வழிப் போக்குவரத்து

***848—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நீர்வழிப் போக்குவரத்தை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆனந்த விக்டோரியா மார்த்தாண்டவர்மா (A.V.M.) கால்வாய்த் திட்டம் கேரள மாநிலத்திலுள்ள திருவனந்தபுரத்திலிருந்து, தமிழகத்திலுள்ள கன்னியாகுமரி வரை நீர்வழிப் போக்குவரத்திற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 31 கி.மீ. நீளமுள்ள ஏ.வி.எம். கால்வாயில் நீர்வழிப் போக்குவரத்தை ஏற்படுத்தவும், கால்வாயைப் புனரமைக்கவும், அகலப்படுத்தவும் மற்றும் நீட்டிக்கவும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளது. தமிழ்நாட்டில் பக்கிங்ஹாம் கால்வாயைத் தேசிய நீர்வழிப் பாதையாக மேம்படுத்தும் திட்டம் விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

2008 நவம்பர் 11]

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாடு முழுவதும் சாலைப் போக்குவரத்து ஒரு உச்சகட்ட நிலையை அடைந்துள்ளது. சர்வதேசத் தரத்தில் பல்வேறு சாலைகளும், பாலங்களும் கட்டப்பட்ட போதிலும், போக்குவரத்து நெரிசலாலும், வாகனப் பெருக்கத்தினாலும் இன்றைக்கு அதிக அளவில் விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, மாற்று ஏற்பாடாக நீர்வழிப் போக்குவரத்தை நாம் மேம்படுத்தினால், அதன்மூலம் பெரிய அளவிலே விபத்துகள் குறைவதோடு, போக்குவரத்து நெரிசலையும் தவிர்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால், பெட்ரோல், டீசல் பயன்பாடு குறைந்து, அன்னியச் செலாவணியை சேமிக்க வாய்ப்பாகவும் இருக்கும்; சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் வசதியாக இருக்கும்.

அதுமட்டுமல்ல; ஆறுகளையும், வாய்க்கால்களையும் ஆழப்படுத்தும்போது, மழைக் காலங்களில் தேங்குகின்ற மழை நீரை எளிதில் வடிய வைத்து, அதன்மூலம் வேளாண்மையைப் பாதுகாக்க வசதியாகவும் இருக்கும். மேலும், சுற்றுலாத் துறையையும் மேம்படுத்துவதற்கு இது வசதியாக இருக்கும். எனவே, ஒரு திட்டத்தின்மூலம் பல்வேறு துறைகள் பயனடையக்கூடிய இந்த நீர்வழிப் போக்குவரத்துத் திட்டத்தை நமது தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு—குறிப்பாக, இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் படைத்திராத பல்வேறு சாதனைகளைச் செய்திருக்கின்ற நமது கலைஞர் அவர்களின் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தையும் நிறைவேற்றி, தன்னுடைய சாதனைப் பட்டியலில் இதையும் இடம் பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, நீர்வழிப் போக்குவரத்து ஏற்கெனவே நடைபெற்றுக்கொண்டிருந்த வேதாரண்யம் கால்வாயில்—அதாவது உப்பனாறு—முன்னுரிமை அடிப்படையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சகம், இதை 9–4–2006 அன்று அறிமுகம் செய்து, கடந்த பத்தாவது மாதம் நிறைவேற்றியிருக்கிறது. இதற்கு மத்திய தரைவழிப் போக்குவரத்துத்

துறையின் மூலமாக விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு, நிலம் எடுக்கின்றபோது, 50 மீட்டர் அகலத்திற்கு கால்வாயும், இதர போக்குவரத்திற்காக 50 மீட்டரும் தேவை என்று 100 மீட்டர் அகலத்திற்கு ஆந்திர மாநிலம் பெத்தகஞ்சமிலிருந்து மரக்காணம் வரை 247 கிலோ மீட்டருக்கு, கிட்டத்தட்ட தமிழ்நாட்டிலே மட்டும் 170 கிலோ மீட்டருக்கு இதற்கான விரிவான திட்ட மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, மத்திய அரசினுடைய உதவியோடு திட்ட மதிப்பீடு முடிந்த பிறகு, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பக்கிங்ஹாம் கால்வாயில் மட்டுமல்ல; இங்கே ஏற்கெனவே சொன்னதைப்போல, A.V.M. கால்வாயில் அந்தத் திட்டத்திற்காகவும் மத்திய அரசு நிதியுதவி வழங்க விரிவான மதிப்பீடு செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, இந்த இரண்டு கால்வாய்களைத்தான் இப்பொழுது முதலிலே எடுத்திருக்கிறார்கள். 1996 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது, இந்தத் திட்டத்தை விரிவாக, அன்றைக்கிருந்த போக்குவரத்துத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்களிடம் விவாதித்து, சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை ferry service ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு திட்டத்தை அன்றைக்கு உருவாக்கினார்கள். அப்படி உருவாக்குகின்றபோது, அதற்குக் கூடுதலான செலவு ஏற்படும் என்கிற காரணத்தால், அப்போதைக்கு அந்தத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால், இப்போது ஒவ்வோர் இடத்திலும் Mini Port என்ற அளவிலே Port-கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. கடலூரில் வருகிறது;—வேதாரண்யம்—புதுக்கோட்டைக்கு அருகில் வருகிறது. அப்படி அந்த Port-கள் எல்லாம் அமையுமானால், ferry service ஆரம்பிக்கின்ற அந்தப் பணியைத் தொடர்ந்து நாம் ஏற்படுத்த முடியும். அதுவரை, இப்போது மத்திய அரசின் உதவியோடுதான் இந்தத் திட்டத்தைச் செய்ய முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

முற்பகல் 10—10

திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது குறிப்பாக வாகனங்களுடைய விற்பனை அதிகரிக்கக்கூடிய சூழ்நிலையில், பார்க்கிங் செய்ய இட வசதி இல்லாத

2008 நவம்பர் 11]

இடத்தில்கூட வாகனங்களை சிறு தெருக்களின் இருபுறமும் நிறுத்தி விடுகிறார்கள். இதனால் போக்குவரத்து அதிகமாகப் பாதிக்கப்படுகிறது. ஆகவே, பார்க்கிங் வசதி இருக்கும் வாகனங்களுக்கு மட்டும் ரெஜிஸ்டர் செய்து கொடுக்கக்கூடிய ஒரு முறை அமலில் வந்தால் போக்குவரத்து கொஞ்சம் சீராக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைச் செய்ய அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொருவிதமான சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அருகில் இருக்கின்ற சிங்கப்பூரிலே இவ்வளவு வாகனங்கள்தான் ஓட முடியும், ஒரு வாகனம் கழிந்தால்தான் புது வாகனம் ஏற்படுத்த முடியும் என்ற நிலை அங்கே இருக்கின்றது. நமது அருகில் இருக்கின்ற ஹைதராபாத் மாநகரத்திலே வாகனங்களை நிறுத்துவதற்குரிய இடம் இருந்தால்தான் வாகனம் பதிவு செய்ய முடியும் என்ற ஒரு சட்டம் இப்போது புதிதாக வந்திருக்கிறது. இப்போதுகூட தமிழ்நாட்டிலே அதிகமான வாகனங்களை சாலையிலே நிறுத்திவிடுகின்ற காரணத்தால் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறது என்பதை அரசு நன்கு அறிந்திருக்கிறது. இதைப்பற்றி நன்கு பரிசீலித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, ஒரு நல்ல முடிவை எடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், அன்றைய போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது, சென்னை கிழக்குக் கடற்கரையோரமாக கடலூர் வரையில் ஆபத்தின்றிப் பயணம் செய்வதற்கு ஏதுவாக நீர்வழிப் போக்குவரத்து விரைவில் தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு தற்போது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய பரிசீலனையில் இருக்கிறதா? இப்போது மத்திய அரசினுடைய ஒப்புதல் பெறப் போகின்ற அந்தத் திட்டத்தில் இதற்கும் ஒப்புதல் பெற்று, கூடிய விரைவில்—ஆண்டு ஒன்றுக்கு இப்போது

சாலை விபத்துகளால் 12,000 உயிர்கள் பலியாகிக்கொண்டிருக்கின்ற நிலை உள்ளது. அதிகமாக சாலை விபத்துகள் நடந்துகொண்டிருக்கிற கடலூர், திண்டிவனம் வழியாக விழுப்புரம், உளுந்தூர்பேட்டை மார்க்கம், அதேமாதிரி பாண்டிச்சேரி வருவதற்கான மார்க்கம், இங்கெல்லாம் நீர்வழிப் போக்குவரத்தை நாம் துரிதப்படுத்தினால், நிச்சயமாக உயிரிழப்புகளைத் தடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கும். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பே நான் பதில் சொல்லும்போது சொன்னேன். 1996 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்களால்தான் ferry service உண்டுபண்ண வேண்டுமென்று அன்றைக்கு ஆய்வு செய்யப்பட்டது. அப்படி ஆய்வு செய்யப்பட்டபோது அதற்கான திட்ட மதிப்பீடுகள் எல்லாம், கூடுதலாக செலவாகும்; அதனால் அதில் அதிகமான அளவுக்கு அரசாங்கம் பங்கேற்க இயலாது என்ற அந்த நிலை வந்தபோதுதான் அது நிறுத்தி வைக்கப்பட்டது. இப்போது கடலூரிலே புதிய துறைமுகம் உருவாகவிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் 100 கிலோ மீட்டருக்கு ஒரு சிறிய துறைமுகத்தை மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சகத்தின் மூலம் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இந்தத் துறைமுகம் அமைந்துவிடுமானால் நம்முடைய பணி இலகுவாக இருக்கும். அதனால்தான் மீண்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி, அதை முடிவு செய்யலாம் என்று ஏற்கெனவே நான் பதில் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

6—

மண்ணெண்ணெய்

***48151—திரு. எச். அப்துல் பாசித்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சாலை விபத்துகளால் 12,000 உயிர்கள் பலியாகிக்கொண்டிருக்கின்ற நிலை உள்ளது. அதிகமாக சாலை விபத்துகள் நடந்துகொண்டிருக்கிற கடலூர், திண்டிவனம் வழியாக விழுப்புரம், உளுந்தூர்பேட்டை மார்க்கம், அதேமாதிரி பாண்டிச்சேரி வருவதற்கான மார்க்கம், இங்கெல்லாம் நீர்வழிப் போக்குவரத்தை நாம் துரிதப்படுத்தினால், நிச்சயமாக உயிரிழப்புகளைத் தடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கும். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பே நான் பதில் சொல்லும்போது சொன்னேன். 1996 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்களால்தான் ferry service உண்டுபண்ண வேண்டுமென்று அன்றைக்கு ஆய்வு செய்யப்பட்டது. அப்படி ஆய்வு செய்யப்பட்டபோது அதற்கான திட்ட மதிப்பீடுகள் எல்லாம், கூடுதலாக செலவாகும்; அதனால் அதில் அதிகமான அளவுக்கு அரசாங்கம் பங்கேற்க இயலாது என்ற அந்த நிலை வந்தபோதுதான் அது நிறுத்தி வைக்கப்பட்டது. இப்போது கடலூரிலே புதிய துறைமுகம் உருவாகவிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் 100 கிலோ மீட்டருக்கு ஒரு சிறிய துறைமுகத்தை மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சகத்தின் மூலம் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இந்தத் துறைமுகம் அமைந்துவிடுமானால் நம்முடைய பணி இலகுவாக இருக்கும். அதனால்தான் மீண்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி, அதை முடிவு செய்யலாம் என்று ஏற்கெனவே நான் பதில் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

6—

மண்ணெண்ணெய்

***48151—திரு. எச். அப்துல் பாசித்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) வாணியம்பாடி தொகுதி, ஆம்பூர் நகரில் கூடுதலாக மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் நகரில் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்குச் சொந்தமான மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் 11—5—2000 அன்று தொடங்கப்பட்டு, அதிலே 27 நியாய விலைக் கடைகளில் இருக்கிற 22,457 குடும்ப அட்டைகளை இணைத்து, 91,075 லிட்டர் மண்ணெண்ணெய் விற்று வந்தார்கள். மேலும், அங்கு புதிதாக கூடுதலாக ஒரு மண்ணெண்ணெய் விற்பனை நிலையத்தைத் தொடங்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு 5,000 சதுர அடி இடம் தேவை. அப்படி ஒரு இடம் அங்கே இல்லை. புதிதாக ஒரு மண்ணெண்ணெய் விற்பனை நிலையம் உருவாக்க வேண்டுமென்று சொன்னால் ரூ.4½ இலட்சம் பணமும் தேவைப்படுகிறது. எனவே, இப்போது அந்த மொத்தப் பண்டகசாலை, கற்பகம் என்கிற பெயரிலே தொடங்கப்பட்ட அந்த மொத்தப் பண்டகசாலை நஷ்டத்திலே இயங்குகிற காரணத்தினால், புதிதாக அங்கே ஒன்றை உருவாக்குவதற்கு வாய்ப்பு இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித்.

திரு. எச். அப்துல் பாசித்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகரத்தில் கூடுதல் மண்ணெண்ணெய் விற்பனை நிலையம் அவசியம் கருதி அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில், நிதி நிலைமையைக் குறித்து எடுத்துரைத்தார்கள். ஆம்பூர் நகர் மன்றத்தில் முன்கூட்டியே இடத்தை அளிக்க ஒப்புதல் அளித்து, தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு, அந்தத் தீர்மானத்தினுடைய நகலையும் அமைச்சர் அவர்களிடத்திலே சமர்ப்பித்திருக்கிறேன். அதற்காகும் செலவை என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் நான் அளிக்கத் தயாராக இருக்கிறேன். இதேபோல், வாணியம்பாடி நகரத்திலும் 21 கடைகள் இருக்கின்றன. அங்கு கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான 2 இடங்கள் இருக்கின்றன. எனவே, அந்த இடங்களிலும் கூடுதல்

மண்ணெண்ணெய் விற்பனை நிலையத்தை அமைத்திட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் *10—15*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நகராட்சி எல்லைக்குட்பட்டிருக்கிற இடத்தைக் கொடுப்பதற்காகத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதுசம்பந்தமாக மீண்டும் கூட்டுறவுத் துறையினுடைய பதிவாளரிடமிருந்து ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. மேலும் அதற்காகும் நான்கு இலட்சம் ரூபாயை சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நான் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து இது, இதற்கெல்லாம் தான் செலவு செய்ய வேண்டுமென்று உள்ளாட்சித் துறையினுடைய செயலாளரிடத்திலிருந்து ஒரு குறிப்பு வந்திருக்கிறது. அதிலே இது இடம்பெறவில்லை. எனவே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இப்பொழுது அதற்குக் கொடுக்கிறேன், பணத்தை ஒதுக்குகிறேன் என்று சொல்லுகிற காரணத்தினால், முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இதற்கு ஒதுக்குவதற்கு அவரிடம் அனுமதி பெற்று, அதன் மூலமாக அங்கே தொடங்குவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது.

இன்னொன்று: அதே ஆம்பூர் பகுதியிலே குறைந்தது 8,000 குடும்ப அட்டைகள் இருந்தால்தான் அங்கே புதியதாக நாம் உருவாக்க முடியும். அந்த வகையிலே ஒரு கணக்கெடுத்துப் பார்க்கிறபோது, ஆம்பூர் தெற்கு மற்றும் தென்மேற்குப் பகுதிகளிலே இருக்கிற அந்தக் குடும்ப அட்டைகளை எல்லாம் ஒருங்கிணைத்துப் பார்க்கிறபோது குறைவாக இருந்தன. எனவே, மீண்டும் அந்தக் கணக்கெடுப்பை இன்னும் விரைவுபடுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து எடுக்கலாமா என்பதை அவருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதன் மூலமாக ஆணை பெற்றுத்தான் அங்கே உருவாக்க முடியும். அதற்கு வேண்டிய முயற்சியை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2008 நவம்பர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித்

திரு. எச். அப்துல் பாசித்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 86,700 லிட்டர் மண்ணெண்ணெயை இப்போது வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். 23,790 கார்டுகள் இருக்கின்றன. இதே நிலைமைதான் வாணியம்பாடி நகரத்திலும் இருக்கிறது. தயவுகூர்ந்து உடனடியாக நல்லெண்ணத்தின் அடிப்படையில். மண்ணெண்ணெய் நிலையம் வழங்கிட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலேயே வாணியம்பாடி சம்பந்தப்பட்ட அலுவலர்களை அழைத்து, அதற்கு வேண்டிய முயற்சியை இந்த அரசாங்கம் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு மலிவு விலையிலே 50 ரூபாய்க்கு மளிகைப் பொருட்களை—ஏழையெளிய மக்கள், சமுதாயத்திலே பின்தங்கிய மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, விலைவாசி உயர்ந்திருக்கின்ற காரணத்தால் 50 ரூபாய்க்கு 10 பொருட்களை வழங்கிக்கொண்டிருக்கிறது. அதிலே மஞ்சள் தூள், மல்லித் தூள், மிளகாய்த் தூள், கடலைப் பருப்பு, வெந்தயம், கடுகு, சோம்பு, மிளகு, சீரகம், பட்டை இலவங்கம் போன்ற 10 பொருட்களை வழங்கிக்கொண்டிருக்கிறது. அந்தப் பொருட்களில் சோம்பும், பட்டை இலவங்கமும் ஏழைகள் உபயோகிக்கிறார்கள் என்பது சரியாக இல்லை. ஏனென்று சொன்னால், அவை பிரியாணி செய்வதற்கு உபயோகப்படுகின்ற பொருட்கள். சோம்பினை மாற்றி, அதற்குப் பதிலாக தாளிப்பதற்கு உளுத்தம் பருப்பு கொடுக்கப்படுமா; பட்டை இலவங்கத்திற்குப் பதிலாக மசாலா பொடி 10 கிராமாவது கொடுக்கப்படுமா என்பதை உணவு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2008 நவம்பர் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் கலைஞர் அவர்கள், குடும்பத்திற்குத் தேவையான பொருட்கள் வாங்குவதிலே விலைவாசி அதிகமாகி இருக்கிறது என்பதால், அதைக் கட்டுப்படுத்தி, குறைந்த விலையிலே கொடுக்க வேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடுதான் வெளி மார்க்கெட்டிலே 80 ரூபாயிலிருந்து கிட்டத்தட்ட 114 ரூபாய் அளவுக்கு விற்கப்படுகின்ற அந்தப் பொருட்களை 50 ரூபாய்க்கு இன்றைக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள்கூட அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்கிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். 'பசி வந்தால் பத்தும் பறந்துவிடும்' என்பது பழமொழி; ஆனால் இப்பொழுது 10 பொருட்கள் வருகிற காரணத்தால் 'பசியே இல்லாமல் இருந்துவிடும்' என்ற ஒரு புதுமொழியை அவர்கள் உருவாக்கி, அதன் மூலமாக இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அதிலே அவர்கள் சொல்வதைப்போல, பட்டை, இலவங்கம், சோம்பு என்பது குடும்பத்திலே பயன்படுத்துகிற பொருட்கள்தான். அவை ஒன்றும் பயன்படுத்தாத பொருட்கள் அல்ல. ஆனால் விசேஷ காலங்களில் அவற்றைப் பயன்படுத்துவார்கள் என்று இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதுசம்பந்தமாக மீண்டும் துறையினுடைய அதிகாரிகளிடம் பேசி, அதற்குப் பின்னால் அதன் முன்மொழிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவர்கள் என்ன ஆணையிடுகிறார்களோ அதை நாம் பின்பற்றுவோம் என்று துறையின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, 50 ரூபாய்க்கு வழங்கப்படுகிற பொருட்களைப் பற்றிச் சொன்னார்கள். 50 ரூபாய்க்கு வழங்கப்படுகின்ற பொருட்கள் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் அனைவருக்கும் கிடைக்கின்றனவா? 50 பேருக்குக்கூட எந்த நியாய விலைக் கடைகளிலும் கிடைக்கவில்லை என்ற நிலை அமைச்சருக்குத் தெரியுமா? வழங்கப்பட்ட ரேஷன் அட்டைகள் வைத்திருப்பவர்களில் எவ்வளவு பேருக்கு 50 ரூபாய் பொருட்கள்

2008 நவம்பர் 11]

வழங்கப்பட்டிருக்கின்றன என்ற புள்ளிவிவரத்தை அமைச்சரால் சொல்ல முடியுமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 ரூபாய்க்கு 10 பொருட்களை வழங்குவது கிடைக்கவில்லை, ஏழைகளுக்கெல்லாம் கொடுக்க முடியுமா என்று அவர் கேட்பதிலிருந்து, இது ஒரு நல்ல திட்டம் என்று அவர் ஒத்துக்கொண்டதற்காக நான் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்திலே, ஒரு புதிய திட்டம் வருகின்றது என்று சொன்னால், ஒரு பாக்கெட்டிலே 10 பொருட்களை அடக்கி ஒரு main container—ஒரு பெரிய உறையில் போட்டு அதை நாம் மக்களுக்கு வழங்குகிறோம். இந்தத் திட்டத்தைத் தொடங்குகிறபோது, ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் பாக்கெட் அன்றைக்கு விற்பனையானது. திட்டம் தொடங்கி ஒரு மாத காலம் முடிகிற இந்த நேரத்தில், ஒவ்வொரு கடையிலும், கிட்டத்தட்ட 29,854 பொது விநியோகக் கடைகளிலும் இதை வழங்கிக் கொண்டிருக்கிறோம். நேற்றையதினம் 2,17,000 பாக்கெட்டுகள், விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. படிப்படியாக, இந்த மாதம் முடிவதற்குள் ஒரு நாளைக்கு மூன்று இலட்சம் பாக்கெட்டுகள் என்கிற நிலைக்கு அதை உருவாக்குவோம். இப்பொழுது பொருட்கள் இல்லையென்று சொல்வதில்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், நாங்கள் பொருட்கள் இல்லையென்று சொல்லமாட்டோம். பொருட்கள் வருகின்றன. 100 பாக்கெட் வருகின்றன என்று சொன்னால், மக்கள் வருகிறார்கள், வாங்கிச் செல்கிறார்கள். தீர்ந்துவிட்டது என்று சொன்னால் நாளையதினம் வாருங்கள், கொடுக்கிறோம் என்று சொல்கிறோம். ஒரு அட்டைக்கு ஒரு பாக்கெட் வீதம், மாதம் 30 நாட்களும் வாங்கிக்கொள்ளலாம்.

அரிசியை எடுத்துக்கொண்டால், முதன்முதலிலே ஆரம்பிக்கிறபொழுது ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்கிற திட்டத்தைத் தொடங்குகிறபொழுது, பத்திரிகையிலே படம் எடுத்துப் போட்டார்கள். சில நேரங்களிலே கடைகளிலே நீண்ட கியூவிலே நிற்கிறார்கள் என்றெல்லாம்கூட படம் போட்டார்கள். ஆனால், அதற்குப் பின்னால் அவர்களுக்கு உரிய அரிசியை, 30 தினங்களிலே

எப்பொழுது வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம், 20 கிலோ வாங்கிக்கொள்ளலாம், 10 கிலோ வாங்கிக்கொள்ளலாம், 5 கிலோ வாங்கிக்கொள்ளலாம் என்று அறிவித்த பின்பு, அந்தக் கூட்டம் குறைந்து, அவர்களுக்குரிய அரிசியை வாங்கிக்கொண்டார்கள். அதைப்போலத்தான், 1 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை, அட்டை வைத்திருப்பவர்கள் ஒரு பொட்டலத்தைக் கட்டாயம் வாங்கிக்கொள்ள முடியும். அதற்கு அரசு மிக வேகமாக முயற்சி செய்துகொண்டிருக்கிறது. நீங்கள் நினைப்பதைப்போல, எதுவும் கிடைக்காமல் இல்லை. அனைத்துக் கடைகளிலும் கிடைக்கிறது. இன்னொன்று இந்தப் பொருட்களை வாங்கிக் கொண்டு வந்து ஸ்டாக் அதிகம் வைத்துவிட முடியாது. ஏனென்றால் இந்தப் பொருட்கள் எல்லாம் அன்றாடம் பயன்படுத்தப்படுகிறவை. இவற்றை அதிகமாகக் கொண்டு போய் கடையிலே திணித்துவிட்டால், ஒரு மாதம் கழித்து இதே சட்டமன்ற உறுப்பினர், இதே மாமன்றத்தில் என்ன சொல்வார் என்று சொன்னால், பாருங்கள், நான் உள்ளே பிரித்துப் பார்த்தேன், பொருட்கள் சரியாக இல்லையென்று சொல்லக்கூடிய ஒரு வாய்ப்புக் கூட ஏற்படும். அதனால்தான் சொல்கிறேன், இது மளிகைப் பொருள்; அவ்வப்போது புதிதாக நாங்கள் டெண்டர் போட்டுத் தருவிக்கிறோம். அதனால், அன்றன்றைக்கு வருகின்றன. பொருட்கள் விற்பனையாகின்றன. அனைத்துக் கடைகளிலும் கிடைக்கின்றன. இருந்தாலும், விரைவுபடுத்தி அனைத்துக் கடைகளிலும் போதுமான அளவிற்கு இருப்பு வைத்து, அந்த மாதமே பொருட்கள் கிடைக்கிற அளவிற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மளிகைப் பொருட்களினுடைய விலை உயர்வு காரணமாக நம்முடைய தமிழக அரசு பாக்கெட்மூலமாக 50 ரூபாய்க்கு விற்பனை செய்ய முன்வந்து, அத்தகைய பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, உபயோககரமாக இருக்கிறது. இப்பொழுது காய்கறி விலை கடுமையாக உயர்ந்திருக்கிறது. கத்தரிக்காய் 10 ரூபாய்க்குக் கேட்டால், பார்த்துவிட்டுப் போங்கள் என்று சொல்கிறார்கள். ஆப்பிள் ரசம் வைக்கக்கூடிய அளவிற்குத் தக்காளி வாங்கி ரசம் வைக்க முடியவில்லை. காய்கறி விலை கடுமையாக உயர்ந்திருக்கிறது. விவசாயிகளுக்கு இந்த விலை உயர்வின் பயன் போய்ச் சேரவில்லை. ஆகவே, உடனடியாக நம்முடைய அரசு பொது விநியோகக் கடைகள்

2008 நவம்பர் 11]

மூலமாக குறைந்தபட்சம் காய்கறிகளை வாங்கி மலிவு விலையில் விற்பனை செய்வது குறித்துப் பரிசீலிக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமலே போய்க்கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) Right. அமைச்சர், சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ இந்த ஆண்டு மட்டும் காய்கறி விலை அதிகமாக ஏறியதைப்போல சொல்கிறார்கள். அப்படி அல்ல. நானும்கூட ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன்தான். எப்பொழுதெல்லாம் உற்பத்தி அதிகமாக இருக்கிறதோ, அப்பொழுதெல்லாம் விலை குறையும். திருவண்ணாமலையிலிருந்து திருப்பத்தூருக்குப் போகிற வழியிலே சிங்காரப்பேட்டை என்ற ஓர் ஊர் உண்டு. அங்கே பார்த்தால், தக்காளிக் கூடைகளை அடுக்கி வைத்திருப்பார்கள். ஒரு கிலோ தக்காளி என்ன விலை என்று கேட்டால், ஒரு ரூபாய் என்று சொல்வார்கள். ஆறு மாதம் கழித்து அதே வழியாகப் போகும்போது, அப்போது தக்காளி உற்பத்தி மிகவும் குறைவாக இருக்கும்; விலை என்னவென்று கேட்டால், ஒரு கிலோ 10 ரூபாய் என்று சொல்வார்கள். இதுபோன்ற காய்கறிகள் உற்பத்தி எப்பொழுதும் அதிகமாக வருகிறபொழுது விலை குறையும். சில நேரங்களிலே உற்பத்தி இருக்கும்; பயிர் வைத்திருப்போம்; திடீரென்று பெருமழை பெய்து விடும், வைத்திருக்கிற பூ பட்டுப் போய்விடும். அதன் காரணமாக, மார்க்கெட்டுக்குப் பொருட்கள் வருகிறபொழுது விலை ஏறிவிடுகிறது. காய்கறி விலை ஏற்றம் என்பது இந்த அடிப்படையில்தான் மாறுபடுகிறது. இது திட்டமிட்டு ஒரே மாதிரியாக இருப்பதில்லை.

அதனால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விவசாயிகள் உற்பத்தி செய்கிற அந்த பொருட்கள் கமிஷன் மண்டிக்குப் போய், இடைத்தரகர்களெல்லாம் அனுகூலம் பெற்றுவிடக்கூடாது என்கிற ஒரே காரணத்திற்காகத்தான், தமிழ்நாடு முழுவதும் உழவர் சந்தை என்கிற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, அதன் மூலமாக விற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். திருவண்ணாமலையில்கூட காலையில் பார்த்தால், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிலிருந்து தொடங்கி அனைத்து அலுவலர்களும் சைக்கிள் எடுத்துப் போய் வாங்குகிறார்கள். கேட்டால், நல்ல காய்கறி கிடைக்கிறது, புதிய காய்கறி கிடைக்கிறது. சுவையான காய்கறி கிடைக்கிறது என்று வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, உழவர் சந்தையை இன்னும்கூட

மேம்படுத்தினால், காய்கறிகளையெல்லாம் அங்கே வாங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே, அதையும் நாம் பயன்படுத்திக்கொள்ளலாம்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2006 சட்டமன்றத் தேர்தலின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே ஆட்சி இருந்தால், மத்தியிலிருந்து கேட்டுப் பெறுவது மிகவும் சுலபமாக இருக்கும் என்ற ஒரு வேண்டுகோளை அந்த நேரத்திலே வைத்தார்கள். அதன்படி இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலும் வீற்றிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 42 இலட்சம் புதிய ரேஷன் அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்று மத்திய அரசுக்குப் பல முறை கடிதம் எழுதியும், மத்திய அரசு அதைக் கொடுக்கவில்லை. 2006 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின்னால் எங்களால் பல முறை இந்த அரசைப் பார்த்து, புதியதாகச் சேர்க்கப்பட்ட 42 இலட்சம் புதிய ரேஷன் அட்டை வைத்திருக்கும் ஏழையெளியோருக்கு மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்று கேட்கப்படுகிறபோதெல்லாம், மத்தியிலே கலந்து பேசியிருக்கின்றது, அடுத்த மாதம் தருகிறோம், அடுத்த மாதம் தருகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிற அந்த பதிலைத்தான் தொடர்ந்து சொல்ல வேண்டிய சூழ்நிலை இருந்தது. ஆனால், ஆட்சிப் பொறுப்பேற்று 30 மாத காலமாகியும், புதியதாக ரேஷன் அட்டை பெற்ற அந்த ஏழை எளியோருக்கு மண்ணெண்ணெய் வழங்கமுடியாத ஒரு சூழ்நிலைதான் தொடர்ந்து இருந்துகொண்டிருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, புதியதாக ரேஷன் அட்டை பெற்ற 42 இலட்சம் ஏழை எளியோருக்கு எப்பொழுது மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இதே மாமன்றத்திலே இருக்கிறபொழுது அதற்கு நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். பொதுவாக 2006—லே ஆட்சிக்கு வந்தபோது, நீங்கள் அப்படி ஒரு கேள்வி கேட்டு, 'நாங்கள் மைய அரசிடம் பெற்றுத்

2008 நவம்பர் 11]

தருகிறோம்; அதற்கு வேண்டிய கடிதங்கள் எல்லாம் எழுதி இருக்கிறோம்' என்று இம்மாமன்றத்தில் சொன்னது உண்மைதான். ஆனால், அதன் அடிப்படையிலே, நாங்கள் 2, 3 முறை மாண்புமிகு திரு. முரளி தியோரா அவர்களிடத்திலே கேட்டபொழுது, புதியதாகத் தமிழக அரசின் சார்பாக ஒரு திட்டம் போடப்பட்டு, இப்போது இலவச எரிவாயு அடுப்பு என்கிற திட்டம் ஒன்று வந்திருக்கிறது. எனவே, மைய அரசாங்கம் அதற்கு வேண்டிய subsidy எல்லாம் கொடுக்கிற காரணத்தால்,—ஏற்கெனவே தவறான கார்டுகள் தமிழ்நாட்டிலே உலவிக்கொண்டிருக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலமாக, தவறான கார்டுகளை முறைப்படுத்துவதன் மூலமாக, அதனால் ஏற்படுகிற மண்ணெண்ணெயின் சிக்கனத்தைப் பயன்படுத்தி, அவர்களுக்கெல்லாம் கொடுக்கலாம் என்று ஒரு முடிவு செய்து, அதன் அடிப்படையிலே—ஏற்கெனவே ஒரு குடும்பத்திலே 2 சிலிண்டர்கள் இருக்கின்றன என்று சொன்னால், மைய அரசினுடைய சட்டத்திற்கு உட்பட்டு, அவர்களுக்கெல்லாம் மண்ணெண்ணெய் கிடையாது. இது மைய அரசினுடைய சட்டம். நம்முடைய சட்டம் அல்ல. ஆனால், குடும்ப அட்டைகளிலே அதுபோன்று 2 எரிவாயு சிலிண்டர்களைப் பதிவு செய்யாத காரணத்தினால், பல குடும்பங்கள் 2 கேஸ் சிலிண்டர்களையும் பெற்று, மண்ணெண்ணெயையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். மாநில அரசாங்கத்திற்கு மைய அரசு ஒரு கடிதம் அனுப்பியது, இதை ஏன் இன்னும் பதிவு செய்யாமல் இருக்கிறீர்கள் என்று. மூன்று மாத காலம் அதற்கென்று ஒரு முயற்சியினை எடுத்து, ஒவ்வொரு குடும்ப அட்டையிலும் 2 சிலிண்டர்கள் வைத்திருப்பவர்கள் யார் என்று பதிவு செய்ததன்மூலமாக, அதிலே சிக்கனம் ஏற்பட்டு, மண்ணெண்ணெயிலும் சிக்கனம் ஏற்பட்டது.

அடுத்து, கார்டுகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் முறைப்படுத்தியதன் மூலமாக ஏற்பட்ட சிக்கனம். அந்த அடிப்படையில், சென்ற ஆண்டு ஜனவரி மாதம், பொங்கல் தினத்தன்று அனைத்து கார்டுகளுக்கும் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்று முடிவு செய்து, ஒரு லிட்டர் வழங்கினோம். அதற்கு அடுத்து மூன்று மாதம் கழித்து, மீண்டும் சில சிக்கன நடவடிக்கைகளின்மூலமாக இரண்டாவதாக இரண்டு லிட்டர் கொடுக்க ஆரம்பித்தோம். மூன்றாவதாக 3 லிட்டர் மண்ணெண்ணெய் இப்பொழுது தொடர்ந்து இந்த மாதம் வரை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எங்காவது அப்படிக் கொடுக்கவில்லையென்று நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் குறிப்பிட்டால், அந்த கார்டுகளுக்குக் கட்டாயம் மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும், அவர் சொன்ன 40 இலட்சம் கார்டுகளுக்கும் 3 லிட்டர் மண்ணெண்ணெயை இப்பொழுது வழங்கிக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) நான் இல்லையென்று சொல்லவில்லை. நேரடியாகச் சொல்கிறேன், வழங்குவதற்கு ஆணை பிறப்பித்து கொடுத்துக்கொண்டிருக்கிறோம். எங்காவது மண்ணெண்ணெய் வழங்கவில்லையென்று சொன்னால், கட்டாயம் அந்தக் கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும். ஆக, அரசாங்கம் ஆணை பிறப்பித்துவிட்டது. மண்ணெண்ணெய் ஒதுக்கீடு இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மண்ணெண்ணெய் கொடுக்கப்படுகிறது. நான் இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். பொதுவாகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்த அளவிற்கு நேரடியாக அரசாங்கத்தினிடத்திலே பேச வேண்டிய நிலைகூட இல்லை. இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொது விநியோகத் திட்டத்திலே சிறப்பான கவனம் செலுத்தியதன் விளைவாக ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்டுப்பாட்டு அறை—control room வைத்திருக்கிறோம். அங்கு தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் 24 மணி நேரத்தில் நடவடிக்கை எடுப்பதன்மூலம் அரசின் பொது விநியோகத் திட்டம் சிறப்பாக நடைபெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

7—

பள்ளிக் கட்டடம்

***28076—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும், அவர் சொன்ன 40 இலட்சம் கார்டுகளுக்கும் 3 லிட்டர் மண்ணெண்ணெயை இப்பொழுது வழங்கிக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) நான் இல்லையென்று சொல்லவில்லை. நேரடியாகச் சொல்கிறேன், வழங்குவதற்கு ஆணை பிறப்பித்து கொடுத்துக்கொண்டிருக்கிறோம். எங்காவது மண்ணெண்ணெய் வழங்கவில்லையென்று சொன்னால், கட்டாயம் அந்தக் கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும். ஆக, அரசாங்கம் ஆணை பிறப்பித்துவிட்டது. மண்ணெண்ணெய் ஒதுக்கீடு இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மண்ணெண்ணெய் கொடுக்கப்படுகிறது. நான் இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். பொதுவாகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்த அளவிற்கு நேரடியாக அரசாங்கத்தினிடத்திலே பேச வேண்டிய நிலைகூட இல்லை. இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொது விநியோகத் திட்டத்திலே சிறப்பான கவனம் செலுத்தியதன் விளைவாக ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்டுப்பாட்டு அறை—control room வைத்திருக்கிறோம். அங்கு தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் 24 மணி நேரத்தில் நடவடிக்கை எடுப்பதன்மூலம் அரசின் பொது விநியோகத் திட்டம் சிறப்பாக நடைபெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

7—

பள்ளிக் கட்டடம்

***28076—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) காஞ்சிபுரம் தொகுதி, அவளூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக் கூடம், சுற்றுச் சுவர், கழிப்பறை ஆகியவை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையினைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, அவளூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக் கூடம் மற்றும் சுற்றுச் சுவர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறை மற்றும் குடிநீர் வசதிகள் நபார்டு வங்கி நிதி உதவித் திட்டம், பகுதி 10—இல் செயல்படுத்த, விதிகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அவளூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து 800 பிள்ளைகள் படிக்கின்றனர். இந்தப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக் கூடத்திற்குத் தேவையான உபகரணங்கள், கூடுதல் கட்டடம், மாணவ, மாணவிகளுக்குக் கழிப்பிடக் கட்டட வசதியினைச் செய்து தர வேண்டும். காஞ்சிபுரம் நகராட்சியில் உள்ள கமு. சுப்பராய முதலியார் தனியார் உயர்நிலைப் பள்ளி குறித்து மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் கருத்துரு வழங்கப்பட்டுள்ளது. மிகவும் பழமை வாய்ந்த அந்த உயர்நிலைப் பள்ளியை அரசு ஏற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் இந்த ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரைச் சூட்டி, காஞ்சிபுரத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டுமெனவும், காஞ்சிபுரம் நகராட்சியில் 21—வது வார்டு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு பெரிய அறிக்கையை எழுதி வைத்து வாசித்துக்கொண்டிருக்கின்றீர்களே? கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திருமதி பெ. கமலாம்பாள்: கல்வி குறித்த வினாவில் கல்வியைப் பற்றிக் கேட்கிறேன். காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், நத்தம்பேட்டை

அரசினர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவும், காஞ்சிபுரம் நகராட்சியில் 21—வது வார்டு, ஒக்கப்பிறந்தான்குளம், புதுத் தெரு ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவும் ஆவன செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றிட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்த அவலூர் பள்ளிக்குக் கூடுதலாக நான்கு வகுப்பறைகளும், கழிப்பறை வசதியும், குடிநீர் வசதியும் தேவை என்பது கண்டறியப்பட்டிருக்கிறது. அதுகுறித்து நான் மூலக் கேள்விக்கு பதில் அளிக்கின்றபோது சொன்னதைப்போல, நபார்டு வங்கியின் நிதி உதவித் திட்டம் 10—இன் கீழ் அந்த வசதிகளை அப்பள்ளியில் ஏற்படுத்துவதற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதற்கான அனுமதி வருகின்றபோது, நிச்சயமாக அவற்றைச் செய்ய அரசு தயாராக இருக்கிறது. அம்மையார் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற இதர கோரிக்கைகளை அரசு, முறைப்படி உரிய விதத்தில் பரிசீலித்து, ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருநெல்வேலி தொகுதிக்குட்பட்ட மானூர் ஊராட்சி ஒன்றியம் என்பது, மிகவும் பின்தங்கிய மக்கள் வாழுகின்ற பகுதி. அங்கு நரசிங்கநல்லூர் என்ற ஊராட்சியில் அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளது. அங்கு படிக்கின்ற மாணவ, மாணவிகள் மிகவும் ஏழையெளிய மாணவ, மாணவிகள். எனவே, அந்தப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் மற்றும் கழிப்பிட

2008 நவம்பர் 11]

வசதி செய்து தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களிடத்திலே, உரிய விவரங்களைக் கூடுதலாகப் பெற்று, நபார்டு வங்கி நிதி உதவித் திட்டம்—10—இன்கீழ் அந்தப் பள்ளியையும் இணைத்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதியில் தாமஸ் மலை ஒன்றியத்தில், மடிப்பாக்கம் அருகிலுள்ள கோவிலம்பாக்கம் என்ற மிகப் பெரிய ஊராட்சியில்—அந்த ஊரில் உள்ள அனைத்துக் கட்சியினரும், ஊர்ப் பொதுமக்களும் ஒன்றுகூடி—சற்றேறக்குறைய 9 ஏக்கர் பரப்பளவில் உள்ள அரசுப் பள்ளியில் 2,000 மாணவர்கள் அங்கே படித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைக்க வேண்டுமென்று சொன்னால், அரசின் மதிப்பீட்டின்படி 40 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. நான் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, 10 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கி, பள்ளியின் முன்பகுதியை மட்டும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றேன். ஆகவே, மீதித் தொகையை அரசு அளிக்குமேயானால், அந்த 10 ஏக்கர் நிலப்பரப்பிலே, இருக்கின்ற 2,000 மாணவர்கள் ஒழுங்காக அமர்வதற்கும், விளையாடுவதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்து, அந்தப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரே குறிப்பிட்டிருப்பதைப்போல, மடிப்பாக்கம் அருகிலுள்ள கோவிலம்பாக்கம் அரசுப் பள்ளி ஏறத்தாழ 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கக்கூடிய ஒரு பள்ளி. அவ்வளவு பெரிய

பள்ளிக்கு முழுமையாக சுற்றுச் சுவர் எழுப்புகிறபோது, அரசுக்கு கூடுதலான நிதிச் சுமை இருக்கிறது. தமிழகத்தில் இருக்கக்கூடிய பல பள்ளிகளுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆணைக்கிணங்க, பல ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளிலே தொடங்கி, இப்பொழுது கம்ப்யூட்டர்கள், டி.வி—க்கள் வழங்கக்கூடிய திட்டம் நடைமுறையிலே இருக்கக்கூடிய காரணத்தினால், பல பள்ளிகளிலிருந்தும் அவர்களுடைய பாதுகாப்பைக் கருதி, இத்தகைய சுற்றுச் சுவர்களை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறது. கூடுமானவரை, இத்தகைய பள்ளிகளுக்கெல்லாம் நபார்டு வங்கியினுடைய உதவியைப் பெற்று, அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. சில பள்ளிகளுக்கு நம்முடைய உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டதைப்போல, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாகவோ அல்லது அரசு இப்பொழுது அறிமுகப்படுத்தி இருக்கக்கூடிய Public-Private Partnership திட்டத்தின் அடிப்படையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவோ இந்தப் பணிகளை மேற்கொண்டால், அது அரசுக்கு உதவியாக அமையும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

8—

சாலை வசதி

***30009—திரு. ஏ.கே. போஸ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, மூலக்கரை—விளாச்சேரி சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பள்ளிக்கு முழுமையாக சுற்றுச் சுவர் எழுப்புகிறபோது, அரசுக்கு கூடுதலான நிதிச் சுமை இருக்கிறது. தமிழகத்தில் இருக்கக்கூடிய பல பள்ளிகளுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆணைக்கிணங்க, பல ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளிலே தொடங்கி, இப்பொழுது கம்ப்யூட்டர்கள், டி.வி–க்கள் வழங்கக்கூடிய திட்டம் நடைமுறையிலே இருக்கக்கூடிய காரணத்தினால், பல பள்ளிகளிலிருந்தும் அவர்களுடைய பாதுகாப்பைக் கருதி, இத்தகைய சுற்றுச் சுவர்களை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறது. கூடுமானவரை, இத்தகைய பள்ளிகளுக்கெல்லாம் நபார்டு வங்கியினுடைய உதவியைப் பெற்று, அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. சில பள்ளிகளுக்கு நம்முடைய உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டதைப்போல, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாகவோ அல்லது அரசு இப்பொழுது அறிமுகப்படுத்தி இருக்கக்கூடிய Public-Private Partnership திட்டத்தின் அடிப்படையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவோ இந்தப் பணிகளை மேற்கொண்டால், அது அரசுக்கு உதவியாக அமையும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

8—

சாலை வசதி

***30009—திரு. ஏ.கே. போஸ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, மூலக்கரை–விளாச்சேரி சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை—விருதுநகர் தேசிய நெடுஞ்சாலையில் முன்னாலேயும் அகலமாக இருக்கிறது, பின்னாலேயும் அகலமாக இருக்கிறது. மூலக்கரை என்கிற அந்த இடத்தில் குறுகலாக இருக்கிறது. அதற்கு எதிரில் மன்னர் கல்லூரி இருக்கிறது. அதற்கு அடுத்தாற்போல் சௌராஷ்டிரா கல்லூரி இருக்கிறது. ஆகவே, அங்கே நெருக்கடி அதிகமாக இருக்கிற காரணத்தினால், அதை இதுவரையிலும் விரிவுபடுத்த முடியாத ஒரு காரணம் இருக்கிறது. அந்தக் காரணத்திற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதிலிலே, 'ஆம்' என்று குறிப்பிட்டேன். பசுமலை—திருநகர் சாலை என்பது ஒரு மாவட்ட இதர சாலை. இது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தேசிய நெடுஞ்சாலை எண் 7—லிருந்து வலதுபுறமாகத் திரும்பி பல கிராமங்களை இணைக்கிறது. இந்தச் சாலையினுடைய மொத்த நீளம் சுமார் 3.6 கிலோ மீட்டர். இதிலே ஏற்கெனவே ஒரு கிலோ மீட்டர் சாலை இடைவெளித் தடமாக, அதாவது 5.5 மீட்டர் அகலம் கொண்டதாக இருக்கிறது. மீதம் இருக்கக்கூடிய 2.6 கிலோ மீட்டர் சாலையானது ஒரு வழித் தடமாக, அதாவது 3.75 மீட்டர் அகலம் கொண்டதாக இருக்கிறது. எனவே, இந்த ஆண்டு, ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் சுமார் 90 இலட்சம் ரூபாய் மதிப்பில், 3 பைப் கல்வெர்ட்டுகள் உட்பட இந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டு, மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளியும் கோரி, பணி தொடங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையிலே இன்றைக்கு ஏழை எளியோர்கள், குடிசை போட்டுக்கொண்டிருப்பவர்களையெல்லாம் கேட்காமல், குடிசைகளை இடித்துத் தள்ளிவிட்டு, சாலைகளை அமைக்கிறார்கள். ஆனால், அந்த இடத்தில் ஒரு முக்கியப் பிரமுகர் பங்களா கட்டி, முன்னால் தோட்டம் அமைத்து, பூச்செடி வைத்து, வரும்பொழுதெல்லாம் அந்த இடத்தில்

[2008 நவம்பர் 11

சாலையை விரிவுபடுத்தவிடாமல் செய்துகொண்டிருக்கிறார். அதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதில் நடவடிக்கை எடுத்து, அந்த மூலக்கரை என்ற இடத்திலே, மன்னர் கல்லூரிக்கு எதிரிலேயும், சௌராஷ்டிரா கல்லூரிக்குப் போகக்கூடிய வழியிலேயும், விளாச்சேரிக்கு போகக்கூடிய வழியிலும் அதை விரிவுபடுத்தினால், மக்களுக்கு வசதியாக இருக்கும். சாலை விபத்து நேரிடுவதைத் தடுப்பதாக இருக்கும் என்பதை மிக்க பணிவன்போடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த ஆக்கிரமிப்பை அகற்றி, சாலை வசதியை சீக்கிரத்திலே செய்து கொடுக்க வேண்டுமென்று அமைச்சரை உங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற தேசிய நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலை எண் 7 ஆகும். இது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பராமரிப்பிலே இருக்கிறது. இந்தச் சாலையை இப்பொழுது நான்கு வழிச் சாலையாக மாற்றுகிற பணி நடந்து வருகிறது. எனவே, அதுபோன்ற ஆக்கிரமிப்பு இந்திய தேசிய நெடுஞ்சாலையில் இருக்குமானால், இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு இந்த அரசு தெரிவித்து, அதற்குரிய நடவடிக்கையை எடுக்கும். அதுபோல, மாவட்ட இதர சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகளில் இருக்குமானால், நம்முடைய மாநில நெடுஞ்சாலைத் துறை ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். ஆக்கிரமிப்பை அகற்றுவதிலே எந்த பாரபட்சமும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்ததில்லை; இருக்கப் போவதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

முற்பகல் 10—40

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடுதுறையிலிருந்து மயிலாடுதுறை வரை சாலையை அகலப்படுத்த இந்த அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி வினா எழுப்பவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

உதவித் தொகை

***20841—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமண உதவித் தொகை, மகப்பேறு நிதியுதவித் திட்டங்களில் பயன்பெற நகர்ப்புற ஆண்டு வருமான உச்சவரம்புத் தொகையை ரூ.30,000/— ஆக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமண உதவித் திட்டங்களின்கீழ் பயன்பெற ஆண்டு வருமான உச்ச வரம்பை ரூ.24,000/— ஆக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆணை வெளியிட்டுள்ளார்கள். அதுபோல, மகப்பேறு உதவித் தொகை பெற வருமானச் சான்று தேவையில்லை என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்னாலே எழுப்பிய கேள்வி இது. இப்போது மகப்பேறு உதவித் திட்டத்திற்கு வருமான வரம்பு தேவையில்லை என்று நீக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒரு நல்ல நிகழ்வு. நான் இங்கே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவது, திருமண உதவித் திட்டத்திற்கான உதவியும், மகப்பேறு நிதி உதவியும் உரிய காலத்தில் கிடைக்காத ஒரு குறை என்பது தொடர்ந்து நீடிக்கிறது. நான்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி வினா எழுப்பவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

உதவித் தொகை

***20841—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமண உதவித் தொகை, மகப்பேறு நிதியுதவித் திட்டங்களில் பயன்பெற நகர்ப்புற ஆண்டு வருமான உச்சவரம்புத் தொகையை ரூ.30,000/— ஆக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமண உதவித் திட்டங்களின்கீழ் பயன்பெற ஆண்டு வருமான உச்ச வரம்பை ரூ.24,000/— ஆக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆணை வெளியிட்டுள்ளார்கள். அதுபோல, மகப்பேறு உதவித் தொகை பெற வருமானச் சான்று தேவையில்லை என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்னாலே எழுப்பிய கேள்வி இது. இப்போது மகப்பேறு உதவித் திட்டத்திற்கு வருமான வரம்பு தேவையில்லை என்று நீக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒரு நல்ல நிகழ்வு. நான் இங்கே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவது, திருமண உதவித் திட்டத்திற்கான உதவியும், மகப்பேறு நிதி உதவியும் உரிய காலத்தில் கிடைக்காத ஒரு குறை என்பது தொடர்ந்து நீடிக்கிறது. நான்

சமீபத்திலே திருப்பூர் தொகுதிக்குள் மக்களைச் சந்திக்கச் செல்கிறபோது, அதாவது கருவுற்றிருக்கக்கூடிய தாய்மார்களுக்கு அந்த மகப்பேறு உதவித் தொகை வழங்கப்படுகிற திட்டம், குழந்தை பிறந்து, 4, 5 மாதங்கள் கடந்த பிறகும்கூட அவர்களுக்குக் கிடைக்காத ஒரு நிலையை அங்கே நேரிலே வந்து ஒரு தாய் சொன்னதைக் கேள்விப்பட்டேன். ஆகவே, இதுமாதிரியான புகார்கள் ஆங்காங்கே வருகின்றன. அதற்கு அதிகாரிகளிடத்திலே தொடர்புகொண்டு கேட்டால், ஒரு தொகுதிக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையில்தான் இலக்கு தீர்மானிக்கப்படுகிறது. ஆகவே, அதற்கு மேல் வருகிற விண்ணப்பங்களைக் காலத்திலே நிறைவு செய்ய முடியாத நிலை இருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே, எல்லாத் தொகுதிகளுக்கும் ஒரே அளவுகோல் இல்லாமல், மக்கள்தொகையினுடைய எண்ணிக்கைக்கேற்ப அந்த ஒதுக்கீடுகளை அதிகரிப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண உதவித் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், உரிய நேரத்தில் வழங்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்து வழங்கப்பட்டு வருகிறது. இதுவரைக்கும் இந்த 6 மாதங்களில் ஒதுக்கப்பட்ட நிதியில் 81 சதவீதம் செலவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, மகப்பேறு உதவித் தொகையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த வாரங்களில் நடத்திய ஆய்வுக் கூட்டத்தின்போது, உரிய நேரத்தில் வழங்கப்பட வேண்டுமென்று அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, கேரள மாநிலத்தின் எல்லையிலே இருக்கிறது. ஆகவே, அந்த எல்லையின் அருகில், தமிழ்நாட்டின் எல்லைக்குள்ளே வசிக்கக்கூடியவர்கள் நல்ல

2008 நவம்பர் 11]

சிகிச்சைக்காக, அதற்கு அருகிலே இருக்கின்ற கேரள எல்லைக்குள்ளே மருத்துவ சிகிச்சை செய்துகொள்வதற்கு அல்லது பிரசவத்திற்காக அங்கே தாய்மார்கள் செல்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தப் பெண்களுக்கு, இரு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டமும், அதுபோல, மகப்பேறு உதவித் திட்டமும், பக்கத்து மாநிலத்திலே அவர்கள் சிகிச்சை பெற்ற காரணத்தாலே அந்த உதவித் தொகைகள் வழங்குவது மறுக்கப்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு உதவிகளைச் செய்து வரக்கூடியவர், குறிப்பாகப் பெண்களுக்கு உதவி செய்து வரக்கூடியவர். ஆகவே, நம்முடைய தமிழ்நாட்டிற்குள்ளேயே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, பக்கத்திலே ஒரு நல்ல சிகிச்சை கிடைக்கிறது என்பதற்காக, 2 கிலோ மீட்டர் எல்லை தாண்டிச் சென்ற காரணத்தாலே அந்த உதவித் தொகைகள் கொடுப்பது மறுக்கப்படுகிறது. அந்த உதவித் தொகைகள் அந்தப் பெண்களுக்கும் கிடைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவில் அந்தமாதிரி ஒரு பிரச்சினை இருப்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதாவது, தமிழகத் திட்டத்தில் கேரள மாநில மக்கள் இங்கே பயன் அடைந்துவிடக்கூடாது என்பதற்காக, இருப்பிடச் சான்று சமர்ப்பிக்கும் உரிய தகுதியுள்ள தமிழகத் தாய்மார்கள், சிவகாமி அம்மையார் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக அரசு அலுவலர்களுக்கு, அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதுபோல, மகப்பேறு நிதி உதவித் தொகையை அளிப்பது பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 நவம்பர் 11

10—

பால் பண்ணை

***33252—திரு. து. ரவிக்குமார்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோவில் தொகுதி, வானமாதேவியில் பால் பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காட்டுமன்னார்கோவில் தொகுதி, வானமாதேவியில் பால் பண்ணை அமைக்க அரசிடம் செயல் திட்டம் ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 18—வது கால்நடைக் கணக்கெடுப்பை எடுப்பதற்கு நம்முடைய அரசு முயற்சி மேற்கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, வெண்மைப் புரட்சியின் பலன்களை நல்ல முறையிலே பயன்படுத்திக்கொண்டிருக்கிற மாநிலங்களில் ஒன்றாக இருக்கிற நம்முடைய தமிழகத்தில், கடலூர் மாவட்டத்தில் கால்நடைகள் அதிக எண்ணிக்கையிலே இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, அங்கிருக்கின்ற மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த பெண்கள் கால்நடை வளர்ப்பைத் தங்களுடைய முக்கியமான வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கின்றார்கள்.

முற்பகல் 10—45

மேலும், அங்கே நாளொன்றுக்கு 130 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனாலும்கூட, அந்த மாவட்டத்திலே பால் பண்ணை என்று எதுவும் கிடையாது. பால் குளிரூட்டும் நிலையம் என்று ஒன்றே ஒன்றுதான் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையிலே

2008 நவம்பர் 11]

அங்கே ஒரு பால் பண்ணையை அமைத்தால், அங்குள்ள பால் உற்பத்தியாளர்கள் மட்டுமல்லாமல், கால்நடைகளை நம்பி வாழ்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், குறிப்பாக, மகளிருக்கும் மிகுந்த உதவியாக இருக்கும். எனவே, அங்கே ஒரு பால் பண்ணையை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு பால் பண்ணை அமைப்பதற்குக் குறைந்தபட்சம் ஒரு இலட்சம் லிட்டர் பால் உபரியாக இருக்கவேண்டும். அதோடுமட்டுமல்லாமல், ஒரு பால் பண்ணையை அமைப்பதற்கு 35 கோடி ரூபாய் வரை செலவாகின்றது. அதற்கான இடம் 25 ஏக்கர் தேவைப்படுகின்றது. அதற்குப் பதிலாகத்தான், 5 ஆயிரம் லிட்டர், 10 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் ஆகக்கூடிய இடங்களில் பால் குளிர்விப்பான் நிலையம் அமைக்கப்படுகின்றது. அந்த அடிப்படையில்தான் காட்டுமன்னார்கோவில் பகுதியில் வானமாதேவி கிராமத்தை ஒட்டியுள்ள ஆறு சங்கங்களின் வாயிலாக 1,140 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகின்றது. 15 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சேத்தியாத்தோப்பு குளிர்விப்பான் நிலையத்தில் குளிர்விக்கப்படுகின்றது. அதோடுமட்டுமல்லாமல், வானமாதேவி கிராமத்திலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பெரியபட்டு, 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அம்மாப்பேட்டை மற்றும் 55 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஆவினன்குடி ஆகிய கிராமங்களில், தலா 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள பால் குளிர்விப்பான் நிலையத்திற்கான கட்டுமானப் பணிகள் முடிவுற்று இன்னும் ஒரு மாத காலத்தில் அவை நிறுவப்படவிருக்கின்றன. அதன் மூலம் இந்தக் குறைகள் எல்லாம் சரிசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய பகுதியில் பால் உற்பத்தி இன்றைக்கு 100 லிட்டர்தான் இருக்கின்றது. மேன்மேலும் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக மகளிர் மூலமாக அங்கே சங்கங்கள் அமைக்கப்பட்டு, பால் உற்பத்தி பெருகி, அப்பகுதியில் இன்னும் 2 ஆயிரம், 3 ஆயிரம் லிட்டர் வருமேயானால், அங்கே பால்

[2008 நவம்பர் 11

குளிர்விப்பான் நிலையம் ஒன்று புதிதாக அமைக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்த தகவலுக்கு நன்றி. வானமாதேவி கிராமத்திலே அந்த அளவுக்குப் பால் உற்பத்தி இல்லையென்றாலும்கூட, சுற்றுப்புறக் கிராமங்களில் மிகுந்த அளவிலே பால் உற்பத்தி ஆகிக்கொண்டிருக்கின்றது. அந்தப் பகுதியிலே நூற்றுக்கணக்கான பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. வானமாதேவி—கும்பகோணம் பாதை நல்ல போக்குவரத்தைக் கொண்டிருக்கின்ற காரணத்தாலே, அந்தக் கிராமத்திலே பால் பண்ணை அமைத்தால், அப்பகுதி மக்களுக்கும், அதைச் சுற்றியுள்ள கிராமப் பகுதி மக்களுக்கும் அது பயனுள்ளதாக இருக்கும். பால் பண்ணை அமைக்க முடியவில்லையென்றாலும்கூட, ஒரு பால் குளிர்விப்பான் நிலையத்தையாவது அங்கே அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானமாதேவி கிராமத்தைச் சுற்றியுள்ள சங்கங்களிலிருந்து பெறக்கூடிய பாலின் அளவு, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல 1,140 லிட்டர்தான் இருக்கின்றது. 2,000 அல்லது 2,500 லிட்டர் அளவுக்கு அது வருகின்ற நேரத்தில், கூடிய விரைவில் பால் உற்பத்தியை அதிகப்படுத்தி, நிச்சயமாக ஒரு பால் குளிர்விப்பான் நிலையம் அந்தப் பகுதியில் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 1, 2, 3, 4 மற்றும் 5)@

பட்டியல் 1

1—

வர்ணம் தீட்டுவோருக்கு உதவி

வினா எண் 23600—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நலிந்த வர்ணம் தீட்டுவோருக்கு உதவிட புதிய திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம், எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் நலிந்த நிலையில் உள்ள வர்ணம் தீட்டுவோருக்கு உதவிட புதிய திட்டம் எதும் அரசின் ஆய்வில் இல்லை. நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டம் மூலமாகவோ அல்லது தமிழ்நாடு ஓவியர்கள் நலவாரியம் மூலமாகவோ இவர்கள் பயன்பெறலாம்.

2—

புதிய கம்பிவடம்

வினா எண் 19883—திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 14-ல், சி.ஜி. காலனி முதன்மைத் தெரு, 1, 2, 3, 4, 5, 6, 7-வது தெருக்களில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பி வடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 14-ல் எல்லா இடங்களிலுமே மேல்நிலை மின்பாதைகள் ஏற்கெனவே புதைவடமாக மாற்றப்பட்டுள்ளது. சி.ஜி. காலனி முதன்மைத் தெரு, 1,2,3,4,5,6 மற்றும் 7-வது தெருக்களில் புதைவடம் அமைக்கப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

3—

சோடியம் விளக்குகள்

வினா எண் 8590—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை ஹைகிரவுண்டு சாலையில் இருந்து பாளையங்கோட்டை இரயில்வே நிலையம் செல்லும் சாலையில் உள்ள குழல் விளக்குகளை மாற்றி சோடியம் விளக்குகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை ஹைகிரவுண்டு சாலையில் இருந்து பாளையங்கோட்டை இரயில்வே நிலையம் செல்லும் சாலையில் 3 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் நிதியாண்டில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து குழல் விளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

4—

பல் நோக்கு மையம்

வினா எண் 12612—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) காங்கேயம் தொகுதி, எல்லாப்பாளையம்புதூர் ஊராட்சி கவுண்டப்பாளையம் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு பல்நோக்கு மையம் அமைத்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், எல்லாப்பாளையம்புதூர் ஊராட்சியில், புங்காபாளையம் என்ற பகுதியில் பல்நோக்கு மையம் ஏற்கெனவே கட்டித் தரப்பட்டுள்ளது. கவுண்டப்பாளையம் மகளிர் சுய உதவிக் குழுவினரும் இக்கட்டடத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, கவுண்டப்பாளையத்திற்கென தனி பல்நோக்கு மையம் அமைத்துதர வாய்ப்பில்லை.

5—

பொறியாளர் நியமனம்

வினா எண் 22903—திரு. சி. கோவிந்தசாமி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?*

திருப்பூர் தொகுதி, வேலம்பாளையம், நல்லூர் நகராட்சிகளுக்கு தனியாக நகராட்சிப் பொறியாளர் நியமிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 91, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27-6-2007-ன்படி, வேலம்பாளையம் மற்றும் நல்லூர் நகராட்சிகளுக்கு முறையே ஒரு நகராட்சிப் பொறியாளர் நியமனம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டு, இப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

6—

நியாய விலைக் கடை

வினா எண் 5508—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

இராதாபுரம் தொகுதி, நம்பிகுறிச்சி கிராமத்தில் நியாய விலை கிளைக் கடை அமைத்துக் கொடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

நம்பிகுறிச்சி கிராமத்தில் 66 குடும்ப அட்டைகளே இருப்பதாலும், தாய்க் கடையில் இரண்டாவது கடையாகச் செயல்படுமானால், வாரத்தில் 3 நாட்கள் செயல்பட இயலாது என்பதாலும், கிளைக் கடைக்கு குடும்ப அட்டைகளைப் பிரித்தால், தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாக இருக்குமாதலால் நம்பிகுறிச்சி கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

7—

நியாய விலைக் கடை

வினா எண் 6536—திரு. வெ. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், கோணசமுத்திரம் கன்னியாம்பட்டியில் நியாய விலைக் கடை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், கோணசமுத்திரம் கன்னியாம்பட்டி கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைக்கப்பட்டு 3-6-2007 முதல் செயல்பட்டு வருகிறது.

8—

நியாய விலைக் கடை

வினா எண் 6673—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், நரகன்புரடை கிராமத்திற்குப் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை

மற்றும் மழையூர் ஆதி திராவிடர் பகுதிக்கு புதிய கூட்டுறவு நியாய விலைக் கடையும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், நரகன்புரடை கிராமத்தில் 73 குடும்ப அட்டைகள் மட்டுமே இருப்பதால், தற்போது நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி அக்கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. மேலும், மழையூர் கூட்டுறவு நியாய விலைக் கடை 555 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் மழையூர் ஆதி திராவிடர் பகுதியில் உள்ள 198 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின்னர், தாய்க் கடையில் 357 குடும்ப அட்டைகள் இருப்பதாலும், மழையூர் கிராமத்தில் உள்ள தாய்க் கடைக்கும் தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள மழையூர் ஆதி திராவிடர் பகுதிநேரக் கடைக்கும் இடையே உள்ள தூரம் 1 கிலோ மீட்டர் என்பதாலும், தற்போது நடைமுறையிலுள்ள அரசாணையில் வகுக்கப்பட்ட நிபந்தனை பூர்த்தியாகாததால், மழையூர் ஆதி திராவிடர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

9—

நியாய விலைக் கடை

வினா எண் 12480—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தவத்தாரேந்தல், வளையபட்டி, கொட்டம், எதிர்மறிச்சான் ஆகிய நான்கு கிராமங்களுக்கும் ஒரு நியாய விலைக் கடை புதிதாகக் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தவத்தாரேந்தல், வளையபட்டி, கொட்டம் மற்றும் எதிர்மறிச்சான் ஆகிய

4 கிராமங்களைச் சேர்ந்த 240 குடும்ப அட்டைகளைக்கொண்டு தவத்தாரேந்தல் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 15-2-2007 முதல் செயல்பட்டு வருகிறது.

10—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

வினா எண் 12614—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சங்கரண்டாம்பாளையம் மூடிக்கிடக்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை மீண்டும் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, சங்கரண்டாம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ரூ. 26.62 இலட்சம் நட்டத்தில் செயல்பட்டு வந்ததாலும், தொடர்ந்து இவ்வங்கி நட்டத்தில் இயங்கி வந்ததாலும் கலைத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 29-6-2005-ல் வங்கி கலைக்கப்பட்டது. இவ்வங்கியின் விவகார எல்லையிலுள்ள கிராமங்களை அருகில் உள்ள எஸ். ஆலாம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியுடன் இணைத்து, இவ்வங்கி உறுப்பினர்களால் விவசாயக் காரியத்திற்காக கோரப்படும் அனைத்து வகைக் கடன்களும் மேற்படி எஸ். ஆலாம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் கலைக்கப்பட்ட சங்கரண்டாம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினை புத்துயிரூட்ட சாத்தியக் கூறுகள் இல்லை.

11—

பகுதி நேர நியாய விலைக் கடை

வினா எண் 13987—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, தெற்குமேடு கிராமம், கிழக்குமேடு, கருங்காலிக் குப்பம், வெலுக்கம்பட்டு, கீழப்புத்தூர், மதுரா, கோவனந்தல் மற்றும் ஊத்தங்கால் ஆகிய இடங்களில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் கிழக்குமேடு, கருங்காலிக்குப்பம், கீழப்புத்தூர், மதுரா, கோவனந்தல் ஆகிய கிராமங்களில் புதிய நியாய விலைக் கடை அமைக்கப்பட்டு முறையே 29-7-2008, 27-4-2005 மற்றும் 8-11-2006 முதல் செயல்பட்டு வருகிறது. ஊத்தங்கால் என்ற கிராமம் பெரணமல்லூர் தொகுதியில் இல்லை. தெற்குமேடு கிராமத்தைச் சேர்ந்த 116 குடும்ப அட்டைதாரர்கள் 409 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் கூடலூர் முழுநேர நியாய விலைக் கடையிலிருந்தும், வெலுக்கம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த 165 குடும்ப அட்டைதாரர்கள் 435 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் விசாலமங்கலம் முழுநேர நியாய விலைக் கடையிலிருந்தும் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். எனவே, தற்போது நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் தெற்குமேடு மற்றும் வெலுக்கம்பட்டு கிராமங்களில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

12—

பயிர்க் கடன்

வினா எண் 20951—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாழை பயிரிடும் விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநிலத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அந்தந்த மாவட்டங்களில் பயிரிடப்படும் வாழைப் பயிர் உட்பட, பல்வேறு பயிர்களின் சாகுபடிச் செலவுக்கு பயிர்க் கடன்கள் வழங்கி வருகின்றன. இத்தகைய கடன்கள், மாநில அளவில் அங்கீகரிக்கப்படும் பயிர்க் கடனளவுகளுக்கு ஏற்ப அமையும். எனவே, வாழைப் பயிருக்கு பயிர்க் கடன் வழங்கும் திட்டம் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது. அதன்படி, கூட்டுறவு வங்கிகள் கடந்த ஐந்தாண்டுகளில் வாழைப் பயிருக்கு பின்வருமாறு பயிர்க் கடன்கள் வழங்கியுள்ளன.

ஆண்டு	பயனாளிகள் எண்ணிக்கை	வாழை பயிரிடப்பட்ட பரப்பு (ஏக்கரில்)	வாழைப் பயிருக்கு அனுமதிக்கப்பட்ட கடன் (ரூபாய் இலட்சத்தில்)
2002-2003	87155	159324	19836.26
2003-2004	53314	94526	11930.05
2004-2005	97391	187389	23567.66
2005-2006	100530	167250	13871.93
2006-2007	75559	122692	20758.38
2007-2008 ஜனவரி 2008 வரை	88640	114189	18877.64

13—

நியாய விலைக் கடை

வினா எண் 22084—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், மானத்தாள் ஊராட்சி, நாடார் காலனி நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டவும், 18-வது வார்டு, பொத்தியாம்பட்டி பகுதியில் நியாய விலைக் கடை அமைக்கவும் அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், மானத்தாள் ஊராட்சி, நாடார் காலனி பகுதிநேர நியாய விலைக் கடை தற்போது இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதாலும், பகுதிநேரக் கடைகளுக்கு அரசு செலவில் கட்டடம் கட்டுவதற்கு வழிவகை இல்லாததாலும், நாடார் காலனி பகுதிநேரக் கடைக்கு அரசு செலவில் கட்டடம் கட்டுவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் தாரமங்கலம்-1 மற்றும் கசுவரெட்டிப்பட்டி நியாய விலைக் கடைகளிலிருந்து முறையே 320 மற்றும் 346 குடும்ப அட்டைகளைப் பிரித்து மொத்தம் 666 குடும்ப அட்டைகளைக் கொண்டு பொத்தியாம்பட்டி பகுதியில் புதிய பகுதிநேர அங்காடி திறக்கப்பட்டு 27-9-2007 முதல் செயல்பட்டு வருகிறது.

14—

நியாய விலைக் கடை

வினா எண் 23058—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், புளியம்பட்டி ஊராட்சியில் ஒரு நியாய விலைக் கடை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், புளியம்பட்டி ஊராட்சியில் நாரணம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் புளியம்பட்டி நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள 840 குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளேயே வசித்து வருவதால் புளியம்பட்டி ஊராட்சியில் புதிய நியாய விலைக் கடை துவங்க சாத்தியக் கூறுகள் இல்லை.

[2008 நவம்பர் 11

15—

நியாய விலைக் கடை

வினா எண் 34375—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் கூட்டுறவு நியாய விலைக் கடைகளை மகளிர் சுய உதவிக் குழுவின்மூலம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் பிரதம கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் 110 கூட்டுறவு நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மானாமதுரையில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களில் நல்ல நிதி நிலைமையுடனும், ஸ்திரத்தன்மையுடனும் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் எதுவும் நியாய விலைக் கடையினை எடுத்து நடத்திட முன்வரவில்லை. அவ்வாறு முன்வரும்பட்சத்தில் கூட்டுறவு நியாய விலைக் கடைகளை மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் ஒப்படைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

16—

நியாய விலைக் கடை

வினா எண் 34735—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கரைப்பூண்டியிலிருந்து சாணார் பாளையத்திற்கும், மோட்டூர் ஊராட்சியிலிருந்து நட்சத்திரக் கோயில் கிராமத்திற்கும், செங்கப்புத்தேரி கூட்டுறவுக் கடையிலிருந்து எள்ளுப்பாறை கிராமத்திற்கும் கூட்டுறவுக் கடையைப் பிரிக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதியில் கரைப்பூண்டியிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து சாணார்பாளையம் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை திறக்கப்பட்டு 5-9-2007 முதல் செயல்பட்டு வருகிறது. மேலும், நட்சத்திரக் கோயில் கிராமத்தைச் சேர்ந்த 103 குடும்ப அட்டைகள் 1 கி.மீ. தூரத்தில் உள்ள 444 குடும்ப அட்டைகள் கொண்ட மோட்டூர் கிராமத்துடனும், எள்ளுப்பாறை கிராமத்தைச் சேர்ந்த 131 குடும்ப அட்டைகள் 452 குடும்ப அட்டைகள் கொண்ட செங்கப்புத்தேரி கிராமத்துடனும் சேர்ந்து செயல்படுகின்றன. எனவே, புதிய நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் நட்சத்திரக் கோயில் மற்றும் எள்ளுப்பாறை கிராமங்களுக்கும், தாய் நியாய விலைக் கடைகளுக்கும் இடையே 1 கி.மீ. தூரமே உள்ளதால் தற்போது நடைமுறையில் உள்ள அரசாணை நிபந்தனைகளின்படி அக்கிராமங்களில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

17—

நியாய விலைக் கடை கட்டடம்

வினா எண் 35070—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், திருப்பத்தூர் ஊராட்சி வள்ளுவர் நகருக்கு நியாய விலைக் கடை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், திருப்பத்தூர் ஊராட்சியில் வள்ளுவர் நகரில் பாரதி நகர் பகுதிநேரக் கடை இயங்கி வருகிறது. இந்நியாய விலைக் கடைக்கு 2008-2009 ஆம் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து அரசு கட்டடம் கட்டப்படும்.

18—

நியாய விலைக் கடையைப் பிரித்தல்

வினா எண் 35342—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, வல்லம் நியாய விலைக் கடையை இரண்டு கடைகளாகப் பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு வட்டம், வல்லம் கிராம நியாய விலைக் கடை ஏற்கெனவே, வல்லம் — நேருநகர்—2 என பிரிக்கப்பட்டு பகுதிநேர நியாய விலைக் கடையாக இயங்கி வருகிறது. வல்லம்—நேரு நகர் பகுதிநேர நியாய விலைக் கடையில் 443 குடும்ப அட்டைகளும், வல்லம் முழுநேர நியாய விலைக் கடையில் 991 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டுள்ளன. மேலும், வல்லம் கிராம மக்களும், வல்லம் கிராம நியாய விலைக் கடையையே அன்றாடம் திறந்து அத்தியாவசியப் பொருட்கள் வழங்கினால் போதுமானது என தெரிவிப்பதால், வல்லம் கிராம நியாய விலை கடையை பிரித்து 2-வது பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

19—

வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

வினா எண் 35429—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம் ஒன்றியம், பெரும்பேடு ஊராட்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பெரும்பேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி 27-5-1971 முதல் செயல்பட்டு வருகிறது. வங்கியின் விவகார எல்லையாக 9 கிராமங்களையும், 1,890

உறுப்பினர்களைக் கொண்டும் இயங்குகிறது. இதில் 234 நபர்களுக்கு ரூ.40.68 இலட்சம் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இவ்வங்கி குவிந்த நட்டத்தில் செயல்பட்டு வருவதாலும், அரசு ஆணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2006-ல் நிர்ணயித்துள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திட இயலாத நிலையில், இவ்வங்கியின் விவகார எல்லையில் புதிய கிளைகளோ அல்லது புதிய வங்கியோ தற்போதைக்கு அமைத்திட இயலாத நிலை உள்ளது.

20—

கல்விக் கடன்

வினா எண் 35977—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஏழை, எளிய மாணவர்கள் தங்கள் கல்விக் கடனை அந்தந்த மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முழுநேரக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்விக் கடன் வழங்க மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்கெனவே 2003 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் தகுதியான நபர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களின்பேரில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் கடன்கள் வழங்கி வருகின்றன.

21—

புதிய கட்டடம்

வினா எண் 43429—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பொட்டியபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, பொட்டியபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி 31-3-2007 தணிக்கை அறிக்கையின்படி ரூ.34.84 இலட்சம் நட்டத்தில் செயல்பட்டு வருகிறது. வங்கிக்குச் சொந்தமாக அடிமனை இல்லாததாலும், வங்கியில் போதிய நிதி வசதி இல்லாததாலும் தற்போது வங்கிக்குப் புதிய கட்டடம் கட்ட இயலாது.

22—

அரசு மானியம்

வினா எண் 8528—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சொட்டுநீர் வழி உரமிடும் முறை அரசு மானியத்துடன் கரும்பு விவசாயிகள் பயனடையும் வகையில் கொண்டு வர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடப்பு 2007-2008 ஆம் வருடத்தில், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் [illegible] கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் 20,000 ஹெக்டேர் பரப்பில் சொட்டுநீர் வழி உரமிடும் திட்டம் செயல்படுத்த இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 50% மானிய விலையில் சொட்டுநீர் பாசனக் கருவி (ஹெக்டேர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.28,000/-) கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 50% மானியத் தொகை 20:80 என்ற சதவிகிதத்தில் மாநில மற்றும் மத்திய அரசால் ஏற்கப்படுகிறது. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை மூலம் இத்திட்டம், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் வாயிலாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2008 நவம்பர் 11]

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, உடுமலைப்பேட்டைக்கு நடப்பு 2007-2008 ஆம் வருடத்தில் சொட்டுநீர் வழி உரமிடும் திட்டத்தின்கீழ் 700 ஹெக்டேர் பரப்பில் சொட்டுநீர் பாசன கருவிகளை கரும்பு வயல்களில் அமைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 29-02-2008 முடிய, 377.73 ஹெக்டேர் பரப்பிற்கான விண்ணப்பங்களுக்கு மாவட்ட தொழில்நுட்பக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 104 ஹெக்டேர் பரப்பிற்கு பணியாணை வழங்கப்பட்டு, 88.82 ஹெக்டேர் பரப்பில் 61 கரும்பு விவசாயிகளின் வயல்களில் சொட்டுநீர் பாசன கருவி அமைக்கப்பட்டு ரூ.25.36 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

23—

கசிவு நீர்க்குட்டையைச் சீரமைத்தல்

வினா எண் 39147—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, திப்பி ரெட்டி அள்ளி ஊராட்சி, கெப்பக்கரை கிராமத்தில், கசிவு நீர்க்குட்டையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

ஆ ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைப் பொறியியல் துறையில் கசிவு நீர்க் குட்டையைச் சீரமைப்பதற்கான திட்டம் எதுவும் தற்போது நடைமுறையில் இல்லை.

கசிவு நீர்க்குட்டைகள் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலமாக கட்டப்பட்டு, அதன் பராமரிப்புகள் ஊரக வளர்ச்சித் துறை நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. கசிவுநீர்க் குட்டைகளைச் சீரமைப்பதற்கு வேளாண்மைப் பொறியியல் துறைக்குத் தனியாக நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை.

24—

தானியக் களம்

வினா எண் 41772—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, புழுதிக்கரை ஊராட்சி, புழுதிக்கரை கிராமத்தில் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* 2008-2009 ஆம் ஆண்டில், புழுதிக்கரை கிராமத்தில் விவசாயிகளின் விளைபொருட்களை அறுவடைக்குப் பின் நேரும் இழப்பிலிருந்து காப்பாற்ற, தகுதியான நிலத்தில், முன்னுரிமை அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை பெறப்பட்டு, உலர் களம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

25—

ஒட்டுரக தென்னங்கன்றுகள்

வினா எண் 44005—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை விவசாயிகளுக்கு மானிய விலையில் இரண்டரை அடி உயரமுள்ள ஒட்டுரக தென்னங்கன்றுகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை உள்ளடக்கிய சிவகங்கை மாவட்டத்தில் நெட்டை மற்றும் ஒட்டுரக தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கும் திட்டம் ஏதுமில்லை.

ஆனால் அரசால் பராமரிக்கப்படும் தென்னை நாற்றுப் பண்ணைகள்மூலம் நியாயமான விலையில் நெட்டைக் கன்றுகள் கன்றுக்கு ரூ.15 ஆகவும், வீரிய ஒட்டுரக கன்றுகள், கன்று ஒன்று ரூ.25/-ஆகவும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மானாமதுரை விவசாயிகளுக்கு சிவகங்கை மாவட்டத்தில் உள்ள எஸ்.வி. மங்களம் தென்னை நாற்றுப்பண்ணை மற்றும் திருபுவனத்தில் உள்ள தென்னை நெட்டை X குட்டை ஒட்டுப்பணி மையம் மூலம் தரமான வீரிய தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் கடந்த 2007-2008 ஆம் ஆண்டு இந்நாற்றுப் பண்ணைகள் மூலம் 9,100 நெட்டைக் கன்றுகள் மற்றும் 12,200 நெட்டை X குட்டைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு மானாமதுரை தொகுதியை உள்ளடக்கிய சிவகங்கை மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

26—

கதிரடிக்கும் களம்

வினா எண் 44289—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கீழமேல்குடியில் கதிரடிக்கும் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, கீழமேல்குடி பகுதியில் 2008-2009 ஆம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் கதிரடிக்கும் களம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

27—

பயிர் பாதுகாப்பு

வினா எண் 50290—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மிளகனூர் பகுதியில் விளைந்த நெல்மணிகளை சில புழுக்கள் அழிப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை ஒன்றியம் மிளகனூர் மற்றும் சுற்று வட்டாரங்களில் படைப்புழுக்களின் தாக்குதல் பிப்ரவரி 2008-ல் தென்பட்டவுடன் வேளாண்மை துணை இயக்குநர் (மஅதி), வேளாண்மை உதவி இயக்குநர், மானாமதுரை மற்றும் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) ஆகியோர் அடங்கிய தொழில் நுட்பக் குழு சாகுபடி செய்துள்ள நெல் பயிரை ஆய்வு செய்து ஒரு ஏக்கருக்கு 500 மில்லி குளோரிபைரிபாஸ் மருந்துடன் 60 மில்லி சேன்டோவிட் அல்லது இன்ரான் அல்லது டைட்டோவெட் மருந்து சேர்த்து சோப்புக் கரைசலுடன் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு மாலை நேரங்களில் தெளிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் ஒரு ஏக்கருக்கு 5 கிலோ பச்சரிசி தவிடையும் 500 கிராம் செவின் மருந்தையும் கலந்து அதில் 1 கிலோ வெல்லம் கரைத்து உருண்டையாகப் பிடித்து விஷ உணவை நெல் வயலில் மாலை நேரத்தில் வைத்து கட்டுப்படுத்த செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டு, படைப்புழு தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக வானொலி மற்றும் பத்திரிகைகள் மூலம் விவசாயிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. படைப்புழு முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டு நெல் பயிர் மகசூல் பாதிப்பு ஏதும் இன்றி அறுவடை செய்யப்பட்டு விட்டது.

28—

விதை விற்பனை

வினா எண் 50297—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் பி.டி. காட்டன் விதைகளை அரசு வேளாண்மைத் துறை அலுவலகங்களின்மூலம் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தனியார்மூலம் தான் பிடி. விதைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. பிடி. காட்டன் விதைகளை அரசு வேளாண்மைத் துறை அலுவலகங்களின்மூலம் விற்பனை செய்யும் கருத்துரு ஏதும் அரசிடம் தற்பொழுது இல்லை.

29—

சாலை சீரமைப்பு

வினா எண் 1912— திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, பரம்பிக்குளம் சாலையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் பராமரிப்பு நிதியைக்கொண்டு இச்சாலை அவ்வப்போது சீரமைக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் சேத்துமடை முதல் ஆனைப்பாடி சோதனைச் சாவடி வரை உள்ள பரம்பிக்குளம் சாலையைச் சீரமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

30—

ஏரியைச் செப்பனிடுதல்

வினா எண் 10896—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, குந்தாலம்பட்டு கிராம ஏரியைத் தூர் வாரி செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்மலையனூர் ஒன்றியத்தின் நீர்வள நிலவள திட்டத்தில் (IAMWARM) பேக்கேஜ்-4-ல் குந்தாலம்பட்டு கிராம ஏரியைத் தூர் வாரி செப்பனிட ரூ.7.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு, தற்போது பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

31—

தடுப்பு அணை

வினா எண் 11959— திரு. ஆர். சிவானந்தம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி, கமண்டல நாகநதியின் குறுக்கே குன்னத்தூர், இரும்பேடு மற்றும் பையூர் ஆகிய இடங்களில் தடுப்பு அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

இரும்பேடு மற்றும் பையூர் ஏரிகளுக்கு கமண்டல நாகநதியின் குறுக்கே அணை அமைத்து பாசனம் அளிக்க சாத்தியக் கூறுகள் உள்ளன. குன்னத்தூர் கிராமம் அருகில் அணை அமைக்க சாத்தியம் இல்லை. ஏனெனில், அங்கு ஏற்கெனவே ஒரு அணை கட்டப்பட்டுள்ளது.

32—

தூர் வாருதல்

வினா எண் 13131—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, இருட்டணை ஏரியிலிருந்து ராஜ வாய்க்காலுக்கு வரும் வெள்ளத்தாரையை தூர் வார அரசு முன்வருமா?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

கபிலர்மலை தொகுதியில் உள்ள இருட்டணை ஏரியிலிருந்து ராஜ வாய்க்காலுக்கு வரும் 2.40 கி.மீ. நீளமுள்ள வெள்ளத்தாரையைத் தூர் வாருதல் பணியை ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் 2008-2009 ஆம் ஆண்டில் ஏரிகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும்பொழுது எடுத்து செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

33—

அணைக்கட்டு உடைப்பினைச் சீர்செய்தல்

வினா எண் 13476—திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், புல்வயல் ஊராட்சி, சுந்தரப்பட்டி அணைக்கட்டு உடைப்பினைச் சீர்செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இலுப்பூர் தாலுக்கா, புல்வயல் ஊராட்சியில் வெள்ளாற்றின் குறுக்கே சுந்தரப்பட்டி அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. இதன் பாசனப் பரப்பு 307.27 ஹெக்டேர் ஆகும். இந்த அணைக்கட்டின் முன்புற வலது பக்க வெள்ளக் கரையில் ஏற்பட்ட உடைப்பு பராமரிப்பு மராமத்து நிதியின்கீழ் (2007-2008) ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

34—

வெள்ளத் தடுப்புச் சுவர்

வினா எண் 16414—திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், பீக்கல்பட்டி கிராமத்தில் வெள்ளத் தடுப்பு சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், பீக்கல்பட்டி கிராமத்தில் மண் அரிப்பு மற்றும் வெள்ளப் பாதிப்புகளைத் தடுக்கும் வகையில் உள்ளூர் பஞ்சாயத்துமூலம் கரை போடப்பட்டு விட்டது. இந்தக் கரையே வெள்ளத் தடுப்புக்கு போதுமானது என்பதால் மேற்படி இடத்தில் வெள்ளத் தடுப்பு சுவர் கட்டத் தேவையில்லை.

35—

கண்மாய்களைத் தூர் வாருதல்

வினா எண் 22737—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலசொரிக்குளம், திருப்புவனம், கொந்தகை, எம். புதுக்குளம், மாங்குடி மற்றும் மருதங்குடி கண்மாய்களைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாங்குடி கண்மாய் நபார்டு வங்கி நிதியுதவியுடன் சீரமைக்கப்பட்டு வருகிறது. கொந்தகை கண்மாய் 2002-2003 ஆம் ஆண்டு தூர்வாரி சீரமைக்கப்பட்டுள்ளது. ஏனைய கண்மாய்கள் வரும் நிதி ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அளித்து தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும்.

2008 நவம்பர் 11]

36—

கண்மாய்களைத் தூர் வாருதல்

வினா எண் 22744—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மீனாட்சிபுரம், முக்குடி, நெடுங்கரை, பி.வாகைகுளம், பள்ளிச்சந்தை, பொய்கை கண்மாய்களைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மீனாட்சிபுரம் கண்மாய் பகுதி-II திட்டத்தின்கீழ் சீரமைக்கப்பட்டு வருகிறது. ஏனைய கண்மாய்கள் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அளித்து தூர்வாரி சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

37—

கண்மாய்களைத் தூர் வாருதல்

வினா எண் 22750—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பொட்டப்பாளையம், சங்கக்குளம், சம்பக்குளம், எஸ்.புதுக்கோட்டை, ராங்கியம், புலியூர் கண்மாய்களைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பொட்டப்பாளையம், சங்கக்குளம், சம்பக்குளம், எஸ்.புதுக்கோட்டை,

ராங்கியம் கண்மாய்களை வரும் ஆண்டுகளில் பெறப்படும் பாரமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அளித்து தூர்வாரி சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். புலியூர் கண்மாய் 2005-2006 ஆம் ஆண்டு நபார்டு வங்கி நிதியுதவியுடன் சீரமைக்கப்பட்டுள்ளது.

38—

கண்மாய்களைத் தூர் வாருதல்

வினா எண் 22756—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், அம்பலத்தாடி, அகரம்பொட்டல், கொக்கப்பனேந்தல், கழுவன்குளம், கருங்காலக்குடி, கருவக்குடி ஆகிய கண்மாய்களைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், அம்பலத்தாடி, அகரம்பொட்டல், கொக்கப்பனேந்தல், கழுவன்குளம், கருங்காலக்குடி, கருவக்குடி ஆகிய கண்மாய்களை வரும் ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அளித்து தூர்வாரி சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

39—

கண்மாய்களைத் தூர் வாருதல்

வினா எண் 22762—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழகரிசல்குளம், கீழவெள்ளூர், கிளாதரி, காட்டுப்புளி, குறிஞ்சிக்குடி, டி.புளியங்குளம் கண்மாய்களைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கீழவெள்ளூர் கண்மாய் 2006-2007 ஆம் ஆண்டு நபார்டு வங்கி நிதியுதவியுடன் தூர்வாரி சீர் செய்யப்பட்டுள்ளது. ஏனைய கண்மாய்களை நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அளித்து தூர்வாரி சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

40—

கண்மாய்களைத் தூர் வாருதல்

வினா எண் 22768—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலகரிசல்குளம், சொக்கனாதிருப்பு, அல்லி நகரம், சொட்டத்தட்டி, கழுகர்கடை, பொட்டப்பாளையம் கண்மாய்களைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேலகரிசல்குளம், சொக்கனாதிருப்பு கண்மாய்கள் பகுதி-II திட்டம்மூலம் சீரமைக்கப்படுகின்றன. சொட்டத்தட்டி கண்மாய் நபார்டு வங்கி நிதியுதவியுடன் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கழுகர்கடை, பொட்டப்பாளையம் ஆகிய கண்மாய்களை வரும் ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அளித்து சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அல்லி நகரம் பஞ்சாயத்து யூனியன் கண்மாய் ஆகும்.

41—

மராமத்து செய்தல்

வினா எண் 23247—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மாரநாடு, வெள்ளிக்குறிச்சி, வாகுடி, முத்தனேந்தல், இராஜகம்பீரம், கல்குறிச்சி ஆகிய கண்மாய்களின் மடைகளை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மாரநாடு, வாகுடி, முத்தனேந்தல் ஆகிய கண்மாய்கள் முறையே 1,527.55 ஹெக்டேர், 181.10, 61.62, ஹெக்டேர் பாசன பகுதியுடையது. மேலும் இக்கண்மாய்கள் வைகை ஆற்றுப் பாசனக் கண்மாய்களாகும். இராஜகம்பீரம் கண்மாய் 109.85 ஹெக்டேர் பாசனப் பகுதியும், முறை சாரா பாசனக் கண்மாயும் ஆகும். மாரநாடு கண்மாய் இரண்டாவது மடைகளைப் பகுதி-II திட்டத்தின்கீழ் 2006-2007-ல் திரும்பக் கட்டப்பட்டுள்ளது. வெள்ளிக்குறிச்சி, வாகுடி, முத்தனேந்தல், இராஜகம்பீரம், கல்குறிச்சி ஆகிய கண்மாய்களின் மடைகள் சேதத்தின் அடிப்படையில் முன்னுரிமை கொடுத்து பெறப்படும் பராமரிப்பு நிதியில் வரும் ஆண்டுகளில் மராமத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

42—

மடைகளைப் புதுப்பித்தல்

வினா எண் 23253—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, செய்களத்தூர், நெட்டூர், பதினெட்டாங்கோட்டை, குவளைவேலி, சிறுகுடி மற்றும் இடைக்காட்டூர் கண்மாய்களின் மடைகளைப் புதிதாக கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, செய்களத்தூர் கண்மாய் 52.08 ஹெக்டேர் பாசனப் பரப்புடையது. மேலும் இக்கண்மாய், முறைசாரா பாசனக் கண்மாயாகும் நெட்டூர் பதினெட்டாங்கோட்டை, குவளைவேலி, சிறுகுடி மற்றும் இடைக்காட்டூர் கண்மாய்கள் 918.77, 456.40, 201.70, 186.28 மற்றும் 96.30 ஹெக்டேர் பாசனப் பரப்புடையது. இக்கண்மாய்கள் வைகை ஆற்றுப் பாசனக் கண்மாயாகும். சிறுகுடி கண்மாயில் இரண்டு மடைகள் பகுதி-II திட்டத்தின்கீழ் புதிதாகக் கட்டப்பட ஒப்பந்தம் பெறப்பட்டுள்ளது. செய்களத்தூர் கண்மாயில் ஒரு மடை புதிதாகக் கட்டவும், நெட்டூர் கண்மாயில் உள்ள மடைகளைச் சீர் செய்யவும் நீர்வள, நிலவளத் (IAMWARM) திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. பதினெட்டாங்கோட்டை, குவளைவேலி, இடைக்காட்டூர் கண்மாய் மடைகள் வரும் ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

43—

மடைகளை மராமத்து செய்தல்

வினா எண் 23259—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, வன்னக்குடி, கீழ்பசலை, ஆதனூர் மற்றும் சங்கமங்கலம் கண்மாய்களின் மடைகளை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, வன்னிக்குடி, கீழ்பசலை, ஆதனூர் மற்றும் சங்கமங்கலம் கண்மாய்கள்

முறையே 125.77, 301.09, 81.96 மற்றும் 63.67 ஹெக்டேர் பாசனப் பரப்புடையது. இக்கண்மாய்கள் பூர்வீக வைகை ஆற்று பாசனப் பகுதி கண்மாய்கள் ஆகும். மேற்கண்ட கண்மாய்களின் மடைகளை மராமத்து செய்ய வரும் ஆண்டில் பெறப்படும் பராமரிப்பு நிதிக்கு ஏற்றவாறு முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

44—

புதிய மடைகளைக் கட்டுதல்

வினா எண் 23267—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், கட்டனூர் கண்மாய் மடைகளைப் புதிதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியம், கட்டனூர் கிராமத்திலுள்ள கட்டனூர் கண்மாய், கிருதுமால் உப வடிநிலத்தைச் சார்ந்த கண்மாய். ஆகையால் அதிலுள்ள மடைகளைச் சீரமைப்பதற்கு உலக வங்கி நிதியுதவியில் நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் 2 ஆம் ஆண்டு செயலாக்கத்தின்போது எடுத்துக்கொள்ளப்படும்.

45—

மடைகளை மராமத்து செய்தல்

வினா எண் 23273—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கலியாந்தூர், திருப்புவனம், சொரிக்குளம், அல்லி நகரம், பாட்டம், வாடனேந்தல் கண்மாய்களின் மடைகளை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கலியாந்தூர், திருப்புவனம், சொரிக்குளம், அல்லி நகரம், பாட்டம், வாடனேந்தல் கண்மாய்களின் மடைகளை மராமத்து செய்ய வரும் நிதி ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அளித்து செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

46—

புதிய மடைகள் கட்டுதல்

வினா எண் 23279—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தூதை, ஏனாதி, மடப்புரம், பூவந்தி, ராங்கியம், வெள்ளூர், பிரம்மனூர் கண்மாய்களின் மடைகளைப் புதிதாக கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தூதை, ஏனாதி, மடப்புரம், பூவந்தி, ராங்கியம், வெள்ளூர், பிரம்மனூர் கண்மாய்களின் பழுதடைந்த மடைகளைப் புதிதாக கட்ட, வரும் ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

47—

கால்வாய்களைத் தூர்வாருதல்

வினா எண் 23345—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பிரமனூர், வெள்ளூர், ராங்கியம், பூவந்தி, மடப்புரம், ஏனாதி கண்மாய் கால்வாய்களைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, பிரமனூர், கண்மாயின் வரத்துக் கால்வாய் நீளம் 4.50 கி.மீ. ஆகும். வெள்ளூர் கண்மாயின் வரத்துக் கால்வாய் நீளம் 2.00 கி.மீ. ஆகும். ராங்கியம் கண்மாயின் வரத்துக் கால்வாய் நீளம் 2.00 கி.மீ. ஆகும். பூவந்தி கண்மாயின் வரத்துக் கால்வாய் நீளம் 4.50 கி.மீ. ஆகும். மேற்காணும் கண்மாய்களில் உள்ள பழுதடைந்த மடைகள் வரும் ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அளித்து தூர்வார நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

48—

மானத்தாள் ஏரி

வினா எண் 37883—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேட்டூர் அனல் மின் நிலையத்திற்குப் பயன்படும் தண்ணீரைச் சுத்தம் செய்து மானத்தாள் ஏரியை நிரப்புவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு வெளியேறும் சாம்பல் நீரைச் சுத்தம் செய்து தாரமங்கலம் தொகுதி மானாத்தாள் ஏரிக்குக் கொண்டு சென்று நிரப்புதல் குறித்து தள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மானாத்தாள் ஏரியின் மட்ட அளவு +320 மீட்டர் ஆகும். அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேறும் சாம்பல் நீர்ப் பகுதிகளின் மட்ட அளவு 245 மீட்டர் ஆகும். மானாத்தாள் ஏரியின் மட்டம் மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேறும் சாம்பல் நீர் பகுதியின் மட்ட அளவை விட +75 மீட்டர்கள் உயரமான பகுதியில் அமைந்திருப்பதால் இத்திட்டம் புவி ஈர்ப்பு விசை ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் சாத்தியமற்றது.

49—

பொதுப் பணித் துறை துணை அலுவலகம்

வினா எண் 38460- டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து வசதிகளைக் கொண்ட மாவட்ட பொதுப் பணித் துறை துணை அலுவலகத்தைச் செய்யாறில் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறை தலைமையிடமாகக் கொண்டு கீழ்க்கண்ட பொதுப் பணித் துறை அலுவலகங்கள் தண்டரை இல்ல வளாகத்தில் நல்ல முறையில் இயங்கி வருகின்றன:—

1. உதவி செயற்பொறியாளர், பொதுப் பணித் துறை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம்.

2. உதவி செயற்பொறியாளர், பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு, ம.பெ.வ. உபகோட்டம்.

3. இளம் பொறியாளர், பொதுப் பணித் துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) பிரிவு-1.

4. இளம் பொறியாளர், பொதுப் பணித் துறை, கட்டட. (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) பிரிவு-2.

5. இளம் பொறியாளர், பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு, பாசனப் பிரிவு.

எனவே, புதிதாக செய்யாறில் பொதுப் பணித் துறை துணை அலுவலகம் கட்டும் பணிக்கான கருத்துரு இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

50—

ஏரியைச் சீரமைத்தல்

வினா எண் 44698—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் வட்டம், சூராடிமங்கலம் ஏரியைத் தூர்வாரி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் ஒவ்வொரு தொகுதியிலும் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ள ஏரிகளில் இரண்டு ஏரிகளைச் சீரமைக்கும் திட்டத்தின்கீழ் திருக்கழுக்குன்றம் வட்டம், சூராடிமங்கலம் ஏரி எடுத்துக் கொள்ளப்பட்டு தூர் வாரும் பணி நடைபெற்று வருகிறது.

51—

புரிந்துணர்வு உடன்பாடு

வினா எண் 45204—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

அரசு பழமை வாய்ந்த கட்டடங்களை புனரமைப்பு செய்ய தனியார் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு உடன்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

தமிழக அரசின் பொதுப் பணித் துறையால் பழமை வாய்ந்த அரசுக் கட்டடங்கள் அதன் பழமை மாறாமல் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது சென்னையில் இராஜாஜி ஹால் மற்றும் பொதுப் பணித் துறை அலுவலக வளாகத்திலுள்ள அரண்மனைக் கட்டடம், எழும்பூர் அரசு அருங்காட்சியகத்திலுள்ள அமராவதி கலைக்கூடம் போன்றவை தமிழக அரசின் 12-வது நிதிக் குழுவின் நிதி உதவியுடன் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. தனியார் நிறுவனங்களின் புரிந்துணர்வுடன் பழமை வாய்ந்த அரசுக் கட்டடங்களைப் புதுப்பிக்க தற்போது கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

52—

இலவசக் கணினி

வினா எண் 38470—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதி, செய்யாறு அரசு கலைக் கல்லூரிக்கு இலவசக் கணினி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர். க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைத்து அரசு கலைக் கல்லூரிகளுக்கும் அரசு சார்பில் கணினிகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதில் செய்யாறு அரசு கல்லூரியும் அடங்கும்.

53—

ஆக்கிரமிப்புகள் அகற்றம்

வினா எண் 44246—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை அரசு மன்னர் கலைக் கல்லூரி இடத்திலுள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர். க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை வட்டம், மேலவாணியங்குடி குரூப் புல எண் 63/1-க்குரிய 216 ஏக்கர் நிலத்தில் தனி நபர்கள் சிலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றக் கோரி மாவட்ட ஆட்சியருக்கும் கோட்டாட்சியருக்கும் புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து வருவாய்த் துறையினரால் ஆக்கிரமிப்பு 28-12-2007 அன்று அகற்றப்பட்டு விட்டது.

54—

தொழில்நுட்பப் பயிலகம்

வினா எண் 47602—திரு. செ. குருசாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் பகுதியில் தொழில்நுட்பப் பயிலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர். க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

அந்தியூர் பகுதியில் தொழில்நுட்பப் பயிலகம் அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

55—

புதிய பேருந்து

வினா எண் 33404—திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

(அ) மருங்காபுரி தொகுதி, துவரங்குறிச்சியிலிருந்து மணப்பாறை வரை புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி, துவரங்குறிச்சி-மணப்பாறை (வழி) புத்தானந்தம் தடத்தில் கும்பகோணம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திலிருந்து 12 நகரப் பேருந்துகளின்மூலம் தினசரி 74 நடைகளும், 16 புறநகரப் பேருந்துகளின்மூலம் தினசரி 46 நடைகளும், இவை தவிர, தனியார் துறை பேருந்துகளின்மூலம் தினசரி 22 நடைகளும் ஆக மொத்தம் 142 நடைகள் தினசரி இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, துவரங்குறிச்சி—மணப்பாறை தடத்தில் 5 நிமிடங்களுக்கு ஒரு பேருந்து வீதம் இயக்கம் செய்யப்பட்டு வருவதால், மேற்கண்ட வழித்தடம் நன்கு பேருந்து வசதி பெற்றுள்ள பகுதியாக உள்ளது.

56—

கூடுதல் பேருந்து

வினா எண் 33860—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர்-கிரனூர் வழியாக பா. உடையாப்பட்டிக்குக் கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர்-பா. உடையாப்பட்டி (வழி) கீரனூர் வழித்தட நீளம் 47 கி.மீட்டராகும். பா. உடையாப்பட்டி கிராமம் கரூரிலிருந்து நேரிடையாவும், பகுதி, பகுதியாகவும் கீழ்க்கண்டவாறு போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது:—

கரூர்-பா. உடையாப்பட்டி நேரடி பேருந்து வசதி:

	தினசரி இயக்கப்படும் பேருந்துகள்	நடைகள்
அ. கழகப் பேருந்து		
கரூர்-பா. உடையாப்பட்டி ..	2	4
கரூர்-கீரனூர் (வழி) உப்பிடமங்கலம், பா. உடையாப்பட்டி ..	1	2
ஆ. தனியார் பேருந்து		
கரூர்-மணப்பாறை (வழி) மாயனூர், பா. உடையாப்பட்டி, கீரனூர் ..	1	6

கரூர்-பஞ்சப்பட்டி மற்றும் பஞ்சப்பட்டி-கீரனூர், பஞ்சப்பட்டி-பா. உடையாப்பட்டி இணைப்பு வழித்தடம்:

	தினசரி இயக்கப்படும் பேருந்துகள்	நடைகள்
அ. கழகப் பேருந்து		
கரூர்-பஞ்சப்பட்டி (வழி) சேங்கல் ..	3	16
குளித்தலை-கரூர் (வழி) பஞ்சப்பட்டி ..	1	1
திருச்சி-கரூர் (வழி) பஞ்சப்பட்டி ..	1	1
ஆ. தனியார் பேருந்து		
குளித்தலை-கரூர் (வழி) பஞ்சப்பட்டி ..	1	6

பஞ்சப்பட்டி—கீரனூர் வழித்தடம்

	தினசரி இயக்கப்படும் பேருந்துகள்	நடைகள்
குளித்தலை-கொசூர் (வழி) பஞ்சப்பட்டி ..	1	6
குளித்தலை-கொட்டாம்பட்டி ..	2	4
குளித்தலை-வாழ்வார்மங்கலம் ..	1	2

பஞ்சப்பட்டி-பா. உடையாப்பட்டி வழித்தடம்:	தினசரி இயக்கப்படும் பேருந்துகள்	நடைகள்
குளித்தலை-பாப்பனம்பட்டி ..	1	4
குளித்தலை-காணியாளம்பட்டி ..	1	2
குளித்தலை-பா. உடையாப்பட்டி ..	1	2
குளித்தலை-சின்னதேவன்பட்டி (வழி) பா. உடையாப்பட்டி ..	1	4
முசிறி-கடவூர் (வழி) பா. உடையாப்பட்டி ..	1	4
முசிறி-தகரம்பட்டி (வழி) பா. உடையாப்பட்டி	2	6
முசிறி-மணப்பாறை ..	—	2
தனியார் பேருந்து:		
குளித்தலை-தரகம்பட்டி (வழி) பா. உடையாப்பட்டி ..	1	12
குளித்தலை-கடவூர் ..	1	6

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

57—

புதிய பேருந்து

வினா எண் 33867—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து வெள்ளியணை, ஜெகதாபி, மஞ்சநாயக்கன்பட்டி, கொசூர் வழியாகவும் வீரப்பூர் வரை வெள்ளியணை, ஜெகதாபி, காணியாளம்பட்டி, தரகம்பட்டி, ரெட்டியாப்பட்டி வழியாகவும் வீரப்பூர் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர்-வீரப்பூர் (வழி) வெள்ளியணை, ஜெகதாபி, மஞ்சநாயக்கன்பட்டி, கொசூர் வழித்தட நீளம் 56.9 கி.மீ. மற்றும் கரூர்-வீரப்பூர் (வழி) வெள்ளியணை, ஜெகதாபி, காணியாளம்பட்டி, நரகம்பட்டி, ரெட்டியாப்பட்டி வழித்தட நீளம் 59.0 கி.மீ. ஆகும். இவ்விரு வழித்தடங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு பகுதி, பகுதியாக போதிய பேருந்து வசதி பெற்றுள்ளது:—

(அ) கரூர்-வெள்ளியணை வழித்தடம்:

கரூர்-வெள்ளியணை வழித்தடத்தில் சராசரியாக ஒவ்வொரு பத்து நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகிறது.

(ஆ) வெள்ளியணை-ஜெகதாபி-கொசூர் வழித்தடம்:

	தினசரி இயக்கப்படும் பேருந்துகள்	நடைகள்
கரூர்-மணப்பாறை	1	6
கரூர்-மணப்பாறை (வழி) புலியூர், காணியாளம்பட்டி	4	12
கரூர்-பொம்மணத்துப்பட்டி	2	4
கரூர்-மாமரத்துப்பட்டி	1	6
கரூர்-இளையபெருமாள்பட்டி	1	2
தனியார் துறை பேருந்து:		
கரூர்-பழனிசெட்டியூர்	1	14
கரூர்-மணப்பாறை	1	6
(இ) கரூர்-கீரனூர் (வழி) பி. உடையாப்பட்டி	1	2
குளித்தலை-கொசூர் (வழி) கீரனூர்	1	6
கரூர்-பி. உடையாப்பட்டி (வழி) மஞ்சநாயக்கன்பட்டி	2	4

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

	தினசரி இயக்கப்படும் பேருந்துகள்	நடைகள்
(ஈ) கொசூர்-வீரப்பூர் வழித்தடம்:		
கரூர்-மணப்பாறை (வழி) பஞ்சப்பட்டி, கொசூர், வீரப்பூர்	1	4
தனியார் துறை பேருந்து:		
திருச்சி-வீரப்பூர் (வழி) தோகமலை, கொசூர்	1	6
2. (அ) மஞ்சநாயக்கன்பட்டி-காணியாளம்பட்டி-தரகம்பட்டி வழித்தடம்:		
கரூர்-மணப்பாறை (வழி) சக்கரகோட்டை	1	6
கரூர்-மணப்பாறை (வழி) புலியூர், காணியாளம்பட்டி	3	12
தனியார் பேருந்து		
கரூர்-மணப்பாறை	1	6
(ஆ) தரகம்பட்டி-ரெட்டியாப்பட்டி-வீரப்பூர் வழித்தடம்:		
மணப்பாறை-தரகம்பட்டி (வழி) வீரப்பூர், ரெட்டியாம்பட்டி	2	10

58—

கூடுதல் நகரப் பேருந்து

வினா எண் 33876—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து லாலாப்பேட்டை கரூர்-பஞ்சப்பட்டி, கரூர்-பி. உடையாப்பட்டி, கரூர்-குருணிகுளத்துப்பட்டி, கரூர்-ஜெகதாபி, வழி வெள்ளியணை ஆகிய பகுதிகளுக்குக் கூடுதல் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 நவம்பர் 11

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர்-லாலாப்பேட்டை வழித்தட நீளம் 33.50 கி.மீ. கரூர்-லாலாப்பேட்டை, கரூர்-பஞ்சப்பட்டி, கரூர்-பி. உடையாப்பட்டி, கரூர்-குருணிகுளத்துப்பட்டி, கரூர்-ஜெகதாபி (வழி) வெள்ளியணை ஆகிய வழித்தடங்களில் தற்பொழுது நேரிடையாகவும் பகுதி, பகுதியாகவும் நகர மற்றும் புறநகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. கரூர்-லாலாப்பேட்டை வழித்தடம் திருச்சி-கரூர் பேருந்துகள் இயங்கும் பிரதான சாலையாகும். இவ்வழித்தடத்தில் ஒவ்வொரு ஐந்து நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவ்வழித்தடத்தில் 9 அரசுப் பேருந்துகள் 52 நடைகளில் இயக்கப்படுகின்றன.

கரூர்-பஞ்சப்பட்டி, கரூர்-பி. உடையாப்பட்டி வழித்தட நீளம் 35.0 கி.மீ. இவ்வழித்தடத்தில் 13 அரசுப் பேருந்துகள் 44 நடைகளிலும், 2 தனியார் பேருந்துகள் 12 நடைகளிலும் இயக்கப்படுகின்றன.

கரூர்-குருணிகுளத்துப்பட்டி வழித்தடத்தின் நீளம் 35.0 கி.மீ. இவ்வழித்தடத்தில் 8 பேருந்துகள் 10 நடைகளில் இயக்கப்படுகின்றன. மேலும், இவ்வழித்தடத்தில் கரூர்-பாளையம் வரை உள்ள 30.00 கி.மீ. வழித்தட பகுதி கரூர்-திண்டுக்கல் பேருந்துகள் இயங்கும் பிரதான சாலையாகும். இதில் ஒவ்வொரு பத்து நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

கரூர்-ஜெகதாபி (வழி) வெள்ளியணை வழித்தட நீளம் 20.0 கி.மீ. ஆகும். கரூர்-வெள்ளியணை வழித்தடத்தில் ஒவ்வொரு பத்து நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

வெள்ளியணை-ஜெகதாபி வழித்தடத்தில் 5 அரசுப் பேருந்துகள் 14 நடைகளிலும் 1 தனியார் பேருந்து 14 நடைகளிலும் இயக்கப்படுகின்றன.

எனவே, கோரிக்கையின் வழித்தடங்கள் முழுவதும் மேற்கண்டுள்ளவாறு நேரிடையாகவும், பகுதி, பகுதியாகவும் தற்போது போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளன.

59—

புதிய பேருந்து

வினா எண் 34705—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) கரூரிலிருந்து-கரூர் மாவட்ட ஆட்சியர் வளாகம்-ஏமூர்-ஏமூர் புதூர் பொறையாகவுண்டனூர்-லிங்கத்தூர்-உப்பிடமங்கலம் வழியாக சேங்கல் வரை புதிய பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு. போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர்-சேங்கல் (வழி) மாவட்ட ஆட்சியர் வளாகம், ஏமூர், ஏமூர்புதூர், பொறையாகவுண்டனூர், லிங்கத்தூர், உப்பிடமங்கலம் வழித்தட நீளம் 28.7 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் ஏமூர்புதூர்-லிங்கத்தூர் வரை 4.2 கி.மீ. பகுதியைத் தவிர மற்ற வழித்தடம் முழுவதும் பகுதி, பகுதியாக நகர மற்றும் புறநகர்ப் பேருந்துகள் மூலம் நன்கு பேருந்து வசதி பெற்றுள்ளது. மேற்படி பேருந்து வசதி பெறாத 4.2 கி.மீ.-ல் 2.1 கி.மீ. மண் சாலையாக, பேருந்து இயக்க தகுதியற்ற நிலையில் உள்ளது. இதில் பொறையாகவுண்டனூர் என்ற கிராமம் உள்ளது. எனவே, கோரிக்கையின் வழித்தடத்தில் 2.1 கி.மீ. பகுதி மண் சாலையாக உள்ளதால் இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

60—

புதிய பேருந்து

வினா எண் 34710—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து மஞ்சநாயக்கன்பட்டி, புதுவாடி, கிரனூர், தரகம்பட்டி, பாலவிடுதி வழியாக மணப்பாறைக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர்-மணப்பாறை (வழி) மஞ்சநாயக்கன்பட்டி, புதுவாடி, கிரனூர், தரகம்பட்டி, பாலவிடுதி வழித்தடத்தின் மொத்த நீளம் 98.7 கி.மீ. ஆகும். இவ்வழித்தடம் கரூரிலிருந்து மணப்பாறை

செல்வதற்கு சுற்று வழித்தடம் ஆகும். மேலும், இவ்வழித்தடம் முழுவதும் தற்போது பகுதி, பகுதியாக கீழ்க்கண்டுள்ளவாறு போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது:—

கரூர்-வெள்ளியணை:

இத்தடத்தில், சராசரியாக ஒவ்வொரு பத்து நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

வெள்ளியணை-மஞ்சநாயக்கன்பட்டி:

இத்தடத்தில், 5 அரசுப் பேருந்துகள்மூலம் 18 நடைகளும், 2 தனியார் பேருந்துகள்மூலம் 20 நடைகளும் இயக்கப்படுகின்றன.

மஞ்சநாயக்கன்பட்டி-பழனி செட்டியூர்:

இவ்வழித்தடத்தில், தனியார் பேருந்து ஒன்றின்மூலம் 14 நடைகள் இயக்கப்படுகின்றன.

பாறைப்பட்டி-பஞ்சப்பட்டி:

இவ்வழித்தடம், குளித்தலை-தரகம்பட்டி பிரதான சாலையாகையால், சராசரியாக 15 நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

பஞ்சப்பட்டி—புதுவாடி—வீரனூர்—பி.உடையாப்பட்டி:

இவ்வழித்தடத்தில், 6 அரசுப் பேருந்துகள் 18 நடைகளும், தனியார் பேருந்து ஒன்றுமூலம் 6 நடைகளும் இயக்கப்படுகின்றன.

பி.உடையாப்பட்டி—தரகம்பட்டி—பாலவிடுதி:

இவ்வழித்தடத்தில, 3 அரசுப் பேருந்துகள்மூலம் 12 நடைகளும், 2 தனியார் பேருந்துகள்மூலம் 18 நடைகளும் இயக்கப்படுகின்றன.

பாலவிடுதி—மணப்பாறை :

இவ்வழித்தடத்தில், 5 அரசுப் பேருந்துகள்மூலம் 26 நடைகளும், 6 தனியார் பேருந்துகள்மூலம் 28 நடைகளும் இயக்கப்படுகின்றன.

61—

புதிய பேருந்து

வினா எண் 34711—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) கரூரிலிருந்து மேட்டுதிருக்காம்புலியூர், தரகம்பட்டி வழியாக மணப்பாறைக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூரிலிருந்து மேட்டுதிருக்காம்புலியூர், தரகம்பட்டி வழியாக மணப்பாறைக்குச் செல்லும் வழித்தடம் 85.4 கி. மீட்டர் நீளமுள்ள சுற்று வழித்தடம் ஆகும். இதில் நேரடி பயணிகள் பயணம் செய்யும் வாய்ப்பில்லை. தவிர இவ்வழித்தடம் முழுவதும் கீழ்க்கண்டுள்ளவாறு பகுதி வாரியாக போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது:

அ. கரூர்—திருக்காம்புலியூர் வழித்தடம்:

திருச்சி-கரூர் பேருந்துகள் இயங்கும் பிரதான சாலையாகும். இவ்வழித்தடத்தில் ஒவ்வொரு ஐந்து நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

(ஆ) முனையனூர் பிரிவு—காட்டுப்பட்டி வழித்தடம்:

வ.எண்.	வழித்தடம்	தினசரி இயக்கப்படும் பேருந்துகள்	நடைகள்
1.	குளித்தலை-கரூர் (வழி) பஞ்சப்பட்டி	1	1
2.	திருச்சி-கரூர் (வழி) பஞ்சப்பட்டி	1	1
3.	கரூர்-பஞ்சப்பட்டி (வழி) சேங்கல்	3	16
4.	கரூர்-சேங்கல்	3	16
5.	கரூர்-கண்ணமுத்தாம்பட்டி	2	4
	தனியார்:		
1.	கரூர்-மணப்பாறை (வழி) சேங்கல்	1	6
2.	குளித்தலை-கரூர் (வழி) பஞ்சப்பட்டி	1	6

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

	தினசரி இயக்கப்படும் பேருந்துகள்	நடைகள்
(இ) கரட்டுப்பட்டி-தரகம்பட்டி வழித்தடம்:		
1. முசிறி-கடவூர் (வழி) பஞ்சப்பட்டி	1	4
2. குளித்தலை-தரகம்பட்டி (வழி) பஞ்சப்பட்டி	1	6
3. முசிறி-மணப்பாறை (வழி) தரகம்பட்டி	-	2
4. குளித்தலை-பாப்பனம்பட்டி	1	4
5. குளித்தலை-சின்னதேவன்பட்டி	2	4
6. குளித்தலை-காணியாளம்பட்டி	1	2
தனியார் (புறநகர்):		
1. குளித்தலை-தரகம்பட்டி	1	12
2. குளித்தலை-கடவூர்	1	6
(ஈ) தரகம்பட்டி-மணப்பாறை வழித்தடம்:		
1. கரூர்-மணப்பாறை (வழி) தரகம்பட்டி	5	26
தனியார் பேருந்து :		
1. கரூர்-மணப்பாறை (வழி) தரகம்பட்டி	4	18
2. கரூர்-கடவூர்	1	6
3. கரூர்-அய்யலூர்	1	4

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

62—

மாநகரப் பேருந்து

வினா எண் 43520—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரிலிருந்து அம்பத்தூர் வரை மாநகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு-அம்பத்தூர் தடத்தின் நீளம் 70.0 கி.மீ ஆகும். எனவே, இத்தடத்தில் மாநகரப் பேருந்துகளை இயக்க இயலாது. எனினும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம் புதிய தடங்கள் இயக்கும்பொழுது இத்தடத்தில் பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

63—

நகரப் பேருந்து நீட்டிப்பு

வினா எண் 43532—திரு. வி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருப்போரூர், திருக்கழுக்குன்றம், மதுராந்தகம், உத்திரமேரூர் பகுதிகளிலிருந்து வரும் நகரப் பேருந்துகளை செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு நகரில் செங்கல்பட்டு நகராட்சி அனைத்து வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையத்தைக் கட்டி நிருவகித்து வருகிறது. பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையத்திலிருந்து 1.0 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இந்த இடம் மிகச் சிறியதாக உள்ளது. இங்கு பேருந்துகளை நிறுத்துவதும், திருப்புவதும் கடினமாகும். மேலும் இது பிரதான சாலை 45-ல் அமைந்துள்ளதால் பேருந்துகளை பழைய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கினால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும். மேற்கூறிய காரணங்களினால் திருப்போரூர், திருக்கழுக்குன்றம், மதுராந்தகம், உத்திரமேரூர் பகுதிகளிலிருந்து செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையத்திற்கு இயக்கப்படும் பேருந்துகளை பழைய பேருந்து நிலையம் வரை நீட்டித்து இயக்குவது சாத்தியமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2008 நவம்பர் 11

64—

இடைத்தரகர்களுக்குத் தடை

வினா எண் 43681—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் இடைத்தரகர்களை தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(1) வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் இடைத்தரகர்களின் நடமாட்டம் மற்றும் ஆதிக்கத்தைக் குறைக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பல்வேறு சுற்றறிக்கைகள்மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(2) பொதுமக்கள் தங்கள் பணி தொடர்பாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை அணுகும்போது இடைத்தரகர்களால் எந்தவிதமான இடையூறுகளும் ஏற்படா வண்ணம் இருக்க அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் தலைமையிடத்திலும் சுழற்சி முறையில் பணியாளர்கள் "வரவேற்பாளராக" நியமிக்கப்பட்டு பொதுமக்களின் பணி கவனிக்கப்படுகிறது.

(3) மேலும் அனைத்து சரக அலுவலர்களும் தங்கள் கட்டுப்பாட்டில் இயங்கும் அலுவலகங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அத்தகைய ஆய்வின்போது இடைத்தரகர்கள் தென்பட்டால் காவல் துறையில் ஒப்படைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

65—

கூடுதல் பேருந்து

வினா எண் 47679—திரு. ரெ. நெடுஞ்செழியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கிள்ளுகோட்டையிலிருந்து விராலிப்பட்டி வரை புதியதாக பேருந்து இயக்கவும், கந்தர்வக்கோட்டை-

குளத்தூர் நாயக்கர்பட்டி வரை கூடுதல் பேருந்து இயக்கவும், சுறம்பக்குடி வரை கூடுதல் பேருந்தும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வக்கோட்டையிலிருந்து விராலிப்பட்டி வழியாக கிள்ளுக்கோட்டைக்கு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் மண்டல பேருந்துகள்மூலம் 4 நடைகள் இயக்கப்படுகின்றன. கந்தர்வக்கோட்டையிலிருந்து குளத்தூர் நாயக்கர்பட்டிக்கு 2 நகர் பேருந்துகள்மூலம் 12 நடைகள் இயக்கப்படுகின்றன. கந்தர்வக்கோட்டையிலிருந்து சுறம்பக்குடிக்கு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் மண்டல இரு நகரப்பேருந்துகள்மூலம் 28 நடைகளும், புறநகர்ப் பேருந்து ஒன்றுமூலம் 2 நடைகளும் இயக்கப்படுகின்றன. தனியார் பேருந்து ஒன்றின்மூலம் 4 நடைகளும் இயக்கப்படுகின்றன. இப்பேருந்து வசதியே இக்கிராமங்களுக்கு போதுமானதாகக் கருதப்படுகிறது.

66—

கூடுதல் முன்பதிவு இடங்கள்

வினா எண் 47928—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, மானாமதுரை வழியாக செல்லும் சேது விரைவு வண்டியில் மானாமதுரைக்குக் கூடுதல் முன்பதிவு இடங்கள், படுக்கை வசதி வழங்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மானாமதுரை வழியாக செல்லும் சேது விரைவு வண்டியில் மானாமதுரை பயணிகளுக்கு பெரும்பாலான இடங்கள் மற்றும் படுக்கை வசதிகள் ஒதுக்கப்படுகின்றன. மானாமதுரை பயணிகளுக்கு 2-A வகுப்பின் 100% இடங்கள் நிரப்பப்படுகின்றன. மேலும் 3-A மற்றும் SL வகுப்பில் உள்ள 99% இடங்கள் "முதலில் வருபவர்களுக்கு

முன்னுரிமை" என்ற அடிப்படையில் நிரப்பப்படுகின்றன. எனவே, கூடுதல் முன்பதிவு இடங்கள், படுக்கை வசதிகள் வழங்க இயலாது என தென்னக இரயில்வே துறை தெரிவித்துள்ளது.

67—

நகரப் பேருந்து

வினா எண் 48225—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, ஜிட்டாண்டஅள்ளி ஊராட்சி, பாறைக்கொட்டாய் கிராமத்திற்கு கிருஷ்ணகிரியில் இருந்து நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, கிருஷ்ணகிரி-பாறைக்கொட்டாய் தடத்தின் நீளம் 33 கிலோ மீட்டராகும். கிருஷ்ணகிரியிலிருந்து பாறைக்கொட்டாய் வரை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலம்மூலமாக ஏற்கெனவே நகரப் பேருந்து தடம் எண் கே. 42 நாளொன்றுக்கு 10 நடைகளும் மற்றும் காவேரிப்பட்டினம் - பாறைக்கொட்டாய் தடத்தில் 2 குறுநடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் பயணிகளின் அடர்வு சுமார் 45 விழுக்காடுகளே உள்ளன. எனவே, கூடுதல் நகரப் பேருந்து இயக்கிட இயலாத நிலையுள்ளது.

68—

கூடுதல் பேருந்து

வினா எண் 48227—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பண்ணந்தூர் - ஊத்தங்கரை, பண்ணந்தூர் - அரூர் பகுதிகளுக்கு பேருந்து இயக்கவும், தருமபுரி -

2008 நவம்பர் 11]

பண்ணந்தூர் மற்றும் பண்ணந்தூர் - பாலக்கோடுக்குக் கூடுதல் பேருந்து இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, பண்ணந்தூர் - ஊத்தங்கரை (வழி) சாமாண்டப்பட்டி, அரசம்பட்டி, புலியூர், கல்லாவி தடத்தின் நீளம் 43.0 கி. மீட்டராகும். பண்ணந்தூரிலிருந்து ஊத்தங்கரைக்கு நேரிடை பேருந்து வசதி எதுவுமில்லை. பகுதிவாரியாக போக்குவரத்து வசதி உள்ளது. பண்ணந்தூரிலிருந்து ஊத்தங்கரைக்கு பயணிகள் அடர்வு மிகக் குறைவாக இருக்கும். எனவே, புதிய வழித்தடங்களுக்கு பேருந்துகள் ஒதுக்கீடு அளிக்கும்போது, இத்தடத்தில் பேருந்து இயக்குவது பற்றி பரிசீலிக்கப்படும்.

பண்ணந்தூர் - அரூர் (வழி) சாமாண்டப்பட்டி, இருமத்தூர், கம்பைநல்லூர், மொரப்பூர் வழித்தடத்தின் நீளம் 40.5 கி.மீட்டராகும். பண்ணந்தூரிலிருந்து அரூருக்கு நேரிடை பேருந்து வசதி எதுவுமில்லை. பகுதிவாரியாக போக்குவரத்து வசதி உள்ளது. பண்ணந்தூரிலிருந்து அரூருக்கு பயணிகள் அடர்வு மிகக் குறைவாக இருக்கும். எனவே, புதிய வழித்தடங்களுக்கு பேருந்துகள் ஒதுக்கீடு அளிக்கும்போது, இத்தடத்தில் பேருந்து இயக்குவது பற்றி பரிசீலிக்கப்படும். தருமபுரி-பண்ணந்தூர் வழித்தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டல நகரப் பேருந்து தடம் எண் டி 37 ஒரு பேருந்துமூலம் நாளொன்றுக்கு 10 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் பயணிகளின் அடர்வு 47 விழுக்காடுகளே உள்ளதால், தற்சமயம் இத்தடத்தில் கூடுதல் பேருந்து வசதியினைச் செய்திட இயலாத நிலையுள்ளது.

பாலக்கோடு-பண்ணந்தூர் வழித்தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டல நகரப் பேருந்து தடம் எண் பி. 02 பேருந்தின்மூலம் நாளொன்றுக்கு 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் பயணிகளின் அடர்வு சுமார் 45 விழுக்காடுகளே உள்ளதால், தற்சமயம் இத்தடத்தில் கூடுதல் பேருந்து வசதியினைச் செய்திட இயலாத நிலையுள்ளது.

எனினும், புதிய வழித்தடங்களுக்கு பேருந்துகள் ஒதுக்கீடு அளிக்கும்பொழுது, இவ்வழித்தடங்களில் கூடுதல் நடைகள் இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

69—

பேருந்து நீட்டிப்பு

வினா எண் 48231—திரு. த. அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, சாப்பரம் ஊராட்சி, குட்டிக்கானூர் கிராமத்துக்கு இதுவரை பேருந்து போக்குவரத்து இல்லை. தடம் எண் 13-ஏ பேருந்தை குட்டிக்கானூர் வரை நீட்டிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலம்மூலமாக நகரப் பேருந்து தடம் எண் கே. 13ஏ, கிருஷ்ணகிரி - புங்கம்பட்டி (வழி) காவேரிப்பட்டினம், மோட்டுப்பட்டி, குட்டிக்கானூர் பிரிவு, பனகமுட்லு பிரிவு, சாப்பரம், நாளொன்றுக்கு 2 நடைகளும், கிருஷ்ணகிரி - புங்கம்பட்டி (வழி) காவேரிப்பட்டினம், மோட்டுப்பட்டி, குட்டிக்கானூர் பிரிவு, பனகமுட்லு பிரிவு, பனகமுட்லு, பனகமுட்லு பிரிவு, சாப்பரம், நாளொன்றுக்கு 4 நடைகளும், கிருஷ்ணகிரி - கருத்தமாரப்பட்டி (வழி) காவேரிப்பட்டினம் மோட்டுப்பட்டி, குட்டிக்கானூர் பிரிவு, சாப்பரம், புங்கம்பட்டி நாளொன்றுக்கு 6 நடைகளும் மற்றும் கிருஷ்ணகிரி - தானம்பட்டி (வழி) லண்டன்பேட்டை 6 நடைகளும் என பல்முனைத் தடங்களில் இயங்கி வருகின்றன. மேலும், நகரப் பேருந்து தடம் எண் பி15-ன்மூலம் பாலக்கோடிலிருந்து குட்டிக்கானூர் கிராமம் வழியாக பாறைக்கொட்டாய் நாளொன்றுக்கு 2 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. கோரிக்கைப்படி நகர் பேருந்து தடம் எண் கே. 13ஏ-யின் மூலம் கிருஷ்ணகிரி - புங்கம்பட்டி இயங்கும் நடைகளை, குட்டிக்கானூர் கிராமத்திற்குள் சென்று வருமாறு இயக்கினால் கால நேரம் மாறுவதுடன் நேரடி பயணிகளுக்கு பயணக் கட்டணம் அதிகரிப்பு

மற்றும் காலதாமதம் ஏற்படும். மேலும் குட்டிக்கானூர் கிராமம் ஏற்கெனவே நகரப் பேருந்து தடம் எண் கே.13ஏ இயங்கும் கிருஷ்ணகிரி - புங்கம்பட்டி தடத்தில் குட்டிக்கானூர் பிரிவு சாலையிலிருந்து 0.8 கி.மீ. நடைபயண தூரத்திலேயே உள்ளதால், அக்கிராமம் போக்குவரத்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படுகிறது.

70—

பேருந்து நீட்டிப்பு

வினா எண் 48232—திரு. த. அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பாப்பாரப்பட்டி ஊராட்சி, காரமூர் கிராமத்திற்கு இதுவரை பேருந்து வசதி இல்லை. கிருஷ்ணகிரி - பண்ணந்தூர் தடம் எண்கள் 50, 69, 31 பேருந்துகள் காரமூர் வரை நீடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டல நகரப் பேருந்து தடம் எண் கே. 50 கிருஷ்ணகிரி - வாடமங்கலம் (வழி) காவேரிப்பட்டினம், தட்ரஅள்ளி, பண்ணந்தூர் 4 நடைகளும், தடம் எண் கே. 69 கிருஷ்ணகிரி - பண்ணந்தூர் (வழி) காவேரிப்பட்டினம், நெடுங்கல், அகரம் 4 நடைகளும், கிருஷ்ணகிரி - பண்ணந்தூர் (வழி) காரிமங்கலம், சப்பாணிப்பட்டி, தட்ரஅள்ளி 4 நடைகளும், தடம் எண் கே. 31 கிருஷ்ணகிரி - பண்ணந்தூர் (வழி) காவேரிப்பட்டினம், சப்பாணிப்பட்டி, தட்ரஅள்ளி 1 நடையும், கிருஷ்ணகிரி - வாடமங்கலம் (வழி) காவேரிப்பட்டினம், சப்பாணிப்பட்டி, பண்ணந்தூர் 2 நடைகளிலும் இயக்கப்பட்டு வருகின்றது. இதில் காரமூர் கிராமம் பண்ணந்தூரிலிருந்து 2.40 கி.மீ. தூரத்தில் உள்ளது. இக்கிராமத்தின் மக்கள் தொகை சுமார் 400 மட்டுமே உள்ளது. இந்த 2.40 கி.மீ. தூரத்தில் ஏற்கெனவே பண்ணந்தூர் முதல் சாமாண்டப்பட்டி வரை 2.0 கி.மீ. தூரத்திற்கு பேருந்து வசதியுள்ளது. மீதமுள்ள சாமாண்டப்பட்டி முதல் காரமூர் வரை 0.40 கி.மீ. தூரத்திற்கு யாதொரு பேருந்து வசதியும் இல்லை. மேலும் காரமூர் கிரா

ஏற்கெனவே நகரப் பேருந்து தடம் எண் டி37-ன்மூலம் பேருந்து வசதி பெற்ற சாமாண்டப்பட்டி கிராமத்திலிருந்து 0.40 கி.மீ. தூரத்தில் உள்ளதால் இக்கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படுகிறது. இருப்பினும் சாமாண்டப்பட்டி முதல் காரமூர் வரையுள்ள சாலை பேருந்துப் போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லாத காரணத்தினால், தற்சமயம் தட நீட்டிப்பு செய்து இயக்கிட இயலாத நிலையுள்ளது.

71—

பேருந்து நீட்டிப்பு

வினா எண் 48233—திரு. த. அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, குண்டலப்பட்டி ஊராட்சி, காவேரிப்பட்டினம் முதல் குண்டலப்பட்டி வரை செல்லும் தடம் எண் 5 பேருந்தை முனியப்பன்கோவில் கொட்டாய் வரையும், காவேரிப்பட்டினம்-மோட்டூர் வரை செல்லும் தடம் எண் 6-ஏ, 55 பேருந்துகளை மாட்டுபாறை வரையும் நீட்டிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலத்தின், நகரப் பேருந்து தடம் எண் கே.பி5-ன் மூலம் காவேரிப்பட்டினம் - குண்டல்பட்டி தடத்தில் நாளொன்றுக்கு 4 நடைகள் இயக்கப்படுகிறது. முனியப்பன் கோயில்கொட்டாய் கிராமம் குண்டல்பட்டியிலிருந்து 2.7 கி.மீ. தூரத்தில் யாதொரு பேருந்து வசதியும் பெறாத கிராமமாக உள்ளது. இத்தடத்தில் குண்டல்பட்டி முதல் தாசன்கொட்டாய் வரை பேருந்து சென்று திரும்ப போதிய வசதி இல்லாத நிலை உள்ளது. மேலும் தாசன்கொட்டாய் முதல் முனியப்பன்கோயில் கொட்டாய் வரை 1.4 கி.மீ. சாலை மண்சாலை. இது அணை கால்வாய் பகுதியாகும். இச்சாலை பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லாத காரணத்தினால் கோரிக்கைப்படி நகரத் தடம் எண் கே.பி.5-யை நீட்டித்து இயக்கிட இயலாத

நிலையுள்ளது. காவேரிப்பட்டினம் - மோட்டூர் வழித்தடத்தில் நகரத் தடம் எண் கே.6 ஏ மற்றும் கே 55-ன் மூலம் நாளொன்றுக்கு தலா 2 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. மாட்டுப்பாறை கிராமம் மோட்டூரிலிருந்து 1.5 கி.மீ. தூரத்தில் யாதொரு பேருந்து வசதியும் பெறாத கிராமமாக உள்ளது. மேற்படி சாலை முழுவதும் மண் சாலையாகவும், அணையில் இருந்து வரும் கால்வாய் செல்லும் பகுதியாகவும், சாலை பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லாத காரணத்தினாலும், கோரிக்கைப்படி நகரத் தடம் எண் கே 6 ஏ, கே 55-ஐ தற்சமயம் நீட்டித்து இயக்கிட இயலாத நிலையுள்ளது.

72—

பேருந்து வசதி

வினா எண் 48393—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தொப்பூர்-பொம்மிடி வரை செல்லும் நகரப் பேருந்தை மாலை 4.00 மணிக்கு தொப்பூரிலிருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, பொம்மிடி-தொப்பூர் வழித்தடத்தின் நீளம் 30.0 கி. மீட்டராகும். இத்தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலம், நகரத் தடம் எண் 01-ன்மூலம் நாளொன்றுக்கு 10 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் இப்பேருந்து பொம்மிடியிலிருந்து ராமதாஸ்தண்டா வரையுள்ள பள்ளி செல்லும் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் பொம்மிடியிலிருந்து மாலை 4.30 மணிக்கு புறப்பட்டு தொப்பூர் செல்லுமாறு இயக்கப்பட்டு வருகிறது. எனவே, கோரிக்கையின்படி நகரப் பேருந்து தடம் எண் எம். 01-ன் காலநேரத்தை மாற்றி இயக்கினால் ஏற்கெனவே பள்ளிவிடும் நேரத்திற்கு பேருந்து வசதி பெற்றவர்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, கோரிக்கையின்படி நகர் பேருந்து தடம் எண் எம்.01-ன் காலநேரத்தை மாற்றியமைத்து இயக்கிட இயலாத நிலையுள்ளது.

[2008 நவம்பர் 11

73—

பேருந்து வசதி

வினா எண் 48394—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, பொம்மிடி-சேலம் மாவட்டம், தீவட்டிப்பட்டி வரை நகர பேருந்தும், பொம்மிடி-திருவண்ணாமலைக்கு பேருந்தும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, பொம்மிடி-தீவட்டிப்பட்டி தடத்தில் நகர் பேருந்து ஒன்று தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலம்மூலம் 26-04-2008 முதல் இயக்கப்பட்டது. பொம்மிடி-திருவண்ணாமலை தடத்தில் நேரடி பேருந்து வசதி எதுவுமில்லை. ஆனால், பகுதிவாரியாக பொம்மிடி-அரூர் தடத்தில் 4 பேருந்துகள்மூலம் 30 நடைகளும் மற்றும் அரூர்-திருவண்ணாமலை தடத்தில் தானிப்பாடி வழியாக 3 பேருந்துகள் 12 நடைகளும், ஊத்தங்கரை வழியாக 17 பேருந்துகள் 34 நடைகளும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலம் மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் தினசரி இயக்கப்படுகின்றன. மேலும், பௌர்ணமி, அமாவாசை, கார்த்திகை தீப நாட்களில் மட்டும் பயணிகளின் அடர்வு உள்ளதால், இந்த நாட்களில் சிறப்புப் பேருந்துகள் பொம்மிடியிலிருந்து தேவைக்கேற்ப திருவண்ணாமலைக்கு இயக்கப்பட்டு வருகிறது. மற்ற நாட்களில் பயணிகளின் அடர்வு இல்லாத காரணத்தினால், பொம்மிடியிலிருந்து திருவண்ணாமலைக்கு தனியாக பேருந்து ஒன்றை தற்சமயம் இயக்கிட இயலாத நிலையுள்ளது.

74—

கூடுதல் பேருந்து

வினா எண் 47677—திரு. ரெ. நெடுஞ்செழியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை-கந்தர்வக்கோட்டை வரை சென்று வரும் பேருந்து எண் 4-பி4, இதில் ஒரு பேருந்தை துருசுப்பட்டி வரை நீட்டிக்கவும், தஞ்சாவூர்-கந்தர்வக்கோட்டை வரும் பேருந்து எண் 60-ஐ (வழி) புதுநகர், துருசுப்பட்டி, பிசானத்தூர் வரை கூடுதலாக இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடம் எண் 4 பேருந்து புதுக்கோட்டையிலிருந்து சோத்தப்பாளை வழியாக கந்தர்வக்கோட்டைக்கு 12 நடைகள் இயக்கப்படுகிறது. இவ்வழித்தடத்தின் நீளம் 35.0 கி.மீ. ஆகும். கந்தர்வக்கோட்டையிலிருந்து துருசுப்பட்டி 6.0 கி.மீட்டர் ஆக மொத்தம் தூரம் 41.0 கி.மீட்டர். எனவே, இப்பேருந்தை துருசுப்பட்டி வரை நீட்டிக்க இயலாது. தடம் எண் 4-பி பேருந்து பல்முனைத் திட்டத்தின்கீழ் 6 வழித்தடங்களில் போதிய கால அவகாசமின்றி 46.10 கி.மீட்டர் வரை இயக்கப்படுகிறது. எனவே இப்பேருந்து மேலும் நீட்டித்து இயக்க இயலாது. தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் - கந்தர்வக்கோட்டை (வழி) வஸ்தாசாவடி, திருக்கானூர்பட்டி, புனக்குளம், புதுநகர் ரோடு, புதுநகர், துருசுப்பட்டி, பிசானத்தூர் தடத்தின் நீளம் 35.0 கி.மீ. ஆகும். கோரிக்கை தடத்தில் தஞ்சாவூர் நகர் பேருந்து தடம் எண் B-60 மூலம் 3 நடைகளும் மற்றும் நகர் பேருந்து தடம் எண் C-60 மூலம் 1 நடையும் என தினசரி 4 நடைகள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.

75—

பெண் மருத்துவர் நியமனம்

வினா எண் 12157—திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மருத்துவர் நியமிக்கப்படுவாரா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 நவம்பர் 11

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் அரசு மருத்துவமனையில் அரசால் ஒப்பளிக்கப்பட்ட உதவி மருத்துவர் பணியிடங்கள் மொத்தம்-2. அதில் இரண்டு ஆண் மருத்துவர் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கையின்படி வருங்காலங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களில், பெண் மருத்துவரை நியமித்திட ஆவன செய்யப்படும்.

76—

மருத்துவர் நியமனம்

வினா எண் 18748—திரு. ஜா. ஜான் ஜோசப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தொகுதியில் உள்ள துணை சுகாதார நிலையங்களில் மருத்துவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விளவங்கோடு தொகுதியில் செயல்பட்டு வரும் 35 துணை சுகாதார நிலையங்களில் மருத்துவர் பணியிடம் ஒப்பளிப்பு செய்யப்படவில்லை. இது குறித்து கருத்துரு அரசின் பரிசீலனையிலும் இல்லை. துணை சுகாதார நிலையத்தில் கிராம சுகாதார செவிலியர் முழுமையான அளவில் பணியில் உள்ளனர்.

77—

சுற்றுச் சுவர்

வினா எண் 34155—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், மானத்தாள் ஊராட்சி, ஓலைப்பட்டி மகப்பேறு சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், சேடப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்டு ஓலைப்பட்டி துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது. இங்கு சுற்றுச் சுவர் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

78—

சிறைச்சாலைக்கு சுற்றுச் சுவர்

வினா எண் 45313—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள மாவட்ட சிறைச்சாலைக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் இராமநாதபுரத்தில் புதிதாக கட்டப்பட்டுவரும் மாவட்ட சிறைக்கு அரசாணை (நிலை) எண் 1007, உள் (சிறை 4) துறை, நாள் 19-10-2006-ன்படி, ரூ. 89.00 இலட்சம் அங்கீகரிக்கப்பட்டு பணிகள் பொதுப் பணித் துறையினர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இத்தொகையில் ரூ. 31.00 இலட்சம் சுற்றுச் சுவர் கட்டுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

79—

கிளைச் சிறைச்சாலை மாற்றம்

வினா எண் 47373—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பொள்ளாச்சியிலுள்ள கிளைச் சிறைச்சாலையை ஆழியாருக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் உள்ள கிளைச் சிறையின் அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 97 ஆகும். ஆனால், அங்கு தற்போது 38 சிறைவாசிகள் மட்டுமே அடைக்கப்பட்டுள்ளனர். மேலும், அக்கிளைச் சிறைச்சாலைக்கு சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ், ஒரு ஆயிற்கூடமும், சுற்றுச் சுவரும் புதிதாக கட்டப்பட்டுள்ளன. எனவே, பொள்ளாச்சியில் உள்ள கிளைச் சிறையை ஆழியாருக்கு மாற்றுவதற்கு செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

80—

சிறைச்சாலையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 52269—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை கிளைச் சிறைச்சாலையை மாவட்ட சிறைச்சாலையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சிவகங்கை மாவட்டத்தில், சிவகங்கை கிளைச் சிறையின் அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 20 ஆகும். அதன் தற்போதைய

2008 நவம்பர் 11]

அடைப்பு 18 ஆகும். சிவகங்கைக்கு அருகில் மதுரை மத்திய சிறை ஒன்றும், இராமநாதபுரத்தில் மாவட்ட சிறை ஒன்றும் உள்ளது. மேலும் சிவகங்கையில், ஒரு திறந்த வெளிச்சிறை அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், சிவகங்கை கிளைச் சிறையை மாவட்ட சிறையாக தரம் உயர்த்த தற்போது அவசியம் எழவில்லை.

81—

வேலூர் கோட்டை

வினா எண் 18634—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் கோட்டையிலுள்ள திப்பு மகால், ஹைதர் மகாலை பொதுமக்கள் தினமும் பார்வையிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

வேலூர் கோட்டையிலுள்ள திப்பு மகால் மற்றும் ஹைதர் மகால் உள்ள வேலூர் கோட்டை வளாகம், மைய அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, தமிழ்நாடு காவலர்கள் பணிப் பயிற்சிக் கல்லூரி பயன்பாட்டிற்காக, காவல் துறையிடம் ஒப்படைத்துள்ளது. முக்கியமாக தொன்று தொட்டு அதாவது 1896 முதல் வேலூர் கோட்டை வளாகத்தில், திப்பு மகால் மற்றும் ஹைதர் மகால் வளாகத்தில் காவல் ஆளினர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் பயிற்சி சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தற்போது அரசால் தேர்வு செய்யப்பட்ட பயிற்சி 706 உதவி ஆய்வாளர்களில், 300 உதவி ஆய்வாளர்கள் இங்கு பயிற்சியில் இருப்பதால், திப்பு மகால் மற்றும் ஹைதர் மகாலில் பொதுமக்களை அனுமதித்தால் பயிற்சியின் பிரத்யேக தன்மை பாதிக்கப்படுவதுடன் பயிற்சிக்கும் முழு இடையூறாக அமைந்துவிடும். எனவே திப்பு மகால் மற்றும் ஹைதர் மகால் பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்க இயலாது.

82—

புதிய கட்டடம்

வினா எண் 41289—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை சார்பதிவாளர் அலுவலகம் தற்போது அரசு கட்டடத்தில் இயங்கி வருவதால் புதிய கட்டடம் கட்டும் அவசியம் எழவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

83—

விடுதலைப் போராட்ட நினைவு மேடை

வினா எண் 42178—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானியில் இடிக்கப்பட்ட விடுதலைப் போராட்ட நினைவு தேசிய மேடையைக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அருள்மிகு செல்லியாண்டியம்மன் திருக்கோயில் அறநிலையத்தின்மூலம் 5' X 5' தேசியகொடி மேடை அமைக்கப்பட்டது.

84—

நினைவு மண்டபம்

வினா எண் 51102—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, கடலியில் ராஜாதேசிங்கிற்கு நினைவு மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

85—

நியாயவிலைக் கடைகள்மூலம் கோதுமை

வினா எண் 35233—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் கோதுமை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசால் வழங்கப்படுகின்ற கோதுமை குடும்ப அட்டைதாரர்களின் நுகர்வினைப் பொறுத்து உப ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

86—

இலவச சலவைப் பெட்டி

வினா எண் 4763—திரு. மி. சண்முகவேலு: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச சலவைப் பெட்டி எப்போது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

ஆண்டுதோறும் வரப்பெற்ற மனுக்களின் முதுநிலை மற்றும் தகுதியின் அடிப்படையில் இலவச சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டு

வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் உடுமலைப்பேட்டை தொகுதியில் 10 நபர்களுக்கு சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

87—

தங்கும் விடுதி

வினா எண் 16799—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டை மாரியம்மன் கோவில் அரசு மேல்நிலைப் பள்ளியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியருக்கு தங்கும் விடுதி கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டை மாரியம்மன் கோவில் அரசு மேல்நிலைப் பள்ளியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியருக்கான விடுதி ஏதும் இயங்கப் பெறாததால் அவ்விடுதிக்குக் கட்டடம் கட்டும் வினா எழாது. மேலும் தற்போது அங்கு புதிதாக மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர் விடுதி துவங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

88—

பெண்கள் விடுதி

வினா எண் 33162—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தி, திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மணலூர், அல்லி நகரம், கீழடி ஆகிய பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல

2008 நவம்பர் 11]

மாணவர் விடுதியும், பழையனூரில் பெண்கள் விடுதி அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தி, திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மணலூர், அல்லி நகரம், கீழடி ஆகிய பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி மற்றும் பழையனூரில் பெண்கள் விடுதி தொடங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

89—

கூடுதல் கட்டடம்

வினா எண் 44690—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொழில் பயிற்சி நிலையத்திற்குச் சுற்றுச் சுவருடன் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தேசிய தொழில் நெறிக் கல்வி பயிற்சித் திட்டத்தின்படி செங்கற்பட்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் துவங்கப்பட்டுள்ள தொழிற்பிரிவுகளுக்கு பணிமனை/வகுப்பறைகள் உள்ளன. 2007-2008 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டுள்ள மூன்று தொழிற் பிரிவுகளுக்கான பணிமனை மற்றும் வகுப்பறைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது சுற்றுச் சுவர் கட்டுவதற்கு உத்தேசமில்லை.

(ஆ) எழாது.

90—

தொழிற்பயிற்சி

வினா எண் 45114—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டத்தில் படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய தொழிற்பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* அரசு வேலையில்லாத உதவித்தொகை பெறும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் திறன் எய்தும் பயிற்சியினை 56 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் ஒரு அடிப்படைப் பயிற்சி மையத்திலும் ரூ.8 கோடி செலவில் நடத்த ஆணையிட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கையில் ஒரு புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் 6 தொழிற்பிரிவுகளுடன் ஒப்பளிக்கப்பட்டு ஆகஸ்ட் 2007 முதல் நடைபெற்று வருகிறது. இத்தொழிற்பயிற்சி நிலையத்திற்கான கட்டுமானப் பணி மற்றும் கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. உள்கட்டமைப்பு வசதிகள் செய்த பிறகு வேலைவாய்ப்புத் திறன் எய்தும் பயிற்சி சிவகங்கை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் துவங்கப்படும். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் மானாமதுரை வட்டத்தில் படித்த வேலையில்லாத இளைஞர்கள் பயன்பெற இயலும்.

91—

சித்த மருத்துவக் கல்லூரி

வினா எண் 43588—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்மூலம் சித்த மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்மூலம், அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, அருள்மிகு பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி உதவிபெறும் தொடக்கப் பள்ளி, அருள்மிகு பழனியாண்டவர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, அருள்மிகு பழனியாண்டவர் காதுகேளாதோர் பள்ளி, அருள்மிகு பழனியாண்டவர் நாதஸ்வரம் மற்றும் தவில் பயிற்சிப் பள்ளி, அருள்மிகு பழனியாண்டவர் தேவ ஆகம பாடசாலை மற்றும் அருள்மிகு பழனியாண்டவர் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில் முதல் 4 கல்வி நிறுவனங்களின் சம்பளச் செலவுகளுக்காக அரசு நிதியுதவியும் இதர செலவுகள் திருக்கோயில் நிதியிலும், இதர கல்வி நிறுவனங்கள் முற்றிலும் திருக்கோயில் நிதியிலும் செயல்பட்டு வருகின்றன. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான இத்திருக்கோயிலால் நடத்தப்பட்டு வரும் கருணை இல்லங்களில் உள்ள மாணவ, மாணவிகள் கல்விச் செலவுகளும் திருக்கோயில்மூலமே செலவிடப்பட்டு வருகிறது. மேலும் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக பல்வேறு நலத் திட்டங்களுக்காக பெருமளவு தொகை திருக்கோயில்மூலம் செலவிடப்பட்டு வருகிறது. நிதி வசதியற்ற திருக்கோயில்களின் திருப்பணிக்காகவும், திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ஆண்டுதோறும் தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் சித்த மருத்துவக் கல்லூரி அமைக்கத் தேவையான அடிப்படை கட்டமைப்புகள் (Infrastructure) மற்றும் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம் இல்லையென்பதாலும் சித்த மருத்துவக் கல்லூரியை நிர்வகிக்க அதிக அளவில் தொடர் செலவுகள் ஏற்படும் என்பதாலும் பழனி திருக்கோயில்மூலம் சித்த மருத்துவக் கல்லூரி தொடங்க இயலாது.

[2008 நவம்பர் 11

92—

விடைத்தாள்களைத் திருத்தும் மையம்

வினா எண் 46884—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கையில் பள்ளி விடைத்தாள்கள் திருத்தும் மையம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விடைத்தாள்கள் திருத்தும் மையங்கள் போதிய இடவசதி, இருக்கை வசதி, கழிப்பறை வசதிகள் கொண்ட பள்ளிகளிலேயே அமைக்கப்படுகின்றன. சிவகங்கையில் ஆண்டுதோறும் 10 ஆம் வகுப்பு விடைத்தாள்கள் திருத்தும் மையம் அமைக்கப்பட்டு வருகிறது. சிவகங்கையில் 11 உயர்நிலைப் பள்ளிகள்/மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. +2 மதிப்பீட்டுப் பணியும், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வும் ஒரே சமயத்தில் நடைபெறுவதால் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வெழுதும் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப பள்ளி அறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்பே +2 விடைத்தாள்கள் மதிப்பீடு பணி நடைபெற அறைகள் ஒதுக்கப்படும். அவ்வாறு +2 மதிப்பீடுப் பணிக்கு ஒதுக்கப்படும் அறைகள் மற்றும் இருக்கை வசதிகள் போதுமானதாக சிவகங்கையில் உள்ள பள்ளிகளில் இல்லாததால் +2 மதிப்பீடு மையம் அமைக்க இயலவில்லை.

93—

சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

வினா எண் 14704—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் பேருந்து வழித்தடச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் சாலைகளைச் சேர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நபார்டு வங்கி உதவியுடன் பேருந்து வழிச்சாலைகள், மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் பின்வரும் சாலைகள் சீரமைப்புச் செய்யப்பட்டுள்ளன:

வ. எண்.	சாலையின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்)
1.	பாப்பான்குளம்-உரல்பட்டி சாலை கி.மீ. 1/6-3/0	9.75
2.	பெரியபட்டி-நெகமம் சாலை கி.மீ. 14/8-ல் இருந்து விருகல்பட்டி செல்லும் சாலை கி.மீ. 0/0-1/6	11.00
3.	சோமவார்பட்டி-பொட்டியம்பாளையம் சாலை (வழி) அம்மாபட்டி கி.மீ. 1/0-2/6	11.00
4.	லிங்கநாயக்கன் புதூர்-சனுப்பப்பட்டி சாலை கி.மீ. 0/0-3/2 வரை (சிறப்புப் பழுதுபார்த்தல்)	21.50
5.	சின்னபொம்மன் சாலை-உடுகம்பாளையம் சாலை கி.மீ. 0/0-2/6 வரை (சிறப்புப் பழுதுபார்த்தல்)	20.00
6.	முள்ளங்கிவலசு-கருங்காலி வலசு சாலை (வழி) நாட்டுக்கல்பாளையம் கி.மீ. 0/8-3/2 வரை (சிறப்புப் பழுதுபார்த்தல்)	
7.	மொகவனூர்-அரசூர் சாலை கி.மீ. 0/0-4/4 வரை (சிறப்புப் பழுதுபார்த்தல்)	29.50
8.	உடுமலை-திருப்பூர் சாலை கி.மீ. 4/8-லிருந்து அய்யம்பாளையம் புதூர் சாலை கி.மீ. 0/0-2/8 வரை (சிறப்புப் பழுதுபார்த்தல்)	22.00
9.	உடுமலை-தாராபுரம் சாலை கி.மீ. 1/2-லிருந்து சிவசக்தி காலனி செல்லும் சாலை கி.மீ. 0/0-0/8 வரை (சிறப்புப் பழுதுபார்த்தல்)	4.00

மேற்கண்ட 9 சாலைகளில் மொத்தம் 20.80 கி.மீ. நீளச் சாலைகளுக்கு ரூ.146.25 இலட்சம் செலவில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

94—

கலப்புத் திருமணம்

வினா எண் 16060—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், கூடுதல் சலுகைகளை அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிறப்பு அடிப்படையிலான சாதி இன வேறுபாட்டை அகற்றி, தீண்டாமை எனும் கொடுமையை ஒழித்திட கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்க, அரசு சலுகைகளை அறிவித்து அரசாணைகள் பிறப்பித்துள்ளது. மேலும் கலப்புத் திருமணம் செய்பவருக்கு கீழ்க்கண்டவாறு நிதி உதவியும் வழங்கப்படுகிறது:—

(அ) தம்பதியரில் ஒருவர் முற்பட்ட இனத்தவராக இருந்து பிற்படுத்தப்பட்ட அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தவரை மணந்தால் ரூ.15,000 வழங்கப்படுகிறது. இதில் ரூ. 10,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், ரூ. 5,000 கேட்பு காசோலையாகவும் வழங்கப்படுகிறது.

(ஆ) தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினராக இருந்தால் ரூ. 20,000 வழங்கப்படுகிறது. இதில் ரூ. 10,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், ரூ. 10,000 கேட்பு வரைவோலையாகவோ அல்லது காசோலையாகவோ வழங்கப்படுகிறது.

95—

திருமண மண்டபம்

வினா எண் 4663—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், தாமரைக்குளம் ஆதி திராவிடர்களுக்கு திருமண மண்டபம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், தாமரைக்குளம் ஆதி திராவிடர்களுக்கு திருமண மண்டபம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

96—

மேம்பாட்டு நிதி ஆணையம்

வினா எண் 11684—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பழங்குடியின மக்களுக்கு தனி மேம்பாட்டு நிதி ஆணையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் பழங்குடியினர் நலனுக்காக தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நிலையிலும் மற்றும் தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் திருத்தி அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ள நிலையிலும், பழங்குடியின மக்களுக்கு தனி மேம்பாட்டு நிதி ஆணையம் அமைக்க அவசியம் ஏற்படவில்லை.

97—

இலவச தொகுப்பு வீடுகள்

வினா எண் 18505—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, காவேரிபுரம் ஊராட்சி, செட்டிப்பட்டி காவிரி ஆற்றுப் பகுதியிலுள்ள மீனவர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2006-2007 ஆம் ஆண்டு மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின்கீழ், சேலம் மாவட்டத்திற்கு 273 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் காவேரிபுரம் கிராமம், செட்டிப்பட்டி உட்பட்ட பகுதியில் உள்ள மீனவர்களுக்கு 20 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவ்வீடுகளுக்குரிய பயனாளிகளின் விவரம் மற்றும் நில ஆவணங்களை சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலருக்கு ஒப்படைத்து, வீடுகளின் கட்டுமானப் பணியினைத் தொடங்கிட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

98—

நவீன வலைகள்

வினா எண் 35995—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்கள் மீன் பிடிக்க நவீன வலைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மீனவர்களுக்கு மீன் பிடிக்க நவீன வலைகள் வழங்கும் திட்டம் தற்போது அரசின் நடைமுறையில் இல்லை. எனினும் சுனாமியால் பாதிக்கப்பட்டு பயன் பெற்ற 42,000 மீனவர்களுக்குக் கூடுதல் நிவாரணமாக ரூ.10,000 மதிப்பீட்டில் வலை வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

99—

மீன் எண்ணெய்

வினா எண் 36009—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

(அ) மீன் எண்ணெய் தயாரித்து விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குறிப்பிட்ட சில வகை மீன்களிலிருந்து மட்டுமே மீன் எண்ணெய் தயாரிக்க இயலும். உள்நாட்டு மீன்வகைகளிலிருந்து மீன் எண்ணெய் தயாரிக்க இயலாது. தனியார் மருந்து நிறுவனங்களில் ஏற்கெனவே மீன் எண்ணெய் தயாரித்து பொதுமக்கள் பயன் பெறும் வகையில் உள்ளது. எனவே, அரசு மீன் எண்ணெய் தயாரித்து விற்பனை செய்யும் நிலை எழவில்லை.

100—

பணி மனை

வினா எண் 37622—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, சதுரங்கப்பட்டினத்தில் மீனவர்களின் இயந்திரங்களைப் பழுதுபார்க்கும் பணிமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தாலுக்கா, சதுரங்கப்பட்டினம் மற்றும் அதனை சுற்றியுள்ள மீனவ கிராமங்களில் வெளிப்பொருத்தும் இயந்திரங்களை மீனவர்கள் அன்றாடம் கையாளுவதால், அவற்றில் ஏற்படும் பழுதுகளை நீக்கிடவும், உதிரி பாகங்களை உடனுக்குடன் மாற்றியமைக்கவும் உள்ளூர் மற்றும் அருகிலுள்ள தனியார் பணிமனைகளில் சீர் செய்து கொள்கின்றனர். மேலும், இப்பகுதியில் மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் மீன் இறங்கு தளங்கள் ஆகியன ஏதுமில்லை. எனவே, இப்பகுதியில் மீனவர்களின் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் மற்றும் இதர இயந்திர பாகங்களைப் பழுதுபார்க்கும் பணிமனையினை அரசுமூலம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பட்டியல் – 2

1—

புதிய கம்பி வடம்

வினா எண் 24876—திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 22-ல் தெற்கு மாதா சர்ச் தெரு, இராமர் தெரு, கண்ணபிரான் கோயில் தெரு, முத்து மாரியம்மன் கோயில் தெரு, இராமலிங்க சுவாமிகள் கோயில் தெரு, கபில ஜகன்னாதர் கோயில் தெரு, மன்னார்சாமி கோயில் தெரு, கிழக்கு, மேற்கு மாதா சர்ச் தெரு, ஆஞ்சநேய 3, 4, 5-வது தெருக்கள், தட்சணாமூர்த்தி கோயில் தெரு, மாதா சர்ச் தெரு, மரியதாஸ் தெரு, பஜார் தெரு, கிழக்கு முத்தையா தெரு, நாகாத்தா கோயில் தெருவில் சீரான மின் வசதி பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 22-ல் தெற்கு மாதா சர்ச் தெரு, இராமர் தெரு, கண்ணபிரான் கோயில் தெரு, முத்து மாரியம்மன் கோயில் தெரு, இராமலிங்க சுவாமிகள் கோயில் தெரு, கபில ஜகன்னாதர் கோயில் தெரு, மன்னார்சாமி கோயில் தெரு, கிழக்கு, மேற்கு மாதா சர்ச் தெரு, ஆஞ்சநேய 3, 4, 5-வது தெருக்கள், தட்சணாமூர்த்தி கோயில் தெரு, மாதா சர்ச் தெரு, மரியதாஸ் தெரு, பஜார் தெரு, கிழக்கு முத்தையா தெரு, நாகாத்தா கோயில் தெருவில் புதைகம்பிவடம் அமைக்கப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

2—

புதிய கம்பி வடம்

வினா எண் 24957—திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 21-ல் காளிங்கராயன் தெரு, காளிங்கராயன் 1 முதல் 4 வரையுள்ள தெருக்கள், மணிகண்டன் 1 முதல் 8 வரையுள்ள தெருக்கள், நாராயணன் தெரு, வடிவேலு தெரு, கங்கம்மன் கோவில் தெரு (வடக்கு-தெற்கு) கம்பெனி சத்திர தெரு, துலுக்கானம் தெரு, கல்லறைச் சாலை, கிழக்கு, மேற்கு, தெற்கு, கல்லறைச் சாலையின் சீரான மின் வசதி பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 21-ல் காளிங்கராயன் தெரு, காளிங்கராயன் 1 முதல் 4 வரையுள்ள தெருக்கள், மணிகண்டன் 1 முதல் 8 வரையுள்ள தெருக்கள், நாராயணன் தெரு, வடிவேலு தெரு, கங்கம்மன் கோவில் தெரு, (வடக்கு-தெற்கு) கம்பெனி சத்திர தெரு, துலுக்கானம் தெரு, கல்லறைச் சாலை, கிழக்கு, மேற்கு, தெற்கு, கல்லறைச் சாலையில் புதைகம்பிவடம் மற்றும் பில்லர் பெட்டிகள் நிறுவப்பட்டு அப்பகுதிகளுக்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

3—

மின்சார தட்டுப்பாடு நீக்கம்

வினா எண் 25151—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி ஊராட்சி, அல்லையனூர், மலையனூர் பகுதி குடியிருப்புகளில் மின்சாரத் தட்டுப்பாட்டை நீக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி ஊராட்சி, அல்லையனூர், மலையனூர் ஆகிய பகுதிகளுக்குச் சீரான

மின்சாரம் வழங்கும் பொருட்டு புதிதாக 7/3.35 எம்.எம். திறன் உள்ள 4 மின்கம்பிகள் கொண்ட மும்முனை மின்பாதை, அருகிலுள்ள அல்லையனூர் 100 கேவிஏ. மின்மாற்றியிலிருந்து 80 மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. மூன்று மின்கம்பிகள் கொண்ட ஒரு முனை மின்பாதையை 5 மின்கம்பிகள் கொண்ட மும்முனை மின்பாதையாக 250 மீட்டர் தூரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

4—

மின் இணைப்பு

வினா எண் 30178—திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் வடக்கு, இடிகரை பேரூராட்சியில், ஒரு குடிசை ஒரு விளக்கு திட்டத்தில் தகுதியுள்ளவர்களுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் வடக்கு, இடிகரை பேரூராட்சியானது நகர பஞ்சாயத்துக்குட்பட்டதால் ஒரு குடிசை ஒரு விளக்கு திட்டத்தில் தற்போதைய விதிகளின்படி மின் இணைப்பு வழங்க இயலாது. ஆனால் தமிழக அரசின் இலவச வண்ணத் தொலைக்காட்சி திட்டத்தின்கீழ் இடிகரை பேரூராட்சியில் தகுதிவாய்ந்த மின் இணைப்பு இல்லாத குடிசைகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டால் வாரிய விதிகளின்படி மின் இணைப்புகள் வழங்கப்படும்.

5—

பழுது பார்த்தல்

வினா எண் 38755—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி கிராம பேருந்து நிறுத்தம் அருகில் மின் கம்பம், மின் கம்பிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி கிராம பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள இரு மின் கம்பங்களின் பழுதான அடிப்பாகத்திற்கு கான்கிரீட் போடப்பட்டுள்ளது. மேலும் பழைய 7/2.59 ஏ.சி.எஸ்.ஆர். தாழ்வழுத்த மின்பாதைகள் 3,125 மீட்டர் தூரத்திற்கு (11 இடை நீளம்) மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

6—

சீரான மின்சாரம்

வினா எண் 39679—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் சீரான மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சிக்கு, 2 கி.மீ. தூரத்தில் அமைக்கப்பட்டுள்ள, நெல்முடிக்கரை 110/33-11 கி.வோ. துணை மின்நிலையத்திலிருந்து, 11 கி.வோ. நகர் மின்னூட்டி வழியாக, 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் சீராக வழங்கப்பட்டு வருகின்றது.

7—

சீரான மின்சாரம்

வினா எண் 39680—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி 12-வது வார்டு சவேரியார் நகர் பகுதியில் சீரான மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, 12-வது வார்டு, சவேரியார் நகர் பகுதியில் ஏற்கெனவே உள்ள இரண்டு 7/2.59 எம்.எம். ஏ.சி.எஸ்.ஆர். மின் கம்பிகளுடன் 500 மீட்டர் தூரத்திற்கு கூடுதலாக, இரண்டு 7/2.59 எம்.எம். ஏ.சி.எஸ்.ஆர். மின் கம்பிகள் இழுக்கப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

8—

மின் கம்பிகளை மாற்றுதல்

வினா எண் 39942—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், இருக்கன்துறை ஊராட்சி, கொத்தன்குளம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி மைதானத்தின் வழியாகச் செல்லும் மின் கம்பிகளை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், இருக்கன்துறை ஊராட்சி, கொத்தன் குளம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி மைதானத்தின் வழியாகச் செல்லும் மின் கம்பிகளை மாற்ற விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. அம்மின்கம்பிகளை மாற்றி அமைக்க விண்ணப்பம் கொடுத்து அதற்குண்டான மதிப்பீட்டுத் தொகை முழுவதையும் செலுத்த சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் வாரிய விதிமுறைகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2008 நவம்பர் 11]

9—

தடையில்லா மின்சாரம்

வினா எண் 40994—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழராங்கியம், கூடத்துப்பட்டிக்கு தடையில்லா மின்சாரம் வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழராங்கியம், கூடத்துப்பட்டி கிராமத்திற்கு தடையில்லா 24 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

10—

தடையில்லா மின்சாரம்

வினா எண் 40998—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மேலப்பசலை ஊராட்சி, அரிமண்டபம் கிராமத்தில் தடையில்லா மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மேலப்பசலை ஊராட்சி, அரிமண்டபம் கிராமத்தில் தடையில்லா மின்சாரம் வழங்க ஏதுவாக மின் பாதைகளில் படுகின்ற மரக்கிளைகள் வெட்டப்பட்டுள்ளன. மின்னூட்டிகளில் பழுதான இன்சுலேட்டர்களெல்லாம் மாற்றப்பட்டுள்ளன. எனவே இப்பகுதியில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11—

மின் கம்பிகள் மாற்றம்

வினா எண் 41576—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, மிட்டஅள்ளி ஊராட்சி, எம். சவுளூர் கிராமப் பள்ளியில் மின் கம்பிகளை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, மிட்டஅள்ளி ஊராட்சி, எம். சவுளூர் கிராமப் பள்ளியில் ஒரு மின் கம்பம் மற்றும் 5 தாழ்வழுத்த மின் கம்பிகள் 15 மீட்டர் தூரம் மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. இப்பள்ளி கிராமப் பஞ்சாயத்திற்கு உட்பட்டு இருப்பதால் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து நிர்வாகியிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டவுடன் மின் கம்பிகள் வாரிய செலவில் மாற்றி அமைக்கப்படும்.

12—

புதிய குடிநீர்க் குழாய்

வினா எண் 25359—திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 17-ல் உள்ள கெளஸ்முகிதீன் பேட்டை சாலை தெரு, பக்கீர் தெரு, லோட்டஸ் ராமசாமி தெரு, காமராஜர் பூங்கா தெரு, மாரியம்மன் கோயில் தெரு, வாத்தியார் ஏகப்பன் தெரு, காசிமேடு 3-வது தெரு, சூரிய நாராயணன் தெரு, ஷேக் மேஸ்திரி தெரு, புனித சேவியர் தெரு, பெரிய தம்பி தெரு, பெரிய தம்பி 2-வது தெரு, உசேன் மேஸ்திரி தெருவில் புதிய ஐ.எம்.2 அடிகுழாய் அமைக்கவும், புதிய குடிநீர்க் குழாய் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி. வட்டம் எண் 17-ல் உள்ள கௌஸ்முகிதீன் பேட்டை சாலை தெரு, பக்கீர் தெரு, லோட்டஸ் ராமசாமி தெரு, காமராஜர் பூங்கா தெரு, மாரியம்மன் கோயில் தெரு, வாத்தியார் ஏகப்பன் தெரு, காசிமேடு 3-வது தெரு, சூரிய நாராயணன் தெரு, ஷேக் மேஸ்திரி தெரு, புனித சேவியர் தெரு, பெரிய தம்பி தெரு, பெரிய தம்பி 2-வது தெரு, உசேன் மேஸ்திரி தெருவில் பொதுமக்கள் உபயோகத்திற்கு ஏற்கெனவே பொதுக் குழாய்கள் உள்ளன. லோட்டஸ் ராமசாமி தெரு, காமராஜர் பூங்கா தெரு, உசேன் மேஸ்திரி தெருவில் உள்ள வீடுகளுக்குக் குழாய் இணைப்புகள் உள்ளன. தற்பொழுது இப்பகுதியில் போதுமான அளவு குடிநீர் கிடைக்கப் பெறுவதால் புதிதாக பொதுக் குழாய் அமைக்க அவசியம் ஏதுமில்லை.

13—

புதிய குடிநீர்க் குழாய்

வினா எண் 25403—திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 14-ல் ஆதி திராவிடர் தெருவில் புதிய ஜஎம்.2 அடிகுழாய் அமைக்கவும், புதிய குடிநீர்க் குழாய் அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் 14-ல் உள்ள ஆதி திராவிடர் தெருவில் ஏற்கெனவே பொதுக் குழாய் உள்ளது. தற்போது இப்பகுதியில் போதுமான அளவு குடிநீர் கிடைக்கப் பெறுவதால் புதிதாக பொதுக் குழாய் அமைக்கத் தேவை எழவில்லை.

14—

புதிய குடிநீர்க் குழாய்

வினா எண் 25541—திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் 19-ல் உள்ள ஆதம் தெரு தொப்பைத் தெரு, ராமன் தெரு, முனுசாமித் தோட்டம் 3, 4-வது தெருக்கள், ஜெகந்நாதன் தெரு, பார்த்தசாரதி தெரு, வேலாயுத பாண்டியன் தெரு, ரோப் குடவுன் தெரு, மாடசாமி தெரு, ஆண்டியப்பன் தெருக்களில் புதிய ஐஎம்.2 அடி குழாய் அமைக்கவும், புதிய குடிநீர்க் குழாய் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* இராயபுரம் தொகுதி, வட்டம் 19-ல் உள்ள ஆதம் தெரு, தொப்பைத் தெரு, ராமன் தெரு, முனுசாமித் தோட்டம் 3, 4-வது தெருக்கள், பார்த்தசாரதி தெரு, வேலாயுத பாண்டியன் தெரு, ரோப் குடவுன் தெரு, மாடசாமி தெரு, ஆண்டியப்பன் தெருக்களில் பொதுமக்கள் உபயோகத்திற்கு ஏற்கெனவே பொதுக்குழாய் உள்ளது. ஜெகந்நாதன் தெருவில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் உள்ளன. தற்பொழுது இப்பகுதியில் போதுமான அளவு குடிநீர் கிடைக்கப் பெறுவதால் புதிதாக பொதுக் குழாய் அமைக்க உத்தேசமில்லை.

15—

காலமுறை ஊதியம்

வினா எண் 29716—திரு. கோ. அரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

திருத்தணி நகராட்சியில் தற்காலிகப் பணியாளர்களாக உள்ள மோட்டார் இயக்குபவர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருத்தணி நகராட்சியில் தற்காலிகப் பணியில் மோட்டார் இயக்குபவர் எவரும் இல்லை. எனவே, காலமுறை ஊதியம் வழங்குவது குறித்த வினா எழவில்லை.

16—

மகளிர் சுய உதவிக் குழு

வினா எண் 33406—திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோவில் தொகுதி, வெச்சூர் கிராமம் ஆதி திராவிடர் தெருவில் மகளிர் சுய உதவிக் குழு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஊராட்சி ஒன்றியம், வெண்ணையூர் ஊராட்சியைச் சார்ந்த வெட்சியூர் கிராமத்தில், ஆதி திராவிட காலனியில்,. ஏற்கெனவே இரண்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

17—

வணிக வளாகம்

வினா எண் 34068—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், நுழைவு இடது புறத்தில் வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், நுழைவு இடது புறத்தில் புதியதாக வணிக வளாகம் கட்ட தற்போது உத்தேசம் ஏதுமில்லை.

18—

பணியாளர்கள் நியமனம்

வினா எண் 17749—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியிலுள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்குப் போதிய பணியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் காலியாகவுள்ள விற்பனையாளர் பணியிடங்கள் உள்ஏற்பாடு மற்றும் அயற்பணி ஏற்பாடுமூலம் நிரப்பப்பட்டுள்ளன. தற்போது சேலம் மாவட்டத்தில் விற்பனையாளர் பணியிடம் காலியாக ஏதுமில்லை.

19—

பழைய கட்டடத்தை அப்புறப்படுத்துதல்

வினா எண் 28907—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, முள்ளங்குறிச்சி ஊராட்சி, கூட்டுறவுச் சங்க பழைய கட்டடத்தை அப்புறப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது உபயோகமற்ற நிலையிலுள்ள முள்ளங்குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் பழைய கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்த ரூ.11,620/- செலவாகும் என தெரிவிக்கப்பட்டதையடுத்து, மேற்படி வங்கிக் கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

20—

நிரந்தரக் கட்டடம்

வினா எண் 31342—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதி-காரமடை பொதுப் பணித் துறை பிரிவு அலுவலகக் கட்டடத்தை கூட்டுறவு நியாய விலைக் கடைக்கு நிரந்தரமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை கூட்டுறவு விற்பனை சங்க நியாய விலைக் கடை இயங்கும் கட்டடம் பொதுப் பணித் துறை பல்வேறு திட்டங்களில் பல கட்டடங்களைக் கட்டும்போது கட்டடம் கட்டுவதற்குத் தேவையான கட்டுமானப் பொருட்களை பாதுகாப்பாக வைக்கும்பொருட்டு புறம்போக்கு நிலத்தில் அனாமத்தாக கட்டப்பட்டுள்ள கட்டடமாகும். எனவே, எவருக்கும் சொந்தமில்லாத இக்கட்டடம் புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டுள்ளதால், நியாய விலைக் கடைக்கே ஒதுக்கீடு செய்து தரக்கோரி வருவாய்த் துறையினருக்குக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இக்கோரிக்கை ஏற்கப்படும் பட்சத்தில் அந்தக் கட்டடம் நியாய விலைக் கடைக்கே சொந்தமாகும்.

21—

கூட்டுறவு வங்கிக் கட்டடம்

வினா எண் 34050—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

[2008 நவம்பர் 11]

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், நல்லாடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடத்தைப் பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், நல்லாடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தமான கட்டடத்தைப் பழுது பார்க்க உத்தேசமாக ரூ.1.60 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவினை ஈடு கட்ட வங்கிக்கு நிதி ஆதாரம் இல்லாததால் கட்டடத்தை தற்போது பழுது பார்க்க இயலாத நிலை உள்ளது.

22—

வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

வினா எண் 38581 திரு. மு. அப்பாவு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஒன்றியம், குமாரபுரத்தில் வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தொடங்குவதற்கு அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி குமாரபுரம் கிராமத்தில் 2,000 ஹெக்டேர் அல்லது 4,850 ஹெக்டேர் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு இல்லாததாலும், இவ்வூரிலுள்ள விவசாயிகளுக்கு பயிர்க்கடன் மட்டுமல்லாது வங்கி வழங்கும் கடன்களை பன்முகப்படுத்த இயலாத நிலை உள்ளதாலும், இவ்வூரிலுள்ள விவசாயிகளுக்கு ஓராண்டிற்குக் குறைந்தபட்சம் ரூ.2.00 கோடி அளவிற்கு கடன்களை வழங்கி, அதில் 5.00 இலட்சம் வட்டி வருவாய் ஈட்ட இயலாத நிலை உள்ளதாலும், அக்கிராமத்திற்கென்று தனியாக ஒரு புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை துவக்குவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

2008 நவம்பர் 11]

23—

விவசாயக் கடன்

வினா எண் 40859—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பழைய உறுப்பினர்களுக்கு விவசாயக் கடன் வழங்குவதைப் போல புதிய உறுப்பினர்களுக்கும் விவசாயக் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் நேரிடையாக விவசாயிகளுக்குக் கடன்கள் வழங்குவதில்லை. இவை விவசாயக் கடன்கள் வழங்க ஏதுவாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதியுதவி அளிக்கின்றன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், உறுப்பினர்களுக்குத் தேவையான குறுகியகால பயிர்க்கடன்கள் மற்றும் வேளாண்மைச் சார்ந்த துணைத் தொழில்களுக்கு மத்திய காலக்கடன்கள் அளித்து வருகின்றன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க உயர் நீதிமன்றத் தடை உள்ளதால், புதியதாக உறுப்பினராகச் சேர்ந்து கடன் வாங்க விழைபவரை இணை உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டு கடன் வழங்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

24—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 41991—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், சித்தூர் கிராமம், புதூர் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், சித்தூர் கிராமம், புதூர் நியாய விலைக் கடை, சித்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நியாயவிலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் பொருட்டு சித்தூர் நத்தம்பட்டி கீழத்தெருவில் வசித்துவரும் திருமதி பழனியம்மாள் என்பவரின் குடும்பத்திற்குச் சொந்தமான 0.1½ செண்ட் நிலத்தை நியாய விலைக் கடைக் கட்டடம் கட்டிக் கொள்ள எடப்பாடி ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு 12-4-2007 அன்று தானபத்திரம் ப.எண். 936, நாள் 16-4-2007-ல் பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் அரசு திட்டத்தின்கீழ் புதூர் நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட ஆணையாளர், எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்திடம் கோரப்பட்டு, சேலம் மண்டல இணைப் பதிவாளரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

25—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 47625—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், கருங்கல்லூர் ஊராட்சி, கருங்கல்லூர் நியாய விலைக் கடையைப் பிரித்து மேட்டுப்பாளையூருக்கு புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் வட்டாரத்தில் காவேரிபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் கருங்கல்லூர் நியாய விலைக் கடை நடத்தப்பட்டு வருகின்றது. இக்கடையில் 1355 குடும்ப அட்டைகள் உள்ளன. கருங்கல்லூர் நியாய விலைக் கடைக்கும், மேட்டுப்பாளையம் கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் 1/2 கி.மீ மட்டுமே உள்ளது.

2008 நவம்பர் 11]

இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் இடைப்பட்ட தூரம் குறைந்தது 1.5 கி.மீ. இருக்க வேண்டுமென்ற அரசின் நிபந்தனை இந்நேர்வில் பூர்த்தியடையாததால், மேட்டுப்பாளையம் பகுதிக்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

26—

கரும்பு அரவை

வினா எண் 28278—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயிகள் பயிரிடும் கரும்பை பாலக்கோடு, கேத்தான்பட்டி சர்க்கரை ஆலை நிர்வாகங்கள் அரவைக்கு எடுத்துக் கொள்வதை உறுதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கரும்பு பகுதிகள் தருமபுரி மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மற்றும் திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகிய இரு ஆலைகளின் விவகார எல்லைக்குட்பட்ட பகுதிகளாக உள்ளன. தருமபுரி மாவட்டக் கூட்டுறவு சர்க்கரை ஆலை நாளொன்றுக்கு 2000 மெ. டன் கரும்பு அரவை செய்யக்கூடியதாகும். இவ்வாலையின் 100 சதவீத பயன்பாட்டுத் திறனுக்கு 3.44 இலட்சம் மெ.டன் கரும்பு தேவைப்படுகிறது. திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, நாளொன்றுக்கு 1250 மெ.டன் கரும்பு அரவை செய்யக் கூடியதாகும். இவ்வாலையின் 100 சதவீத பயன்பாட்டுத் திறனுக்கு 2.15 இலட்சம் மெ.டன் கரும்பு தேவைப்படுகிறது.

இதில் பர்கூர், பாலேப்பள்ளி பிர்க்காக்கள் மற்றும் போச்சம்பள்ளி வட்டத்தில், மாத்தூர் போச்சம்பள்ளி மற்றும் பாரூர் பிர்க்காவில் 5 வருவாய் கிராமங்கள் திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை விவகாரப் பகுதியாகும். மீதிப் பகுதிகள் தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்தவை. இப்பகுதியிலிருந்து கரும்பு சாகுபடி செய்து ஆலைக்கு

கரும்பு பதிவு செய்யும் அங்கத்தினர்களின் கரும்பை கடந்த பல ஆண்டுகளாக இரு ஆலைகளும் தவறாமல் எடுத்து அரவை செய்து வருகின்றன என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

27—

சாலை அமைத்தல்

வினா எண் 29007—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ராகல்பாவி-தங்கமான் ஓடை சாலையை கரும்புச் சாலை திட்டத்தின்கீழ் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், ராகல்பாவி-தங்கமான் ஓடை சாலை தற்சமயம் உடுமலை ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலை தற்போது மிகவும் பழுதடைந்து கரும்புக்காடுகள் உள்ள களிமண் பூமியாக உள்ளது. இச்சாலை அமைப்பதற்குக் குழாய் பாலங்கள், சிறு பாலங்கள் உட்பட தோராயமாக ரூ.90 இலட்சம் தேவைப்படும். மேலும் சம்பந்தப்பட்ட சாலையில்,

2007-2008 ஆம் ஆண்டு அரவைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள பரப்பு	-21 ஏக்கர்
2008-2009 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் பரப்பு	-40 ஏக்கர்

இப்பகுதியில் கரும்பு பதிவு மிகவும் குறைந்த அளவே உள்ளதாலும், மேலும் வரும் ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் பதிவு பரப்பு குறைந்த அளவே உள்ளதாலும், ரூ.90/- இலட்சம் செலவில் மேற்கண்ட சாலைப் பணியினை கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

28—

நெற்களம் அமைத்தல்

வினா எண் 31295—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி தாழப்பட்டு கிராமத்தில் விவசாய நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதியில் உள்ள தாழப்பட்டு கிராமத்தில் உலர் களம் 20X20 மீட்டர் அளவில் அமைக்கப்பட உள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் இடம் தேர்வு செய்யப்பட்டு கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

29—

கதிர் அடிக்கும் களம்

வினா எண் 32630—திரு. மே. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சோமாத்தூரில் கதிர் அடிக்கும் களம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2004 முதல் 2008 ஆம் ஆண்டு வரை இராமநாதபுரம் விற்பனைக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள

பகுதிகளுக்கு (மானாமதுரை பகுதி உட்பட) மொத்தம் 44 உலர்களங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன. எனவே, 2008-2009 ஆம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் சோமாத்தூர் கிராமத்தில் கதிர் அடிக்கும் களம் கட்டித்தர ஆவன செய்யப்படும்.

30—

நெற்களம் அமைத்தல்

வினா எண் 41809—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, சிந்திப்பட்டு, செம்பந்தாங்கல், சோமசமுத்திரம், மாதப்பூண்டி ஆகிய பகுதிகளில் நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதி, சிந்திப்பட்டு, செம்பந்தாங்கல், சோமசமுத்திரம், மாதப்பூண்டி ஆகிய பகுதிகளில் தகுதியான இடம் தெரிவு செய்யப்பெற்று 2008-2009 ஆம் ஆண்டில் உலர்களம் அமைத்துத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

31—

சிறப்பு முகாம்

வினா எண் 46480—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பகுதியில் இயற்கை உரங்களின் பயன்பாட்டை விளக்க கிராமங்கள் தோறும் சிறப்பு முகாம்கள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் (மானாமதுரை பகுதி உட்பட) உள்ள விவசாயிகள் அதிக அளவில் இயற்கை உரங்களை குறிப்பாக மண்புழு உரங்களை உற்பத்தி செய்து பயன்படுத்தும் வண்ணம் பயிற்சிகள் மற்றும் செயல்விளக்கங்கள் தமிழ்நாடு அரசு வேளாண் துறையால் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 300 செயல்விளக்கங்கள் மற்றும் பயிற்சிகள் ரூ.11.55 இலட்சம் செலவில் 15000 விவசாயிகள் பயன்பெறும் வண்ணம் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படுகின்றன.

32—

பயிர் பாதுகாப்புத் திட்டம்

வினா எண் 47821—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அங்காளகுறிச்சி பகுதியில் பயிர் பாதுகாப்புத் திட்டத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) அங்காளகுறிச்சி பகுதி ஆனைமலை வட்டாரத்தில் அடங்கியது. அங்கு பயிர் பாதுகாப்புத் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2005-2006, 2006-2007 மற்றும் 2007-2008 ஆகிய வருடங்களில் ஐசோபாம் எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி தொழில்

நுட்பத்திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் பயனடைந்த பயனாளிகளின் விவரங்கள் பின்வருமாறு:—

		2005-2006		2006-2007		2007-2008	
வ. எ.	பயிர் பாதுகாப்புத் திட்ட விவரங்கள்	பயனா-ளிகள்	தொகை ரூ.	பயனா-ளிகள்	தொகை ரூ.	பயனா-ளிகள்	தொகை ரூ.
1.	கைத்தெளிப்பான் விநியோகம்	1	3000/-	3	2250/-	4	3000/-
2	உயிரியல் பூச்சிக்கொல்லி மருந்து விநியோகம்	6	2220/-	8	2410/-	6	1940/-
3	என்.பி.வைரஸ் விநியோகம்	4	660/-	3	525/-	4	700/-
4	இன மயக்கப் பொறி வழங்குதல்	7	800/-	7	1400/-	6	1200/-
	மொத்தம்	18	6680	21	6585	20	6840

NAIS திட்டத்தின்கீழ் மணிலா பயிருக்கு விவசாயிகள் சேர்த்திட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ஆ) நடப்பு நிதியாண்டிலும் பயிர் பாதுகாப்புத் திட்டம் செயல்பட்டு வருகிறது. தென்னையினைத் தாக்கும் ஈரோபோபிட் சிலந்தியினை கட்டுப்படுத்திட அசாடிராக்டின் 1% மருந்து 50% மானிய விலையில் விவசாயிகளுக்கு நடப்பு ஆண்டில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நிலக்கடலை/பயறு வகைகள் பயிர்களில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான கைத்தெளிப்பான்கள் மற்றும் விசைத் தெளிப்பான்கள், ஐசோபாம் எண்ணெய்வித்து மற்றும் பயறு வகைகள் உற்பத்தித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட உள்ளன. நிலக்கடலையில் பூச்சிகள் கட்டுப்படுத்திடத் தேவையான என்.பி.வி. உயிரியல் பூச்சிக் கொல்லி மருந்து மானிய விலையில் விநியோகம் செய்யப்படும். பயிர் பாதுகாப்பு முறைகள்

2008 நவம்பர் 11]

குறித்து வயல் வெளிப்பயிற்சி அங்ககளகுறிச்சி விவசாயிகளுக்கு அளித்திடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு அளித்திடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டு தேவையான விதை நேர்த்தி மருந்துகளை மானிய விலையில் விநியோகம் செய்திடவும் ஐசோபாம் எண்ணெய்வித்துக்கள் மற்றும் பயறு வகைத் திட்டங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

33—

கரும்பிற்கான கிரயம்

வினா எண் 48029—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் SVS-கரும்பு ஆலையில் 2006-2007-ல் எரிந்த கரும்பு டன் ஒன்றிற்கு ரூ.500/- தரப்படுவதை உயர்த்தி மற்ற ஆலைகளில் தரப்படும் ரூ.1,025/- ஆக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

நல்ல முறையில் விளைவிக்கப்பட்ட கரும்பிற்கான 2006-2007 பருவத்திற்கான மாநில அரசின் பரிந்துரை விலை டன் ஒன்றுக்கு ரூ.1,025/- ஆகும் (9% கட்டுமானத்திற்கும்). கரும்பு களத்தில் எரிந்த கரும்பு சுமை வந்தவுடன் சோதனைக்கென கரும்பு பெற்று அதனை ஆலையின் பரிசோதனைக் கூடத்தில் கொடுத்து சோதனை முடிவுகள் பெறப்பட்டு போல் சதவீதத்தின் (Pol %-சர்க்கரை அளவு) அடிப்படையில் கரும்பு கிரயம் கணக்கிட்டு வழங்கப்படுகிறது. மேலும் எரிந்த கரும்பிற்கான கிரயம் வழங்குவது தொடர்பான விரிவான சுற்றறிக்கை சர்க்கரைத் துறை ஆணையரின் சுற்றறிக்கை ந.க.எண்.19746/ கரும்பு/2000, நாள் 8-11-2000-இன் படி வழங்கப்பட்டுள்ளது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது) அதன் அடிப்படையிலேயே கரும்பிற்கான கிரயம் வழங்கப்படுவதாக ஆலை நிர்வாகமும் தெரிவித்துள்ளது.

34—

மூடப்பட்ட மாநில விவசாயப் பண்ணை

வினா எண் 48146—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் தொகுதி, மேல்செங்கம் மத்திய, மாநில விவசாய பண்ணையினை இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

செங்கம் தொகுதிக்குட்பட்ட மேல் செங்கத்தில் இயங்கிய மத்திய விவசாயப் பண்ணை மூடப்பட்டு விட்டது. அதனை இயக்குவது குறித்து, மத்திய அரசுதான் முடிவெடுக்க வேண்டும். திருவண்ணாமலை மாவட்டத்தில் அத்தியந்தல், வாழவச்சனூர் ஆகிய இடங்களில் இரண்டு மாநில அரசு விதைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. இவற்றில், விவசாயிகளுக்குத் தேவையான நெல், சிறுதானிய பயறு வகைகள், ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, சான்று விதை உற்பத்தி செய்வதற்கு, விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. 2007-2008-ம் ஆண்டில் விதை நெல் 10 மெ. டன் ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு சான்று விதை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் ஆண்டில் நெல்லில் 70 மெ. டன்களும், சிறு தானியங்கள் 20 மெ. டன்களும், பயறு வகைகளில் 1.5 மெ. டன்களும் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

35—

மலர் வணிக வளாகம்

வினா எண் 49902—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, காவல்கிணறு சந்திப்பு தேசிய நெடுஞ்சாலை-7 பகுதியில் மலர் வணிக வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், காவல்கிணறு கிராமத்தில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் முன்நுழைவு அனுமதியுடன், 1.32.0 ஹெக்டேர் நிலத்தில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளுடன், தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரிய நிதியிலிருந்து ரூ.163.10 இலட்சம் செலவில் மலர் ஏல மையம் அமைத்திட அனுமதியளித்து அரசாணை நிலை எண் 179, வேளாண்மை, நாள் 8-5-2008-ல் ஆணையிட்டுள்ளது என்பவை தெரிவிக்கப்படுகிறது.

36—

வெற்றிலை ஆராய்ச்சி மையம்

வினா எண் 52606—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, வேலூரில் வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை மீண்டும் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் தற்போது திருச்சி அருகிலுள்ள சிறுகமணி என்ற இடத்தில் வெற்றிலை ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இங்கு நடத்தப்படும் ஆய்வுகளின் முடிவுகள் வெற்றிலை சாகுபடி செய்யும் உழவர்களுக்கு வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறைமூலம் பரிந்துரை செய்யப்படுகின்றன. எனவே கபிலர்மலை தொகுதியில் வெற்றிலை ஆராய்ச்சி நிலையம் தொடங்கும் உத்தேசம் எதுவும் தற்போது இல்லை.

[2008 நவம்பர் 11]

37—

கால்வாய் தூர் வாருதல்

வினா எண் 26745—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை ஒன்றியம், விளத்தூர் கண்மாய் கால்வாயை தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டம், மாரநாட்டு கண்மாய் இரண்டாவது மடையாகிய விளத்தூர் மடை மற்றும் கால்வாய் தொடர்பாக மதுரை நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளதால் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.

38—

ஏரிகள் பராமரிப்பு

வினா எண் 28503—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, ஈச்சங்கரணை ஊராட்சி, பெரிய ஏரி, சித்தேரி, சூரகுப்பம் ஏரி ஆகிய ஏரிகளைத் தூர்வாரி கரைகளை வலுப்படுத்தவும், பாசனக் கால்வாய்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, ஈச்சங்கரணை ஊராட்சியிலுள்ள பெரிய ஏரி, சித்தேரி, சூரகுப்பம் ஆகிய ஏரிகளின் கரைகள் ஒதுக்கப்படும்

பராமரிப்பு நிதியிலிருந்து அவ்வப்போது பலப்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்காணும் ஏரிகளைத் தூர் வாருவது தொடர்பான கருத்துரு முன்னுரிமை அடிப்படையில் சேர்க்கப்பட்டு பணி மேற்கொள்ள கருத்தில் கொள்ளப்படும். மாவட்ட வருவாய் நிர்வாகத்தின்மூலம் மேற்கண்ட ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

39—

சுரங்கக் குழாய் அமைத்தல்

வினா எண் 30939—திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம், காரையாறு, சேர்வலாறு அணைகளின் உபரி நீரை மணிமுத்தாறு அணைக்கு சுரங்கக் குழாய் மூலம் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாபநாசம் அணைக்கும் மணிமுத்தாறு அணைக்கும் இடைப்பட்ட பகுதி முண்டந்துறை வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் அமைந்துள்ளதால் தேசிய வனவிலங்கு பூங்காக்களில் இப்பணிகளை மேற்கொள்ள உச்ச நீதிமன்ற ஆணையினையும், வனத் துறையின் அனுமதியினையும் பெற வேண்டி இருப்பதாலும், இரண்டு அணைகளும் ஒரே காலத்தில் நிரம்பும் சூழ்நிலை இருப்பதாலும், 7 கிலோ மீட்டர் தூரம் சுரங்கக் கால்வாய் மற்றும் பிற உபகரணங்களுக்கு ரூ.350 கோடி செலவு செய்து பாபநாசம் நீர்த்தேகத்திற்கு நீரை திருப்பிவிடுவதால் அதிக பயன் ஏற்படாது என்பதால் இத்திட்டம் குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

40—

ஏரிகளைத் தூர் வாருதல்

வினா எண் 31642—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, வீரசோழபுரம், பில்ராம்பட்டு, பானூர், கொல்லூர், கொழிந்திராம்பட்டு, முரக்கம்பாடி, தேவர் அடியார்குப்பம் ஏரிகளை தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தற்போது திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

41—

பழுதுபார்க்கும் பணி

வினா எண் 32713—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், வீரசோழபுரம், பம்பை வாய்க்காலில் உள்ள 15 கண்களை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், வீரசோழபுரம் வாய்க்காலில் (பம்பையாற்றின் நெடுகை 8,100 மீட்டரில்) உள்ள 15 கால்வாய் நீர் வெளிபோக்கி கட்டடம் (15 கண்கள்) ஷட்டர் பலகைகள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. எனவே, அவற்றைப் பழுதுபார்க்கும் அவசியம் எழவில்லை.

42—

ஏரியைத் தூர் வாருதல்

வினா எண் 42478—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஏரியைத் தூர் வாரி படகு சவாரி விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்மலையனூர் ஏரியை தூர் வாரி படகு சவாரி விட தற்போது திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

43—

சிறு அணை கட்டுதல்

வினா எண் 42480—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, கன்னலம் கிராமத்தில் சிறு அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்மலையனூர் ஒன்றியத்தில், முன்னரே கன்னலம் அணைக்கட்டு இருக்கிறது. கன்னலம் அணைக்கட்டை மராமத்துப் பணிகள் செய்ய தோராயமாக ரூ.10.58 இலட்சம் நிதி அளிக்கப்பட்டு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

44—

கால்வாய் மேம்பாடு

வினா எண் 42665—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், கீழ்பவானி பாசன பிரதான கால்வாயின் கொள்ளளவுத் திறனை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், கீழ்பவானி பாசனப் பிரதான கால்வாயின் கொள்ளளவுத் திறனை தற்பொழுது உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை.

45—

நீர் அளவைக் கருவி

வினா எண் 42667—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், கீழ்பவானி பாசன பிரதான கால்வாயின் முக்கிய இடங்களில் நீர் ஆதாரங்களைத் தெரிந்து கொள்ளும் விதமாக நீர் அளவை கருவிகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், கீழ்பவானி பாசன பிரதான கால்வாயின் முக்கிய இடங்களில் நீர் அளவீடு கருவிகள் பொருத்தும் திட்டம் ஏதும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை. இருப்பினும் நீர் அளவினைத் தெரிந்து கொள்ளும் வகையில் நீர் மட்ட அளவுகோல்கள் பொருத்தப்பட்டுள்ளன.

46—

கீழ்பவானி திட்ட இல்லம்

வினா எண் 42681—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை பொதுப் பணி கீழ்பவானி திட்ட இல்லத்தைச் சீரமைத்து குளிர்சாதன வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை திட்ட இல்லம் பயன்பாட்டில் உள்ளது. குளிர்சாதன வசதி செய்யும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

47—

கான்கிரீட் தளம் அமைத்தல்

வினா எண் 42683—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், கீழ்பவானி பாசனம் 124 மைல் பகுதியில் வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், கீழ்பவானி பாசனம் 124 மைல் பகுதியில் வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்க திட்டம் ஏதும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

48—

கான்கிரீட் கால்வாய்

வினா எண் 42684—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், கீழ்பவானி சென்னிமலை பாசனப் பகுதி கடைமடைக் கால்வாயை கான்கிரீட் கால்வாயாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு, கீழ்பவானி சென்னிமலை பாசனப் பகுதி கடைமடைக் கால்வாயை கான்கிரீட் கால்வாயாக மாற்றும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

49—

வடிவமைப்பு மாற்றம்

வினா எண் 42685—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு, கீழ்பவானி பாசனப் பகுதி காங்கேயம் விரிவாக்கக் கால்வாய், 74/2 ரெகுலேட்டர் பகுதி வடிவமைப்பை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு கீழ்பவானி திட்ட பிரதான கால்வாய் மைல் 74/2 உள்ள ரெகுலேட்டர் நல்ல நிலையில் உள்ளதால் வடிவமைப்பினை தற்பொழுது மாற்ற வேண்டிய சூழல் இல்லை.

2008 நவம்பர் 11]

50—

பாலம் அகலப்படுத்துதல்

வினா எண் 42688—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு-சென்னிமலை சாலையில் கீழ்பவானி பிரதான கிளை வாய்க்காலின் குறுக்கே கவுண்டச்சிபாளையம், வெள்ளோடு பகுதியிலுள்ள பாலத்தை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு-சென்னிமலை சாலையில் கீழ்பவானி பிரதான வாய்க்காலில் குறுக்கே கவுண்டச்சிபாளையம், வெள்ளோடு பகுதியிலுள்ள பாலத்தை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

51—

சாலை சீரமைப்பு

வினா எண் 42689—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை, ஓரத்துப்பாளையம்-ஓரத்துப்பாளையம் அணையை ஒட்டியுள்ள சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அணைக்கட்டின் பராமரிப்பில் உள்ள சாலைகள் மட்டுமே இத்துறையினைச் சார்ந்தது. ஒரத்துப்பாளையம் அணையை ஒட்டியுள்ள சாலையைச் சீரமைக்கும் பணிகள் தற்போது செயலாக்கத்திற்கு எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

52—

புதிய தொழில்நுட்பப் பாடம்

வினா எண் 29427—திரு. சி. கோவிந்தசாமி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பூர். எல்.ஆர்.ஜி. அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கு அடிப்படை வசதிகளைச் செய்யவும், புதிய தொழில்நுட்பப் பாடங்களை அறிமுகப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருப்பூர், எல்.ஆர்.ஜி. அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தும்பொருட்டு ஆண்டுதோறும் சிறப்புப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், இக்கல்லூரிக்கு 2007-2008 ஆம் நிதியாண்டில் 15 கூடுதல் வகுப்பறைகள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. தேவையின் அடிப்படையில் புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படும்.

53—

முதுகலைப் பட்டப் படிப்புகள்

வினா எண் 31471—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2008 நவம்பர் 11]

(அ) திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரியில் வரலாறு, பொருளாதாரம், கணினி முதுகலைப் பட்டப் படிப்புகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரியில் வரலாறு, பொருளாதாரம், கணினி முதுகலைப் பட்டப் படிப்புகள் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

54—

பேருந்து வசதி

வினா எண் 24076—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, ஆரணியிலிருந்து உவத்தூருக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பெரணமல்லூர் தொகுதி, ஆரணியிலிருந்து உவத்தூருக்கு தடம் எண். 8-B தினசரி 2 நடைகள் மீண்டும் 16-05-2007 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

55—

நகரப் பேருந்து வசதி

வினா எண் 24867—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 11

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பிரமனூர் ஊராட்சி, வயல்சேரிக்கு காலையில் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பிரமனூர் ஊராட்சியை சேர்ந்த வயல்சேரிக்கு மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து 5 தனி நடைகளும், திருப்புவனத்திலிருந்து 1 நடையும் பேருந்து வசதி உள்ளது. இது தவிர வயல்சேரி வழியாக வி. கரிசல்குளம், பழையனூர், ரெட்டைக்குளம் மற்றும் தச்சனேந்தல் கிராமங்களுக்கு மதுரையிலிருந்தும், திருப்புவனத்திலிருந்தும் 28 தனி நடைகளில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இந்த இயக்கத்தில் காலை 5.30 மணி முதல் காலை 10.00 மணி வரை 5 தனி நடைகள் பேருந்து வசதி உள்ளது. வயல்சேரிக்கு காலையில் தற்போதுள்ள பேருந்து வசதி போதுமானது என்று கருதப்படுகிறது.

56—

நகரப் பேருந்து வசதி

வினா எண் 30849—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசாரிப்பள்ளம் என்ற இடத்தில் அமைந்துள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தொடங்கப்படும் முன்னர் அவ்வழியாக 130 நடைகளில் பேருந்து இயக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் நகரின்

2008 நவம்பர் 11]

அனைத்துப் பகுதிகளில் இருந்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அதன் வழியாக பல்வேறு இடங்களை இணைத்தும் தற்போது கூடுதலாக 34 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள நிலையில் மேற்கண்ட பேருந்து வசதிகள் போதுமானதாக உள்ளது. இருப்பினும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு குறிப்பிட்ட இடங்களிலிருந்து பேருந்து வசதி கோரி பெறப்படும் மனுக்களைப் பரிசீலித்து, தேவையின் அடிப்படையில் கூடுதல் பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

57—

பேருந்து வசதி

வினா எண் 38560—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதி, செய்யாறு 122-எப் சென்னை-திருவண்ணாமலை பேருந்தை மீண்டும் இயக்கவும், திருவண்ணாமலைக்குச் செல்லும் பேருந்துகளை செய்யாறு வழியாகத் திருப்பிவிடவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடம் எண். 122 எப் சென்னை-திருவண்ணாமலை (வழி) காஞ்சிபுரம், செய்யாறு, பெரணமல்லூர், சேத்பட், போளூர் என சுற்று வழிப்பாதையில் இயக்கப்பட்டதாலும், இரவு 21.30 மணிக்கு சென்னையில் நடை எடுக்கும்போது காஞ்சிபுரம் முதல் திருவண்ணாமலை வரை 132 கி.மீ தூரம் பயணிகள் உபயோகம் இன்றி இயக்கப்பட்டது. இதனால் இத்தடம் திருவண்ணாமலை-சென்னை (வழி) வந்தவாசி என மாற்றி இயக்கப்பட்டது. கோரியுள்ள தடம் சுற்று வழித்தடமாக உள்ளதாலும், இரவு நேரத்தில் பயணிகள் உபயோகம் இல்லாததாலும் மீண்டும் இயக்க சாத்தியமில்லை. ஏற்கெனவே சென்னையிலிருந்து - திருவண்ணாமலைக்கு செய்யாறு

வழியாக 9 புறநகர் வழித்தடங்களின்மூலம் தினசரி 18 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், செய்யாறிலிருந்து சென்னைக்கு 42 பேருந்துகள் 132 நடைகள் தினசரி இயக்கப்படுவதால், திருவண்ணாமலை-சென்னை (வழி) வந்தவாசி பேருந்துகளை செய்யாறு வழியாகத் திருப்பி இயக்க வேண்டிய நிலை இல்லை.

58—

பேருந்து நீட்டிப்பு

வினா எண் 41549—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினத்திலிருந்து காலை 6.30 மணிக்கு மலையாண்டஅள்ளி வரை வரும் 6-எண் பேருந்தை சௌட்டஅள்ளி ஊராட்சி, குட்டிவேடிச்சாம்பட்டி வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலம்மூலமாக நகரப் பேருந்து தடம் எண் கே.6 ஏ காவேரிப்பட்டினம்-மலையாண்டஅள்ளி தடத்தில் காலை பள்ளி நேரத்திற்கு ஏற்றவாறு இயக்கப்பட்டு வருகிறது. இத்தடத்தின் நீளம் 4 கி.மீ. ஆகும். இதில் நீட்டிக்க கோரியுள்ள குட்டிவேடிச்சாம்பட்டி கிராமம், மலையாண்டஅள்ளியிலிருந்து 4.1கி.மீ தூரத்தில் உள்ளது. இதனால் கோரிக்கைப்படி இந்த நடைகளை நீட்டித்து இயக்கினால் தடத்தின் நீளம் 8.1 கி.மீ. ஆகிறது. மேலும் இப்பேருந்து மோட்டூர் மற்றும் கதிரிபுரம் கிராமத்தைச் சார்ந்த பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் இயக்கப்பட்டு வருவதால், காவேரிப்பட்டினத்திலிருந்து மலையாண்டஅள்ளி செல்லும் 2 நடைகளை குட்டிவேடிச்சாம்பட்டி வரை நீட்டித்து இயக்கிட இயலாத நிலை உள்ளது.

59—

புதிய பேருந்து வழித்தடம்

வினா எண் 43014—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டிலிருந்து திருவள்ளூருக்கு புதிய பேருந்து வழித்தடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பள்ளிப்பட்டு-திருவள்ளூர் தடத்தின் நீளம் 74.0 கி.மீ. ஆகும். இத்தடத்தில் திருவள்ளூரிலிருந்து 41.0 கி.மீ.-ல் உள்ள திருத்தணிக்கு தினமும் அரசு போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் மண்டலத்தால் 168 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 40 நடைகளும் இயக்கப்படுகின்றன. திருத்தணியிலிருந்து 34.0 கி.மீ.-ல் உள்ள பள்ளிப்பட்டிற்கு அரசு போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் மண்டலத்தால் தினசரி 38 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 30 நடைகளும் இயக்கப்படுகின்றன. இத்தடத்தின் இரு பகுதிகளும் நன்கு போக்குவரத்து வசதி பெறுகிறது. இத்தடத்தில் நேரடியாக பயணம் செய்வோர் குறைவு. திருவள்ளூர் பொதுமக்களும், பள்ளிப்பட்டு பொதுமக்களும் திருத்தணி சென்று தாங்கள் செல்ல வேண்டிய ஊருக்குச் செல்லலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

60—

பேருந்து நீட்டிப்பு

வினா எண் 48035—திருமதி மு. சந்திரா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசபாளையம் தொகுதி, கிழவிகுளம் ஊராட்சி, முத்தாநதி கிராம மாணவர்களின் நலன் கருதி காலை 8.00 மணிக்கு வடகரை வரை செல்லும் பேருந்தை முத்தாநதி வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

[2008 நவம்பர் 11

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

முத்தாநதி கிராமமானது இராஜபாளையம்-தென்கரை/வடகரை விலக்கிலிருந்து சுமார் 1.0 கி.மீ. தூரத்திலுள்ளது. தற்போது தென்கரையிலிருந்து காலை 8.00 மணி, வடகரையிலிருந்து காலை 8.50 மணி, ஊஞ்சாம்பட்டியில் இருந்து 13.25 மணி ஆகிய நேரங்களில் புறப்பட்டு இராஜபாளையம் வரும்போதும், இராஜபாளையத்திலிருந்து 12.10/17.30/21.00 ஆகிய நேரங்களில் புறப்பட்டு வடகரை/தென்கரை/ஊஞ்சாம்பட்டி செல்லும்போதும் முத்தாநதி கிராமத்தை தொட்டு தினசரி 6 தனி நடைகள் நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பேருந்து வசதிகளே முத்தாநதி கிராமத்திற்குப் போதுமானதாக கருதப்படுகிறது.

61—

பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 48147—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் - சென்னை, கலசப்பாக்கம் - காஞ்சிபுரம், வீரளூர்-சென்னை, வீரளூர்-திருப்பதி ஆகிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் வழியாக சேத்துப்பட்டு, செய்யாறு-சென்னைக்கு 2 புறநகர் பேருந்துகள் 4 நடைகளும், ஆரணி, செய்யாறு வழியாக சென்னைக்கு 5 புறநகர் பேருந்துகள் 10 நடைகளும், ஆரணி, ஆற்காடு வழியாக சென்னைக்கு 3 புறநகர் பேருந்துகள் 5 நடைகளும், மொத்தம் 10 பேருந்துகள் 19 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், இத்தடங்களின் சராசரி பயணிகள் அடர்வு 60% மட்டும் உள்ளதாலும், கலசப்பாக்கம்-சென்னை நேரடி பயணிகள் உபயோகம் குறைவாக உள்ளதாலும், கலசப்பாக்கம்-சென்னை வழித்தடத்தில் பேருந்து இயக்க அவசியம் எழவில்லை. திருவண்ணாமலையிலிருந்து கலசப்பாக்கம் வழியாக

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

காஞ்சிபுரத்திற்கு 14 புறநகரப் பேருந்துகள்மூலம் 29 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடங்களில் சராசரி பயணிகள் அடர்வு 65% மட்டும் உள்ளது. எனவே, கலசப்பாக்கம்-காஞ்சிபுரம் தடத்தில் நேரடியாக பேருந்து இயக்க அவசியம் எழவில்லை. மேல்சோழங்குப்பம் - சென்னை (வழி) வீரளூர், போளூர், சேத்துப்பட்டு, காஞ்சிபுரம், என ஒரு பேருந்தும், மேல்சோழங்குப்பம்-சென்னை (வழி) வீரளூர், போளூர், சேத்துப்பட்டு, காஞ்சிபுரம் என ஒரு பேருந்தும், மேல்சோழங்குப்பம்-சென்னை (வழி) வீரளூர், போளூர், சேத்துப்பட்டு, வந்தவாசி, செங்கல்பட்டு என ஒரு பேருந்தும் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பேருந்தின் சராசரி பயணிகள் அடர்வு 60% தான் உள்ளது. ஏற்கெனவே இயக்கப்படும் பேருந்துகளின் பயணிகள் அடர்வு குறைவாக உள்ளதால் வீரளூர்-சென்னை புதிய வழித்தடத்தில் இயக்க வழிவகை இல்லை. வீரளூர்-திருப்பதி அண்டை மாநில வழித்தடம் என்பதால் இரு மாநிலங்களிடையே ஒப்பந்தம் ஏற்படும்போது இத்தடத்தில் சாத்தியக்கூறுகள் இருப்பின், ஒப்பந்த முன்மொழிவு அனுப்பப்பட்டு, ஒப்பந்த முடிவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

62—

விபத்துகளைத் தடுத்தல்

வினா எண் 50814—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி தொகுதியில் அரசுப் பேருந்துகள் விபத்துக்குள்ளாவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

விபத்து ஏற்படுத்தும் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் ஆகியோர்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உயிரிழப்பு விபத்து, பெருவிபத்து ஏற்படுத்தும் ஓட்டுநர்களுக்கு பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கோட்ட மேலாளர் மற்றும் கிளை மேலாளர், விபத்துகள் ஏற்படுத்திய காரணத்தால் ஏற்படும் மன அழுத்தம்,

[2008 நவம்பர் 11

பயம் ஆகியவற்றைப் போக்க ஓட்டுநர்களோடு நேர்காணல் (Counselling) நடத்தி ஓட்டுநர்களுக்குப் புத்துணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். ஓட்டுநர்களுக்கு யோகா மற்றும் தியானப் பயிற்சி வழிமுறைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. அடிக்கடி விபத்து ஏற்படும் பகுதிகளில் அறிவிப்புப் பலகைகள் வைக்கவும் தக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. உயிரிழப்பு விபத்து ஏற்படுத்தும் ஓட்டுநர்களை தற்காலிக வேலைநீக்கம் செய்வதுடன் வேலைநீக்கம் முடிந்து பணியில் சேருவதற்கு முன்பாக கண் பார்வை பரிசோதனை முடித்து வரும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள். அனைத்து ஓட்டுநர்களுக்கும் ஆள் இல்லாத மற்றும் ஆட்கள் உள்ள இரயில்வே கேட்டைக் கடக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய மோட்டார் வாகன செயல்முறை மற்றும் சட்ட திட்டங்களைப் பற்றி அறிவுறுத்தப்படுகிறார்கள். விபத்தின்றி பணிபுரியும் ஓட்டுநர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் வெகுமதி வழங்கி பாராட்டப்பட்டு வருகின்றது. பேருந்தின் இயக்கத்தின்போது ஓட்டுநர்கள் செல்போன்களை கண்டிப்பாக உபயோகப்படுத்தக் கூடாது என்றும், மேலும் பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் சாலைகளில் பழுதுபார்க்கும் பணி நடை பெறும் சமயங்களில் சாலையைக் கடக்க தனிக்கவனம் செலுத்தும்படியும், அங்கு ஏற்படும் போக்குவரத்து நெரிசலில் விபத்து ஏற்படாதவாறு செயல்படுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் அனைத்து கிளைகளின் நுழைவு வாயிலில் "விபத்தின்றி பணியாற்றி திரும்பியமைக்கு நன்றி" என அறிவிப்புப் பலகைமூலம் புத்துணர்வு ஊட்டப்படுகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

63—

செங்கல் தொழிற்சாலை

வினா எண் 41208—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் பகுதியில் செங்கல் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ஆழியார் பகுதியில் செங்கல் தொழிற்சாலை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

2. ஆழியார் பகுதி அதிக விவசாய விளைநிலங்கள் நிறைந்த பகுதியாகும். மேலும், செங்கல் தயாரிக்க செம்மண் கலந்த வண்டல் மண்ணாகவும், சிலிக்கா அதிகமாகவும், இருக்கவேண்டும். மேற்கூறிய தன்மைகளுடன் கூடிய பெரும் நிலப்பரப்பு செங்கல் தயாரிக்க தேவை. ஆழியார் பகுதியில் அரசு நிலங்கள் கணிசமான பரப்பளவில் இல்லை. ஆதலால் இப்பகுதியில் செங்கல் சூளை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு. பொள்ளாச்சி பகுதியில் தேவம்பாடி வலசு, சொலவம்பாளையம், ஆழியார், புளியங்கண்டி அங்கலக்குறிச்சி, பொங்காலியூர் ஆகிய இடங்களில் ஏற்கெனவே தனியார் செங்கல் சூளைகள் இயங்கி வேலைவாய்ப்பு அளித்து வருவதோடு உள்ளூர் பகுதிவாழ் மக்களின் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான அளவில் செங்கல் உற்பத்தி செய்து வருகின்றன.

3. ஆர்வமுள்ள தொழில் முனைவோர் செங்கல் சூளை தொடங்க முன்வரும் பட்சத்தில் தமிழக அரசால் 22-2-2008-ல் வெளியிடப்பட்ட குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கையின்படி, தேவையான அனைத்து உதவிகளையும் மாவட்ட தொழில் மையம் செய்து தரும்.

64—

கால்நடைத் தீவனம்

வினா எண் 41236—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தி பகுதியில் கால்நடைத் தீவன. சிறு தொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

[2008 நவம்பர் 11

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தி பகுதியில் கால்நடைத் தீவன சிறு தொழில் தொழிற்சாலை தொடங்க திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2007 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி சிவகங்கை மாவட்டத்தில் 2,92,550 மாடுகள் உள்ளன. அவற்றில் திருப்புவனம் யூனியனில் மட்டும் 21,291 மாடுகளும், மானாமதுரை யூனியனில் 36,739 மாடுகளும் உள்ளன. மானாமதுரை வட்டத்தில் உள்ள மாடுகளில், 60 விழுக்காடு மாடுகளுக்கு வைக்கோல் மற்றும் மேய்ச்சல்மூலம் தீவனங்கள் போடப்படுகின்றன. இருந்தாலும் ஒரு மாட்டிற்கு தோராயமாக 2½ கிலோ தீவனம் எனும் வீதத்தில் இப்பகுதியில் உள்ள மொத்த மாடுகளில் 40 விழுக்காடு மாடுகளுக்கு தோராயமாக ஒரு நாளைக்கு 300 டன் வீதம் மாதம் ஒன்றுக்கு 9,000 டன் மாட்டுத் தீவனம் தேவைப்படுகிறது. கால்நடை தீவனங்கள் நாமக்கல், ஈரோடு போன்ற மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தனியார் நிறுவனங்கள் இத்தொழில் தொடங்க முன்வந்தால் நல்ல சந்தை வாய்ப்புகள் உள்ளன.

கால்நடைத் தீவனம் தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருட்களான மொலாசஸ், நெல், தவிடு இம்மாவட்டத்திலேயே கிடைக்கிறது. சர்க்கரை ஆலை பூவந்தி அருகே செயல்படுவதால் மொலாசஸ்-ம் புதுவயலில், நெல், தவிடு மற்றும் சிங்கம்புணரியில் எண்ணெய் புண்ணாக்கும் கிடைக்கிறது. இயந்திரங்கள் மற்றும் மூலப் பொருட்கள் பெறுவதற்கு குறைந்தளவு ரூ. 15.00 இலட்சம் வரை முதலீடு செய்து கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்கலாம்.

மேற்படி தொழிற்சாலை தொடங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வந்தால் 22-2-2008-ல் அரசு வெளியிட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கையின்படி முதலீட்டு

மானியம், மின்னாக்கி மானியம் மற்றும் வேலைவாய்ப்பு பெருக்க மானியம் போன்ற பிற சலுகைகள் அளித்து தக்க உதவிகள் மாவட்டத் தொழில் மையம் செய்துதரும்.

65—

மானியத்துடன் கடன்

வினா எண் 41241—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மானாமதுரை தொகுதியில் சிறுதொழில் தொடங்க ஊனமுற்றவர்களுக்கு மானியத்துடன் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 22-2-2008 அன்று அறிவிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கைப்படி மானாமதுரை வட்டாரம் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இப்பகுதியில் தொடங்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கு 15 விழுக்காடு மூலதன மானியம், 3 ஆண்டுகளுக்கு 20 சதவீத குறைந்தழுத்த மின் மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு இணைந்த தொழில் நுட்பத்திற்கான கூடுதல் மூலதன மானியம், செலுத்தக்கூடிய மதிப்புக் கூட்டு வரிக்கு மானியம் போன்ற சலுகைகள் வழங்கப்படும். மேலும் மகளிர், உடல் ஊனமுற்றவர்கள், பட்டியலினத்தவர், பழங்குடியினர்கள் தொழில் தொடங்க முன்வந்தால் அவர்களுக்கென்று சிறப்பு மானியமாக 5 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.2.00 இலட்சம் வரை கூடுதல் மானியமாக வழங்கப்படும். இவையல்லாது உடல் ஊனமுற்ற ஆதிதிராவிடர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் சிறப்பு நிதியிலிருந்து சிறு வியாபாரம், பெட்டிக்கடை நடத்த மானியமாக ரூ.10,000 வரை வழங்கப்பட்டு வருகிறது.

66—

தொழிற்பயிற்சி

வினா எண் 41259—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் துறையின்மூலம் பள்ளி, கல்லூரி இறுதியாண்டு மாணவ, மாணவிகளுக்கு கருத்தரங்கம்மூலம் கல்வி, வேலைவாய்ப்பு சார்ந்த தொழில் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொழில் வணிகத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மாவட்ட தொழில் மையங்கள்மூலமாக மாவட்டங்களில் உள்ள கல்லூரி இறுதி ஆண்டு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு சுய வேலைவாய்ப்பு குறித்து கருத்தரங்கம்மூலமாக விளக்கமளிக்கப்படுகிறது. தனியே தொழில் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

67—

சுற்றுலாத் தலமாக மாற்றுதல்

வினா எண் 48150—திரு. எச். அப்துல் பாசித்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, நாக்நேரி மலை கிராமத்தை சுற்றுலாத் தலமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக மாற்றுவது இல்லை. தலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை செய்து வருகிறது. வாணியம்பாடி தொகுதி நாக்நேரி மலை கிராமத்தை சுற்றுலாத் தலமாக மாற்றுவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

68—

சுற்றுலாத் தலத்தில் வசதிகள்

வினா எண் 49151—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சியில் சுற்றுலாத் தலமாக விளங்கும் செஞ்சிக் கோட்டையில் இராஜா கோட்டைக்கும், இராணி கோட்டைக்கும் கம்பிவட ஊர்தி (Rope Car) அமைக்கவும், அங்குள்ள குளத்தில் படகு சவாரி ஏற்படுத்தவும் மற்றும் தங்கும் விடுதி, உணவு விடுதிகள் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சியில் சுற்றுலாத் தலமாக விளங்கும் செஞ்சிக் கோட்டை, தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இராஜா கோட்டைக்கும், இராணி கோட்டைக்கும் கம்பிவட ஊர்தி அமைக்க கருத்துரு ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை. மேலும் செஞ்சியில் அடிப்படை வசதிகள் 2001-2002 ஆம் ஆண்டு ரூ.75.00 இலட்சம் (மைய அரசு ரூ.37.50 + மாநில அரசு ரூ.37.50) நிதி உதவி பெற்று பணிகள் முடிவுற்றன.

69—

விடுதிகள் கட்டுதல்

வினா எண் 49155—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூரில் சுற்றுலாத் துறையின்மூலம் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் கட்ட அரசு முன்வருமா?

விடை.—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தங்கும் விடுதி மற்றும் உணவகங்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தியும், பராமரித்தும் வருகிறது. மேல்மலையனூரில் சுற்றுலாத் துறையின்மூலம் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் அமைக்கும் திட்டப் பிரேரணை ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை. மேற்குறிப்பிட்ட பகுதிகளில் உணவகம் அமைக்க தனியார் எவரேனும் முன்வருவார்களேயானால் சுற்றுலாத் துறை அவர்களை ஊக்குவிக்கும்.

70—

பொருட்காட்சி

வினா எண் 44922—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் போஸ் மைதானத்தில் ஆடி மாதத்தில் நடைபெற்று வந்த பொருட்காட்சியை மீண்டும் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை.—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

அரசு பொருட்காட்சி ஒவ்வொரு ஆண்டும் கோயம்புத்தூர், மதுரை, சேலம் ஆகிய நகரங்களிலும், இரண்டாண்டுக்கு ஒரு முறை திருநெல்வேலி, வேலூர் ஆகிய நகரங்களிலும் நடைபெற்று வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

சேலத்தில் கடைசியாக 2005 ஆம் ஆண்டு நடைபெற்றது. 2006 ஆண்டில் சேலம் அரசுப் பொருட்காட்சி நடத்திட தனி உரிமை இனங்கள்/தனியார் அரங்குகள்/கடைகள் ஆகியவற்றிற்கு ஏலம்/ஒப்பந்தப் புள்ளியும் சேலம் மாவட்டத்திலேயே நடத்தப்பட்டது. கடைகள் ஒதுக்கீடு பெற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வியாபாரிகளின் ஒத்துழைப்பு இல்லாததால் பொருட்காட்சி நடத்தினால் அரசுக்கு நஷ்டம் ஏற்படும் என்ற நிலை ஏற்பட்டது. எனவே, சேலத்தில் அரசு பொருட்காட்சி நடத்தப்படுவது கைவிடப்பட்டது. 2007 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் சேலம் இரயில்வே கோட்டம் தொடக்க விழா நிகழ்ச்சியினால் பொருட்காட்சிக்கான திடல் பெறஇயலாத காரணத்தினாலும் வேறு மாற்று இடம் அத்தருணத்தில் பெறஇயலாத காரணத்தினாலும் நடத்த இயலவில்லை. 2008 ஆம் ஆண்டு சேலத்தில் அரசு பொருட்காட்சி நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

71—

சிலை அமைத்தல்

வினா எண் 5248—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மன்னர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களுக்கு இராமநாதபுரத்தில் மணிமண்டபம் மற்றும் இராமநாதபுரம் அரண்மனைக்கு முன்பு சிலையும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை. இராமநாதபுரம் அரண்மனைக்கு முன்பு ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களுக்கு சிலை மட்டும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2008 நவம்பர் 11

72—

குடிசை மாற்று வாரிய நிதி

வினா எண் 23921—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை மாரியம்மன் கோயில் இடத்தில் பட்டா வழங்கப்பட்டு குடிசை மாற்று வாரியத்தில் நிதி ஒதுக்கி பணி இன்னும் தொடங்காமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் பணி தொடங்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போதைக்கு இல்லை. இத்திட்டப்பகுதியில் உள்ள 413 மனைகளில் 161 குடும்பங்களுக்கு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மனைகளுக்கு பட்டியல் இறுதி செய்யப்பட்டு ஆதி திராவிடர் நலத் துறையில் பட்டா வழங்கப்படும். அதன் பின் இக்குடிசைப் பகுதிவாழ மக்களுக்கு வீடுகள் அமைக்க புதிய திட்டம் தீட்டப்படுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

73—

குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு

வினா எண் 47609—திரு. கு. சீனிவாசன்: மண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூங்காநகர், 45-வது வட்டத்தில் அமைந்துளே கேசவப்பிள்ளை பூங்கா நகர் குடிசை மாற்று வாரியக் குடியருப்பை புதிதாகக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டப் பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில் அதாவது நடப்பாண்டில் தொடங்கப்படும்.

74—

விடுதிக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 57187—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, கொமரலிங்கம் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, கொமரலிங்கம் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்குக் கட்டடம் கட்ட தகுதியான நிலம் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் நிதிநிலைக்கேற்ப கட்டடம் கட்டும் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

75—

சுற்றுச் சுவர் கட்டுதல்

வினா எண் 42500—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொழிற்பயிற்சி நிலையத்தை நவீனப்படுத்தி, கூடுதலாக வகுப்பறைகள், சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2008 நவம்பர் 11

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள செங்கல்பட்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் 11 தொழிற் பிரிவுகளுடன் இயங்கி வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தில் கீழ்க்கண்ட மூன்று புதிய தொழிற் பிரிவுகள் தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது:—

1. இருசக்கர வாகனங்கள் பழுதுபார்ப்பவர்;
2. தானியங்கி வாகனங்களுக்கு மின்சாரம் மற்றும் கம்மியர் மின்னணுவியல்; மற்றும்
3. ஓட்டுநருடன் கூடிய கம்மியர் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், 2007-2008 ஆம் ஆண்டில் இத்தொழிற் பயிற்சி நிலையம் திறன்மிகு மையமாக உற்பத்தியும் தயாரிப்பும் என்ற தொழிற் பிரிவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட மூன்று தொழிற் பிரிவிற்கான பணிமனை மற்றும் வகுப்பறைகள் புதிதாகக் கட்டுவதற்கும், திறன்மிகு மையத்திற்கான வகுப்பறைகள் கட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. என்.சி.வி.டி. பாடத்திட்டத்தின்படி நவீன கருவிகள் மற்றும் உபகரணங்கள், வகுப்பறைகள் ஆகியவை உள்ளன. மேலும், அவ்வப்போது திருத்திய பாடத்திட்டத்திற்கேற்ப கொள்முதல் செய்யப்பட்டும் வருகிறது. செங்கல்பட்டு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு தற்போது சுற்றுச் சுவர் அமைப்பதற்கு உத்தேசம் இல்லை.

76—

தொழிற்பயிற்சி

வினா எண் 45298—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின்மூலம் மாணவிகளுக்கு தொழிற்பயிற்சி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் தொழிற் பிரிவுகள் புதுடெல்லி தேசிய தொழில் நெறிக் கல்வி பயிற்சி பாடத் திட்டக் குழுவால் ஒப்புதல் பெறப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அனைவருக்கும் கல்வி இயக்க திட்டம் பள்ளி கல்வித் துறையின்கீழ் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இத்துறையில் மானாமதுரை தொகுதியில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின்மூலம் மாணவிகளுக்கு தொழிற்பயிற்சி தொடங்க வழிவகை இல்லை.

(ஆ) எழாது.

77—

மாணவர் விடுதி

வினா எண் 47533—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கடகத்தூர் ஊராட்சி, அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மாணவர் விடுதி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், கடகத்தூர் ஊராட்சியில் அமைந்துள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 7 தொழிற் பிரிவுகளில் 242 இருக்கைகள் உள்ளன. அந்நிலையத்தில் சேருகின்ற பயிற்சியாளர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதி திராவிடர் இனத்தவர்களுக்கான விடுதிகளில் தங்கிட வாய்ப்பு உள்ளன.

எனவே, தருமபுரி மாவட்டம், கடகத்தூர் ஊராட்சி அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மாணவர் விடுதி தொடங்க தற்போது அரசிற்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

78—

கல்வி உதவித் தொகை

வினா எண் 50731—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் நல வாரியம்மூலம் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வழங்கும் கல்வி உதவித் தொகையை உயர்த்துவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2005-2006 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்மூலம் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வழங்கும் கல்வி உதவித் தொகை பொறியியல்/மருத்துவம்/சட்டம் மற்றும் வேளாண்மை பட்டப் படிப்பிற்கு ரூ. 1,200-லிருந்து ரூ. 2,400 ஆகவும், பொறியியல் மற்றும் மருத்துவப் பட்டயப் படிப்பிற்கு ரூ. 720-லிருந்து ரூ.1,440 ஆகவும், தொழிற்பயிற்சி கல்விக்கு ரூ. 500-லிருந்து ரூ.1,000 ஆகவும், மேல்நிலை வகுப்புகளுக்கு ரூ. 600-லிருந்து ரூ.1,200 ஆகவும், பாடப் புத்தகங்கள் வாங்குவதற்கான உதவித் தொகையை ரூ. 40 முதல் ரூ. 150 வரை என்றிருந்ததை ரூ. 180 முதல் ரூ. 300 என உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

2007-2008 ஆம் ஆண்டில் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பாடப் புத்தகங்கள் வாங்குவதற்கான உதவித் தொகை பட்டப் படிப்பிற்கு ரூ.250-லிருந்து ரூ.500 ஆகவும், முதுநிலைப் பட்டப் படிப்பிற்கு ரூ.300-லிருந்து ரூ.750 ஆக உயர்த்தி அறிவிக்கப்பட்டு தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது.

2008 நவம்பர் 11]

மேலும், 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் வாரியத்தின்மூலம் வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை திட்டத்தில் கூடுதலாக இளநிலை பட்டதாரி ஆசிரியர் பயிற்சிக் கல்வி மற்றும் உடற்பயிற்சி பட்டப் படிப்பிற்கு 25 நபர்களுக்கு தலா ரூ.2,400 வீதமும், ஆசிரியர் பட்டயக் கல்வி மற்றும் உடற்பயிற்சி பட்டயப் படிப்பிற்கு 150 நபர்களுக்கு தலா ரூ.1,440 வீதமும் வழங்குவதற்கு அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நடப்பு ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட உள்ளது.

79—

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்

வினா எண் 50739—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை மீண்டும் கோயம்புத்தூர் மாநகருக்கு மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் வருவாய் மாவட்டத்துக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் துடியலூரில் அமைந்துள்ள தொழிற் பயிற்சி நிலைய வளாகத்தில் கோயம்புத்தூர்-மேட்டுப்பாளையம் சாலையில் பொது மக்கள் எளிதாகச் சென்று அடையும் விதத்தில் சொந்தக் கட்டடத்தில் 14-9-1992 முதல் இயங்கி வருகிறது. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், கோயம்புத்தூர் இரயில் நிலையத்திலிருந்து 13 கி.மீ. தொலைவிலும், பேருந்து நிலையத்திலிருந்து 9 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. மேலும், நகரின் முக்கிய பகுதிகளான காந்திபுரம், உக்கடம் மற்றும் டவுன்ஹால் ஆகிய இடங்களிலிருந்து இவ்விடத்தை அடைய அடிக்கடி நகரப் பேருந்துகள் உள்ளன. பொது மக்கள் சுலபமாக அடையும் நிலையில் இவ்வலுவலகம் அமைந்துள்ளது. எனவே, சொந்தக் கட்டடத்தில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இயங்கும் இவ்வலுவலகத்தை மீண்டும் கோயம்புத்தூர் மாநகருக்குள் மாற்றிட வேண்டிய தேவையில்லையெனக் கருதப்படுகிறது.

80—

கணினிமயமாக்குதல்

வினா எண் 50740—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்ட அரசு தொழிற்பயிற்சி நிறுவனத்தை கணினிமயமாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) கோயம்புத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் ஏற்கெனவே கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

(ஆ) எழாது.

81—

சுய வேலைவாய்ப்பு

வினா எண் 50944—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கரியாஞ்செட்டிபாளையம், அங்களகுறிச்சி, ஜல்லிபட்டி, ஊராட்சிகளில் டிஜிட்டல் நச்சுத் தொழிலில் சுய வேலைவாய்ப்புப் பெற பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் இயங்குகின்ற அரசின் தொழிற்பயிற்சி நிலையங்களில் தேசிய தொழில் நெறி கல்வி பயிற்சித் திட்டக் குழுவினால் அமைக்கப்பெற்ற பாடத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தொழிற் பிரிவுகள் நடத்தப்பெற்று வருகின்றன. வால்பாறை தொகுதி அமைந்துள்ள கோவை மாவட்டத்தில் உள்ள கோவை, கோவை (மகளிர்) மற்றும் திருப்பூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் தச்சுப் பிரிவு சார்ந்த தொழிற் பிரிவு இல்லை. எனவே வால்பாறை தொகுதி, அங்களகுறிச்சி, கரியாஞ்செட்டிபாளையம், ஜல்லிப்பட்டி, ஊராட்சிகளில் தச்சுத் தொழில் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்க அரசுக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

82—

சுய வேலைவாய்ப்புப் பயிற்சி

வினா எண் 52013—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஜல்லிபட்டி, கம்பலாபட்டி, பிலிசின்னம்பாளையம், அங்களகுறிச்சி, கரியாஞ்செட்டிப்பாளையம் ஆகிய ஊராட்சிகளில் டிஜிட்டல் நிழற்படம் தொடர்பான சுய வேலைவாய்ப்புப் பெற பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் இயங்குகின்ற அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் தேசிய தொழில் நெறி

கல்வி பயிற்சித் திட்டக் குழுவினால் அமைக்கப்பெற்ற பாடத் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட தொழிற்பிரிவுகள் நடத்தப்பெற்று வருகின்றன. வால்பாறை தொகுதி அமைந்துள்ள, கோவை மாவட்டத்தில் உள்ள கோவை, கோவை (மகளிர்) மற்றும் திருப்பூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் டிஜிட்டல் நிழற்பட தொழிற் பிரிவுகள் இல்லை. எனவே கம்பலாபட்டி அங்களகுறிச்சி, கரியாஞ்செட்டிபாளையம் ஆகிய ஊராட்சிகளில் டிஜிட்டல் நிழற்படம் தொடர்பான சுய வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்க அரசிற்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

83—

சுய வேலைவாய்ப்புப் பயிற்சி

வினா எண் 52018—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், ஜல்லிப்பட்டி, கம்பலாபட்டி, பிலிசின்னம்பாளையம், கரியாஞ்செட்டிபாளையம் ஊராட்சிகளில் காணொளி ஒளிக்காட்சி தொடர்பான (Videography) சுய வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் இயங்குகின்ற அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் தேசிய தொழில் நெறி கல்வி பயிற்சித் திட்ட குழுவினால் அமைக்கப்பெற்ற பாடத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தொழிற் பிரிவுகள் நடத்தப்பெற்று வருகின்றன. வால்பாறை தொகுதி அமைந்துள்ள, கோவை மாவட்டத்தில் உள்ள கோவை, கோவை (மகளிர்) மற்றும் திருப்பூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் காணொளி ஒளிக்காட்சி

2008 நவம்பர் 11]

தொடர்பான தொழிற் பிரிவுகள் இல்லை. எனவே ஜல்லிப்பட்டி, கம்பலாபட்டி, அங்களகுறிச்சி, பிலிசின்னம்பாளையம், கரியாஞ்செட்டிபாளையம், ஊராட்சிகளில் காணொளி ஒளிக்காட்சி தொடர்பான (Videography) சுய வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்க அரசுக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

84—

சுய வேலைவாய்ப்புப் பயிற்சி

வினா எண் 52024—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி, அங்களகுறிச்சி, கரியாஞ்செட்டிபாளையம், ஜல்லிப்பட்டி, பிலிசின்னம்பாளையம், ஆகிய ஊராட்சிகளில் குளிர்சாதனக் கருவிகள் பழுதுபார்த்தல் குறித்த சுய வேலைவாய்ப்புப் பயிற்சியினை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி அமைந்துள்ள கோவை மாவட்டத்தில் கோவை, அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் கம்மியர் குளிர் சாதனம் மற்றும் தட்பவெப்ப நிலை கட்டுப்படுத்தல் தொழிற்பிரிவு உள்ளது. எனவே, வால்பாறை தொகுதி கம்பலாப்பட்டி, அங்களகுறிச்சி, கரியாஞ்செட்டிபாளையம், ஜல்லிப்பட்டி, பிலிசின்னம்பாளையம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள இளைஞர்கள் பயிற்சியில் சேர விண்ணப்பித்தால் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். ஆகவே மேற்கண்ட ஊராட்சிகளில் தனியாக குளிர்சாதனக் கருவிகள் பழுதுபார்த்தல் குறித்த சுய வேலைவாய்ப்புப் பயிற்சியினை வழங்க அரசுக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

85—

சுய வேலைவாய்ப்புப் பயிற்சி

வினா எண் 52035—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி, பிலிசின்னம்பாளையம், கரியாஞ்செட்டிபாளையம், ஜல்லிபட்டி, அங்களகுறிச்சி ஆகிய ஊராட்சிகளில் பஞ்ச காவ்யா தயாரிப்பு பற்றிய சுய வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் இயங்குகின்ற அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் தேசிய தொழில் நெறி கல்வி பயிற்சித் திட்ட குழுவினால் அமைக்கப் பெற்ற பாடத் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட தொழிற்பிரிவுகள் நடத்தப்பெற்று வருகின்றன. வால்பாறை தொகுதி அமைந்துள்ள கோவை மாவட்டத்தில் கோவை, கோவை (மகளிர்) மற்றும் திருப்பூர், அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பஞ்ச காவ்யா தயாரிப்பு தொழிற் பிரிவுகள் இல்லை. எனவே வால்பாறை தொகுதி கம்பலாபட்டி, அங்களகுறிச்சி, கரியாஞ்செட்டிபாளையம், ஜல்லிப்பட்டி, பிலிசின்னம்பாளையம் ஆகிய ஊராட்சிகளில் பஞ்ச காவ்யா தயாரிப்பு பற்றிய சுய வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்க அரசிற்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

86—

சுய வேலைவாய்ப்புப் பயிற்சி

வினா எண் 52040—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம் மற்றும் கம்பலாபட்டி ஊராட்சிகளில் தச்சுத் தொழில் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் இயங்குகின்ற அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் தேசிய தொழில் நெறி கல்வி பயிற்சித் திட்ட குழுவினால் அமைக்கப் பெற்ற பாடத் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட தொழிற் பிரிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன. வால்பாறை தொகுதி அமைந்துள்ள கோவை மாவட்டத்தில் உள்ள கோவை, கோவை (மகளிர்) மற்றும் திருப்பூர், அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் தச்சுப் பிரிவு சார்ந்த தொழிற் பிரிவு இல்லை. எனவே வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம் மற்றும் கம்பலாபட்டி ஊராட்சிகளில் தச்சுத் தொழில் சுய வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்க அரசுக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

87—

கலையரங்கம் கட்டுதல்

வினா எண் 48185—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, ஆசாரிப்பள்ளம் பேரூராட்சி, மேலத்தாராவிளையில் அமைந்துள்ள முத்தாரம்மன் ஆலயம் மற்றும் எறும்புக்காடு ஊரில் அமைந்துள்ள முத்தாரம்மன் ஆலய வளாகத்தில் கலையரங்கம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில்; எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி ஆசாரிப்பள்ளம் பேரூராட்சி மேலத்தாராவிளையில் அமைந்துள்ள முத்தாரம்மன் ஆலயம் மற்றும் எறும்புக்காடு ஊரில் அமைந்துள்ள முத்தாரம்மன் ஆலயம் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களாகும். எனவே இத்திருக்கோயில்களில் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை சார்பில் கலையரங்கம் கட்டித்தர சட்ட விதிகளில் வழிவகையில்லை.

88—

மரம் வளர்ப்பு

வினா எண் 45896—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதியில் உள்ள கபிலர்மலைக் குன்றைச் சுற்றியும், குன்றின் மீதும் மரம் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

கபிலர்மலை தொகுதியில் உள்ள கபிலர்மலைக் குன்றைச் சுற்றியும், குன்றின் மீதும் மரங்கள் நடுவதற்கான திட்டம் ஏதும் இல்லை.

89—

சாலை செப்பனிடல்

வினா எண் 40732—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் பழுதான காஞ்சமலை சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கருமலை கிராமம் பொள்ளாச்சி – வால்பாறை சாலையானது அரசு மாநில நெடுஞ்சாலையில் கி.மீ. 55/2-ல் பிரிந்து செல்லும் பொள்ளாச்சி (நெ.) கோட்ட பராமரிப்பிலுள்ள இரு மாவட்ட இதர சாலைகளை உள்ளடக்கியது. இதில் அய்யர்பாடி பிரிவு சாலை கி.மீ. 0/0-1/0 சாலையை கடந்து ஸ்டேன்மோர் – சிறுகுன்றா சாலையில் கி.மீ. 3/2-ல் சேரும் சாலை கி.மீ. 0/0-8/85இல் கி.மீ. 4/0-ல் கருமலை கிராமம் உள்ளது. இதில் அய்யர்பாடி பிரிவு சாலையில் கி.மீ. 0/0-1/0 வரை உள்ள பகுதிகளை 2007-2008-ல் காலமுறை புதுப்பித்தல் நிதியின்கீழ் ரூ.700 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இப்பணி நவம்பர் 2007-ல் முடிவடைந்துள்ளது. மேலும், இதன் தொடர்ச்சியாக அய்யர்பாடி சாலையிலிருந்து ஸ்டேன்மோர் – சிறுகுன்றா சாலையில் உள்ள கி.மீ. 0/0-1/0 மற்றும் கி.மீ. 4/2-5/4 வரையிலுள்ள பகுதிகளை ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2007-2008-ன்கீழ் மொத்தம் ரூ.16.00 இலட்சம் மதிப்பில் பணி மேற்கொள்ளப்பட்டு, நவம்பர் 2007-ல் பணி முடிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட சாலையில் கி.மீ. 1/0-4/0 வரையுள்ள 3 கி.மீ. சாலையும் தார் நொடிகள் போடப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. 2008-2009 நிதியாண்டில் இதர மாவட்ட சாலையில் காலமுறை பராமரிப்பின்கீழ் 1/0-4/0 வரை உள்ள பகுதியை பராமரிப்புப் பணிகளின்கீழ் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

90—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 40733—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை கவர்க்கல்லில் தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 நவம்பர் 11

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை-கவர்க்கல் சாலை என்பது பொள்ளாச்சி - வால்பாறை சாலை கி.மீ. 0/0-64/0இல் உள்ள அரசு மாநில நெடுஞ்சாலையில் கி.மீ. 47/0-52/2 வரையிலான சாலைப் பகுதியாகும். இச்சாலை பொள்ளாச்சி (நெடுஞ்சாலை) கோட்டப் பராமரிப்பில் உள்ளது. இதில் கி.மீ. 42/8-44/4, 44/6-44/8, 45/0-45/4 மற்றும் 50/0-52/2 வரை ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2007-2008-ன் கீழ் ரூ. 80.00 இலட்சம் மதிப்பில் மேம்பாடு செய்ய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு சாலையினை அகலப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதியுள்ள பகுதிகள் நிதிநிலைக்கேற்ப ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

91—

தொழிற்பயிற்சித் திட்டம்

வினா எண் 33964—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உடுமலைப்பேட்டை வட்டம், கொமரலிங்கம், கொழுமம், பூதனம், அம்மாபட்டி பகுதி ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சித் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

அனைத்து மாவட்டங்களிலும் தாட்கோவின் ஆண்டு செயல் திட்டம் மற்றும் சிறப்பு மாநில நிதியுதவியின் கீழ் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலை வட்டம், கொமரலிங்கம், கொழுமம், பூதனம், அம்மாபட்டி பகுதிகளில் தொழிற்பயிற்சித் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற விரும்பும் ஆதி திராவிட இளைஞர்கள் மாவட்ட தாட்கோ மேலாளரை அணுகி அவரவர் விருப்பத்திற்கு தகுந்தாற்போல் தேவையான பயிற்சியில சேர்ந்து பயனடையலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

92—

விளையாட்டுகளில் தனிப் பயிற்சி

வினா எண் 38935—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக ஆதி திராவிடர் படித்த இளைஞர்களுக்கு கிரிக்கெட், ஹாக்கி, கால்பந்து, டென்னிஸ் போன்ற விளையாட்டுகளில் பயிற்சி அளித்து உலக அரங்கில் பங்கு பெறச் செய்ய அரசு சிறப்பு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக ஆதி திராவிடர் படித்த இளைஞர்களுக்கு கிரிக்கெட், ஹாக்கி, கால்பந்து, டென்னிஸ் போன்ற விளையாட்டுகளில் தனியாக பயிற்சி ஏதும் அளிக்கப்படுவதில்லை.

93—

மீன் எண்ணெய் விற்பனை

வினா எண் 41135—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் அரசு மீன் எண்ணெய் விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தற்போது மீன் எண்ணெய் விற்பனை நிலையம் மீன்வளத் துறையின் மூலம் செயல்படுத்தப்படவில்லை. மீன் எண்ணெய் உற்பத்தியும் கடலோர

கிராமங்களில் மீன்வளத் துறை மூலம் மேற்கொள்ளப்படுவதில்லை. எனவே, சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் அரசு மீன் எண்ணெய் விற்பனை நிலையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

94—

தொழிற் கூடம்

வினா எண் 41139—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் படகுகள் செய்யும் தொழிற் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் படகுகள் செய்யும் தொழிற் கூடம் அமைப்பது குறித்து அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

95—

மீன் உலர்களம் அமைத்தல்

வினா எண் 42315—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, குறும்பனை, கடியப்பட்டணம், ராஜாக்கமங்கலம், அழிக்கால், புதூர், மண்டைக்காடு, வாணியக்குடி மீனவர் கிராமங்களில் மீன் உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மேலகடியப்பட்டணத்தில் ரூ. 3.00 இலட்சம் செலவு மீன் உலர்களம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குளச்சல் தொகுதி, குறும்பனை, ராஜாக்கமங்கலம், அழிக்கால், புதூர்மண்டைக்காடு, வாணியக்குடி ஆகிய மீனவர் கிராமங்களில் மீன் உலர்களம் அமைக்கும் திட்டம் இல்லை.

96—

மீன் உலர்களம் அமைத்தல்

வினா எண் 42334—திரு. அ. ராஜன்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகர்கோவில் தொகுதி, மணக்குடி, பள்ளம், பொழிக்கரை மீனவ கிராமங்களில் மீன் உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

நாகர்கோவில் தொகுதி, மணக்குடி, பள்ளம், பொழிக்கரை மீனவ கிராமங்களில் மீன் உலர்களம் அமைக்க தற்பொழுது அரசுத் திட்டம் ஏதுமில்லை.

97—

விழிப்புணர்வு

வினா எண் 45951—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக மீனவர்களுக்கு சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் மீனவ கிராம மக்களிடையே பல்வேறு சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட நிர்வாகம் மீன்வளத் துறை உதவியுடன் ஊரக வளர்ச்சி முகமை அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலமாக அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தமிழக மீனவர்களுக்கு சுற்றுச் சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த துறை மூலம் தனியே பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் எழாது.

98—

மீன் கொள்முதல்

வினா எண் 45954 திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் பகுதியில் பிடிக்கப்படும் இறால், கணவாய் நண்டு போன்ற மீன் வகைகளை அரசே கொள்முதல் செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) இராமேஸ்வரம் பகுதியில் பிடிக்கப்படும் இறால், கணவாய், நண்டு போன்ற மீன் வகைகள் மீனவர்களால் பிடிக்கப்பட்டு மீனவர்களாலேயே நேரடியாக விற்பனை செய்யப்படுவதால் அவற்றை அரசு கொள்முதல் செய்ய தற்போது வாய்ப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

99—

மீனவர்களுக்கு இலவச வீடுகள்

வினா எண் 46629—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதியில், காவிரிக் கரையோரம் வசிக்கும் மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2005-2006 ஆம் ஆண்டிற்கு கிருஷ்ணராயபுரம் தொகுதியில் அரசால் 25 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு முந்தைய ஆண்டுகளில் வீடுகள் ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இலவச வீடுகள் கட்டி வழங்கும் திட்டத்தின்கீழ் பயனாளிகளிடம் 3 சென்ட் நிலம் இல்லாத காரணத்தினால் வீடுகள் கோரும் மீனவர்களுக்கு வீடுகள் கட்டி வழங்க சாத்தியக் கூறுகள் இல்லை.

100—

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 41636—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, கலத்தம்பட்டில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதி, கலத்தம்பட்டி கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைப்பதற்கு கிராம மக்கள் முன்வராததால், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2008 நவம்பர் 11

பட்டியல் 3

1—

சொற்கள் மாற்றம்

வினா எண் 8983—செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் மொழியில் ஆண் பெண் பாலின பாகுபாடுள்ள சொற்களை மாற்றுவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

28-4-2003 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் (தவ.1.1) துறை, அரசாணை (நிலை) எண் 62-இல், சட்டமன்றப் பேரவையில் அறிவித்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் பொருட்டு உறுதி ஏற்றல், அரசு ஆணைகள், கடிதங்கள், அறிக்கைகள், அரசு அலுவலகங்களின் செயல்பாடுகள், பள்ளி, கல்லூரி பாடநூல்கள், தமிழ்நாடு அரசின் வெளியீடுகள் அகராதிகள் படிவங்கள் ஆகிய அனைத்து நேர்வுகளிலும் 'CITIZEN' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக தமிழில் குடிமகள்/குடிமகன் என்றே இனி பயன்படுத்த வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

2—

அரிய நூல்கள்

வினா எண் 23720—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற மொழிகளின் அரிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) தமிழில் நூல்கள் வெளியிடப்பட நிதியுதவி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பிற மொழிகளின் அரிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடவும் நிதியுதவி வழங்கப்படுகிறது.

2008 நவம்பர் 11]

(ஆ) ஆண்டுதோறும் நிதியுதவி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. நிதியுதவி வேண்டி வரும் நூல்கள் தெரிநிலைக் குழுவில் வைக்கப்பட்டு நிதியுதவி அளிக்கத்தக்க நூல்கள் தெரிவு செய்யப்படுகின்றன. பெருமளவு நிதியுதவியாக ரூ. 25,000/- (அல்லது) நூல் அச்சிட்ட செலவில் 60 விழுக்காடு இதில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

3—

புதிய கம்பிவடம்

வினா எண் 20034—திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 17-இல், துரை தெரு, கொடிமரச்சாலை, பக்கீர் தெரு, உசேன் மேஸ்திரி தெரு, புனித சேவியர் தெருவில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 17-ல் உள்ள துரை தெரு, கொடிமரச்சாலை, பக்கீர் தெரு, உசேன் மேஸ்திரி தெரு மற்றும் புனித சேவியர் தெருவில் புதைகம்பிவடம் மற்றும் பில்லர் நிறுவப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

4—

புதிய மின் கம்பிகள் மாற்றம்

வினா எண் 23928—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மடப்புரத்தில் பழுதாகியுள்ள மின் கம்பிகளை புதிய மின் கம்பிகளாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் மடப்புரத்தில் 3.5 கி.மீ. தூரம் மின் கம்பிகள் பழுதானதாக கண்டறியப்பட்டு புதிய 7/2.59 எம். எம். ஏ.சி.எஸ்.ஆர். மின் கம்பிகள் மாற்றப்பட்டு விட்டன.

5—

புதிய கம்பிவடம்

வினா எண் 24894—திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 22-இல், தாண்டவமூர்த்தி தெரு, ரோப்குடோன் தெரு, தொப்பை தெரு, பெரியண்ணன் தெரு, மசூதி தெரு, ஆதம் தெரு, பஜனை கோயில் தெரு, வைகுண்ட தெரு, துரை தெரு, பிரைட்டன் காட்டன் பிரஸ் சாலை, வடக்கு இரயில்வே திருப்பச் சாலை, பழைய ஆட்டுத் தொட்டிச் சாலை, மணியக்காரர் சத்திரம் சாலையில் சீரான மின் வசதி பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 22 இல் தாண்டவமூர்த்தி தெரு, ரோப்குடோன் தெரு, தொப்பை தெரு, பெரியண்ணன் தெரு, மசூதி தெரு, ஆதம் தெரு, பஜனை கோயில் தெரு, வைகுண்ட தெரு, துரை தெரு, பிரைட்டன் காட்டன் பிரஸ் சாலை, வடக்கு இரயில்வே திருப்பச் சாலை, பழைய ஆட்டுத் தொட்டிச் சாலை, மணியக்காரர் சத்திரம் சாலையில் ஏற்கெனவே புதைகம்பிவடம் பதிக்கப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

6—

மின் விநியோகம்

வினா எண் 43841—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

கிராமப்புறத்தில் நிலவும் மின்வெட்டுப் பிரச்சினைகளால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதை தடுத்து உரிய நேரங்களில் மின் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் விவசாயத்திற்கு பகலில் ஆறு மணி நேரமும் இரவில் எட்டு மணி நேரமும் நாள் ஒன்றுக்கு பதினான்கு மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மற்ற நேரங்களில் ஒரு முனை மின்சாரமும் தங்கு தடையின்றி முறைப்படுத்தப்பட்ட நேரப்படி வழங்கப்பட்டு வருகிறது.

7—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 5363—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வாழைப்பந்தல் அருந்ததியர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திமிரி ஒன்றியம், வாழப்பந்தல் ஊராட்சியில் வாழப்பந்தல் ஆதிதிராவிடர் காலனியில் 2006-2007 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 5367—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், பரதராமி கிராமத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கக் தொட்டி 60,000 லிட்டர் கொள்ளளவுடன் அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், திமிரி ஒன்றியம், பரதராமி ஊராட்சியைச் சேர்ந்த பரதராமி குடியிருப்புக்கு 1994 ஆம் ஆண்டு செயலாக்கப்பட்ட 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஊராட்சி மூலம் செயலாக்கப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவை மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுவதால், தற்போது கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

9—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 5537—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், காக்னாம்பாளையம் ஒன்றியம், காக்னாம்பாளையம் ஊராட்சி, கூடப்பட்டு வள்ளுவர் நகருக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், காக்னாம்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த கூடப்பட்டு வள்ளுவர் காலனி குடியிருப்பில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருவதால் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட தேவை ஏற்படவில்லை.

10—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 5538—திரு. கி.க. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், மிட்டூர் ஊராட்சி, ரெட்டி வலசை கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், மிட்டூர் ஊராட்சியைச் சேர்ந்த ரெட்டி வலசை குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

11—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 5652—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, செல்லிபட்டி ஊராட்சி, வெங்கிட்டாபுரம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், ஜல்லிப்பட்டி ஊராட்சி, வெங்கிட்டாபுரம் குடியிருப்பிற்கு மானுப்பட்டி ஜோதிப்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் கணக்கம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய இரு திட்டங்கள் மூலம் ஏற்கனவே கட்டப்பட்டு அங்குள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் போதிய குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

12—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6172—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், கே.பி. தாங்கல் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு ஒன்றியம், சர்வந்தாங்கல் ஊராட்சியைச் சேர்ந்த கே.பி. தாங்கல் குடியிருப்பில் ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஏற்கெனவே கட்டப்பட்டு (நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம்) வழங்கப்பட்டு வருகிறது.

13—

கழிவுநீர்க் கால்வாய்

வினா எண் 6930—திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, 7-வது வார்டிலுள்ள சி.எம்.சி. காலனி, உப்பிலியர் வீதி மற்றும் அனைத்து இடங்களிலும் கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிங்காநல்லூர் தொகுதி, 7-வது வார்டிலுள்ள சி.எம்.சி. காலனி, உப்பிலியர் வீதி மற்றும் அனைத்து இடங்களிலும் ஏற்கெனவே கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்யப்பட்டுள்ளது.

14—

கூட்டுக் குடிநீர்

வினா எண் 8860—திரு. க. இராஜேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தா.பழூர் ஒன்றியத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், தா.பழூர் மற்றும் தா. பழூர் ஒன்றியத்தைச் சார்ந்த 212 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் அக்டோபர் 2005-ல் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

15—

குழாய் இணைப்பு

வினா எண் 8930—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் ஒன்றியம், மணியங்காளிபட்டி புது காலனியில் கட்டப்பட்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குக் குழாய் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மோகனூர் ஒன்றியம், பேட்டபாளையம் ஊராட்சி, மணியங்காளிபட்டி புது காலனியில் கட்டப்பட்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு உள்ளாட்சி அமைப்பின் மூலம் குழாய் இணைப்புப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

16—

தரம் உயர்த்தல்

வினா எண் 11830—திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதியிலுள்ள மறைமலை நகர் மூன்றாம் நிலை நகராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மறைமலை நகர் நகராட்சி உட்பட மூன்றாம் நிலை நகராட்சிகளை இரண்டாம் நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்துவதற்கு அனைத்து மூன்றாம் நிலை நகராட்சிகளின் நகர்மன்றத் தீர்மானங்கள் பெறப்பட்டவுடன், அவற்றினை இரண்டாம் நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

17—

நியாய விலைக் கடை

வினா எண் 6009—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஒன்றியம், வடகரையாத்தூர் கிராமம் மூலக்கடை என்ற இடத்திலுள்ள நியாய விலைக் கடை 5 ஆண்டுகளாகத் திறக்கப்படாமல் உள்ளது என்பது தங்களுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரமத்தி வேலூர் வட்டத்தில், வடகரையாத்தூர் கிராமம், ஜேடர்பாளையம் அருகிலுள்ள மூலக்கடை என்ற இடத்திலுள்ள கட்டடம், புதுப்பாளையம், கரப்பாளையம் மற்றும் தொட்டிபாளையம் ஆகிய மூன்று கிராம பொது மக்களால் சேர்ந்து கட்டடப்பட்டதாகும். இம்மக்கள் அனைவரும் அருகிலுள்ள ஜேடர்பாளையம் என்ற நியாய விலைக் கடையிலேயே அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். மூலக்கடை என்ற இடத்தில் நியாய விலைக் கடை திறப்பதற்கு எவ்வித உத்தரவும் வழங்கப்படவில்லை. மேலும், மேற்படி இடத்தில் நியாய விலைக் கடை அமைப்பது குறித்து மனு ஏதும் அரசுக்கு வரப்பெறவில்லை. எனவே, மூலக்கடை என்ற இடத்திலுள்ள நியாய விலைக் கடை 5 ஆண்டுகளாகத் திறக்கப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட தகவல் சரியானது அல்ல.

18—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 6079—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், வகுரணி பஞ்சாயத்து முத்தையன்பட்டி, செல்லம்பட்டி யூனியன், ஆரியப்பட்டி பஞ்சாயத்து ராமநாதபுரம், வேப்பநூத்து பஞ்சாயத்து கூழ்நாயக்கன்பட்டி, பாறைப்பட்டி, நடுப்பட்டி, தும்மக்குண்டு பஞ்சாயத்து பிச்சம்பட்டி ஆகிய பகுதிகளுக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், வகுரணி பஞ்சாயத்து முத்தையன்பட்டி, செல்லம்பட்டி யூனியன், ஆரியப்பட்டி பஞ்சாயத்து ராமநாதபுரம், வேப்பநூத்து பஞ்சாயத்து கூழ்நாயக்கன்பட்டி, பாறைப்பட்டி மற்றும் நடுப்பட்டி ஆகிய கிராமங்களில் 150 குடும்ப அட்டைகளுக்கும் குறைவாக குடும்ப அட்டைகள் இருப்பதாலும், தாய்க் கடைக்கும் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் இடத்திற்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கி.மீ.க்குள் இருப்பதாலும், தற்போது நடைமுறையிலுள்ள அரசாணையில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி மேற்குறிப்பிட்ட கிராமங்களில் பகுதிநேரக் கடை திறக்க சாத்தியக் கூறுகள் இல்லை. தும்மக்குண்டு பஞ்சாயத்து பிச்சப்பட்டி கிராமத்தில் 98 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இக்குடும்ப அட்டைதாரர்கள், 2.00 கி.மீ தூரத்தில் உள்ள தும்மக்குண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் தும்மக்குண்டு-2 என்ற நியாய விலைக் கடையில், அவர்களுக்கான பொருட்களைப் பெற்று வருகின்றனர். இக்கிராமத்தில் 150-க்கும் குறைவான குடும்ப அட்டைகளே உள்ளன. மேலும், இக்கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு ஏதுவாக பொதுமக்கள் எவரும் இலவசமாகக் கட்டடம் ஏற்படுத்திக் கொடுக்க முன்வராததாலும் அங்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

2008 நவம்பர் 11]

19—

சம்பள உயர்வு

வினா எண் 8023—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொது விநியோகக் கடையில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் செயல்படும் நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்களின் ஊதியத்தை உயர்த்தி அரசால் அரசாணை (நிலை) எண் 289, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 28-9-2007-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அரசு ஆணை (நிலை) எண் 75, நாள் 29-4-2008-ல் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இயங்கும் நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் பணி வரன் முறைப்படுத்தப்பட்ட விற்பனையாளர்கள்/கட்டுநர்களுக்கு பொருத்துப் பட்டியலின்படி (Fitment table) திருத்திய ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டும், மேற்படி திருத்திய ஊதிய விகிதத்தில் வருடாந்திர ஊதிய உயர்வு அளிக்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

20—

நியாய விலைக் கடைகள்

வினா எண் 17762—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் தகுதியுள்ள ஊர்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1-1-2006 முதல் இது நாள் வரை மேட்டூர் தொகுதியில் கீழ்க்கண்ட விவரப்படி பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு செயல்படுகின்றன:

[2008 நவம்பர் 11]

தாய் நியாய விலைக் கடையின் பெயர்	பகுதிநேர நியாய விலைக் கடையின் பெயர்	பகுதிநேர நியாய விலைக் கடை செயல்படத் துவங்கிய நாள்
கரிக்காபட்டி	பெருமாள் வளவு	16-3-2006
தங்கமாபுரி பட்டினம்-2	சின்னக்காவூர்	6-3-2006
தோரமங்கலம்	பொடையன் தெரு	14-1-2007
பெரியசோரகை தாசகாபட்டி	பெருமாகவுண்டனூர்	27-6-2007
வீரனூர் (பகுதிநேரக் கடை)	புதுவேலி மங்கலம்	15-1-2008
பூரப்பள்ளி நரியம்பட்டி குப்பம்பட்டி	சஞ்சீவியூர்	5-2-2008

மேலும், தகுதியுள்ள இடங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

21—

பகுதிநேர நியாயவிலைக் கடை

வினா எண் 18313—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், திடியன் ஊராட்சி, அம்பட்டையன்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், திடியன் ஊராட்சி, அம்பட்டையன்பட்டி கிராமத்தில் குடும்ப அட்டைகள், திடியன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் திடியன் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் அம்பட்டையன்பட்டி கிராமத்தில் பகுதிநேர கடை ஏதும் செயல்படாததால் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

22—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 20381—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சி, வீரனூர் நியாய விலைக் கடையைப் பிரித்து வேல்மங்கலத்திற்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சி, வேல்மங்கலத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்பட்டு 15-1-2008 முதல் செயல்பட்டு வருகிறது.

23—

முழுநேர நியாய விலைக் கடை

வினா எண் 22031—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, தாத்தியம்பட்டி ஊராட்சி, சின்னநடுப்பட்டி நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாத்தியம்பட்டி தொழில் வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் இயங்கும் சின்னநடுப்பட்டி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பகுதிநேரக் கடை 373 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. தற்போதைய அரசாணைப்படி கிராமப்புறத்தில் உள்ள நியாய விலைக் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டிருப்பின் அக்கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றலாம். எனவே, சின்னநடுப்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடையில் தற்போது 373 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் சின்னநடுப்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றிட சாத்தியக் கூறுகள் இல்லை.

24—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 31212—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், ஏரிகுப்பம், கல்குப்பம் ஊராட்சி, திரிசூர் ஊராட்சி, பேட்டை கிராமம், வெண்மணி ஊராட்சி, எடப்பிறை ஊராட்சி, மதுரா, சோமந்தப்புத்தூர் ஆகிய இடங்களில் புதிய நியாய விலைக் கடை அமைத்து கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கல்குப்பம் ஊராட்சியில் ஏரிக்குப்பம் மற்றும் திரிசூர் நியாய விலைக் கடைகளும், பேட்டை கிராமம் வெண்மணி ஊராட்சியில் வெண்மலை மற்றும் எடப்பிறை ஊராட்சியில் சோமந்தப்புத்தூர் நியாய விலைக் கடைகளும் இயங்கி வருகின்றன. மேற்படி நான்கு கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு 2007-2008 ஆம் ஆண்டுக்கு நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே, அரசு கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கும் பட்சத்தில் மேற்படி நான்கு கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2008 நவம்பர் 11]

25—

சொந்தக் கட்டடம்

வினா எண் 41773—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, அதியமான் கோட்டை ஊராட்சி, கோடியூர் கிராம நியாய விலைக் கடைக்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, அதியமான் கோட்டை ஊராட்சி, கோடியூர் கிராமத்தில் 127 குடும்ப அட்டைகளுடன் பகுதிநேர நியாய விலைக் கடை அவ்வூர் கிராம மக்களின் தனியார் கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. மேலும், கோடியூர் பகுதிநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அடிமனை ஏதுமில்லை என்பதால் அவ்வூரில் உள்ள நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட இயலாது.

26—

முழுநேர நியாய விலைக் கடை

வினா எண் 44165—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, தும்பிப்பாடி ஊராட்சி சந்தை தடம் பகுதியில் முழுநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தும்பிப்பாடி ஊராட்சி, சந்தை தடம் பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் ஆத்துக்காடு நியாய விலைக் கடையில் பொருட்களைப் பெற்று வருகின்றனர்.

இவ்வங்காடியில் 781 குடும்ப அட்டைகள் உள்ளன. தும்பிப்பாடி ஊராட்சி சந்தை தடம் பகுதி மேற்படி அங்காடியில் இருந்து அரை கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்துள்ளது. மேலும், அப்பகுதியில் எம்.பி.145 தும்பிப்பாடி என்ற பகுதி நேரக் கடை 351 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகின்ற நிலையில் சந்தை தடம் பகுதிக்கு தனியாக முழுநேர நியாய விலை அங்காடியோ அல்லது பகுதிநேர நியாய விலை அங்காடியோ அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

27—

ஏற்றுமதி

வினா எண் 7042—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயம் மற்றும் தோட்டக்கலை பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளாண் மற்றும் தோட்டக்கலை சார்ந்த விளை பொருட்களை சர்வதேச சந்தைக்குக் கொண்டு செல்ல ஏதுவாக, உற்பத்தி முதல் விற்பனை வரையிலான அனைத்து நடவடிக்கைகளும் உள்ளடக்கிய வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களை உள்ளடக்கி ஒசூரில் கொய் மலர்களுக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலமும், நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கென ஏற்றுமதி மண்டலமும் மற்றும் தேனி மாவட்டத்தில் மாம்பழத்திற்கென ஏற்றுமதி மண்டலமும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கென ஏற்றுமதி மண்டலம் அமைத்திடுவது தொடர்பான பணிகள் தொடங்கப்பட்டு உள்கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2008 நவம்பர் 11]

28—

சிமெண்ட் களம் அமைத்தல்

வினா எண் 18555—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதியில் விவசாய விளை பொருட்கள் உற்பத்தி மேம்பாட்டிற்காக ஊர்கள்தோறும் சிமெண்ட் களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் 50 கிராமங்களில் உலர்களம் அமைக்கப்பட்டு நன்முறையில் விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 20 கிராமங்களில் உலர்களம் அமைப்பதற்குத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இடத்தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இடத்தேர்வுக்குப்பின் நடப்பு நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் உலர்களம் கட்டப்படும்.

29—

கருத்தரங்குகள் நடத்துதல்

வினா எண் 49707—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள விவசாயிகளுக்கு காட்டாமணக்கு சாகுபடி பற்றிய கருத்தரங்கு மற்றும் வயல் விளக்கக் கூட்டமும் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2008 நவம்பர் 11

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டாமணக்கு சாகுபடி தொடர்பாக விவசாயிகளுக்கு பயிற்சியும் செயல் விளக்கமும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் நடத்தப்பட உள்ளது. இதற்கான அரசின் நிதி ஒப்பளிக்கப்பட்டு பயிற்சி இந்த நிதியாண்டில் மூன்று மற்றும் நான்காம் காலாண்டில் நடத்தப்பட உள்ளது. மேற்படி பயிற்சியால் வால்பாறை தொகுதி விவசாயிகளும் பங்கேற்று பயன்பெறலாம்.

30—

கூடுதல் மாணவர் சேர்க்கை

வினா எண் 15361—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் கூடுதலாக மாணவர்களைச் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) பாரதியார் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஒவ்வொரு பட்ட வகுப்பிற்கும் ஒதுக்கப்பட்ட இடங்கள் தவிர ஒவ்வொரு வருடமும் 20 சதவீத இடங்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், நடப்புக் கல்வியாண்டில் கிராமப்புறங்கள் மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகத்துக்கு உட்பட்ட கல்லூரிகளில் அனைத்துப் பாடப்பிரிவுகளிலும் 10 சதவீத இடங்களை அதிகரித்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கூடுதலாக சிறப்பு ஒதுக்கீட்டின்கீழ் 5 சதவீத இடங்களை ஏழை மாணவர்கள் சேர்க்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

2008 நவம்பர் 11]

31—

பேருந்து வசதி

வினா எண் 18328—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, திருவண்ணாமலை-சென்னைக்கு இயக்கப்படும் அரசுப் பேருந்துகளை அவலூர்பேட்டை-மேல்மலையனூர் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு பேருந்து தடம் எண் 208M திருவண்ணாமலை-சென்னை (வழி) மேல்மலையனூர் என இயக்கப்பட்டு வருகின்றது. மேலும், மேல்மலையனூரிலிருந்து சென்னைக்கு திண்டிவனம் வழியாக 4 பேருந்துகள் மூலம் 8 நடைகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. கோரிக்கையின்படி திருவண்ணாமலை-சென்னை செல்லும் பேருந்துகளை அவலூர்பேட்டையில் இருந்து மேல்மலையனூர் வழியாக இயக்கினால் சுற்று வழித்தடம் என்பதால் நேரடியாகப் பயணம் செய்பவர்களுக்கு கூடுதல் நேரம் ஏற்படுவதோடு கூடுதல் கட்டணம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும். ஆதலால் நேரடி பயணிகள் பாதிக்கப்படுவார்கள். ஏற்கெனவே, மேல்மலையனூரில் இருந்து சென்னைக்கு போதிய போக்குவரத்து வசதி உள்ளதால் கோரிக்கையின்படி திருவண்ணாமலை-சென்னை பேருந்துகளை மேல்மலையனூர் வழியாக இயக்க வேண்டிய அவசியமில்லை.

32—

பேருந்து வசதி

வினா எண் 18329—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, பரதன்தாங்கல்-திருவண்ணாமலை வரை இயங்கிய தடம் எண் 25 பேருந்தை மீண்டும் இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பரதன்தாங்கல்-திருவண்ணாமலை தடத்தில் 78 அரசு பேருந்துகள் தினசரி 250 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன; 17 தனியார் பேருந்துகள் 70 நடைகள் இயக்கப்படுகின்றன. திருவண்ணாமலையிலிருந்து நல்லான்பிள்ளைபெற்றாள் (வழி) கீழ்பென்னாத்தூர் ஒரு நகரப் பேருந்து தினசரி 12 நடைகளும், திருவண்ணாமலை-அவலூர்பேட்டை (வழி) கீழ் பென்னாத்தூர் ஒரு நகரப் பேருந்து தினசரி 12 நடைகளும், தடம் டி 16 திருவண்ணாமலை-மாதப்பூண்டி தினசரி 4 நடைகளும், தடம் எண் டி18 (திருவண்ணாமலை-ராயம்பேட்டை) தினசரி 4 நடைகளும், திருவண்ணாமலை-கீழ்பென்னாத்தூர் 6 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே இத்தடத்தில் போதிய நகரப் பேருந்துகள் இயக்கப்படுவதாலும், அரசு மற்றும் தனியார் பேருந்துகள் 5 நிமிட இடைவெளியில் இயக்கப்படுவதாலும் மீண்டும் தடம் எண் டி 25-ஐ இயக்க சாத்தியமில்லை.

33—

நேரக் காப்பாளர் அலுவலகம்

வினா எண் 22373—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் பேருந்து நிலையத்தில் நேரக் காப்பாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றத்திலிருந்து விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகம் எந்தப் பேருந்தையும் இயக்குவதில்லை. அனைத்துப் பேருந்துகளும் செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் வழியாக கல்பாக்கம், மாமல்லபுரம் ஆகிய இடங்களுக்கு இயக்கப்படுகின்றன. நேரக்காப்பாளர் அலுவலகம் அமைத்து பேருந்துகளைக் கண்காணிக்கும் அளவுக்கு திருக்கழுக்குன்றத்திலிருந்து பேருந்துகள் இயக்கப்படுவதில்லை. எனவே செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றத்தில் நேரக் காப்பாளர் அலுவலகம் அமைக்கும் திட்டம் விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகத்திடம் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

34—

நகரப் பேருந்து

வினா எண் 30068—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஒன்றியம் அல்லது போளூர் பணிமனையிலிருந்து எலத்தூர் வரையும், ஆரணியிலிருந்து போளூர், ஆதமங்கலம், வீரளூர், கீழப்பாவூர், கீழக்குப்பம், புதுப்பாளையம் (வழி) செங்கம் வரையும் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள எலத்தூர் கிராமம், போளூர்-செங்கம் சாலையிலிருந்து 1.0 கி.மீ. தூரத்தில் உள்ளது. போளூரிலிருந்து செங்கத்திற்கு 7 அரசு பேருந்துகள் மூலம் 26 நடைகளும் 8 தனியார் பேருந்துகள் மூலம் 14 நடைகளும் இயக்கப்படுகின்றன. எலத்தூர் கூட்டுச்சாலை வழியாக போளூரிலிருந்து செங்கத்திற்கு போதிய பேருந்துகள் இயக்கப்படுவதால் பிரதான சாலையில் இருந்து 1.0 கி.மீ. தூரத்தில் மட்டும் உள்ள எலத்தூருக்கு போளூரிலிருந்து அல்லது திருவண்ணாமலையிலிருந்து நகரப் பேருந்து இயக்க சாத்தியமில்லை. ஆரணி-செங்கம் (வழி) போளூர், ஆதமங்கலம், வீரளூர், கீழப்பாவூர், கீழக்குப்பம், புதுப்பாளையம் தடத்தின் நீளம் 85 கி.மீ. ஆகும். தடத்தின் நீளம் நகரப் பேருந்து இயக்க அரசால் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச தூரமான 35 கி.மீ.க்கு மேல் வருவதால் நகரப் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

35—

நகரப் பேருந்து

வினா எண் 33711—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 11

(அ) திருவெண்காடிலிருந்து மங்கைமடம், நாங்கூர், அண்ணன்கோயில், செம்புதனியிருப்பு கீழையூர் வழியாக மயிலாடுதுறைக்கு நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவெண்காடு-மயிலாடுதுறை (வழி) மங்கைமடம், நாங்கூர், அண்ணன்கோயில், செம்புதனியிருப்பு, கீழையூர், கஞ்சாநகரம் தடத்தின் நீளம் 30 கி.மீ. ஆகும். கோரிக்கை தடத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் பகுதி / பகுதியாக கீழ்க்கண்டவாறு பேருந்து வசதி உள்ளது:

தடம்	இயக்கப்படும் நடைகள் விவரம்		
	கழகம்	தனியார்	கூடுதல்
மங்கைமடம், திருவெண்காடு—மயிலாடுதுறை (வழி) மணிக்கிராமம், மேலையூர், கிடாரங்கொண்டான், கருவிழுந்தநாதபுரம், கஞ்சாநகரம். (தடம் எண்.A4A)	6	—	6
திருவெண்காடு—மயிலாடுதுறை (வழி) மணிக்கிராமம், மேலையூர், கருவிழுந்தநாதபுரம், கிடாரங்கொண்டான், கஞ்சாநகரம் (இரு தனியார் நகர் பேருந்துகள்) (தடம் எண்.12 மற்றும் 28)	—	—	—
சீர்காழி—பூம்புகார் (வழி) நாங்கூர், மங்கைமடம், திருவெண்காடு, மேலையூர் (தடம் எண்.A5)	16	—	16
சீர்காழி—மயிலாடுதுறை (வழி) அண்ணன்கோவில், செம்புதனியிருப்பு, கீழையூர், கஞ்சாநகரம் (தடம் எண். 384 (718A)	12	—	12

கோரிக்கை தடம் புதிய வழித்தடமும் மற்றும் சுற்று வழித்தடமும் ஆகும். கோரிக்கை தடத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் மேற்குறிப்பிட்டவாறு பகுதி/பகுதியாகப் பேருந்து வசதி உள்ளமையாலும் சுற்று வழித்தடமாக உள்ளமையாலும் பேருந்து இயக்கினாலும் போதிய மக்கள் பயன்பாடு அமைந்திட வாய்ப்பில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

36—

புதிய பேருந்து வசதி

வினா எண் 33870—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலையிலிருந்து இரும்பூதிப்பட்டி, பஞ்சப்பட்டி, தரகம்பட்டி, கடவூர் வழியாக மதுரை வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் உள்ள குளித்தலை-மதுரை (வழி) இரும்பூதிப்பட்டி, பஞ்சப்பட்டி, தரகம்பட்டி வழித்தட நீளம் 162.3 கி.மீ. ஆகும். இவ்வழித்தடம் குளித்தலையிலிருந்து மதுரை செல்ல ஒரு சுற்று வழித்தடம் ஆகும். எனவே, இவ்வழித்தடத்தில் நேரடி பயணிகள் பயணம் செய்ய வாய்ப்பில்லை. மேலும், இவ்வழித்தடம் பகுதி, பகுதியாக நன்கு பேருந்து வசதி பெற்றுள்ள தடமாகும்.

37—

பேருந்து வசதி

வினா எண் 35010—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், செம்பனார் கோவிலிலிருந்து பரசலூர், இளையாளூர், வடகரை, மன்னம்பந்தல் வழியாக மயிலாடுதுறைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செம்பனார்கோவில்-மயிலாடுதுறை (வழி) பரசலூர், இளையாளூர், வடகரை, மன்னம்பந்தல், தருமபுரம் தடத்தின் நீளம் 16 கி.மீ. ஆகும். கோரிக்கை தடத்தில் வடகரையிலிருந்து இளையாளூர் செல்லும் சாலையில் இரு இடங்களில் உள்ள வளைவில் பேருந்து சென்று திரும்பிட இயலாத நிலையும், எதிரே வாகனம் வந்தால் பேருந்து மாறிச் செல்ல இயலாத அளவிற்கு போதிய அகலம் இன்றியும் அமைந்துள்ளது. வடகரை - கிடாரங்கொண்டான் (வழி) இளையாளூர், பரசலூர், செம்பனார்கோவில் தடத்தில் தனியார் மினி பேருந்து ஒன்று இயக்கப்பட்டு வருகிறது. வடகரை - மயிலாடுதுறை (வழி) குளிச்சாறு, மன்னம்பந்தல், தருமபுரம் தடத்தில் மயிலாடுதுறை நகரப் பேருந்து தடம் எண் A4 மூலம் 22 நடைகளும், மயிலாடுதுறை - அரங்கக்குடி 12 நடைகளும் என இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மேற்குறிப்பிட்டவாறு தற்போது சாலை அமைந்துள்ள நிலையில் கோரிக்கை தடத்தில் பேருந்து இயக்கிட வழிவகை இல்லை.

38—

பேருந்து வசதி

வினா எண் 43521—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு-சிங்கப்பெருமாள் கோவில்-ஒரகடம்-வாலாஜாபாத் வழியாக காஞ்சிபுரத்திற்கு பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு - சிங்கப்பெருமாள் கோவில் - ஒரகடம் - வாலாஜாபாத் - காஞ்சிபுரம் தடத்தின் நீளம் 55.0 கி.மீ. ஆகும். இது ஒரு சுற்றுத் தடமாகும். இத்தடம் பகுதி வாரியாக நன்கு போக்குவரத்து வசதி பெற்றுள்ளது. செங்கல்பட்டிலிருந்து வாலாஜாபாத் வழியாக நேரிடையாக செல்லும் பயணிகள் இத்தடத்தினை விரும்ப மாட்டார்கள். எனவே, செங்கல்பட்டு-சிங்கப்பெருமாள் கோவில் - ஒரகடம் - வாலாஜாபாத் - காஞ்சிபுரம் தடத்தில் பேருந்துகளை இயக்கும் திட்டம் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

39—

பேருந்து வசதி

வினா எண் 43526—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு - ஒரகடம் - ஸ்ரீபெரும்புதூர் - திருவள்ளூர் வழியாக திருப்பதிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு - ஒரகடம் - ஸ்ரீபெரும்புதூர் - திருவள்ளூர் - திருப்பதி தடத்தின் நீளம் 142.0 கி.மீ. ஆகும். இது ஆந்திர மாநிலத்தில் இயக்கப்படக்கூடிய அண்டை மாநிலத் தடமாகும். ஆந்திர மாநிலத்துடன் புதிய தடங்கள் இயக்குவதற்கு ஒப்பந்தம் ஏற்படும்பொழுது இத்தடமும் அதில் சேர்க்கப்பட்டு ஒப்பந்தம் ஏற்பட்டபின் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

40—

பேருந்து வசதி

வினா எண் 43527—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்பாக்கத்திலிருந்து - திருக்கழுக்குன்றம் - செங்கல்பட்டு - சிங்கப்பெருமாள் கோவில் - ஒரகடம் வழியாக ஸ்ரீபெரும்புதூருக்கு பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இத்தடத்தில் கல்பாக்கத்திலிருந்து செங்கல்பட்டு வரையிலான 34.0 கி.மீ. தூரத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் மண்டலம் மூலமாக தினசரி 121 நடைகளை இயக்குகிறது. செங்கல்பட்டிலிருந்து ஸ்ரீபெரும்புதூர் வரையிலான 35.0 கி.மீ. தூரத்திற்கு

காஞ்சிபுரம் மண்டலம் மூலமாக போக்குவரத்துக் கழகம் தினசரி 58 நடைகளை இயக்குகிறது. இத்தடத்தில் நேரிடையாக பயணம் செய்வோர் குறைவு. கல்பாக்கத்திலிருந்து ஸ்ரீபெரும்புதூர் செல்பவர்களும், ஸ்ரீபெரும்புதூரிலிருந்து கல்பாக்கம் செல்பவர்களும் செங்கல்பட்டு சென்று அங்கிருந்து உடனடியாகப் பயணம் செய்கின்றனர்.

41—

கூடுதல் பேருந்து

வினா எண் 43529—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு - கூணன்பட்டரை - சோகண்டி - புல்லேரி - திருக்கழுக்குன்றம் வரையும், செங்கல்பட்டு - திருமணி - மோசிவாக்கம் - சோகண்டி வழி திருக்கழுக்குன்றத்திற்கும் கூடுதலாகப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்பொழுது நகரத் தடம் எண் டி.27-ன் மூலம் செங்கல்பட்டு - கூணன்பட்டரை - சோகண்டி - புல்லேரி - திருக்கழுக்குன்றம் தடத்தில் 2 நடைகளும், செங்கல்பட்டு - திருமணி - மோசிவாக்கம் - சோகண்டி - திருக்கழுக்குன்றம் தடத்தில் 2 நடைகளும் இயக்கப்படுகின்றன. இதில் மோசிவாக்கம் மாணவ, மாணவியர் பயன் பெறும் வகையில் காலையும், மாலையும் இயக்கப்படுகிறது. இத்தடத்தின் 2 வழிகளின் சாலைகளும் குறுகிய சாலையாகவும் சேதமடைந்தும் உள்ளன. இருப்பினும் மாணவ மாணவியர்கள் நலனுக்காகத் தொடர்ந்து இயக்கப்படுகிறது. சாலை சீர் செய்யப்பட்டதும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கூடுதல் நடைகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

42—

புதிய பேருந்து

வினா எண் 43883—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) தாம்பரத்திலிருந்து மணப்பாக்கம் — கன்னிக்கோவிலுக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம்-மணப்பாக்கம்-கன்னிக்கோவில் தடத்தின் நீளம் 41.0 கி.மீ. ஆகும். மணப்பாக்கம் - கன்னிக்கோவில், செங்கல்பட்டிலிருந்து [illegible].0-வது கிலோ மீட்டரில் அமைந்துள்ளது. செங்கல்பட்டிலிருந்து ஓமலூர் வழியாக மணப்பாக்கம் கன்னிக் கோவிலுக்கு விழுப்புரம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் மண்டலத்தின் நகரத் தடங்கள் மூலம் தினசரி 12 நடைகள் இயக்கப்படுகின்றன. தாம்பரத்திலிருந்து செங்கல்பட்டிற்கு 5 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி உள்ளது. சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும், ஆடி மாதத்திலும் மணப்பாக்கத்திலுள்ள கோவிலுக்கு வருவோர் வசதிக்காக சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மணப்பாக்கம் கன்னிக்கோவிலுக்கு இப்பொழுது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதெனக் கருதப்படுகிறது.

43—

கூடுதல் பேருந்து

வினா எண் 44619—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், காளையார்கோவிலிலிருந்து மதுரை, சிவகங்கை, தொண்டி, மானாமதுரை, காரைக்குடி, பரமக்குடி போன்ற இடங்களுக்குக் கூடுதலாகப் பேருந்து இயக்க ஆரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது காளையார்கோவிலிலிருந்து மதுரை, சிவகங்கை, தொண்டி, மானாமதுரை, காரைக்குடி, பரமக்குடி ஆகிய

இடங்களுக்கு ஒவ்வொரு 10 நிமிட இடைவெளிகளில் அரசு மற்றும் தனியார் பேருந்து வசதிகள் போதுமான அளவில் உள்ளன.

44—

பேருந்து வசதி

வினா எண் 47930—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சிவகங்கையிலிருந்து வி. புதுக்குளம் வழியாக திருப்பாச்சேத்தி வரை செல்லும் 3-ம் நம்பர் நகரப் பேருந்தை இரண்டு முறை வி. புதுக்குளம் வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சிவகங்கையிலிருந்து வி.புதுக்குளம் வழியாக திருப்பாச்சேத்தி வரை இயக்கப்படும் பேருந்து தடம் எண் 3 தற்போது இரண்டு முறை வி. புதுக்குளம் தொடுதல் செய்து இயக்கப்பட்டு வருகிறது.

45—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நகரப் பேருந்து

வினா எண் 47931—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சிவகங்கையிலிருந்து வி. புதுக்குளம் வழியாக விளத்தூர் வரை செல்லும் 1-ம் நம்பர் நகரப் பேருந்தை வி. புதுக்குளம் ஊருக்குள் காலை 7.30 மணிக்கும், மாலை 7.30 மணிக்கும் வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கையிலிருந்து வி. புதுக்குளம் வழியாக விளத்தூர் வரை இயக்கப்படும் நகரப் பேருந்து தடம் எண் 1 பல்முனை வழித்தடத்தில் இயக்கப்படுவதாலும், பள்ளி செல்லும் குழந்தைகளின் வசதிக்காக இயக்கப்பட்டு வருவதாலும், காலை, மாலையில் வி. புதுக்குளம் ஊருக்குள் சென்று வரும் பட்சத்தில் காலநேரம் அதிகம் தேவைப்படும். எனவே, மேற்படி தடப் பேருந்தில் பள்ளி செல்லும் குழந்தைகள் சரியான நேரத்திற்கு பள்ளி செல்ல முடியாமல் பாதிக்கப்படுவர். எனவே, தற்போது இயங்கும் நேரத்தை மாற்றி இயக்கவோ, வி. புதுக்குளம் தொடுதல் செய்து இயக்கவோ, இயலாத நிலை உள்ளது. மேலும், புதிய வழித்தடம் இயக்கும்போது தேவையின் அடிப்படையில் மேற்படி கோரிக்கைக்கு முன்னுரிமை அளித்து பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

46—

படுக்கை வசதி

வினா எண் 9818—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வீரப்பெருமாநல்லூர் அரசு சுகாதார மருத்துவமனையில் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற படுக்கை வசதி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் சுகாதார மாவட்டம், பண்ருட்டி தொகுதியிலுள்ள வீரப்பெருமாநல்லூரில் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இச்சுகாதார நிலையத்திற்கு மூன்று செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டு, 24 மணி நேர பிரசவ சேவை அளிக்கப்படுகிறது. இச்சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட படுக்கை வசதிகள் இரண்டு. இங்கு மாதமொன்றிற்கு நிகழும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பிரசவங்களின் எண்ணிக்கை ப். இச்சுகாதார நிலையத்தில் புற நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறவும், பிரசவங்கள் நிகழவும் தற்போது ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள படுக்கை வசதிகள் போதுமானதாக உள்ளன.

47—

குடிநீர் வசதி

வினா எண் 12382—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், சரக்குப்பிள்ளையூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* 2006-2007 ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்டம், சரக்குப்பிள்ளையூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் குடிநீர் வசதி, சுற்றுச்சுவர் பழுதுபார்ப்பு பணிகள் மற்றும் பிற (சிவில்) பழுதுபார்ப்பு பணிகளுக்காக ரூ. 1.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு பொதுப் பணித் துறையினரால் ரூ. 1.66 இலட்சம் செலவிடப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

48—

சர்க்கரை நோய் அளவைக் கண்டுபிடிக்கும் கருவி

வினா எண் 12406—திரு. ஆர். சிவானந்தம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதிக்குட்பட்ட அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் சர்க்கரையின் அளவைக் கண்டுபிடிக்கும் கருவி வாங்கி வழங்க அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஆரணி தொகுதிக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 8 ஆகும். இதில் 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. முதற்கட்டமாக சென்ற நிதியாண்டில் ஆரணி தொகுதிக்குட்பட்ட (1) எஸ்.வி. நகரம் மற்றும் (2) தச்சூர் ஆகிய இரண்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சர்க்கரை நோய் அளவைக் கண்டுபிடிக்கும் செமி ஆட்டோ அனலைசர் கருவி வழங்கப்பட்டுள்ளது. அக்கருவி வருமுன் காப்போம் திட்டத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றது. இந்த நிதியாண்டில் மேலும் 385 செமி ஆட்டோ அனலைசர் கருவிகள் தேவையின் அடிப்படையில், மற்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

49—

கண் உள் ஆடி வழங்கல்

வினா எண் 20232—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் அரசு பெரிய மருத்துவமனையின் கண் மருத்துவப் பிரிவிற்கு மடித்து உள்ளே வைக்கும் கண் உள் ஆடி (Folded lens) வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தற்போது மடித்து வைக்கப்படாத லென்ஸ் மட்டுமே பொருத்தப்பட்டு வருகிறது. எனவே, இம்மருத்துவமனையில் தற்போது மடித்து உள்ளே வைக்கும் கண் உள் ஆடி வழங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2008 நவம்பர் 11

50—

புதிய இரும்புக் கட்டில்கள்

வினா எண் 22781—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அரசு மருத்துவமனையில் அதிகமான பிரிவுகளில் நோயாளிகள் பயன்படுத்தும் இரும்புக் கட்டில்கள் பழுதுபட்டுள்ளதால் புதிய இரும்புக் கட்டில்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் உள்ள அனைத்து வார்டுகளிலும் நோயாளிகள் பயன்படுத்தும் இரும்புக் கட்டில்கள் அனைத்தும் நல்ல நிலையில் உள்ளன. அவ்வப்போது இரும்புக் கட்டில்களில் ஏற்படும் சிறுசிறு பழுதுகள் மற்றும் துருபிடித்தல் ஆகியவை உடனடியாகச் சரி செய்யப்பட்டு நோயாளிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், தேவைக்கேற்ப அவ்வப்போது புதிய இரும்புக் கட்டில்கள் வாங்கப்பட்டு இம்மருத்துவமனையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

51—

தேவையான கருவிகள்

வினா எண் 22822—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை அரசு மருத்துவமனையில் ஊடுகதிர்ப்படக் கருவிகள், அறுவை சிகிச்சைக்குத் தேவையான கருவிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே எக்ஸ்-ரே பிரிவு ஒன்று நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மேலும், அறுவை சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்கள் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன. போதிய கருவிகள் வழங்கப்பட்டுள்ளதால் மேற்கொண்டு அறுவை உபகரணங்கள் வழங்குவது குறித்த அவசியம் எழவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

52—

புதிய கட்டடம் கட்டுதல்

வினா எண் 25067—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, செய்யார் சுகாதாரப் பகுதி, பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் நான்கு புதிய அரசு கட்டட வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 1999-2000 ஆம் ஆண்டு புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டப்பட்டு, 2000 ஆம் ஆண்டு முதல் அக்கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. 2002-2003 ஆம் வருடத்தில் சித்த மருத்துவப் பிரிவு கட்டடமும், 2004-2005 ஆம் ஆண்டு வண்ணாந்துறை கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும், 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு அதற்கான ஊடுகதிர் அறை கட்டடம் மற்றும் 30 படுக்கைகள் அறை கொண்ட கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

30-8-2007 முதல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேற்படி கட்டடங்களில் சில பழுதுபார்ப்பு பணிகள், நோயாளிகள் நலச் சங்க நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் நல்லமுறையில் செயல்பட்டு வருவதால் மேற்கொண்டு புதிய கட்டடம் கட்டவேண்டிய அவசியம் இல்லை.

53—

சுற்றுச் சுவர் கட்டுதல்

வினா எண் 25069—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, நமத்தோடு கிராம துணை சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பெரணமல்லூர் தொகுதி, செய்யார் சுகாதார பகுதி மாவட்டம், கோலாப்பலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் நமத்தோடு துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது. துணை சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி2) துறையால் அரசாணை (நி) எண் 64, நாள் 17-5-2007-ல் வெளியிடப்பட்ட கூடுதல் வழிகாட்டு நெறிமுறைகளின்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் நிதியுதவி பெற்று சுற்றுச் சுவர் கட்டி முடிக்குமாறு செய்யார் துணை இயக்குநருக்கு (சுகாதாரப் பணிகள்) அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

54—

செவிலியர் விடுதி

வினா எண் 33138—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், சங்கரன்பந்தல் மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியர்கள் தங்க விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில், சங்கரன்பந்தல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. சங்கரன்பந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் தங்க விடுதி இல்லை.

செவிலியர் விடுதி கட்ட நிதி ஒதுக்கீடு இல்லை. 3 செவிலியர் பணியிடங்கள் 2 துணை செவிலியர் பணியிடங்கள் உள்ளன. செவிலியர் விடுதி கட்ட போதுமான இடவசதி உள்ளது. செவிலியர் விடுதி கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படும்பொழுது இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு விடுதி கட்ட தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

55—

பராமரிப்புப் பணி

வினா எண் 42895—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, தும்பிப்பாடி ஊராட்சி, சரக்குப்பிள்ளையூர் சுகாதார மருத்துவமனையில் பராமரிப்புப் பணி செய்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, தும்பிப்பாடி ஊராட்சி, சரக்குப் பிள்ளையூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தண்ணீர் வசதி, சுற்றுச் சுவர் பழுதுபார்ப்புப் பணிகள் மற்றும் பிற (சிவில்) பழுதுபார்ப்புப் பணிகளுக்காக

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2008 நவம்பர் 11

2006-2007 ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ. 170 லட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு பொதுப் பணி துறையினரால் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

56—

புதிய சுகாதார துணை மையங்கள்

வினா எண் 43725—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதியில் புதிய சுகாதார துணை மையங்கள் (Sub centres) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதியில் உள்ள அத்தி மாஞ்சேரிப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் 18 துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய சூழலில் பள்ளிப்பட்டு தொகுதியில் மேலும் புதிய துணை சுகாதார மையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

57—

அடிப்படை வசதிகள்

வினா எண் 44656—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் வட்டத்திலுள்ள துணை சுகாதார நிலையங்களில் கழிவறை வசதி, தண்ணீர் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், சைதாப்பேட்டை சுகாதார பகுதி மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டத்திலுள்ள துணை சுகாதார நிலையங்களுக்குக் கழிவறை வசதி மற்றும் தண்ணீர் வசதி செய்துதர 2008-2009 நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

58—

சுற்றுச் சுவர்

வினா எண் 44661—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் வட்டம், சதுரங்கப்பட்டினம் வட்டார சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், சைதாப்பேட்டை சுகாதார மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் சதுரங்கப்பட்டினம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் இல்லை. சுற்றுச் சுவர் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைக்கப்பெற்றவுடன் சுற்றுச் சுவர் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

59—

கட்டடம் கட்டுதல்

வினா எண் 44662—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS — சட்டமன்றப் பேரவை — வாய்மையே வெல்லும்

[2008 நவம்பர் 11

(அ) திருக்கழுக்குன்றம் வட்டம், சதுரங்கப்பட்டினம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அறுவை சிகிச்சைக்கான கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், சதுரங்கப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. சதுரங்கப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உபரியாக போதுமான நிலம் உள்ளது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை அரங்கம் கட்ட 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ. 18.36ஆம் இலட்சம் தேவைப்படும் என்று தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) தெரிவித்துள்ளதால் அதற்கான நிதி ஒதுக்கீடும், நிர்வாக ஒப்புதலும் வழங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

60—

ஏற்றுமதி

வினா எண் 7042(அ)—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை மற்றும் கோழி வளர்ப்புத் துறைகளில் ஏற்றுமதியை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தில் கால்நடைகளைத் தவிர்த்து, கோழி முட்டை மற்றும் உற்பத்திப் பொருட்கள், உறையவைத்த கோழி இறைச்சி ஆகியவற்றை நமது மாநிலத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு கோழிப் பண்ணைகளுக்கு நலச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனால், கோழி மற்றும் கோழிப் பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கு ஏதுவாக அமைகிறது.

(ஆ) எழாது

61—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 42362—திரு. அ. ராஜன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, நாகர்கோவில் 32-வது வட்டம், எம்.ஜி.ஆர். நகர் 42-வது வட்டம், முதலியார்விளை, II-வது வட்டம், பறக்கைகால்பண்டு ஆகிய பகுதிகளில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஐ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் தொகுதி, எம்ஜிஆர். நகரில் புல எண் B4/43, 4-4, 4-5-ல் ஏற்கெனவே 120 நபர்களுக்கும், முதலியார்விளையில் 23 நபர்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுவிட்டது. பறக்கைகால்பண்டு, வடிவீஸ்வரம் கிராமம் புல எண் D14/3-2-ல் உள்ள நிலம் ஆற்றுப் புறம்போக்கு என்பதால் இங்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

62—

இலவச வீட்டுமனை

வினா எண் 43709—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, அரியாம்பட்டி மாரிவளவில் ஏழை விவசாயிகளுக்கு இலவச வீட்டுமனை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, அரியாம்பட்டி என்பது புல எண் 32 விஸ்தீரணம் 0.83.5 ஹெக்டேர் நிலம் ஆகும். இது ஓடைப் புறம்போக்கு என கிராமக் கணக்குகளில் தாக்கலாகியுள்ளது என்றும், தற்போதுள்ள அரசு விதிகளின்படியும் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற வழிகாட்டுதல்படியும் நீர்நிலைப் புறம்போக்கில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

63—

படகு இல்லம்

வினா எண் 13330—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேன்கனிக்கோட்டை ஏரியில் படகு இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேன்கனிக்கோட்டை ஏரியில் படகு இல்லம் அமைப்பது சம்பந்தமாக எந்தவித செயற்குறிப்பும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

64—

அலுவலகம் சீரமைப்பு

வினா எண் 42405—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை சார் பதிவாளர் அலுவலகத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை சார் பதிவாளர் அலுவலகத்தைச் சீரமைக்கும் கருத்துரு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

65—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 47671—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஒன்றியம், மஞ்சு கொண்டப்பள்ளி ஊராட்சி, தெப்பக்குழி பசவேஸ்வரா ஆலயப் பகுதி மற்றும் கிருஷ்ணதேவராயர், திப்பு சுல்தான் போரிட்ட சையத்பாஷா மலையையும், சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வரும் சுற்றுலா பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு, அடிப்படை வசதிகள் மட்டுமே செய்து தருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஒன்றியம், மஞ்சு கொண்டப்பள்ளி ஊராட்சி, தெப்பக்குழி பசவேஸ்வரா ஆலயப் பகுதி மற்றும் கிருஷ்ணதேவராயர், திப்பு சுல்தான் போரிட்ட சையத் பாஷா மலையின் அருகில் அடிப்படை வசதிகள் செய்வது குறித்த கருத்துருக்கள் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

66—

சுற்றுலாத் தலங்கள் குறித்த வரைபடம்

வினா எண் 48485—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு இரயில் நிலையம் மற்றும் மாமல்லபுரம் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் சுற்றுலாத் தலங்கள் குறித்த வரைபடத்தினை வைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) செங்கல்பட்டு இரயில் நிலையம் மற்றும் மாமல்லபுரம் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் சுற்றுலாத் தலங்கள் குறித்த வரைபடங்கள் வைப்பதற்கு இத்துறையால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) எழவில்லை

67—

சுற்றுலாத் தலமாக அறிவித்தல்

வினா எண் 49197—திரு. டி.க. ராஜா: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், பசலிக்குட்டை முருகன் கோவில் அருகில் பூங்காக்கள் அமைத்து சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. தலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறைமூலம் செய்து வருகிறது. திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், பசலிக்குட்டை முருகன் கோவில் அருகில் பூங்காக்கள் அமைக்க கருத்துரு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

68—

மணி மண்டபம்

வினா எண் 1100—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழியில் திரைப்படப் பின்னணி பாடகர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

சீர்காழி கோவிந்தராஜன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைப்பதற்கு தற்போது நகர எல்லையில் தகுதியான புறம்போக்கு நிலம் ஏதும் கிடைக்கப் பெறாத நிலையிலும், ஏற்கெனவே கால்நடை பராமரிப்புத் துறையிலிருந்து இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட 0.44 ஏக்கர் நிலத்தில் ரூ. 92.00 இலட்சம் செலவில் தமிழிசை மூவர் மணி மண்டபம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் சூழ்நிலையிலும், மேலும் ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் தமிழிசை மூவருக்கு மணிமண்டபம் அமைப்பதற்குப் போதுமானதாக இருக்கும் என கருதப்படுவதாலும், ஏற்கெனவே இத்துறையால் பல மணிமண்டபங்கள் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப் பெரிதும் சிரமப்படும் நிலையிலும், சீர்காழி கோவிந்தராஜன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க இயலாத நிலை உள்ளது.

69—

குடும்ப அட்டைகள்

வினா எண் 9136—செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் பழைய குடும்ப அட்டைகளை ஒப்படைத்தவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் வட்டத்திற்கு 9-8-2006 முதல் புதிய குடும்ப அட்டை கோரி 23,919 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதில் 12,580 விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்தவை எனக் கண்டறியப்பட்டு புதிய குடும்ப அட்டை வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 12,436 புதிய குடும்ப அட்டைகள் சென்னை எல்காட் நிறுவனத்திடமிருந்து அச்சிடப்பெற்று பெறப்பட்டு அனைத்துக் குடும்ப அட்டைகளும் சம்மந்தப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டுவிட்டன.

70—

கொள்முதல் நிலையங்கள்

வினா எண் 31214—திரு. பா. வேல்துரை: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி பாசனத்திலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் நெல் கொள்முதல் நிலையங்கள் தொடர்ந்து இயங்க நவீன வசதிகளை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

இந்த ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் திறக்கப்பட்ட 9 கொள்முதல் நிலையங்களில், 798 மெ. டன் நெல்லும், தூத்துக்குடி மாவட்டத்தில் திறக்கப்பட்ட 5 கொள்முதல் நிலையங்களில் 292 மெ. டன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதால், கொள்முதல் நிலையங்களைத் தொடர்ந்து இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

71—

புதிய குடும்ப அட்டைகள்

வினா எண் 42006—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, மாவடப்பு பகுதி மலைவாழ் மக்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவடப்பு வனப் பகுதியில் வசிக்கும் 109 மலைவாழ் மக்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வால்பாறை வட்டம், காடம்பாறை மின்னேற்று நிலையம் அருகில் உள்ள நியாய விலைக் கடையில் (எச்பி 009) அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. மலைவாழ் மக்களுக்குப் புதிய குடும்ப அட்டை வழங்கக் கோரி விண்ணப்பம் ஏதும் வரப்பெறவில்லை. மனுக்கள் வரப்பெற்றால் தகுதி அடிப்படையில் குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

72—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 47857—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி பேரூராட்சி, மோட்டுப்பட்டி பகுதிக்கு புதிய நியாய விலை கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி பேரூராட்சியில் செயல்பட்டுவரும் மேச்சேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்பட்டுவரும் பொதியம்பட்டி நியாய விலைக்

கடையிலிருந்து மோட்டுப்பட்டி என்ற இடம் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. மோட்டுப்பட்டி பகுதிக்கு 249 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. எனவே, அரசு விதிமுறைகளின்படி மோட்டுப்பட்டி பகுதிக்குப் புதிய நியாய விலைக் கடை அமைக்க வழிவகை இல்லை.

73—

கூடுதல் மாணவர் சேர்க்கை

வினா எண் 32421—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலம் அரசு கள்ளர் மாணவர் மற்றும் பாப்பாப்பட்டி அரசு கள்ளர் மாணவ, மாணவியர் விடுதி, கள்ளபட்டி நாட்டார்மங்கலம், தும்மக்குண்டு அரசு கள்ளர் மாணவர் விடுதி, பெருமாள்பட்டி, வெள்ளமலைபட்டி அரசு கள்ளர் மாணவர் விடுதி ஆகியவற்றில் மாணவர், மாணவிகள் சேர்க்கையை 100 ஆக உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலம் அரசு கள்ளர் மாணவர் மற்றும் பாப்பாப்பட்டி அரசு கள்ளர் மாணவ, மாணவியர் விடுதி, கள்ளபட்டி நாட்டார்மங்கலம், தும்மக்குண்டு அரசு கள்ளர் மாணவர் விடுதி, பெருமாள்பட்டி, வெள்ளமலைபட்டி ஆகிய விடுதிகளில் இடவசதி மற்றும் தேவையைக் கருத்தில் கொண்டு மாணவ/மாணவியர் சேர்க்கை எண்ணிக்கையை உயர்த்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

74—

விடுதிக்குக் கூடுதல் கட்டடம்

வினா எண் 39146—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரியிலுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, தருமபுரியிலுள்ள மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி விடுதிக்கு அரசுக் கட்டடமே கட்டப்படாதநிலையில், அவ்விடுதிக்குக் கூடுதல் கட்டடம் கட்டும் வினா எழாது. எனினும், வரும் நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப இவ்விடுதிக்கு அரசுக் கட்டடம் கட்டப் பரிசிலிக்கப்படும்.

75—

கழிவுநீர்க் குழாய் சீரமைப்பு

வினா எண் 44211—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம், இராமநாதசுவாமி கோயில் மேல் வாசல் முன்புறமுள்ள கழிவுநீர்க் குழாயைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் மேல்வாசல் முன்புறமுள்ள கழிவுநீர் வாய்க்கால் இராமேஸ்வரம் நகராட்சியால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு தொடர்புடையது இல்லை என்றாலும், மேற்கண்ட கழிவுநீர் வாய்க்காலைச் சீரமைக்கும்படி இராமேஸ்வரம் நகராட்சியினை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2008 நவம்பர் 11

76—

கோயில் பராமரிப்பு

வினா எண் 44212—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் ஸ்ரீ அருள்மிகு ஆபத்தைக்காத்த அம்மன் கோயிலைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் அருள்மிகு ஆபத்தைக்காத்த அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத நல்ல நிலையில் உள்ள திருக்கோயிலாகும். எனவே, இத்திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் பராமரிக்க இயலாது.

77—

தேர் நிறுத்தக் கொட்டகை

வினா எண் 44213—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை வட்டம், மேலநெட்டூர் அருள்மிகு சொர்ணவாரீஸ்வரர் சாந்தி நாயகி அம்மன் கோவிலுக்கு தேர் நிறுத்த கொட்டகை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மேலநெட்டூர் அருள்மிகு சொர்ணவாரீஸ்வரர் சாந்தி நாயகி அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள சிவகங்கை சமஸ்தானம், தேவஸ்தான நிர்வாகத்திற்கு உட்பட்ட திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் திருத்தேர் நிறுத்தும் இடத்தில் கான்கிரீட் தளம் அமைத்து தேர்ப் பாதுகாப்பினைக் கருதி நான்கு புறமும் உபயதாரர்மூலம் தகர அடைப்புகள் அமைக்கப்பட்டு மேற்கூரை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

78—

புனித தீர்த்தங்களைப் பாதுகாத்தல்

வினா எண் 44215—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் புனித தீர்த்தத்தை அசுத்தமடையாமல் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலின் 22 புனித தீர்த்தங்களில் பக்தர்கள் நீராடுவதால் தேங்கும் கழிவு நீரை திருக்கோயில் தூய்மைப் பணியாளர்களைக்கொண்டு உடனுக்குடன் அப்புறப்படுத்தப்பட்டு, சுத்தப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இத்திருக்கோயிலின் உட்புறம் ரூ. 13 இலட்சம் மதிப்பீட்டில் 22 புனித தீர்த்தக் கிணறுகள் மாசுபடாமல் இருப்பதற்கு, மேற்கண்ட புனித தீர்த்தக் கிணறுகள் மேம்பாடு செய்தல் பணியில் தீர்த்தப் பாதைகள் மற்றும் தீர்த்தக் கிணறுகளின் சுவர்களை உயர்த்தியும், கழிவு நீர் வெளியேறும் கழிவு நீர் வாய்க்கால்களை உயர்த்திக் கட்டியும், சேதுமாதவர்

தீர்த்தம் முன்பக்க நடைபாதை, சேதுமாதவர் கோயிலைச் சுற்றி அமைந்துள்ள தீர்த்தக் கிணறுகளின் பாதைகள் மற்றும் வடக்கு இரண்டாம் பிரகாரம், கோடிதீர்த்தம் அருகிலுள்ள புதிய சாத்யாமிர்த, சர்வ மற்றும் சிவ தீர்த்தங்களைச் சுற்றியுள்ள பாதைகள் ஆகிய இடங்களில் யூரோகோன் டைல்ஸ் பதித்து புனித தீர்த்தங்கள் மாசுபடாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

79—

கோயிலைப் புதுப்பித்தல்

வினா எண் 44219—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் புதுத்தெரு பிள்ளையார் கோயிலைச் சீரமைத்துப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் புதுத்தெரு பிள்ளையார் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின் கீழ் இல்லாத ஆதி திராவிடர் மக்கள் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில் ஆகும். எனவே, எதிர்வரும் நிதி ஆண்டுகளில் ஆதி திராவிடர் பகுதி திருக்கோயில்கள் திருப்பணி நிதியுதவி திட்டத்தின்கீழ் இத்திருக்கோயில் திருப்பணிக்கு முன்னுரிமை வழங்கி புதுப்பித்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

80—

பள்ளிக்குச் சுற்றுச் சுவர்

வினா எண் 18630—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, பேரியேரிபட்டி ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, பேரியேரிபட்டி ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு மொத்தம் 435 மீட்டர் சுற்றுச் சுவர் தேவை. அதில் தற்போது 117 மீட்டர் சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது. மீதம் உள்ள 318 மீட்டர் நீளத்திற்கும் சுற்றுச் சுவர் அமைக்க நபார்டு திட்டம் பகுதி-8-ன் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

81—

இருக்கை வசதிகள்

வினா எண் 20778—திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், இலுப்பூரில் உள்ள ஆண்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு இருக்கைகள், ஆசிரியர்களுக்கு மேசை, நாற்காலிகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நபார்டு வங்கி நிதி உதவியுடன் பகுதி I முதல் 7 முடிய உள்ள திட்டங்களில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகளுக்கு மட்டும் இருக்கை வசதிகள் RIDF XII திட்டத்தின்கீழ் ஏற்படுத்தித் தரப்படுகிறது. இத்திட்டத்தில் இலுப்பூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி இடம்பெறவில்லையாதலால் இப்பள்ளிக்கு இருக்கை வசதிகள் ஏற்படுத்தித் தர தற்போது இயலவில்லை.

82—

நாடகத் தமிழ்

வினா எண் 23739—டாக்டர் க. நெடுஞ்செழியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாடகத் தமிழை பள்ளியில் பாடமாக 6 முதல் 10 ஆம் வகுப்பிற்கு சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ் பாட நூல்கள் நாடகத் தமிழையும் உள்ளடக்கியே எழுதப்படுகின்றன. நாடகத் தமிழை தனிப் பாடமாக அறிமுகப்படுத்தும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

83—

பள்ளியில் கூடுதல் வசதிகள்

வினா எண் 23880—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தி அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக பெஞ்சுகள், நாற்காலிகள், மேசைகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நபார்டு வங்கி உதவியுடன் அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் புதிதாகக் கட்டப்பட்ட வகுப்பறைகளுக்கு மேசைகள், நாற்காலிகள், பெஞ்சுகள், டெஸ்குகள் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அத்திட்டத்தின்கீழ் மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 8 (எட்டு) வகுப்பறைகளுக்கான மேசைகள், நாற்காலிகள், பெஞ்சுகள் ஆகியவற்றை டான்சி நிறுவனம் மூலம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

84—

பள்ளிக்குத் தளவாட வசதிகள்

வினா எண் 23862—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய நாற்காலிகள், மேசைகள், பெஞ்சுகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நபார்டு வங்கி உதவியுடன் அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் புதிதாகக் கட்டப்பட்ட வகுப்பறைகளுக்கு மேசைகள், நாற்காலிகள், பெஞ்சுகள், டெஸ்குகள் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அத்திட்டத்தின்கீழ் மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 12 வகுப்பறைகளுக்கான புதிய நாற்காலிகள், மேசைகள், பெஞ்சுகள் ஆகியவற்றை டான்சி நிறுவனம் மூலம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

85—

பள்ளிக்குக் கூடுதல் வசதிகள்

வினா எண் 23864—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம், வடகரை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக மேசை, நாற்காலிகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நபார்டு வங்கி உதவியுடன் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் புதிதாகக் கட்டப்பட்ட வகுப்பறைகளுக்கு மேசைகள், நாற்காலிகள், பெஞ்சுகள், டெஸ்குகள் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அத்திட்டத்தின்கீழ் திருப்புவனம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதிதாகக் கட்டப்பட்ட புதிய வகுப்பறைகளுக்குத் தேவையான மேசைகள், நாற்காலிகள், பெஞ்சுகள் மற்றும் டெஸ்குகள் ஆகியவற்றை டான்சி நிறுவனம் மூலம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

86—

சுற்றுச் சுவர் கட்டுதல்

வினா எண் 30201—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, மேலாரணி அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, மேலாரணி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 750 மீட்டர் அளவிற்கு சுற்றுச் சுவர் கட்ட நபார்டு திட்டம் 8-வது கட்டத்தின்கீழ் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் மேற்கண்ட பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

87—

பள்ளிக்குச் சுற்றுச் சுவர்

வினா எண் 30586—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11}

கபிலர்மலை அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு 482 மீட்டர் அளவிற்கு சுற்றுச் சுவர் கட்டுவது சம்பந்தமாக நபார்டு வங்கி பகுதி-8 திட்டத்தின்கீழ் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டதும் மேற்கண்ட பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

88—

பள்ளிக்குத் தளவாட வசதிகள்

வினா எண் 30656—திரு. மா. செந்தமிழன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சைதாப்பேட்டை மாநகராட்சி ஆண்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஜெயகோபால் கரோடியா பள்ளி ஆகியவற்றிற்கு மேசை, நாற்காலி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நபார்டு வங்கி நிதி உதவியுடன் பள்ளிகளுக்கு இருக்கை வசதிகள் ஏற்படுத்தித் தருதல் திட்டம் சென்னை மாவட்டம் தவிர மற்ற 29 ஊரக மாவட்டங்களுக்கு தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

89—

பள்ளிக்குத் தளவாட வசதிகள்

வினா எண் 36736—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கே.மோரூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மேசை, நாற்காலிகள் நபார்டு வங்கி மூலம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின் மூலம் ஓமலூர் தொகுதி கே. மோரூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு 18 (பதினெட்டு) வகுப்பறைகளுக்கான இருக்கை வசதிகள் ஏற்படுத்தித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

90—

இருக்கை வசதிகள்

வினா எண் 38996—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் அரசு மேல்நிலைப் பள்ளி வகுப்பறைகளில் மின் விசிறி வசதி செய்யவும், புதிய மேசை, நாறகாலி, தளவாடச் சாமான்கள் வழங்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின் மூலம் பார்த்திபனூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு 4 (நான்கு) வகுப்பறைகளுக்கான இருக்கை வசதிகள் ஏற்படுத்தித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

91—

பள்ளிக்கு தளவாட வசதிகள்

வினா எண் 39228—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சிங்கோன உயர்நிலைப் பள்ளிக்கு நீள் இருக்கைகள், சாய்வு மேசைகள் வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நபார்டு திட்டத்தின் மூலம் வால்பாறை சிங்கோன அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 5 (ஐந்து) வகுப்பறைகளுக்கான இருக்கை வசதிகள் ஏற்படுத்தித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

92—

உயர் ரக மர உற்பத்தி

வினா எண் 20448—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்ந்த ரக மர வகைகள் நாற்றுகளை உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வனத் துறையில் உயர்ந்த ரக மரவகையைச் சார்ந்த சந்தனம், ஈட்டி, தேக்கு, மஞ்சள்கடம்பு, மலைவேம்பு, சில்வர் ஓக் மற்றும் பூவரசு போன்ற மர வகைகள் 2007-2008 ஆம் ஆண்டில் வன ஆராய்ச்சி மையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

93—

மரம் வளர்ப்பு

வினா எண் 44017—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பகுதியிலுள்ள அரசு தரிசு நிலங்களில் சந்தன மரம், தேக்கு, மஞ்சள்கடம்பு, தோதகத்தி, வேங்கை போன்ற விலை உயர்ந்த மரங்களைப் பயிரிடவும், புளி, வேம்பு, போன்ற மரங்கள் வளர்க்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பகுதியிலுள்ள அரசு தரிசு நிலங்களில் தேக்கு, கடம்பு, தோதகத்தி மற்றும் வேங்கை போன்ற விலையுயர்ந்த மரங்களை வளர்க்க இயலும். ஆனால் செயற்கையாக சந்தன மரம் பயிரிட்டு வளர்க்க வாய்ப்பில்லை. புளி, வேம்பு போன்ற மரங்களை சாலையோரங்களில் வளர்ப்பதற்கு தேசிய விவசாய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மற்றும் உயரமான மரச் செடிகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

94—

சாலைப் போக்குவரத்தைச் சீரமைத்தல்

வினா எண் 13231—திருமதி ஏ. லீமா றோஸ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், திருவரம்பு குலசேகரம் (நாகக்கோடு) சாலைப் போக்குவரத்திற்கு பயனற்ற முறையில் காணப்படுவதைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், திருவரம்பு குலசேகரம் (நாகக்கோடு) சாலையானது, நாகர்கோவில் நெடுஞ்சாலை கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/0-1/6 வரையுள்ள பகுதிகளை, 2006-2007 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.30.00 இலட்சம் மதிப்பில் மேம்பாடு செய்வதற்காக 16-11-2006-ல் ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் மார்ச் 2008-ல் முடிக்கப்பட்டன. மேலும் கி.மீ. 1/6-4/1 வரை, சாலையில் ஏற்பட்டுள்ள பழுதுகளைத் தார் நொடிகள் போட்டு சீர் செய்யும் பணிகள் ரூ.3.90 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு, மார்ச் 2008-ல் முடிக்கப்பட்டுள்ளன. தற்போது இச்சாலையானது போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

95—

ஊனமுற்றோர் பள்ளி

வினா எண் 14122—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஊராட்சியில் ஊனமுற்றோர் பள்ளி அமைத்திட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் அரசால் பார்வையற்றோருக்கென 10 சிறப்புப் பள்ளிகளும், காது கேளாதோருக்கான 11 சிறப்புப் பள்ளிகளும், கை, கால் ஊனமுற்றவர்களுக்கென மதுரையில் ஒரு சிறப்புப் பள்ளியும், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கென சென்னைக்கு அருகில் தாம்பரத்தில் மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

இது தவிர சங்கங்களுக்கான பதிவுச் சட்டத்தின்கீழ் அல்லது அறநிலையங்களுக்கான, பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கு அரசு உதவி அளித்து வருகிறது. அவ்வாறு அரசு உதவி பெற்று இயங்கி வரும் பள்ளிகளின் விவரம் பின் வருமாறு:

1.	பார்வையற்றோருக்கான பள்ளிகள்	11
2.	காது கேளாதோருக்கான பள்ளிகள்	19
3.	போலியோ நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பள்ளிகள்	4
4.	மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிகள்	18
5.	தொழுநோய் குணமடைந்த குழந்தைகளுக்கான பள்ளி	1
6.	கை, கால் ஊனமுற்றவர்களுக்கான பள்ளிகள்	10

வயது வந்த மனவளர்ச்சி குன்றியோருக்கு பயிற்சி வழங்க 5 அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்களுக்கு அரசால் உதவி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் அரசு அங்கீகாரம் பெற்று சொந்தச் செலவில் அரசு உதவி பெறாமல் செயல்பட்டு வரும் பள்ளிகள் விவரம் வருமாறு:

1.	காது கேளாதோருக்கான பள்ளிகள்	36
2.	மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிகள்	72
3.	கை கால் ஊனமுற்றோருக்கான பள்ளிகள்	39

அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பள்ளிகளில் பார்வையற்றோர் பள்ளி ஒன்றும், காது கேளாதோர் பள்ளி ஒன்றும் தஞ்சாவூரில் செயல்பட்டு வருகிறது. அரசு அங்கீகாரம் பெற்று அரசு உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்ட வேளாங்கண்ணியில் காது கேளாதோருக்கான பள்ளி ஒன்றும் செயல்பட்டு வருகிறது. அரசு அங்கீகாரத்துடன் அரசு உதவி பெறாமல் மன வளர்ச்சி குன்றியோருக்கான நாகை மாவட்டத்தில் இரு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. கும்பகோணத்தில் தொழுநோய் குணமடைந்த குழந்தைகளுக்கென அரசு உதவி பெற்று செயல்பட்டு வருகிறது. ஊனமுற்ற நபர்கள் யாரேனும் நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகார் தொகுதிக்குட்பட்டவர்கள் அரசு சிறப்புப் பள்ளிகளிலோ, அரசு உதவி பெறும் பள்ளிகளிலோ சேர்ந்து பயன்பெற முன்வந்தால் அவர்களை தஞ்சாவூர் அல்லது நாகப்பட்டினம் மாவட்டங்களில் செயல்பட்டு வரும் பள்ளிகளில் சேர்த்து தங்கிப் பயில உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி செம்பனார்கோவில் ஊராட்சியில், சங்க பதிவுச் சட்டம் அல்லது அறநிலையங்களுக்கான சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, சிறப்புப் பள்ளிகள் நடத்த தனியார் தொண்டு நிறுவனங்கள் முன்வந்தால், ஊனமுற்றோருக்கான சட்டத்தின் கீழ் அங்கீகாரம் வழங்குவதோடு, சிறப்புப் பள்ளிகள் செயல்படுத்த ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அவர்களால் அரசு விதிகளின் படி அங்கீகாரமும் அரசு உதவிகளும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

96—

கறவை மாடு வழங்குதல்

வினா எண் 2073—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, வடபூதனம் கிராமத்திலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு கறவை மாடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிட மக்களுக்கு கறவை மாடுகள் வழங்கும் திட்டம் ஒவ்வோர் ஆண்டும் தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2006-2007-ல் 332 நபர்களுக்கு ரூ.28.90 இலட்சம் மானியத்தில் கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 2007-2008-ல் 124 நபர்களுக்கு 10.58 இலட்சம் மானியத்தில் கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. உடுமலைப்பேட்டை தொகுதியில் மட்டும் ஆதி திராவிடர் மக்களுக்கு 2006-2007-ல் 96 நபர்களுக்கு கறவை மாடு வழங்கிட ரூ.7.20 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2007-2008-ல் 13 நபர்களுக்கு மானியம் ரூ.0.55 இலட்சம் வரை கறவை மாடுகள் வழங்கும் திட்டத்திற்காகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

97—

மாணவர் விடுதி

வினா எண் 3430—திரு. ந. கணபதி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் ஒன்றியம், திருச்சிற்றம்பலம் கூட்டுப்பாதையில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், திருச்சிற்றம்பலத்தில் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதிக்கு ரூ.31.50 இலட்சம் செலவில் புதியதாகக் கட்டடம் கட்டப்பட்டு 15-12-2007-ல் திறக்கப்பட்டு 90 மாணவர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

98—

தடுப்புச் சுவர்

வினா எண் 4857—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுக்கம்பாளையம் கிராமத்தில் ஆதி திராவிடர் காலனி அருகில் தடுப்புச் சுவர் அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுக்கம்பாளையம் கிராமத்தில் ஆதி திராவிடர் காலனி அருகில் தடுப்புச் சுவர் அமைத்துத் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

99—

பட்டா வழங்கல்

வினா எண் 20782—திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஒன்றியம், கிள்ளுகுளவாய்பட்டியிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், குன்றாண்டார்கோவில் ஒன்றியம், கிள்ளுகுளவாய்ப்பட்டி கிராமம்,

2008 நவம்பர் 11]

புல எண்.180/3 மேய்ச்சல் தரை புறம்போக்கில் குடியிருந்து வரும் 22 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு குளத்தூர் வட்டாட்சியரால் பட்டா வழங்கப்பட்டுவிட்டது.

100—

மீன் வளர்ப்பு

வினா எண் 43618—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு அகழியில் மீன் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இதற்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) அரசுடைமையாக்கப்பட்ட செங்கல்பட்டு அகழியில் மீன் துறை ஆய்வாளர், செங்கல்பட்டு நேரடி கட்டுப்பாட்டின்கீழ் துறைமூலம் மீன்வளப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) கடந்த சில ஆண்டுகளாக செங்கல்பட்டு கொளவாய் ஏரி வெள்ளத்தில் நிரம்பி ஏரியில் உள்ள கழிவுகள் அடித்துவரப்பட்டு அகழி நிரம்பியும், செங்கல்பட்டு நகராட்சியின் கழிவுகள் நேரடியாக அகழியில் கலப்பதனாலும் மேற்படி அகழி தூர்த்துபோய் தற்சமயம் சுமார் இரண்டு அடி ஆழமே உள்ளது. அகழியில் அதிக அளவு சேர் மற்றும் கழிவுகள் இருப்பதனால் இருப்புசெய்யப்படும் மீன் குஞ்சுகளும், இயற்கையாக வளரும் மீன்களும், பிராண வாயு குறைவின் காரணமாக முழுமையாக இறந்துவிடுவதால் தற்போது மீன்வளப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனைத் தூர்வாரி சுத்தப்படுத்த ஏற்கெனவே காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியருக்கு கருத்துரு அனுப்பப்பட்டு போதிய நிதியுதவி கிடைக்காத காரணத்தால் இதனைச் சுத்தப்படுத்தும் பணிகள் செயல்படுத்தப்பட முடியாமல் போனது. இவ்வகழியின் மொத்தப் பரப்பளவு சுமார் 3.00 ஹெக்டேர் ஆகும். இவ்வகழியினை சுமார் 5 அடி ஆழப்படுத்தி சுத்தப்படுத்தினால் தொடர்ந்து மீன் துறையின் மூலம் மீன்வளப் பணிகள் மற்றும் மிதவைக் கூடுகள் மூலம் மீன் குஞ்சுகள் வளர்ப்புப் பணிகள் செம்மையாகச் செயல்படுத்திட முடியும். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2008 நவம்பர் 11

பட்டியல் 4

1—

குடிநீர் வழங்கல்

வினா எண் 30177—திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பில்லூர் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கடி மின் தடங்கல் இல்லாமல் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பில்லூர் குடிநீர்த் திட்டத்திற்கு 110/22 கி.வோ. மருதூர் துணை மின் நிலையத்திலிருந்து பில்லூர் மற்றும் வெள்ளியங்காடு குடிநீர் மின்னூட்டிகள் வழியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த இரண்டு மின் பாதைகளிலும் ஏற்படுகின்ற மின்தடங்கல்கள் உடனுக்குடன் சரிசெய்யப்பட்டு பில்லூர் குடிநீர்த் திட்டத்திற்கு சீரான மின்விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது.

2—

விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31457—திரு. வெ. கண்ணன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் பேரூராட்சி, பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதிக்கு சோடியம் விளக்குகள், சூரிய ஒளி விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூரிய ஒளி விளக்குகள் அமைக்க மத்திய அரசு வழங்கும் அரசு மானியம் போக பயனாளி பங்குத்தொகையாக தேவைப்படும் நிதியை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை வாயிலாக ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் தாரமங்கலம் பேரூராட்சி, பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதிக்கு சோடியம் விளக்குகள், சூரிய ஒளி விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3—

ஆற்றின் குறுக்கே கதவணை

வினா எண் 33831—திரு. ஆர்எம். பழனிசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடுமுடி, கருவேலம்பாளையம் அருகே காவிரி ஆற்றின் குறுக்கே கதவணை நீர்மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவிரி ஆற்றின் குறுக்கே கொடுமுடி, கருவேலம்பாளையம் அருகே கதவணை நீர் மின் நிலையம் அமைக்கும் திட்டம் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி தீர்ப்பு பெறப்பட்ட உடன் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

4—

புதிய மின் கம்பங்கள்

வினா எண் 34523—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மோசுகுடி ஊராட்சிப் பகுதியில் புதிய மின் கம்பங்களை நட அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் உள்ள மோசுகுடி ஊராட்சிக்குட்பட்ட பழுதடைந்த 9 மின் கம்பங்களும் மாற்றப்பட்டுவிட்டன.

5—

சீரான மின்சாரம்

வினா எண் 34525—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியப் பகுதி மேலச்சொரிகுளம், கீழப்பிடாவூர், கஞ்சிமடை, கல்லூரணி, மோசுகுடி மாரநாடு, தவத்தாரேந்தல், தெற்கு சந்தனூர், திருப்பாசேத்தி ஆகிய ஊராட்சிகளில் சீரான மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியப் பகுதி மேலச்சொரிகுளம் கீழப்பிடாவூர், கஞ்சிமடை, கல்லூரணி, மோசுகுடி மாரநாடு, தவத்தாரேந்தல் தெற்கு சந்தனூர், திருப்பாசேத்தி ஆகிய ஊராட்சிகளில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

6—

புதிய மின் கம்பிகள்

வினா எண் 34539—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மணலூர், தூதை, மோசுகுடி, பொட்டபாளையம் ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் புதிய மின் கம்பிகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மணலூர், தூதை, மோசுகுடி, பொட்டபாளையம் ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் ஏற்கெனவே உள்ள ஏ.சி.எஸ்.ஆர். 7/2.59 மி.மீ. மற்றும் 7/3.35 மி.மீ மின் கம்பிகள் நல்ல நிலையில் உள்ளன. எனவே, இப்பகுதிகளில் உள்ள மின் கம்பிகளை மாற்றுவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

7—

மின் வெட்டு

வினா எண் 40996—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மாங்குளம் ஊராட்சி, மாங்குளம், விளாக்குளம் பகுதியில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மாங்குளம் ஊராட்சி, மாங்குளம் மற்றும் விளாக்குளம் கிராமங்களில் தொழில்நுட்பக் காரணங்களாலும், இயற்கைச் சீற்றங்களினாலும் எதிர்பாராதவிதமாய் ஏற்படும் மின்தடைகள் மிகக் குறுகிய நேரத்தில் சரி செய்யப்பட்டு மின்சார விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

8—

மின் வெட்டு

வினா எண் 40999—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியத்தில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம் பகுதியில் தொழில்நுட்பக் காரணங்களாலும் இயற்கைச் சீற்றங்களினாலும் எதிர்பாராதவிதமாய் ஏற்படும் மின் தடைகள் மிகக் குறுகிய நேரத்தில் சரி செய்யப்பட்டு மின்சார விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

9—

சீரான மின்சாரம்

வினா எண் 41554—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, முக்கனூர் ஊராட்சி, குமாரப்பட்டி பகுதியில் சீரான மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, முக்கனூர் ஊராட்சி, குமாரப்பட்டி பகுதியில் தாழ்மின்னழுத்தக் குறைபாடு நிலவுவதால் ஏற்கெனவே உள்ள ஒரு முனை மின்பாதை மும்முனை மின்பாதையாக 0.5. கி.மீ. தூரத்திற்கு ரூ.19,635/- செலவில் மாற்றப்பட்டு, சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

10—

துணை மின் நிலையம்

வினா எண் 41596—திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) மொடக்குறிச்சி தொகுதி, பூந்துறை துணைமின் நிலையத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மொடக்குறிச்சி தொகுதி, பூந்துறையில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு 27-10-2007 அன்று இயக்கி வைக்கப்பட்டுள்ளது.

11—

சொந்தக் கட்டடம்

வினா எண் 41718—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி, இளநிலைப் பொறியாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி—I மற்றும் II ஆகிய அலுவலகங்கள் முன்பு இயங்கி வந்த பழைய கட்டடத்தில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டு தற்போது அனைத்து வசதிகளுடன் கூடிய தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதால், தற்போது முத்துநாயக்கன்பட்டி பிரிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் உத்தேசம் ஏதும் இல்லை.

12—

மின் விளக்குகள்

வினா எண் 43039—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் முதல் தொப்பூர் வரை நான்கு வழிப்பாதை இருபுறமுள்ள மின் விளக்குகளைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

சேலம் முதல் அரசுக் கல்லூரி வரை உள்ள மின் விளக்குகள் சேலம் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அரசுக் கல்லூரி முதல் தொப்பூர் நான்கு வழிப்பாதை வரை 87 குழல் விளக்குகள் மற்றும் 32 சோடியம் விளக்குகள் நல்ல நிலையில் ஒளிர்விட்டுக் கொண்டிருக்கின்றன. தற்பொழுது பழுதான தெரு மின் விளக்குகள் ஏதும் இல்லை.

13—

பணியாளர்கள் நியமனம்

வினா எண் 15788—திரு. வெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பச்சனம்பட்டி ஊராட்சியில் துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பச்சனம்பட்டி ஊராட்சியில் போதுமான துப்புரவுப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் என்பதால் பச்சனம்பட்டி ஊராட்சியில் துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

14—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 26785—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், சதுரங்கப்பட்டினம் ஊராட்சி சட்ராஸில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், சதுரங்கப்பட்டினம் ஊராட்சிக்குட்பட்ட சட்ராஸ் குடியிருப்புக்கு தற்போதுள்ள மக்கட்தொகைக்கேற்ப 1,50,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மூலம் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்புக்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்ட கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

15—

மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

வினா எண் 27873—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, போத்துராவுத்தன்பட்டி மேற்கில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போத்துராவுத்தன்பட்டி மேற்குப் பகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், போத்துராவுத்தன்பட்டி ஊராட்சி, போத்துராவுத்தன்பட்டி குடியிருப்பின் பகுதியாகும். போத்துராவுத்தன்பட்டி பிரதான குடியிருப்பில், தனி மின்விசைத் திட்டத்தின் மூலம் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, இப்பகுதி குடியிருப்புக்கும் சேர்த்

குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, ஊரக குடிநீர்த் திட்ட விதிகளின்படி, போத்துராவுத்தன்பட்டி மேற்குப் பகுதியில் மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட சாத்தியக் கூறுகள் இல்லை.

16—

பள்ளிக் கட்டடம்

வினா எண் 29276—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், பண்ணந்தூர் ஊராட்சி, பண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியிலுள்ள நான்கு கட்டடங்கள், 2007-2008 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் புனரமைப்புத் திட்டத்தின்கீழ், ரூ.1,31,900/- மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

17—

குடிநீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 29357—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, கொட்டிவாக்கத்தில் ஆதி திராவிடர் காலனி மீனவர் குப்பத்தில் குடிநீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, தாமஸ்மலை ஒன்றியம், கொட்டிவாக்கம் ஊராட்சி, கொட்டிவாக்கம் குப்பம் குடியிருப்பிற்கு உட்பட்ட ஆதி திராவிடர் காலனி மற்றும் மீனவர் குப்பத்திற்கு ஏற்கெனவே உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

18—

கழிப்பிட வசதி

வினா எண் 29352—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை பேருந்து நிலையத்தில் கழிப்பிட வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வால்பாறை நகராட்சிப் பகுதியிலுள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையின்மூலம் கழிப்பிடம் ஒன்று கட்டப்பட்டு உபயோகத்தில் உள்ளது. மேலும், மேற்படி பேருந்து நிலைய வளாகம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமானதால் அப்பகுதியில் நகராட்சி மூலம் கழிப்பிடம் கட்ட வழிவகை ஏதுமில்லை.

19—

கூடுதல் நிழற்குடை

வினா எண் 31607—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு பேருந்து நிலையத்தில் கூடுதலாக நிழற்குடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு பேருந்து நிலையத்தில் கூடுதலாக நிழற்குடை அமைக்க ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி பெற்று விரைவில் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

20—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 34477—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, மேலமையூர் ஊராட்சி, காமராஜ் நகர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், மேலமையூர் ஊராட்சி, காமராஜ் நகர் குடியிருப்புக்கு 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தற்போது போதுமான குடிநீர் வழங்கப்படுகிறது.

21—

சுற்றுச் சுவர்

வினா எண் 35457—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) ஈரோடு மாவட்டம், குண்டடம் ஒன்றியம், எல்லப்பாளையம் புதூர் ஊராட்சி, என். கவுண்டம்பாளையம் நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, குண்டடம் ஊராட்சி ஒன்றியம், எல்லப்பாளையம் புதூர் ஊராட்சி, என். கவுண்டம்பாளையம் நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு சுமார் ரூ.3.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. மேற்படி பணிக்கு நிதி ஒதுக்கீடு கோரி காங்கேயம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரிடம் பரிந்துரை கோரப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் பணியை எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

22—

தெரு விளக்குகள்

வினா எண் 38292—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஆரம்ப சுகாதார நிலையம் அருகே தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஆரம்ப சுகாதார நிலையம் முன்பு 8 தெரு விளக்குகளும், உட்புறம் 3 விளக்குகளும், ஆக மொத்தம் 11 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

23—

குடிநீர் இணைப்பு

வினா எண் 38752—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெற்கு கள்ளிகுளத்தில் செயல்பட்டு வரும் திருநெல்வேலி தெட்சண நாடார் சங்க கல்லூரிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெற்கு கள்ளிகுளத்தில் செயல்பட்டு வரும் திருநெல்வேலி தெட்சண நாடார் சங்க கல்லூரியானது தனியார் கல்லூரியாகும். தனியார் கல்லூரிகள் தங்கள் குடிநீர்த் தேவைக்குச் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிர்வாகத்திடம் விண்ணப்பிக்கவேண்டும்.

24—

கடல் நீரைக் குடிநீராக மாற்றுதல்

வினா எண் 38753—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கடற்கரைப் பகுதி கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க கடல்நீரைக் குடிநீராக மாற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளிலிருந்து 5 கி.மீ. தொலைவிற்குள் ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில்

72 கடலோர குடியிருப்புகளும், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் 41 கடலோர குடியிருப்புகளும் ஆக மொத்தம் 113 கடலோர குடியிருப்புகள் உள்ளன. இக்குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக்குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, கடல்நீரைக் குடிநீராக மாற்றிட வேண்டிய அவசியம் தற்போதைக்கு இல்லை.

25—

கிராமக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 42081—திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, சிலுக்குவார்பட்டி ஊராட்சி, பழைய சிலுக்குவார்பட்டி, பச்சைமலையான் கோட்டை ஊராட்சி, புதுக்காமன்பட்டிக்கு 54 கிராமக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை ஒன்றியத்தில் 54 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஏற்கெனவே வடிவமைக்கப்பட்ட 54 குடியிருப்புகளுக்கு மட்டுமே போதுமான அளவு குடிநீர் வழங்க வைகை ஆற்றில் நீராதாரம் உருவாக்கப்பட்டுள்ளது. கூடுதலாக இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பழைய சிலுக்குவார்பட்டி மற்றும் புதுக்காமன்பட்டி குடியிருப்புகளைச் சேர்க்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

26—

நியாய விலைக் கடை

வினா எண் 18197—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 11

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூடன்குளம், செட்டிகுளம் அணுவிஜய் குடியிருப்பு பகுதி, கோட்டை கருங்குளம் ஊராட்சி, வடிவம்மன்பட்டி கிராமம், வடக்கன்குளம் ஊராட்சி, புனித அந்தோணியார் நகர் ஆகிய பகுதிகளில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூடன்குளம், செட்டிகுளம் அணுவிஜய் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் பகுதிநேரக் கடை அமைக்கப்பட்டு 2-11-2007 முதல் செயல்பட்டு வருகிறது. மேலும், புனித அந்தோணியார் நகரிலும் 11-6-2007 முதல் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. பகுதிநேரக் கடை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வடிவம்மன்பட்டி கிராமத்திற்கும் தாய் நியாய விலைக் கடைக்கும் இடையே 0.6 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளதாலும், இலவச கட்டடம் தர ஊர் பொதுமக்கள் முன்வராததாலும் வடிவம்மன்பட்டி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

27—

கலைக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 27421—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடத்தில் கூட்டுறவுத் துறை மூலம் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) கூட்டுறவு மேலாண்மை நிலையங்களில் மாணவர்கள் சேர்க்கை மிகவும் குறைவானதாக உள்ளதால் தற்போது பல்லடத்தில் கூட்டுறவுத் துறை மூலம் கலைக் கல்லூரி அமைக்க வழிவகை இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

28—

புதிய கட்டடம்

வினா எண் 28736—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகராட்சி, பெரியநத்தம் பகுதி நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகரத்தில் செங்கல்பட்டு கூட்டுறவு பண்டகசாலை நத்தம் பகுதியில் நடத்தும் இரண்டு நியாயவிலைக் கடைகளுக்கு புதிய அரசுக் கட்டடம் கட்டித்தரக் கோரி திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு 31-10-2007-ல் முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. இதில் கூட்டுறவுத் துறையின் நடவடிக்கை நிலுவை ஏதுமில்லை. இதன் மீதான மேல் நடவடிக்கை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலரால் மேற்கொள்ளப்படும்.

29—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 31209—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஒன்றியம், அனந்தபுரம் ஊராட்சி, அர்ச்சனாபுரம் பகுதிநேர நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாக மாற்றவும், துளுவபுஷ்பகிரி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கவும், வாழியூர் ஊராட்சியின் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் வட்டம், அனந்தபுரம் ஊராட்சியில் அனந்தபுரம்-2 என்ற பகுதிநேர நியாய விலைக் கடை 195 குடும்ப

அட்டைகளுடன் இயங்கி வருகிறது. அர்ச்சனாபுரத்தைச் சேர்ந்த குடும்ப அட்டைதாரர்கள் தற்போது அனந்தபுரம்-2 பகுதிநேர நியாய விலைக் கடையில் பொருட்களைப் பெற்று வருகின்றனர். அர்ச்சனாபுரத்தில் பகுதிநேரக் கடை ஏதும் செயல்படாத நிலையில் முழு நேர நியாய விலைக் கடை அங்கு திறக்க இயலாது. மேலும், துளுவபுஷ்பகிரி கிராமத்தில் ஏற்கெனவே 528 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய விலைக் கடை இயங்கி வருகிறது. அக்கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. மேலும் வாழியூர் கிராம கடைக்கு கட்டடம் கட்ட கூட்டுறவுத் துறைக்கு போதிய நிதியின்மையால், போளூர் சட்டமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதியிலிருந்து கட்டடம் கட்ட தக்க நடவடிக்கை எடுக்குமாறு திருவண்ணாமலை இணைப் பதிவாளருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 35344—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், ஆனூர் ஊராட்சி எலுமிச்சம்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், ஆனூர் ஊராட்சி, எலுமிச்சம்பட்டியில் ஏற்கெனவே 180 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஒரு பகுதிநேரக் கடை திருக்கழுக்குன்றம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்பட்டு வரும் நிலையில், அதே பகுதியில் மீண்டும் ஒரு பகுதிநேரக் கடை அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.

31—

நியாய விலைக் கடை

வினா எண் 38680—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) தருமபுரி தொகுதி, உங்கரான அள்ளி ஊராட்சி, ஏமகுட்டியூர், எட்டிமரத்துப்பட்டி, நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்டவும், மானிய அள்ளி ஊராட்சி கீழ்ஈசல்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாக மாற்றவும், அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, உங்கரான அள்ளி ஊராட்சியில் உள்ள ஏமகுட்டியூர் பகுதிநேர நியாய விலைக் கடை வாடகையின்றி இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதாலும், எட்டிமரத்துப்பட்டி நியாய விலைக் கடை எட்டிமரத்துப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதாலும், மேற்குறித்த இரு கடைகளுக்கும் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும், மானியத அள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் 573 குடும்ப அட்டைகளுடன் கீழ்ஈசல்பட்டியில் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடை ஒரு முழு நேரக் கடையாகும். எனவே, கீழ்ஈசல்பட்டி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாக மாற்ற வேண்டிய நேர்வு எழவில்லை.

32—

வேளாண் கடனுதவி

வினா எண் 40777—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறு மற்றும் குறு நில விவசாயிகளின் வேளாண் கடனுதவிக்கு 4% வட்டி விதிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

2008-09 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டு, வழங்கப்பட்ட பயிர்க்கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு இந்தப் பயிர்க்கடன்களுக்கான வட்டி வீதம் 4 சதவீதமாகக் குறைக்கப்படும் என இவ்வரசால் 24-6-2008 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

33—

நெல்லிக்கனி கொள்முதல்

வினா எண் 26837—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் விளையும் நெல்லிக்கனிகளை கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் விளையும் நெல்லிக்கனிகளை கொள்முதல் செய்யும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(2) வேளாண்மை விற்பனைத் துறையில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) சட்டப் பிரிவு 2, உட்பிரிவு 20-ன்படி வழங்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேளாண் விளைபொருளுக்கு மட்டுமே அறிவிக்கை செய்ய இயலும். நெல்லிக்கனி மேற்படி அட்டவணையில் இடம் பெறவில்லை. எனவே, சிவகங்கை மாவட்டத்தில் நெல்லிக்கனி அறிவிக்கை செய்யப்படவும் இல்லை. அதனால், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விவசாயிகளால் நெல்லிக்கனி கொண்டு வரப்படுவதில்லை என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

34—

குழாய் அளவு மாற்றம்

வினா எண் 30848—திரு. செ. புஷ்பராஜ் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாசனத்திற்கு மானியத்தில் வழங்கப்படும் இரண்டரை அங்குலக் குழாயை நான்கு அங்குலக் குழாயாக மாற்ற அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படும் PVC குழாய் மூலம் நீர்ப்பாசன பணிகளுக்கு, பாசனப் பகுதி கிணற்றிலிருந்து பாசனம் தேவைப்படும் பகுதியின் தூரம், பரப்பு, கிணற்றுநீர் ஊறும் திறன் ஆகியவற்றிற்கு ஏற்றாற்போல குழாய் அளவு முடிவு செய்யப்படும். இதனைத் தவிர 2 1/2' குழாயை 4' குழாயாக மாற்றும் திட்டம் ஏதும் வேளாண்மை பொறியியல் துறையிடம் இல்லை.

35—

இரட்டை அலகு ஷெட்

வினா எண் 32893—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு இரட்டை அலகு ஷெட் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

சேத்துப்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு இரட்டை அலகு ஷெட் அமைக்க உரிய பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் மதிப்பீடு கோரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

36—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 39508—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 11

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் சர்க்கரை வள்ளிக்கிழங்கு, பனங்கிழங்கு சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் சர்க்கரை வள்ளிக்கிழங்கு, பனங்கிழங்கு இவைகளுக்கு சேமிப்புக் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

37—

துல்லிய பண்ணையத் திட்டம்

வினா எண் 40003—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் கடலோர உவர் ஆராய்ச்சி மையத்தின்கீழ் இயங்கும் வேளாண்மை அறிவியல் மையத்தில் துல்லிய பண்ணையத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தமிழக அரசின் பகுதி II திட்டத்தின்கீழ் துல்லிய பண்ணையத் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்தில் 2007-2008-ல் 20 எக்டரில் செயல்படுத்தப்பட்டது. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் துல்லிய பண்ணையத் திட்டம் 1000 எக்டரில் 2008-2009 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது. இதில் வேளாண் அறிவியல் நிலையம் மூலம் 100 எக்டரிலும், வேளாண் துறை மூலமாக 450 எக்டரிலும் தோட்டக்கலைத் துறை வழியாக 450 எக்டரிலும் செயல்படுத்தப்படவுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2008 நவம்பர் 11]

38—

படகு இயக்குதல்

வினா எண் 19152—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோலையாறு அணையில் படகு விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் சோலையாறு அணையில் நீர்ப்பரப்பு (Water spread Area) பகுதி ஆழம் அதிகமாகவும் அகலம் குறைவாகவும் உள்ளது. மேலும் அணையில் மின் உற்பத்திக்கென உறிஞ்சு தன்மையுள்ள இரண்டு சுரங்கப்பாதைகள் உள்ளன. அவ்விடங்களில் நீரின் வேகம் அதிகமாக இருக்கும். எனவே, சோலையாறு அணையில் சுற்றுலாப் பயணிகளுக்காக படகு இயக்குதல் பாதுகாப்பற்றது. எனவே, சோலையாறு அணையில் சுற்றுலாப் பயணிகளுக்காகப் படகு விட இயலாது.

39—

குளம் ஏற்படுத்துதல்

வினா எண் 30872—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், ஜல்லிபட்டி, ராமனாபுரம், பாப்பாகுளம் ஊராட்சிகளில் முறைசாரா மானாவாரி ஏரிகள் சீரமைப்புத் திட்டத்தில் குளம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம் ஜல்லிபட்டி, ராமனாபுரம், பாப்பாகுளம் ஊராட்சிகளில் முறைசாரா மானாவாரி ஏரிகள் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் குளம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

40—

நீர் வள மேம்பாடு

வினா எண் 31003—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை வட்டத்தில் ஜல்லிபட்டி, ராமனாபுரம் கிராமங்களிலுள்ள குட்டைகளில் நீரைத் தேக்கி நீர்வளத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப் பாசனப் பகுதிகளுக்கு ஆகஸ்ட் 2007 முதல் மே 2008 வரை தண்ணீர் விட வேண்டியுள்ளதால் ஜல்லிபட்டி குட்டைக்கு தண்ணீர் விட வாய்ப்பு தற்போது இல்லை. பாசனக் காலம் முடிவடைந்த பின் அணைகளில் அப்போதைய நீர் இருப்பு மற்றும் பாசனம், குடிநீர்த் தேவையைக் கருத்தில்கொண்டு இக்கோரிக்கையானது உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

41—

கால்வாய் அமைத்தல்

வினா எண் 31641—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

முகையூர் தொகுதி, துரிஞ்சல் ஆற்றின் குறுக்கே அணை மற்றும் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

முகையூர் தொகுதி, துரிஞ்சல் ஆற்றின் குறுக்கே அணை மற்றும் கால்வாய் அமைக்க தற்போது அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை.

42—

அணை செப்பனிடுதல்

வினா எண் 40725—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் மழையால் பழுதான சோலையாறு அணையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் சோலையாறு அணை மழையால் பழுது ஆகவில்லை. ஏற்கெனவே அணையில் ஏற்பட்ட நீர்க் கசிவினைத் தடுப்பதற்காக ரூ.6.47 கோடி திட்ட மதிப்பில் நபார்டு வங்கி உதவியுடன் புனரமைப்புப் பணிகள் தொடங்கி முன்னேற்றத்தில் உள்ளன.

43—

பேருந்து வசதி

வினா எண் 18217—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(அ) பேரூர் தொகுதி, தெலுங்குபாளையம் பகுதிக்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட 38எ அரசுப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சாக்கடை சீரமைக்கும் பணி நடைபெற்று வந்ததால் 38எ பேருந்து தற்காலிமாக எல்.ஐ.சி. காலனி வரை இயக்கப்பட்டு வந்தது. தற்போது சாக்கடை சீரமைக்கும் பணி முடிவுற்றதால் 7-3-2007 முதல் வழக்கம்போல் தெலுங்குபாளையம்—புதூர் வரை இயக்கப்பட்டு வருகிறது.

44—

நகரப் பேருந்து

வினா எண் 26066—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கோட்டம்-3, நாகர்கோவில் மூலம் இயக்கப்படும் நகரப் பேருந்து தடம் எண் '15பி'யினை ஆவரைகுளம்—பாலையா மார்த்தாண்டம் மேல்நிலைப் பள்ளி வரை இயக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தடம் எண் 15பி பேருந்து நாகர்கோவிலிலிருந்து மதகனேரி செல்லும் 15.20 மணி நடையினை தற்சமயம் ஆவரைகுளம் பாலையா மார்த்தாண்டம் மேல்நிலைப் பள்ளி மாணவ/மாணவியர் பயன்பெறும் பொருட்டு இயக்கப்பட்டு வருகிறது.

45—

கூடுதல் பேருந்துகள்

வினா எண் 26431—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

செங்கல்பட்டு—திருக்கழுக்குன்றம்—நெடும்பூர்—நல்லாத்தூர்—ஆயபாக்கம்-புதுப்பட்டினம் தடம் வழியாக கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு—திருக்கழுக்குன்றம்—நெடும்பூர்—நல்லாத்தூர்—ஆயபாக்கம்—புதுப்பட்டினம் தடத்தின் நீளம் 40.0 கி.மீ. ஆகும். இத்தடத்தில் தற்பொழுது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் மண்டலம் மூலம் 20 நடைகளையும் தனியார் பேருந்துகள் 8 நடைகளையும் இயக்குகின்றது. இத்தடத்தில் வெளியூர்களில் இருந்து வந்து செல்வோர் குறைவு. இத்தடத்தில் உள்ள ஊர்களின் பொதுமக்களே இத்தடப் பேருந்துகளைப் பயன்படுத்துகின்றனர். எனவே, தற்பொழுது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதென கருதப்படுகிறது.

46—

பேருந்து வசதி

வினா எண் 26442—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றத்திலிருந்து புதுப்பட்டினம் வரை பள்ளி மாணவர்கள் செல்ல ஏதுவாக காலை, மாலை இரண்டு முறை இயங்கிய T3 பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டிலிருந்து புதுப்பட்டினம் வரை இயக்கப்பட்ட T3 பேருந்து 1992-க்கு முன்பே நிறுத்தப்பட்டுவிட்டது. மேலும், தற்பொழுது பள்ளி நேரங்களில் இத்தடத்தில் இயக்கப்படும் 212ஜி மற்றும் 108டி தடங்களில் மாணவர்கள் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். எனவே, திருக்கழுக்குன்றத்திலிருந்து புதுப்பட்டினம் வரை உள்ள பள்ளி மாணவர்கள் தடங்கள் 212ஜி மற்றும் 108டி-ல் பயணம் செய்வதால் தடம் எண் T3-ஐ மீண்டும் இயக்கத் தேவையில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

47—

கூடுதல் பேருந்துகள்

வினா எண் 28744—திரு கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு—திருக்கழுக்குன்றம்—வல்லிபுரம் தடத்தில் பேருந்துகளை கூடுதலாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு — திருக்கழுக்குன்றம் — வல்லிபுரம் தடத்தின் நீளம் 27.0 கி.மீ. ஆகும். இத்தடத்தில் திருக்கழுக்குன்றம்—வல்லிபுரம் கூட்டுச்சாலை வரையிலான 12.0 கி.மீ. சாலை மிகவும் குறுகலாக உள்ளதால், பயண நேரம் அதிகரிக்கிறது. எனவே, செங்கல்பட்டிலிருந்து வல்லிபுரம் செல்பவர்கள் செங்கல்பட்டிலிருந்து பூதூருக்கு வல்லிபுரம் வழியாக தினசரி இயக்கப்படும் தடங்கள் 129சி, டி12, டி4-இல் 38 நடைகளில் பயணம் செய்கின்றனர். வல்லிபுரம், திருக்கழுக்குன்றம்-மதுராந்தகம் சாலையில் உள்ள வல்லிபுரம் கூட்டுசாலையில் உட்புறமாக 0.5கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இத்தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் மண்டலத்தால் தினசரி 24 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, செங்கல்பட்டு—திருக்கழுக்குன்றம்—வல்லிபுரம் தடத்தில் கூடுதலாக பேருந்துகளை இயக்க சாத்தியமில்லை.

48—

பேருந்து வசதி

வினா எண் 28747—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம்—சதுரங்கப்பட்டினம் இடையே T-1, T-3 212-D ஆகிய பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருக்கழுக்குன்றம்—சதுரங்கப்பட்டினம் தடத்தில் இயக்கப்பட்ட தடங்கள் T3, 212டி ஆகியவை சாலை பழுதின் காரணமாக வெகு காலத்திற்கு முன்பே நிறுத்தப்பட்டு உள்ளன. நகரத் தடம் எண்-T1-ன் மூலம் தற்பொழுதும் திருக்கழுக்குன்றம்—சதுரங்கப்பட்டினம் தடத்தில் தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. சதுரங்கப்பட்டினம், செங்கல்பட்டு—கல்பாக்கம், பிரதான தடத்தில் அமைந்துள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் மண்டலத்தால் இத்தடத்தில் தினசரி இயக்கப்படும் 124 நடைகளே இத்தடத்திற்கு போதுமானதென கருதப்படுகிறது.

49—

கூடுதல் நகரப் பேருந்து

வினா எண் 29316—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு-திருக்கழுக்குன்றம்-வடகடம்பாடி தடத்தில் நகரப் பேருந்தை முறையாகவும், கூடுதலாகவும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு—திருக்கழுக்குன்றம்—வடகடம்பாடி தடத்தின் நீளம் 26.0 கி.மீ. ஆகும். வடகடம்பாடி, திருக்கழுக்குன்றம்-மாமல்லபுரம் சாலையில் வடகடம்பாடி கூட்டுச்சாலையிலிருந்து உட்புறமாக 0.8 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. பிரதான சாலையிலிருந்து 1.0 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளதால் பேருந்து வசதி பெற்ற தடமாக கருதப்படுகிறது. மேலும், திருக்கழுக்குன்றம்—மாமல்லபுரம் தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் மண்டலத்தில் புறநகர் பேருந்துகள் மூலம் 44 நடைகளும், நகரப் பேருந்துகள் மூலம் 10 நடைகளும், தனியார் பேருந்துகள் மூலம் 24 நடைகளும் தினசரி இயக்கப்படுகின்றன. இயக்கப்படும் பேருந்துகளே தற்பொழுது உள்ள போக்குவரத்துத் தேவைக்கு போதுமானதெனக் கருதப்படுகிறது. மேலும், வடகடம்பாடி பள்ளி மாணவ, மாணவியர் நலனுக்காக

செங்கல்பட்டிலிருந்து பெருமாள் ஏரி செல்லும் நகரப் பேருந்து தடம் எண் T1 காலையிலும், மாலையிலும் வடகடம்பாடி சென்று வருகிறது. எனவே, செங்கல்பட்டு—திருக்கழுக்குன்றம்—வடகடம்பாடி தடத்தில் இயக்கப்படும் பேருந்துகள் முறையாக இயக்கப்படுகின்றன என்றும், இயக்கப்படும் பேருந்துகளே போதுமானது என்றும் கருதப்படுவதால் கூடுதல் பேருந்துகள் இயக்கத் தேவை இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.

50—

கூடுதல் பேருந்துகள்

வினா எண் 29317—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டிலிருந்து காலை 8 மணியிலிருந்து 10 மணி வரை செங்கல்பட்டு—அசோக் பில்லர் வரை கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு—தாம்பரம்—அசோக்பில்லர் தடம் சென்னையிலிருந்து திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் அமைந்துள்ளதால் எந்நேரமும் குறுகிய இடைவெளியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம் பேருந்துகளால் இப்பகுதி நன்கு போக்குவரத்து வசதி பெறுகிறது. விழாக்காலங்களிலும், பண்டிகை நாட்களிலும் தேவைக்கேற்ப சிறப்பு பேருந்துகள் இப்பகுதியில் இயக்கப்படுகின்றன. எனவே, தற்பொழுது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானது.

51—

பேருந்து வசதி

வினா எண் 29824—திரு. பி. பலராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரியிலிருந்து இ.டி. சாலை வழியாக இயக்கி நிறுத்தப்பட்ட 95டி பேருந்தினை மீண்டும் இவ்வழித்தடத்தில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புறநகர்த் தடம் எண் 95டி பொன்னேரி பணிமனையிலிருந்து கீழ்க்கண்டவாறு இயக்கப்பட்டது:—

1. பொன்னேரி-பேசின்பாலம் 4 நடைகள்

2. பொன்னேரி-மீஞ்சூர் 4 நடைகள்

இத்தடத்தில் மேட்டுப்பாளையம் முதல் அனுப்பம்பட்டு வரையிலான சாலை மிகவும் பழுதடைந்துள்ளதாலும், அனுப்பம்பட்டு மீஞ்சூர் ரெயில்வே கேட் அடிக்கடி மூடப்படுவதாலும், ஒவ்வொரு முறை கேட் திறப்பதற்கு குறைந்தது 30 நிமிடம் வரை ஆனதாலும் நடை இழப்பு ஏற்பட்டு பேருந்துகளை சரியான நேரத்தில் இயக்க இயலவில்லை. சென்னையிலிருந்து பொன்னேரிக்கு மின்சார ரயில், இயக்கப்பட்டதும் இத்தடத்தில் பயணம் செய்த மக்கள் மின்சார ரயிலில் பயணம் செய்ய ஆரம்பித்துள்ளனர். மேலும், இத்தட பகுதிகளை உள்ளடக்கி, இரு மினி பேருந்துகள் தினசரி 30 நடைகளை இயக்க தொடங்கின. இதனால் 95டி தடத்தின் பயணிகள் பயன்பாடு குறைந்து வருவாயும் பாதிக்கப்பட்டதால் 28-6-2002 முதல் நிறுத்தம் செய்யப்பட்டது. இத்தடத்தில் உள்ள வேலூர் என்ற கிராமத்திற்கு மட்டும் பேருந்து வசதி இல்லாமல் இருந்தது. மேற்கண்ட கிராம பொதுமக்கள் மீஞ்சூர் செல்ல நகரப் பேருந்து மூலம் பேருந்து வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

52—

பேருந்து வசதி

வினா எண் 32161—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டிலிருந்து கிளாப்பாக்கம் வரை செல்லும் டி-27 பேருந்தை கிளாப்பாக்கம்—பெரும்பேடு—அம்மணப்பாக்கம்—ஈச்சன்கரணை—இந்திரா நகர்—திருக்கழுக்குன்றம்—செங்கல்பட்டு என்ற வழித்தடத்தில் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டிலிருந்து கிளாப்பாக்கம் வரை செல்லும் டி-27 தடத்தில் கிளாப்பாக்கம் — பெரும்பேடு — அம்மணப்பாக்கம் — ஈச்சன்கரணை — இந்திரா நகர் — திருக்கழுக்குன்றம் — செங்கல்பட்டு வழித்தடத்தில் அம்மணப்பாக்கத்திலிந்து ஈச்சன்கரணை வரையிலான 2.6 கி.மீ. சாலை மிகவும் குறுகலாக உள்ளதாலும், ஒரு தரைப்பாலம் சேதமடைந்து உள்ளதாலும், இத்தடத்தில் பேருந்துகளை இயக்க இயலாது. எனவே, செங்கல்பட்டிலிருந்து கிளாப்பாக்கம் வரை இயக்கப்படும் டி-27 பேருந்து பெரும்பேடு-அம்மணப்பாக்கம்- ஈச்சன்கரணை — இந்திரா நகர் — திருக்கழுக்குன்றம் — செங்கல்பட்டு என நீட்டித்து இயக்க வழிவகை இல்லை.

53—

புதிய பேருந்து வசதி

வினா எண் 32434—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தொகுதி பரமத்தி வேலூரிலிருந்து திருமுக்கூடலூருக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் தொகுதி, பரமத்தி வேலூர்—திருமுக்கூடலூர் (வழி) வேலாயுதம்பாளையம், தளவாபாளையம், வாங்கல், நெரூர் வழித்தடத்தின் மொத்த நீளம் 35.0 கி. மீட்டர் ஆகும். இவ்வழித்தடம் முழுவதும் கீழ்க்கண்டுள்ளவாறு பகுதி, பகுதியாக போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது.

1. வேலூர் — தளவாபாளையம் வழித்தடம்:

வேலூர்—கரூர் பேருந்துகள் இயங்கும் பிரதான சாலையாகும். இதில் ஒவ்வொரு ஐந்து நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

2008 நவம்பர் 11]

2. தளவாபாளையம் — வாங்கல்—நெரூர் வழித்தடம்:

	தினசரி இயக்கப்படும்	
	பேருந்துகள்	நடைகள்
அ. கழகப் பேருந்து		
கரூர்-வாங்கல் (வழி) நெரூர், பெரியகாளிபாளையம்	1	6
கரூர்-பெரியகாளிபாளையம் (வழி) வாங்கல்	2	4
ஆ. தனியார் பேருந்து		
கரூர்-ஜேடர்பாளைம் (வழி) வாங்கல், தளவாபாளையம்	1	8
இ. தனியார் துறை மினி பேருந்து வேலூர் - வாங்கல்	2	24
3. நெரூர்-திருமுக்கூடலூர் வழித்தடம்:		
அ. கழக நகரப் பேருந்து		
கரூர்-திருமுக்கூடலூர் (வழி) நெரூர்	3	48
ஆ. தனியார் பேருந்து		
கரூர்-திருமுக்கூடலூர் (வழி) நெரூர்	2	24

54—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

புதிய பேருந்து

வினா எண் 33866—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து வெள்ளியணை, ஜெகதாபி, காணியாளம்பட்டி, தரகம்பட்டி, பாலவிடுதி, சேர்வைகாரன்பட்டி, தளிவாசல், டி. இடையபட்டி வழியாகக் கடவூர் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 நவம்பர் 11

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர்—கடவூர் (வழி) வெள்ளியணை, ஜெகதாபி, காணியாளம்பட்டி, தரகம்பட்டி, பாலவிடுதி, சேர்வைகாரன்பட்டி, தளிவாசல், டி. இடையப்பட்டி வழித்தட நீளம் 64.6 கி.மீட்டராகும். தற்பொழுது கரூர்—கடவூர் வழித்தடத்தில் இரு தனியார் துறை வழித்தட பேருந்துகள் மூலம் தினசரி 10 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், இவ்வழித்தடம் முழுவதும் தற்போது கீழ்க்கண்டுள்ளவாறு நேரிடையாகவும் பகுதி பகுதியாகவும் போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது:—

அ. கடவூர் - பாலவிடுதி / தரகம்பட்டி வழித்தடம்:

கழக புறநகரப் பேருந்து

வ. எண்	வழித்தடம்	தினசரி இயக்கப்படும் பேருந்துகள்	தினசரி இயக்கப்படும் நடைகள்
1.	முசிறி-கடவூர் (வழி) தரகம்பட்டி	1	4
2.	திருச்சி-இடையப்பட்டி (வழி) மணப்பாறை, பாலவிடுதி, கடவூர்	1	4
3.	மணப்பாறை-கடவூர் (வழி) பாலவிடுதி	1	4

ஆ. பாலவிடுதி/தரகம்பட்டி - கரூர் வழித்தடம்:

வ. எண்	வழித்தடம்	தினசரி இயக்கப்படும் பேருந்துகள்	தினசரி இயக்கப்படும் நடைகள்
1.	கரூர்-மணப்பாறை (வழி) தரகம்பட்டி	5	26
2.	முசிறி-தரகம்பட்டி (வழி) மைலம்பட்டி	2	6
3.	முசிறி-மணப்பாறை (வழி) தரகம்பட்டி	-	2

தனியார் துறை பேருந்து

வ. எண்	வழித்தடம்	தினசரி இயக்கப்படும் பேருந்துகள்	தினசரி இயக்கப்படும் நடைகள்
1.	கரூர்-மணப்பாறை (வழி) தரகம்பட்டி	4	18

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

சேர்வைக்காரன்பட்டி - கடவூர் வழித்தடம்:

வ. எண்	வழித்தடம்	தினசரி இயக்கப்படும்	
		பேருந்துகள்	நடைகள்
1.	மணப்பாறை-அய்யம்பாளையம் (வழி) சேர்வைகாரன்பட்டி, தளிவாசல், கடவூர்	1	4
2.	மணப்பாறை-கடவூர்	-	2

55—

கூடுதல் பேருந்துகள்

வினா எண் 34365—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், பெரிய புத்தேரி ஊராட்சி, சென்னேரி கிராமத்திற்கு செங்கல்பட்டிலிருந்து கூடுதலாகப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சென்னேரி கிராமம், செங்கல்பட்டு – திருப்போரூர் தடத்தில் 8.0-வது கி.மீ.-ல் உள்ள சென்னேரி கூட்டுச்சாலையிலிருந்து உட்புறமாக 0.5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. தற்பொழுது செங்கல்பட்டு-திருப்போரூர் தடத்தில் புறநகர் பேருந்துகள் மூலம் 12 நடைகளும், நகரப் பேருந்துகள் மூலம் 44 நடைகளும், தனியார் பேருந்துகள் மூலம் 32 நடைகளும் தினசரி இயக்கப்படுகின்றன. இந்நடைகள் தற்பொழுது உள்ள போக்குவரத்துத் தேவைக்கு போதுமானதென கருதப்படுகிறது. மேலும், சென்னேரி பிரதான சாலையிலிருந்து 0.5 கி.மீ தூரத்தில் உள்ளதால் இது நடந்து செல்லக்கூடிய தூரமாகும். எனவே, செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், பெரிய புத்தேரி ஊராட்சி, சென்னேரி கிராமத்திற்கு செங்கல்பட்டிலிருந்து கூடுதலாக பேருந்துகள் இயக்க தேவையில்லை என்று கருதப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

56—

நகரப் பேருந்து

வினா எண் 35348—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டிலிருந்து அனைத்து கிராமங்களுக்கும் இயக்கப்படும் நகரப் பேருந்துகளை பழைய பேருந்து நிலையம் வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு பழைய பேருந்து நிறுத்தத்தில் போதிய இடவசதி இல்லாததாலும், போக்குவரத்து தேவையின் அடிப்படையிலும் செங்கல்பட்டு நகராட்சி புதிய பேருந்து நிலையத்தை போதிய வசதிகளுடன் நிறுவி உள்ளது. தற்போது அனைத்து பேருந்துகளும் புதிய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படுகின்றன. நகரப் பேருந்துகளை மீண்டும் பழைய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கினால் போதிய இடவசதி இல்லாமையால் பேருந்துகளை இயக்குவது கடினமாகிவிடும். மேலும், பழைய பேருந்து நிலையமும் பிரதான சாலையை ஒட்டி அமைந்துள்ளதால், போக்குவரத்து நெரிசலும் ஏற்படும். எனவே, செங்கல்பட்டு நகரத்திலிருந்து இயக்கப்படும் நகரப் பேருந்துகளை பழைய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கும் திட்டம் இல்லை.

57—

பேருந்து நிறுத்தம்

வினா எண் 35354—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு புறவழிச் சாலையில் கட்டண நிலையுடன் கூடிய பேருந்து நிறுத்தம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

புறவழிச் சாலைகள் வாகனங்களின் பயண நேரத்தை குறைக்கும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளன. அதில் எந்நேரமும் கனரக வாகனங்கள் அதிக வேகத்தில் இயக்கப்படுகின்றன. எனவே, புறவழிச்சாலையில் பேருந்துகளை நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கினால் விபத்துக்கள் ஏற்பட வழிவகை ஏற்படும். புறவழிச் சாலையிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட ஏதுவாகும். எனவே, செங்கல்பட்டு புறவழிச் சாலையில் கட்டண நிலையுடன் கூடிய பேருந்து நிறுத்தம் ஏற்படுத்தும் திட்டம் இல்லை.

58—

புறவழிச் சாலை வழியாக பேருந்து இயக்குதல்

வினா எண் 35355—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டிலிருந்து தாம்பரம் வரை இயக்கப்படும் பேருந்துகள் அனைத்தும் காஞ்சிபுரம் புறவழிச் சாலை வழியாகச் செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டிலிருந்து தாம்பரம் வரை இயக்கப்படும் பேருந்துகளை காஞ்சிபுரம் புறவழிச் சாலை வழியாக இயக்கினால் இயக்க நேரம் அதிகரிக்கும். மேலும், இது சுற்றுத் தடமாகும். அதனால் நேரிடையாக செல்லும் பயணிகள் விரும்பமாட்டார்கள். எனவே, செங்கல்பட்டிலிருந்து தாம்பரம் வரை இயக்கப்படும் பேருந்துகளை காஞ்சிபுரம் புறவழிச் சாலை வழியாக இயக்க சாத்தியமில்லை.

59—

கூடுதல் பேருந்து

வினா எண் 35356—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் வழியாக ஆனூர் வரை கூடுதலாகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை.—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், காஞ்சிபுரம் மண்டலத்தால் செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் வழியாக ஆனூர் வரை பேருந்துகள் இயக்கப்படுவதில்லை. ஆனால், செங்கல்பட்டிலிருந்து பி.வி.களத்தூர் வழியாக ஆனூருக்கு புறநகர் பேருந்துகள் மூலம் 10 நடைகள் பேருந்து வசதி உள்ளது. இந்த பேருந்து வசதியே ஆனூர் கிராமத்திற்கு போதுமானதென கருதப்படுகிறது.

60—

பேருந்து வசதி

வினா எண் 35357—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், தத்தலூர் ஊராட்சிக்கு மீண்டும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை.—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், தத்தலூர் ஊராட்சிக்கு தற்பொழுது நகரத் தடம் எண் டி3 மூலம் செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் வழியாக தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன.

61—

புதிய நகரப் பேருந்து

வினா எண் 35871—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, கொத்தலம் கிராமத்திற்கு கிருஷ்ணகிரியிலிருந்து புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரியிலிருந்து கொத்தலம் (வழி) காவேரிப்பட்டினம், மோரனஅள்ளி தடத்தின் நீளம் 29 கி. மீட்டராகும். இத்தடத்தில் ஏற்கெனவே தருமபுரி மண்டல தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண் கே.12-ன் மூலம் நாளொன்றுக்கு 10 நடைகள் கிருஷ்ணகிரி–பாறைக்கொட்டாய் (வழி) காவேரிப்பட்டினம், மோரனஅள்ளி, கொத்தலம் தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் பயணிகளின் அடர்வு சுமார் 52 விழுக்காடுகளே உள்ளதால், கிருஷ்ணகிரி–கொத்தலம் தடத்தில் மேலும் கூடுதல் பேருந்து வசதியினை தற்சமயம் செய்திட இயலாத நிலையுள்ளது.

62—

பேருந்து வசதி

வினா எண் 35896—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, வெள்ளாளப்பட்டியிலிருந்து கருப்பூர் வழியாக ஓமலூர் பேருந்து நிலையம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல நகரப் பேருந்து தடம் எண் 102 மூலமாக ஓமலூர்-செங்காடு (வழி) கருப்பூர், வெள்ளாளப்பட்டி வழியாக தினசரி 2 நடைகள் இயக்கப்படுகிறது. இதுதவிர கோரிக்கை வழித்தடத்தில் கீழ்க்கண்டவாறு பகுதி வாரியான பேருந்து வசதி உள்ளது:—

[2008 நவம்பர் 11

வ. எண்	வழித்தடம்	அரசு பேருந்து நடைகள் நகர்	தனியார் பேருந்து நடைகள் நகர்
1	ஓமலூர்-கருப்பூர்	11	..
2	சேலம்-வெள்ளாளப்பட்டி (வழி) டால்மியா போர்டு, கருப்பூர்	56	54
3	சேலம்-ஓமலூர் (வழி) டால்மியா போர்டு	ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியிலும் பேருந்து வசதி உள்ளது.	

63—

பேருந்து வசதி

வினா எண் 35901—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, வெள்ளாளப்பட்டியிலிருந்து கருப்பூர், மாமாங்கம், 5 ரோடு, புதிய பேருந்து நிலையம் வழியாக பழைய பேருந்து நிலையத்திற்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம் மூலமாக தடம் எண் 21, 26/101, 77, 90 மற்றும் 90ஏ ஆகிய 5 நகரப் பேருந்துகள் மூலமாக சேலம் பழைய பேருந்து நிலையம்-வெள்ளாளப்பட்டி (வழி) புதிய பேருந்து நிலையம், 5 ரோடு, மாமாங்கம், கருப்பூர் வழியாக தினசரி 50 நடைகள் இயக்கப்படுகிறது. மேலும், 3 தனியார் பேருந்துகள் மூலம் தினசரி 54 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. மேற்கண்ட பேருந்து நடைகளே இவ்வழித்தட மக்களின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

64—

பேருந்து வசதி

வினா எண் 40854—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து பூலாம்பட்டிக்கு சமுத்திரம், சின்னப்பம்பட்டி, முத்தியம்பட்டி, மூலக்கடை வழியாக இயக்கப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலத்திலிருந்து சேலம்-பூலாம்பட்டி (வழி) எளம்பிள்ளை, பாப்பம்பாடி, சின்னப்பம்பட்டி பணிக்கனூர், சமுத்திரம், புதுப்பாளையம், மூலக்கடை, இருப்பாளி வழியாக 1997 ஆம் ஆண்டு தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டன. இவ்வழித்தடத்தில் பாப்பம்பாடியினை அடுத்து முக்கிய தாலுக்கா மற்றும் பேரூராட்சி மையங்களோ இல்லாத காரணத்தால் பேருந்தில் ஒரு சில பயணிகளே பயணித்தனர். மீண்டும் இரு மாதங்களிலேயே பின்வருமாறு தடம் மாற்றி பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

1.	சேலம்-எடப்பாடி (வழி) எளம்பிள்ளை, பாப்பம்பாடி, சின்னப்பம்பட்டி பணிக்கனூர், சமுத்திரம், புதுப்பாளையம், நாச்சியம்பாளையம்	3 நடைகள்
2.	சேலம்-எடப்பாடி (வழி) எளம்பிள்ளை, பாப்பம்பாடி, சின்னப்பம்பட்டி பணிக்கனூர், சமுத்திரம், புதுப்பாளையம், தாதாபுரம்	1 நடை

எனினும், புதுப்பாளையம் முதல் பூலாம்பட்டி வரை (வழி) மூலக்கடை, இருப்பாளி தடத்தில் பகுதிவாரியாக 6 பேருந்துகள் மூலம் 27 நடைகள் இயங்கி வருகின்றன. மேலும், எடப்பாடியிலிருந்து பூலாம்பட்டிக்கு பில்லுக்குறிச்சி மற்றும் சித்தூர் வழித்தடங்களில் தினசரி 78 நடைகள் இயக்கப்படுகின்றன. இதுவே அப்பகுதி பயணிகளுக்கு போதுமானதாகும்.

65—

விளம்பரப் பலகை

வினா எண் 40856—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அளவில் அரசுப் பேருந்துகளில் அனுமதிக்கப்பட்ட பேருந்து நிறுத்தங்கள் பெயர் பொறித்த விளம்பரப் பலகை அனைத்து பேருந்துகளிலும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஒரு வழித்தடத்தில் இயக்கப்படும் கழகப் பேருந்துகள் அனைத்திலும் தடத்தில் சில முக்கிய ஊர்களின் பெயர்கள் மட்டும் பேருந்துகளின் இருபுற சைடு மேல் கண்ணாடிகளில் வர்ணத்தினால் எழுதப்பட்டு இயங்கி வருகின்றன. எனவே, ஒவ்வொரு பேருந்துகளிலும், அத்தடப் பேருந்துகள் இயங்குகின்ற வழித்தடத்தின் அனைத்து ஊர்களின் பெயர் பொறித்த விளம்பரப் பலகையினை அமைத்திடுவது இயலாத ஒன்றாகும். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், அனைத்துப் பேருந்துகளிலும் வழித்தட எண் மற்றும் வழித்தடத்துடன்கூடிய பேருந்து நிறுத்தங்கள் பெயர் பொறித்த விளம்பரப் பலகை வைக்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

66—

பேருந்து வசதி

வினா எண் 41323—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, தம்மம்பட்டி முதல் ஆரியபாளையம் வழியாக பாப்பநாய்க்கன்பட்டிக்கும், கருமந்துறை-உமையாள்புரம் மேற்கு ராஜபாளையம்-சோமம்பட்டி வழி இராசிபுரத்திற்கும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, கருமந்துறை பகுதி மலைப்பகுதியாகும். கருமந்துறையிலிருந்து பாப்பநாயக்கன்பட்டி வழியாக சேலத்திற்கு அரசு பேருந்துகள் 24 நடைகளும், தனியார் பேருந்துகள் 26 நடைகளும் மற்றும் தாலுகா மையமான ஆத்தூருக்கு அரசு பேருந்துகள் 20 நடைகளும், தனியார் பேருந்துகள் 8 நடைகளும் இயங்கி வருகின்றன.

தம்மம்பட்டி-பாப்பநாயக்கன்பட்டி (வழி) ஆரியபாளையம் வழித்தடத்தில் பகுதிவாரியாக புறநகர் மற்றும் நகர்ப்புற பேருந்துகள் இயங்கி வருகின்றன. மேலும், கருமந்துறை - இராசிபுரம் (வழி) உமையாள்புரம், மேற்கு இராஜாபாளையம், சோமம்பட்டி வழித்தடமும் பகுதி பகுதியாக புறநகர் மற்றும் நகர்ப்புற பேருந்து வசதி பெற்றுள்ளது.

இதுவே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்கு போதுமானதாகும்.

67—

பேருந்து வசதி

வினா எண் 41544—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினம் ஒன்றியம், பையூர் ஊராட்சி, பையூர் பேருந்து நிலையத்தில் அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே பையூர் வழியாக இயக்கப்படும் அனைத்து நகரப் பேருந்துகளும் பையூர் பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்கிறது. மேலும் பையூர் வழியாக இயக்கப்படும் தொலைதூர புறநகர்ப் பேருந்துகளை தவிர்த்து, மற்ற புறநகர்ப் பேருந்துகளை பையூர் கிராமத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்ல சம்பந்தப்பட்ட ஓட்டுநர் / நடத்துநர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

68—

புதிய நகரப் பேருந்து

வினா எண் 41546—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினம் ஒன்றியம், சௌட்டள்ளி ஊராட்சி, குட்டிவேடிச்சாம்பட்டி கிராமத்திற்கு கிருஷ்ணகிரியிலிருந்து காவேரிப்பட்டினம் வழியாக புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, கிருஷ்ணகிரி—குட்டிவேடிச்சாம்பட்டி (வழி) காவேரிப்பட்டினம் தடத்தின் நீளம் 19.1 கி.மீட்டர் ஆகும். இத்தடத்தில் ஏற்கெனவே தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலம் மூலமாக கிருஷ்ணகிரியிலிருந்து காவேரிப்பட்டினம் வழியாக புதூர் பிரிவு வரை 4 நகரப் பேருந்துகள்மூலம் 18 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வழித்தடத்தில் புதூர் பிரிவு சாலை முதல் குட்டிவேடிச்சாம்பட்டி கிராமம் வரை 2.1 கி.மீட்டர் தூரத்திற்கு பேருந்துகள் சென்று வருமாறு இயக்கினால், புதூர் பிரிவு சாலைக்கு பிறகு வரும் கிராம மக்களுக்கு பயணக் கட்டணம் 4.2 கி.மீட்டர் தூரத்திற்கு அதிகமாகும். தற்சமயம் காவேரிப்பட்டினம் முதல் குட்டிவேடிச்சாம்பட்டி வரை தனியார் சிற்றுந்துமூலம் நாளொன்றுக்கு 18 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கும்பொழுது, கிருஷ்ணகிரி—குட்டிவேடிச்சாம்பட்டி (வழி) காவேரிப்பட்டினம் வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கிட பரிசீலனை செய்யப்படும்.

69—

பேருந்து வசதி

வினா எண் 41969—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) தருமபுரி தொகுதி, தொரப்பூர் வழி, பொம்மிடி-மேட்டூர் வரையிலும், விமுத்தம்பட்டி ஊராட்சி, கிட்டம்பட்டி தண்டா கிராமம் வழி தொப்பூர் வரையிலும் இயக்கப்பட்ட பேருந்தினை மீண்டும் இயக்கவும், பொக்குபோதன அள்ளி ஊராட்சி, தாதநாயக்கன்பட்டி மற்றும் பூவல்மடுவு வழி ஜருகு கிராமம் ஆகியவற்றிற்கு புதிய பேருந்து இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலம் மூலமாக புறநகர் தடம் எண் 145ஏ, பொம்மிடி-மேட்டூர் (வழி), தொப்பூர் தடத்தில் நாளொன்றுக்கு 4 நடைகள் ஏற்கெனவே இயக்கப்பட்டு வருகின்றன. கிட்டம்பட்டிதண்டா கிராமம் ஏற்கெனவே பேருந்து நிறுத்தம் செய்து வரும் கிட்டம்பட்டிதண்டா பிரிவு சாலையிலிருந்து 0.5 கி.மீட்டர் நடைபயண தூரத்திலேயே உள்ளதால், தற்சமயம் பொம்மிடி-தொப்பூர் தடத்தில் இயங்கும் நகர் பேருந்தை கிட்டம்பட்டிதண்டா கிராமத்திற்குள் சென்று வருமாறு இயக்கிட இயலாத நிலையுள்ளது. தாதநாயக்கன்பட்டி கிராமம் ஏற்கெனவே நகர் பேருந்து வசதி பெற்ற தொம்பரகாம்பட்டியிலிருந்து 0.5 கி.மீ. தூரத்திலும், பூவல்மடுவு கிராமம் பூவல்மடுவு பிரிவு சாலையிலிருந்து 0.5 கி.மீட்டர் தூரத்திலும் நடைபயண தூரத்திலேயே உள்ளன. மேலும், தருமபுரியிலிருந்து தொம்பரகாம்பட்டி, பூவல்மடுவு பிரிவு சாலை வழியாக ஜருகு கிராமத்திற்கு ஏற்கெனவே கீழ்க்கண்டவாறு நகர் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	நகர் தடம் எண்	நாளொன்றுக்கு இயக்கப்படும் நடைகள்
1	டி.22	12
2	டி.22ஏ	10
3	டி.29	12
	மொத்தம்	34

[2008 நவம்பர் 11

70—

புதிய பேருந்து வசதி

வினா எண் 41990—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்ககிரியிலிருந்து சுண்ணாம்புக்குட்டை, அம்மன்காட்டூர், கொங்கணாபுரம், ஒண்டிபனை, புதூர் வழியாக எளம்பிள்ளை வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சங்ககிரியிலிருந்து சுண்ணாம்புக்குட்டை, அம்மன்காட்டூர், கொங்கணாபுரம், ஒண்டிபனை, புதூர் வழியாக எளம்பிள்ளை வழித்தடத்தில் கீழ்க்கண்டவாறு பகுதிவாரியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

வ. எண்	தடம் எண்	வழித்தடம்	நடைகள்	பயனடையும் பகுதி
1	எஸ் 1	சங்ககிரி-கன்னியாம்பட்டி	4	சங்ககிரி-கொங்கணாபுரம் (வழி) சுண்ணாம்புக் குட்டை, அம்மன்காட்டூர்.
2	2	கொங்கணாபுரம்-மகுடஞ்சாவடி	32	கொங்கணாபுரம்-ஒண்டிப்பனைபுதூர்.
3	5, 5.ஏ	எடப்பாடி-எளம்பிள்ளை சித்தர்கோவில் மற்றும் காகாபாளையம்	18	அ.புதூர்-எளம்பிள்ளை.

கோரிக்கை வழித்தடத்தில் ஒண்டிப்பனை முதல் அ.புதூர் வரையிலான 1.5 கி. மீட்டர் சாலை மட்டுமே பேருந்து வசதி இல்லை. அவ்வழித்தடத்தில் ஒரு சில குடியிருப்புகளே உள்ளன. எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே அப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவைக்குப் போதுமானதாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

71—

புதிய பேருந்து வசதி

வினா எண் 42812—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியிலிருந்து கொப்பம்பட்டி செங்காட்டூர், கரட்டூர், கோவிலூர், தொளசம்பட்டி வழியாக புதிய பேருந்து வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம்மூலமாக நகரப் பேருந்து தடம் எண் எஸ் 11, தாரமங்கலத்திலிருந்து தொளசம்பட்டி, கோவிலூர், கரட்டூர், செங்காட்டூர், கொப்பம்பட்டி வழியாக மேச்சேரி வரை தினசரி 3 நடைகள் இயங்கி வருகின்றது.

72—

புதிய பேருந்து வசதி

வினா எண் 42814—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், கூனாண்டியூரிலிருந்து காலை 4.00 மணிக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல நகரப் பேருந்து தடம் எண் 15, 26, மற்றும்

|2008 நவம்பர் 11

38 மூலமாக மேட்டூர்—கூனாண்டியூர் வழித்தடத்தில் தினசரி 30 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், நகரப் பேருந்து தடம் எண் ஓ4 மற்றும் ஓ4ஏ பேருந்துகள் ஓமலூர்-கீரைக்காரனூர் (வழி) மேச்சேரி கூனாண்டியூர் தடத்தில் தினசரி 20 நடைகளும், மேச்சேரி—கீரைக்காரனூர் (வழி) கூனாண்டியூர் தடத்தில் 6 நடைகளும் என இயங்கி வருகின்றன. இதில் நகரப் பேருந்து தடம் எண் 15 மற்றும் 38 கூனாண்டியூரில் முறையே 4.30 மற்றும் 4.55 மணிக்கு புறப்பட்டு மேட்டூருக்கும், தடம் எண் ஓ4 கீரைக்காரனூரில் 5.15 மணிக்கு புறப்பட்டு கூனாண்டியூர் வழியாக மேச்சேரிக்கும் இயங்கி வருகின்றன. இதுவே, அப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவைக்குப் போதுமானதாகும்.

73—

பேருந்து வசதி

வினா எண் 44294—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை-வாட்டர்பால்ஸ் 3-வது டிவிசன் குடியிருப்பு பகுதி, வால்பாறை-J.M. பங்களா, வால்பாறை-கல்லாறு பகுதிக்கு காலை மற்றும் மாலையிலும் சோனாயாற்றுக்கு வந்து செல்லும் பேருந்துகளை கல்லாறு வரை நீட்டிக்கவும் மற்றும் வால்பாறை-தாய்முடி M.D. பகுதிக்கு காலை நேரத்திலும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை-வாட்டர்பால்ஸ் 3-வது டிவிசன் பகுதி: வால்பாறையிலிருந்து வாட்டர்பால்ஸ் 3-வது டிவிசன் குடியிருப்பு பகுதிக்கு செல்லும் சாலையானது மிகவும் பழுதடைந்து பயணிகள் போக்குவரத்திற்கு தகுதியற்ற நிலையில் அமைந்துள்ளது. இச்சாலை சீரமைக்கும் பட்சத்தில் பேருந்து இயக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வால்பாறை-ஜே.இ. பங்களா (ஜே.இ. பங்களா

என்பதே சரியான பெயராகும்) வரை ஒரு பேருந்து மூலம் தினசரி 2 நடைகளும், வால்பாறையிலிருந்து கல்லாறு பகுதிக்கு 6 பேருந்துகளின்மூலம் தினசரி 12 நடைகளும் இயங்கி வருகின்றன. வால்பாறையிலிருந்து கல்லாறு பகுதிக்கு 6 பேருந்துகளின்மூலம் தினசரி 12 நடைகள் இயங்கிவரும் பட்சத்தில் சோலையாற்றுக்கு இயக்கப்படும் பேருந்து கல்லாறு பகுதிக்கு நீட்டித்து இயக்கிட அவசியம் எழாது. தாய்முடி எம்டி பகுதி வால்பாறையிலிருந்து முடீஸ் செல்லும் பிரதான சாலையில் இடது புறமாக சுமார் 500 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. அப்பகுதியில் 30 பேருந்துகள் தினசரி 120 நடைகள் இயங்கி வருகின்றன.

74—

சுற்றுச் சுவர்

வினா எண் 25837—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், விளந்தை கிராமம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் விளந்தை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் வசதி இல்லை. பிரதான ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் தவிர காலி இடம் சுமார் 5 ஏக்கர் நிலம் உள்ளது. 200 மீட்டர் நீளத்திற்கு முள்வேலி நோயாளர் நலச் சங்க நிதியிலிருந்து அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார, நிலையத்தைச் சுற்றி சுற்றுச் சுவர் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

75—

ஓட்டுநர் நியமனம்

வினா எண் 28305—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கே. என். புதூர் சுகாதார நிலைய நோயாளி ஊர்திக்கு ஓட்டுநர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதியில், காடையாம்பட்டி ஒன்றியம், கே. என். புதூர் துணை ஆரம்ப சுகாதார நிலையமாகும். நடப்பாண்டில் மேற்படி உள்ள துணை சுகாதார நிலையமான கே. என். புதூருக்கு ஆம்புலன்ஸ் வாகனம் வழங்கப்படவில்லை. இன்றைய நிலையில் நோயாளி ஊர்தியாக ஜீப் வாகனத்தைதான் இன்றுவரை பயன்படுத்தி வருகிறார்கள் (வ.எண்.டி.சி.இ. 4808). மேலும் இதற்கென ஓட்டுநராக திரு. டி. ராமச்சந்திரன் என்பவர் பணிபுரிந்து வருகிறார்.

76—

படுக்கை வசதி மற்றும் சுற்றுச் சுவர்

வினா எண் 30013—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் மகப்பேறுக்கென படுக்கை வசதி செய்து சுற்றுச் சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டத்தில், பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. இதில் தற்போது இரண்டு படுக்கை வசதிகள் உள்ளது. சராசரியாக ஒரு மாதத்தில் 17 உள் நோயாளிகள் பயனடைகின்றனர். கடந்த ஓராண்டில் 99 பிரசவங்கள் நிகழ்ந்துள்ளன. மகப்பேறுக்கு தற்போதுள்ள வசதிகளே போதுமானதாக உள்ளன.

ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சரக்கப்பிள்ளையூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம் ஆறு படுக்கைகள் வசதி கொண்டது. இந்நிலையத்தில் பேறுகால அவசர சிகிச்சை மற்றும் இளம்சிசு கவனிப்பு மையம் செயல்படுகிறது. பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து ஓமலூர் அரசு மருத்துவமனை 8 கி.மீ. அருகாமையில் செயல்படுகிறது. சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 22 கி.மீ. தொலைவில் செயல்படுகிறது. பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போதுள்ள வசதிகளே போதுமானதாக உள்ளதால் மகப்பேறுக்கென படுக்கை வசதி செய்ய தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசாணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி.2) துறை, நாள்: 17-5-2007-ல் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியுதவி கோரப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைக்கப்பெற்றவுடன் சுற்றுச் சுவர் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

77—

படுக்கை வசதி

வினா எண் 30362—திரு. கோ. அரி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கம் அரசு மருத்துவமனையில் 22 படுக்கைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பேரம்பாக்கம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஏற்கெனவே 24 படுக்கை வசதிகள் உள்ளன. 24 படுக்கை வசதிகளில் 12 படுக்கைகள் நல்ல நிலையில் உள்ளன. மற்ற 12 படுக்கைகளின் கட்டில் மெத்தைகளை பயனாளிகள் நலச் சங்க நிதியின்கீழ் வசதி ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

78—

பரிசோதனை மையம்

வினா எண் 31655—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பொழிச்சலூர் ஊராட்சி பொது மருத்துவமனையை நவீனப்படுத்தி சுற்றுச் சுவர், ஆழ்துளைக் கிணறு, இரத்தப் பரிசோதனை மையம், அறுவை சிகிச்சை அரங்கு, அறுவைப் பிரிவு ஆகியவற்றை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், சைதாப்பேட்டை சுகாதார மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்தில் பொழிச்சலூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பொழிச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில், கிணறு, பஞ்சாயத்துமூலம் எடுக்கப்பட்டு தண்ணீர் எடுக்கப்படுகிறது. ஆழ்துளைக் கிணறுக்கான அவசியம் தற்போது எழவில்லை.

சுற்றுச் சுவர் முன்பக்கம் மட்டும் உள்ளது. மற்ற 3 பக்கங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு

2008 நவம்பர் 11]

வருகிறது. நோயாளிகள் நலச் சங்கம் மூலமாக சுற்றுப்புறம் சுகாதாரமாக வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரத்தப் பரிசோதனை மையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ளது. ஆய்வக உதவியாளர் மூலம் இரத்தப் பரிசோதனை செய்யப்படுகிறது. மலேரியா சம்மந்தப்பட்ட இரத்தப் பரிசோதனை செய்யப்படுகிறது.

அறுவை சிகிச்சை பிரிவு மற்றும் அறுவை அரங்கு ஏற்படுத்திட போதுமான இடவசதி மற்றும் பணியாளர்கள் இல்லை. பொழிச்சலூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் என்பதால் இங்கு அறுவை சிகிச்சைப் பிரிவு, அறுவை அரங்கு ஏற்படுத்த சாத்தியக் கூறுகள் இல்லை.

79—

தரம் உயர்த்துதல்

வினா எண் 37158—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதிக்குட்பட்ட சுண்டக்காமுத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தில் சுண்டக்காமுத்தூர் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. அரசாணை (நிலை) எண் 142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள்: 30-4-2007-ன்படி மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மதுக்கரை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்த ஆணை வெளியிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசின் கொள்கைப்படி ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமே தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இந்த ஊராட்சி ஒன்றியத்தில்,

ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டுள்ளதால் இதே ஊராட்சியில் உள்ள சுண்டக்காமுத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.

80—

கூடுதல் மின் விசிறி

வினா எண் 37225—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை அரசு மருத்துவமனையில் மின்சார வயர்களை மாற்றி கூடுதலாக மின் விசிறிகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்திலுள்ள (மானாமதுரை அரசு மருத்துவமனை உட்பட) அனைத்து மருத்துவமனைகளுக்கும் மின் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.1,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

81—

மருத்துவர் நியமனம்

வினா எண் 39805—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, கோட்டூர், வேட்டைக்காரன்புதூர் ஆகிய மருத்துவமனைகளில் பிஸியோதெரபி மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை, கோட்டூர், வேட்டைக்காரன்புதூர் ஆகிய மருத்துவமனைகளில் பிஸியோதெரபிஸ்டு (இயன்முறை சிகிச்சையாளர்) நியமனம் செய்வது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் தற்போது இல்லை.

82—

சிமென்ட் கூரை அமைத்தல்

வினா எண் 40650 திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, பெரும்பாக்கம் ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர், கூடுதல் கட்டடம் மற்றும் நோயாளிகள் அமர சிமெண்ட் கூரை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் பெரும்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பெரும்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி கோரப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைக்கப்பெற்றவுடன் சுற்றுச் சுவர் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பெரும்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் 1996-1997 திட்டப்பகுதி 2-ன்கீழ் ரூ.6 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. தற்போது பயனடையும் வெளி மற்றும்

உள் நோயாளிகள் எண்ணிக்கை, நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கை ஆகியவற்றிற்கு ஏற்றாற்போல் கட்டட வசதி போதுமானதாக உள்ளது. கூடுதல் கட்டட வசதி செய்வதற்கு தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

நோயாளிகள் அமர இருக்கை (மற்றும்) மேல்கூரை, ஊராட்சி மன்றத் தலைவர்மூலம் போடப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையம் வரை சிமெண்ட் சாலை வட்டார வளர்ச்சி அலுவலர்மூலம் போடப்பட்டுள்ளது.

83—

மருத்துவ நிலையத்தை நவீனப்படுத்தல்

வினா எண் 42505—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு யானைக்கால் நோய் மருத்துவ நிலையத்தினை நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு யானைக்கால் நோய் மருத்துவ நிலையத்தினை தற்போது நவீனப்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

84—

மருத்துவமனையைப் புதுப்பித்தல்

வினா எண் 42691—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, நத்தக்காடையூர் மருத்துவமனையினைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-2008 நிதியாண்டில், தாராபுரம், சுகாதாரப் பகுதி மாவட்டம் சார்ந்த நத்தகாடையூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டட பழுதுபார்ப்புப் பணிகளுக்காக ரூ.1.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும், பொதுப் பணித் துறை மூலம் பணிகளை நிறைவேற்ற தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

85—

ஆக்கிரமிப்பை அகற்றல்

வினா எண் 33097—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வீரசிங்கன்குப்பம் கிராம வேணிகுழி ஏரிக்கான வாய்க்கால் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) பண்ருட்டி வட்டம், வீரசிங்கன்குப்பம் கிராமம், வேணிகுழி ஏரிக்கரை வாய்க்கால் ஆக்கிரமிப்பை அகற்றிட பண்ருட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இது தொடர்பாக பண்ருட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண் 220/07-ல் வழக்கு நடைபெற்றுக் கொண்டுள்ளது. வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் ஆக்கிரமிப்பு அகற்றப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2008 நவம்பர் 11

86—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 39322—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், சூரக்குளம் பில்லருத்தான் ஊராட்சி, நவத்தாவு கிராம மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இவ்விடம் நீர்நிலைப்புறம்போக்கு என்பதால் இங்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

87—

அரசு நில ஆக்கிரமிப்பு

வினா எண் 39323—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி அரசு நில ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 15-4-2008 அன்று திருப்புவனம் மற்றும் திருப்புவனம் புதூர் தேசிய நெடுஞ்சாலை ஓரங்களில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது. இதர பகுதிகளில் ஆக்கிரமிப்பு ஏதேனும் இருப்பதாகத் தெரியவந்தால் உடனடியாக அகற்றப்படும்.

2008 நவம்பர் 11]

88—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 40715—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை சேடல் அணை பகுதியில் 50 ஆண்டுகளாக குடியிருந்து வருபவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இவ்விடம் நீர்பிடிப்புப் பகுதி என்பதால் பட்டா வழங்க இயலாது.

89—

பட்டா வழங்கல்

வினா எண் 42354—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, குனியமுத்தூர் நகராட்சி, 5-வது வார்டு அம்மன் காலனி, 20-வது வார்டு சுண்டாமுத்தூர் பிரதான சாலை, 12-வது வார்டு எம்.ஜி.ஆர். நகர் ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

90—

சொந்தக் கட்டடம்

வினா எண் 43723—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு நகரில் சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு நகரிலுள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

91—

மாணவியர் விடுதி

வினா எண் 38841—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், சூசையப்பர் பட்டணம் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியில் கூடுதலாக 50 மாணவியர் இடம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், சூசையப்பர் பட்டணம் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர்

2008 நவம்பர் 11]

விடுதியில் கூடுதலாக 50 மாணவியர் சேர்க்கையானது அவ்விடுதியில் உள்ள இடவசதி மற்றும் தேவையினைக் கருத்தில் கொண்டு, மாணவியர் சேர்க்கை எண்ணிக்கையை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

92—

வணிக வரி அலுவலகம்

வினா எண் 30923—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, சோமனூரில் வணிக வரி அலுவலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மையம்-2 சரகத்திற்குட்பட்ட சோமனூர் ஊராட்சி ஒன்றியத்தில் சோமனூர், கருமத்தபட்டி, செம்மண்டாம்பாளையம், கிட்டாம்பாளையம், காடுவெட்டிபாளையம், புதுவம்பள்ளி ஆகிய கிராமப் பஞ்சாயத்துக்கள் உள்ளன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் விசைத்தறிமூலம் காடாத்துணி உற்பத்தி செய்யும் தொழில் நடைபெற்று வருகிறது. சோமனூர் ஒன்றிய எல்லைக்குள் 17 பஞ்சாலைகளும், 2 பொறியியல் கம்பெனிகளும் இயங்கி வருகின்றன. சோமனூரில் சுமார் 1,235 வணிகர்கள் உள்ளனர். அவர்களில் 186 வணிகர்கள் மட்டுமே வரி செலுத்துபவர்கள். திருப்பூர் மையம்-2 அலுவலகத்தின் வருவாயில் 50% சோமனூரைச் சார்ந்த வணிகர்களால் செலுத்தப்படுகிறது. சோமனூர் வணிகர்கள் ஆண்டுக்கு 10.17 கோடி வரி செலுத்துகின்றனர். சோமனூரில் வணிகர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரித் தொகையினை அரசு கணக்கில் செலுத்த பாரத மாநில வங்கிக் கிளை அல்லது சார்நிலை கருவூலம் எதுவும் சோமனூரில் இல்லை. மேலும், வணிக வரித் துறை அலுவலகங்கள் ஒவ்வொரு வட்டத்தின் தலைமையிடங்களில் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்ட காரணங்களால்,

பல்லடம் தொகுதி சோமனூரில் வணிக வரி அலுவலகம் தொடங்க தற்சமயம் இயலாது.

93—

மரக்கன்றுகள் நடுதல்

வினா எண் 30670—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில் சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் குளம், குட்டைகளில் மரக்கன்றுகள் நட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதியில், சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் குளம், குட்டைகளில் மரக்கன்றுகள் நடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

94—

சமூக நலக் காடுகள்

வினா எண் 38329—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, வேம்பத்தூர் ஊராட்சிப் பகுதியில் சமூக நலக் காடுகள் வளர்க்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதிக்குட்பட்ட வேம்பத்தூர் ஊராட்சிப் பகுதியில் சுமார் 50 ஹெக்டேர் வருவாய் புறம்போக்கு நிலம் மரம் நடுவதற்கு ஏதுவான

பகுதியாக உள்ளதால் 2008-2009 ஆம் நிதியாண்டில் தேசிய காடு வளர்ப்புத் திட்டம், பொது இடங்களில் உயரமான மரக்கன்றுகள் நடும் திட்டம் மற்றும் டிபிஎபி திட்டத்தின்கீழ் மரக்கன்றுகள் நடுவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

95—

சாலை செப்பனிடல்

வினா எண் 14951—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கண்ணநல்லூர்-தளபதிசமுத்திரம் சாலையை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கண்ணநல்லூர்-தளபதிசமுத்திரம் சாலையானது திருநெல்வேலி நெடுஞ்சாலை கோட்டப் பராமரிப்பிலுள்ள மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் 7.6 கி.மீ. ஆகும். இதில் கி.மீ. 0/0-7/2 வரையுள்ள பகுதி ரூ.45.00 இலட்சம் செலவில் 2006-2007 ஆம் ஆண்டிற்கான சாலை உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய கி.மீ. 7/2-7/6 வரையிலான பகுதி ரூ.3.15 இலட்சம் செலவில் காலமுறை புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் ஜனவரி 2008-ல் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இச்சாலையானது தற்போது போக்குவரத்திற்கு ஏற்றதாக உள்ளது.

96—

மகளிர் சேவை இல்லம்

வினா எண் 35657—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 11

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் ஆதரவற்ற, வயதான மகளிர்களுக்கு சேவை இல்லம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டத்தில் 16 வயது முதல் 40 வயது வரை உள்ள ஆதரவற்ற பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவடைந்த பெண்கள் மற்றும் உடல் ஊனமுற்ற பெண்கள் பயனடையும் வகையில் அரசு சேவை இல்லம் ஒன்று இயங்கி வருகிறது. மேலும் கடலூரில் மாநில அரசின் மானியம் பெற்று புனித ஜோசப் குளுனி நிறுவனத்தின் புனித மேரி இல்லம் என்ற முதியோர் இல்லமும், மத்திய அரசின் மானியம் பெற்று மாதர் நல தொண்டு நிறுவனமும் மற்றும் சொசைட்டி பார் தி இம்பருவ்மென்ட் ஆப் வீக்கர் செக்ஷன் என்ற இரு முதியோர் இல்லமும் இயங்கி வருகிறது. எனவே வயதான ஆதரவற்ற மகளிர்க்கு சேவை இல்லம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

97—

கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர்

வினா எண் 33535—திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியம், பொய்கைப்பட்டி ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டடமும், சுற்றுச் சுவரும் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியத்தில் இயங்கும் பள்ளி ஆதி திராவிடர்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நல மேனிலைப்பள்ளி பொய்கைப்பட்டி எனவும், இப்பள்ளிக்கு நபார்டு வங்கிமூலம் கடன் பெறும் திட்டத்தின்கீழ் கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்ட சுமார் 54.82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிதி விடுவிக்கப்பட்டு தாட்கோமூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றது.

98—

இலவச கணினி பயிற்சி

வினா எண் 40071—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்ட படித்த, வேலையில்லாத ஆதி திராவிடர் மாணவ, மாணவிகளுக்கு இலவச கணினி பயிற்சி வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-2008 ஆம் நிதியாண்டில், படித்த மாணவ மாணவியர் 50 பேருக்கு கணினி பயிற்சி அளிக்க உத்தரவிடப்பட்டு CSC கணினி பயிற்சி மையம்மூலம் சிவகங்கையில் 25 மாணவ மாணவியர்களுக்கும், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் 25 மாணவ மாணவியர்களுக்கும் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

99—

விடுதிக்குக் கூடுதல் வசதி

வினா எண் 40344—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 11

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் அம்பேத்கர் மாணவர் விடுதிக்குக் கூடுதல் அறைகள், குளியல் அறைகள் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கோட்டூர் மாணவர் விடுதிக்குக் கூடுதல் அறைகள், குளியல் அறைகள், விடுதியின் தரைத் தளம் மற்றும் முதல் தளத்தில் மாணவர்கள் தங்குவதற்குப் போதுமானதாக உள்ளதால், கூடுதல் அறைகள் கட்டும் அவசியம் எழவில்லை.

100—

மீன் குஞ்சுகள் வளர்த்தல்

வினா எண் 43800—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பாலாறு-பொறந்தலாறு அணைகளில் மீன் குஞ்சுகள் வளர்த்து தனியாருக்கும் விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

பாலாறு, பொறந்தலாறு மீன் பண்ணையில் மீன் குஞ்சுகள் வளர்த்தெடுக்கப்பட்டு பாலாறு, பொறந்தலாறு நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்பட்டு வருவதுடன் அதிக அளவில் மீன் குஞ்சு வளர்த்தெடுக்கும் நேரங்களில் தனியாருக்கும் விற்பனை செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

பட்டியல் 5

1—

தியாகிகள் குடியிருப்பு

வினா எண் 30826—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு சமத்துவபுரம் போல தியாகிகள் குடியிருப்பு காலனி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்குத் தனியாக தியாகிகள் குடியிருப்பு காலனி அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

2—

தேர்வு பயிற்சி மையம்

வினா எண் 13788—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மை வகுப்பு இளைஞர்களுக்கு அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் IAS, IPS, தேர்வுப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

அகில இந்திய குடிமைப் பணி தேர்வுப் பயிற்சி மையம் ஒவ்வொரு ஆண்டும் பூர்வாங்க தேர்வு முதல் பயிற்சி அளிப்பதற்காக அரசுமூலம் முன்னோடி நாளிதழ்களில் விளம்பரம் கொடுத்து அதன் பேரில் அனைத்து மாவட்டங்களிலும் வரப்பெற்ற விண்ணப்பங்களைப் பரிசீலித்து

அவர்களுக்கு ஒரு நுழைவுத் தேர்வு நடத்தி 200 பயிற்சியாளர்கள் முழு நேர விடுதி மற்றும் உணவு வசதியுடனும், 100 பயிற்சியாளர்கள் பகுதி நேர பயிற்சிக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதில் 100 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் (ம) சிறுபான்மை வகுப்பு இளைஞர்களுக்கு முழு நேர பயிற்சியும், 50 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் (ம) சிறுபான்மை வகுப்பு இளைஞர்களுக்கு பகுதி நேர பயிற்சியும் அளிக்கப்படுகிறது. பயிற்சியாளர்கள் தங்குவதற்கான நல்ல இடவசதியுடன் மற்றும் இவர்கள் பயிற்சிக்கென குடிமைப் பணிக்கான விவரங்கள் தெரிந்த தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்கள் (விருப்பப் பாடம்) அதிக அளவில் சென்னை மாவட்டத்தில் மட்டுமே உள்ளனர். மேலும் பயிற்சிக் காலங்களில் கடந்த காலங்களில் தேர்ச்சி பெற்ற இ.ஆ.ப. மற்றும் இ.கா.ப. அதிகாரிகளால் ஊக்குவித்தல் பயிற்சி அளிக்கவும் சென்னை மாவட்டம் மட்டுமே ஏதுவாக இருக்கும் என்பதால் இதர மாவட்டங்களில் இப்பயிற்சி மையத்தினை தோற்றுவிக்க வழிவகை இல்லை.

3—

மின் மாற்றி இடமாற்றம்

வினா எண் 2667—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், லட்டூர் ஊராட்சி பள்ளி மைதானத்திலுள்ள மின்மாற்றியை வேறு இடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், லட்டூர் ஊராட்சி பள்ளி மைதானத்தில் உள்ள மின்மாற்றியை மாற்றியமைக்க சம்பந்தப்பட்ட பள்ளி விண்ணப்பம் கொடுத்து அதற்குண்டான மதிப்பீட்டுத் தொகையை செலுத்த முன்வரும்பட்சத்தில் மின்மாற்றியை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2008 நவம்பர் 11]

4—

சிறப்புப் பயிற்சி

வினா எண் 38928—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கு இந்திய ஆட்சிப் பணி (IAS) இந்திய காவல் பணி (IPS) போன்ற தேர்வுகளுக்கு மாநில, மாவட்ட அளவில் தனிப் பயிற்சி அளித்து புதுடெல்லியில் அகில இந்திய அளவில் சிறப்புப் பயிற்சியளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1999-2000 ஆண்டிற்கான, மாண்புமிகு தமிழக முதல்வரின் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் அடிப்படையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியவர்களுக்கென அகில இந்திய குடிமைப் பணி தேர்வுக்குப் பயிற்சி மையத்தை அமைத்து, அகில இந்திய குடிமைப் பணி தேர்வுக்குச் செல்லும் மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும், பயிற்சியின் தரத்தினை உயர்த்தி அத்தேர்வில் வெற்றிபெறும் தமிழகத்தைச் சார்ந்த மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் நோக்கத்தில் "அகில இந்திய குடிமைப் பணி தேர்வுப் பயிற்சி மையம்" என்ற பெயரில் சென்னையிலுள்ள அண்ணா நகரில் தொடங்கப்பட்டது.

2. அகில இந்திய குடிமைப் பணி தேர்வுப் பயிற்சி மையம் ஒவ்வொரு ஆண்டும் பூர்வாங்கத் தேர்வுக்கு பயிற்சி அளிப்பதற்காக முன்னோடி நாளிதழ்களில் விளம்பரம் கொடுத்து, அதன்பேரில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வரப்பெற்ற விண்ணப்பங்களைப் பரிசீலித்து அவர்களுக்கு ஒரு நுழைவுத் தேர்வு நடத்தி 98 ஆதி திராவிட இளைஞர்களுக்கும், 2 பழங்குடியின இளைஞர்களுக்கும் விடுதி மற்றும் உணவு வசதியுடன் முழு நேரப் பயிற்சியும், 49 ஆதி திராவிட இளைஞர்களுக்கும் ஒரு பழங்குடியின இளைஞருக்கும் பகுதி நேர பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. பூர்வாங்கத் தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு முதன்மைத் தேர்விற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

[2008 நவம்பர் 11

3. அழைப்பு விரிவுரையாளர்கள் முழு நேரம் மற்றும் பகுதி நேரமாக வகுப்புகள் நடத்துகின்றனர். வரலாறு, புவியியல், பொது நிர்வாகம், இந்திய பொருளாதாரம், நடப்பு நிகழ்வுகள், அறிவுத் திறன், பொது அறிவியல் (கட்டாயம் மற்றும் விருப்பப் பாடங்கள்) ஆகிய பாடப் பிரிவுகளில் பாடங்கள் நடத்தப்படுகின்றன. முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு புதுடில்லியில் நடைபெறும் நேர்காணல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டி அதற்கும் முன் மாதிரி நேர்காணல் தேர்வு (Mock Interview) நடத்தப்பட்டு அவர்களை புது டில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் மிகக் குறைந்த கட்டணத்தில் தங்கி நேர்காணல் தேர்வில் கலந்து கொள்ளவும் வசதி செய்து கொடுக்கப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் மாவட்டங்களைவிட மேற்கண்ட பயிற்சிகளுக்கு மாநிலத்தின் தலைநகரான சென்னையே ஏதுவான இடம் என்று கருதப்படுகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

5—

மின் கம்பங்களை மாற்றுதல்

வினா எண் 45920—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை பி.பாலதொழுவு, ராசாப்பாளையம் பகுதியில் பழுதடைந்துள்ள மின்சார வாரிய மின் கம்பங்களை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை பி.பாலதொழுவு, ராசாப்பாளையம் பகுதியில் பழுதடைந்ததாகக் கண்டறியப்பட்ட 6 மின் கம்பங்கள் 30-04-2008 அன்று புதிய மின் கம்பங்களாக மாற்றப்பட்டன.

2008 நவம்பர் 11]

6—

மின் வசதி

வினா எண் 46960—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?*

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கடையல் பேரூராட்சி, வலியஏலாவில் மின் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கடையல் பேரூராட்சிக்குட்பட்ட வலியஏலா பகுதியிலிருக்கும் குடியிருப்புதாரர்கள், வனத் துறையின் தடையின்மைச் சான்றிதழ் பெற்று மின்னிணைப்புப் பெற விண்ணப்பங்களை குலசேகரம் கிராமிய பிரிவு மின் வாரிய அலுவலகத்தில் பதிவு செய்தால் வாரிய விதிக்குட்பட்டு மின்னிணைப்பு வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

மகளிர் சுய உதவிக் குழு கட்டடம்

வினா எண் 2609—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், வல்லம் கொல்லமேடு பகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கட்டடம் கட்டித் தரப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில், *2003-2004* ஆம் நிதியாண்டில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒரு ஊராட்சிக்கு ஒன்று என்ற

அடிப்படையில் வல்லம் ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. எனவே, அதே ஊராட்சியைச் சேர்ந்த கொல்லமேடு பகுதிக்கென தனிக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

8—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 7159—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வேப்பிலான்குளம் ஊராட்சி, கண்டவிளை கிராமத்திற்கு தாமிரபரணி தண்ணீரை ஏற்றிட தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், வேப்பிலான்குளம் ஊராட்சி, கண்டவிளை கிராமம், ராதாபுரம் ஒன்றியத்தைச் சார்ந்தது அல்ல. வள்ளியூர் ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். கண்டவிளை கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தாமிரபரணி ஆற்று நீரும், ஆழ்துளைக் கிணற்று நீரும் வழங்கப்பட்டு வருகிறது. ஆதலால் தாமிரபரணி தண்ணீர் ஏற்றிட தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

9—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 7159—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி, கிழவனேரி கிராமத்திற்கு தாமிரபரணி தண்ணீரை ஏற்றிட தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு முன்வருமா?

2008 நவம்பர் 11]

விடை.—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், அச்சம்பாடு ஊராட்சி, கிழவனேரி கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் போதுமான அளவில் ஆற்று நீரும், ஆழ்துளைக் கிணற்று நீரும் வழங்கப்பட்டு வருகிறது. ஆற்றுக் குடிநீருக்கென தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

10—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 7329—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, பேர்பேரியான் குப்பம், மருவன் தெரு (மேற்கு தெரு) வில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அரசு முன்வருமா?

விடை.—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பண்ருட்டி தொகுதி, பேர்பேரியான் குப்பம், மருவன் தெரு பகுதிக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட்டு ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதிக்கு 500 மீட்டர் நீளத்திற்குப் பகிர்மானக் குழாய் அமைக்கப்பட்டு, 3 பொதுக் குழாய்கள் மற்றும் 40 வீட்டிணைப்புகள்மூலம் காலை, மாலை இரு வேளையும் 10,000 லிட்டர் வீதம் நாள் ஒன்றுக்கு 20,000 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 57 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. ஆகவே புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட தேவை தற்போது இல்லை.

11—

குடிநீர் இணைப்பு

வினா எண் 7532—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் உள்ள அன்வர்ஷா நகரில் புதியதாகக் குடிநீர் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு-18-ல் அமைந்துள்ள அன்வர்ஷா நகர் முஸ்லீம் வஃக்பு போர்டுக்குச் சொந்தமான பகுதியாகும். இங்குள்ள கட்டடங்கள் நகராட்சி அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ளன. மேலும் இப்பகுதியில் கட்டட உரிமையாளர்களுக்கும், வக்ஃபு போர்டுக்கும் நில உரிமை குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுவதால் அன்வர்ஷா நகர் பகுதியில் தற்போது குடிநீர் இணைப்பு வழங்க இயலாத நிலை உள்ளது. நீதிமன்ற இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

12—

குடிநீர் வழங்கல்

வினா எண் 8987—செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரத்திற்கு வைகை பேரணையிலிருந்து குழாய்மூலம் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திண்டுக்கல் நகருக்கு காமராஜ்சாகர் அணை, வைகை ஆறு (பேரணை ரெகுலேட்டர்), காவிரி ஆறு ஆகியவற்றை நீராதாரமாகக் கொண்டு மூன்று குடிநீர்த் திட்டங்கள் பயனில் உள்ளன. இத்திட்டங்களின்மூலம் நாள் ஒன்றுக்கு 19.90 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, திண்டுக்கல் நகருக்கு வைகை பேரணையிலிருந்து குழாய்மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

13—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 12267—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, தஞ்சாக்கூர் கிராமத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், தஞ்சாக்கூர் ஊராட்சி மற்றும் குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு 31-12-2007 அன்று முதல் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

14—

செவிலியர் உதவியாளர் பயிற்சி

வினா எண் 14165—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 11]

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் மகளிருக்கு வழங்கப்பட்ட பெண் செவிலியர் உதவியாளர் பயிற்சி நிறுத்தப்பட்டுள்ளதை மீண்டும் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

2006-07 மற்றும் 2007-08 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சித் திட்டத்தில் 228 மகளிருக்கு செவிலியருக்கான பயிற்சி ரூ.16,97,100/- (ரூபாய் பதினாறு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து நூறு மட்டும்) செலவில் நடத்தப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப இப்பயிற்சி தொடர்ந்து நடத்தப்படும்.

15—

சுனாமி திட்டப் பணிகள்

வினா எண் 44904—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, சதுரங்கப்பட்டினம், பக்கிங்காம் கால்வாயில் பாலமும், பெருமாள்சேரி வரை தார்ச் சாலையும் அமைத்து, கிழக்குக் கடற்கரைச் சாலையுடன் இணைத்து, சுனாமி திட்டத்தில் பணியை நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பக்கிங்காம் கால்வாய் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. சாலைகள் அமைக்க வேண்டிய பகுதியில் உள்ள நிலங்கள் அனைத்தும் பட்டா பெறப்பட்டுள்ள தனியார் நிலங்களாக உள்ளது. இப்பணியை சுனாமி திட்டத்தில் நடைமுறைப்படுத்த பிரேரணை ஏதும் தற்போது ஆய்வில் இல்லை.

2008 நவம்பர் 11]

16—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 5095—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் ஒன்றியம், தலையுடையவர்கோவில் பத்து ஊராட்சியைச் சார்ந்த கருவிழந்தநாதபுரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் ஒன்றியம், தலையுடைவர்கோவில் பத்து ஊராட்சியைச் சேர்ந்த கருவிழந்தநாதபுரத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 17-3-2008 முதல் செயல்பட்டு வருகிறது.

17—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 7845—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, மோடிபட்டி, ரெவின்யூ நகர், சின்னவீரம்பட்டி, சோண்நகர் மாவட்டப்பு செட்டில்மெண்ட், மைவாடி கருப்புசாமி புதூர், ஆண்டியக்கவுண்டனூர் பெரிசனம்பட்டி, பூலாங்கிணறு மில்கேட் ஆகிய பகுதிகளில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

1. மோடிப்பட்டி, ரெவின்யூ நகர்

மோடிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் மோடிப்பட்டி-2 அங்காடியில் மொத்தம் 804 குடும்ப

அட்டைகள் உள்ளன. இதில் ரெவின்யூ நகரில் 300 குடும்ப அட்டைகளும், தம்பநகரில் 179 குடும்ப அட்டைகளும் உள்ளன. இம்மூன்று பகுதிகளின் குடும்ப அட்டைதாரர்களும் மோடிப்பட்டி கடை எண் 2-ல் அத்தியாவசியப் பொருட்களை பெற்று வருகின்றனர். இம்மூன்று பகுதிகளுக்கும் கடை எண் 2-க்கும் இடையே 1 கிலோ மீட்டர் அளவு தூரம் மட்டுமே உள்ளதால், தற்போது நடைமுறையிலுள்ள அரசு ஆணையின்படி இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் இடையே 1.5 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்ற விதி இருப்பதால், இப்பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

2. சின்னவீரம்பட்டி, சேரன் நகர்

உடுமலை வட்டம், சின்னவீரம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் சின்னவீரம்பட்டி அங்காடிக்கு இணைக்கப்பட்டுள்ள மொத்த குடும்ப அட்டைகள் 1262, இதில், ஏற்கெனவே இந்திரா நகர் பகுதிநேர அங்காடி 206 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. மீதம் உள்ள 1056 குடும்ப அட்டைகளில் சேரன் நகர் பகுதியில் 126 கார்டுகள் மட்டுமே உள்ளது. தாய் அங்காடிக்கும், சேரன் பகுதிக்கும் இடையே 1 கிலோ மீட்டர் தூரம் மட்டுமே உள்ளதால், தற்போது நடைமுறையிலுள்ள அரசு ஆணையின்படி சேரன் நகர் பகுதியில் பகுதிநேர அங்காடி அமைக்க வாய்ப்பில்லை.

3. மாவடப்பு செட்டில்மெண்ட், மைவாடி கருப்புசாமி புதூர்

மைவாடி நியாய விலைக் கடையிலிருந்து கருப்புசாமி புதூர் கிராமத்தின் குடும்ப அட்டைகளைப் பிரித்து கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க. 9550/04-கீ.9 நாள் 18-8-2005-ன்படி கருப்புசாமி புதூரில் நியாய விலைக் கடை அமைக்கப்பட்டு 27-10-2005 ஆம் தேதி முதல் அங்காடி செயல்பட்டு வருகிறது.

4. ஆண்டியக் கவுண்டனூர்

குடிமங்கலம் வட்டம், ஆண்டியக் கவுண்டனூர், நியாய விலைக் கடையில் மொத்தம் 425 குடும்ப அட்டைகளே உள்ளதால், இதிலிருந்து குடும்ப அட்டைகள் பிரிக்கப்படும்பட்சத்தில், தாய்க் கடை நட்டத்தில் இயங்க வாய்ப்புள்ளது. எனவே வேறொரு பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2008 நவம்பர் 11]

5. பெரிசனம்பட்டி, பூலாங்கிணறு மில்கேட்

உடுமலை வட்டம், பூலாங்கிணறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் மில்கேட் என்ற பகுதியில் ஒரு நியாய விலைக் கடை நடத்தப்பட்டு வரப்படுகின்றது. இக்கடையில் மொத்தம் 723 குடும்ப அட்டைகள் உள்ளன. கென்னடி நகர், என்.ஜி. நகர், என்.எஸ். என். நகர் ஆகிய பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் அவர்களுக்காக அத்தியாவசியப் பொருட்கள் மேற்படி கடையிலிருந்து பெற்று வருகின்றனர். நியாய விலைக் கடைகளுக்கும், மேற்கண்ட பகுதிகளுக்கும் இடையே உள்ள தூரம் 1 கிலோ மீட்டர் ஆகும். எனவே பகுதிநேரக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

18—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 8537—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, செங்கம்புத்தேரி கிராமத்தில் செயல்பட்டு வரும் கூட்டுறவுக் கடை, எள்ளுப்பாறை கிராமம் மற்றும் கரைப்பூண்டியிலிருந்து சாணார்பாளையத்திற்கும் புதிய பகுதிநேரக் கூட்டுறவு நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, செங்கம்புத்தேரி (தாய்க் கடை) நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள 442 குடும்ப அட்டைகளிலிருந்து எள்ளுப்பாறை கிராமத்தைச் சார்ந்த 206 குடும்ப அட்டைகளைப் பிரித்த பின்னர் தாய்க் கடையில் வெறும் 236 குடும்ப அட்டைகளே இருக்கும் என்பதால், நெறிமுறைப்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை எள்ளுப்பாறை கிராமத்தில் திறக்க இயலாது. சாணார்பாளையத்தில் புதிய பகுதிநேரக் கடை 7-9-2007 முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

19—

நியாய விலைக் கடை

வினா எண் 13340—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயத்திலுள்ள ரங்காம்பாளைய நியாய விலைக் கடையை கணபதிபாளையத்திலுள்ள நியாய விலைக் கடைக்கு மாற்ற அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயத்திலுள்ள தம்மரெட்டிபாளையம் பகுதியைச் சேர்ந்த 166 குடும்ப அட்டைகளும், ஆதி திராவிடர் நத்தம் பகுதியைச் சேர்ந்த 12 குடும்ப அட்டைகளையும், கணபதிபாளையம் முழுநேர அங்காடியுடன் இணைத்து 1-4-2008 முதல் செயல்பட்டு வருகிறது.

20—

வைத்தியநாதன் குழு பரிந்துரை

வினா எண் 28905—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கூட்டுறவுத் துறையில் வைத்தியநாதன் குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குறுகிய காலக் கடன் வழங்கும் கூட்டுறவு கட்டமைப்புகளுக்குப் புத்துயிரூட்டும்பொருட்டு மத்திய அரசு அமைத்த பேராசிரியர் வைத்தியநாதன் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளைச்

2008 நவம்பர் 11]

செயல்படுத்தும்பொருட்டு, மாநில அரசு, நபார்டு வங்கி மற்றும் மத்திய அரசுடன் 3-1-2008 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. மேற்கூறிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் செயலாக்கத்தினைக் கண்காணிக்கும்பொருட்டு, மாநில மற்றும் மாவட்ட அளவிலான அமலாக்க மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

21—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 30064—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதி, மோட்டூர் நட்சத்திர கோவில், எள்ளுபாறை, சாணார்பாளையம் ஆகிய கிராமங்களுக்குப் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கலசபாக்கம் தொகுதியில் நட்சத்திர கோவில் கிராமத்தைச் சேர்ந்த 110 குடும்ப அட்டைதாரர்கள் 1 கி.மீ. தூரத்தில் செயல்பட்டு வரும் மோட்டூர் பகுதிநேர நியாய விலைக் கடையிலிருந்து அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். எனவே, தற்போது நடைமுறையில் உள்ள நிபந்தனைகளின்படி நட்சத்திர கோவில் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

செங்கம்புத்தேரி தாய் நியாய விலைக் கடையிலிருந்து எள்ளுப்பாறை கிராமத்தைச் சார்ந்த 206 குடும்ப அட்டைகளைப் பிரித்த பின்னர், தாய்க் கடையில் வெறும் 236 குடும்ப அட்டைகளே இருக்கும் என்பதால், தற்போது நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகளின்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை எள்ளுப்பாறை கிராமத்தில் திறக்க இயலாது. மேலும், சாணார்பாளையம் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை 7-9-2007 முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

[2008 நவம்பர் 11

22—

நியாய விலைக் கடை

வினா எண் 32041—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், விட்டிலாபுரம் காலனி, எடையூர் ஊராட்சி, கொத்திலமேடு பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம், விட்டிலாபுரம் காலனியில் உள்ள 380 குடும்ப அட்டைதாரர்கள் இப்பகுதியிலிருந்து 1/2 கிலோ மீட்டர் தூரத்தில், வயலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் 526 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் விட்டிலாபுரம் முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து, அவர்களுக்கான அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். விட்டிலாபுரம் நியாய விலைக் கடைக்கும், விட்டிலாபுரம் காலனிக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கி.மீ.-க்கும் குறைவாக உள்ளதால், இப்பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், எடையூர் ஊராட்சி, கொக்கிலமேட்டுப் பகுதியில் 195 குடும்ப அட்டைகளுடன் இப்பகுதி மக்கள் 1.00 கி.மீ. தூரத்தில், காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் மொத்தம் 501 குடும்ப அட்டைகளைக் கொண்டு முழுநேரக் கடையாக செயல்பட்டு வரும் வெண்புருஷம் நியாய விலைக் கடையிலிருந்து அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். வெண்புருஷம் நியாய விலைக் கடைக்கும், கொக்கிலமேடு பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கி.மீ.-க்கும் குறைவாக உள்ள நிலையில், கொக்கிலமேட்டில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

23—

முழுநேர நியாய விலைக் கடை

வினா எண் 44165—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

ஓமலூர் தொகுதி, தும்பிப்பாடி ஊராட்சி, சந்தை தடம் பகுதியில் முழுநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ஓமலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தும்பிப்பாடி, சந்தை தடம் பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் ஆத்துக்காடு நியாய விலைக் கடையில் பொருட்களைப் பெற்று வருகின்றனர். இவ்வங்காடியில் 781 குடும்ப அட்டைகள் உள்ளன. தும்பிப்பாடி ஊராட்சி, சந்தை தடம் பகுதி மேற்படி அங்காடியில் இருந்து அரை கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்துள்ளது. மேலும், அப்பகுதியில் எம்.பி. 145 தும்பிப்பாடி என்ற பகுதிநேரக் கடை 351 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகின்ற நிலையில் சந்தை தடம் பகுதிக்குத் தனியாக முழுநேர நியாய விலை அங்காடியோ அல்லது பகுதிநேர நியாய விலை அங்காடியோ அமைக்கசாத்தியக்கூறுகள் இல்லை.

24—

கூட்டுறவு வங்கிக் கடன்

வினா எண் 47073—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள மலைவாழ் மக்களுக்குக் கூட்டுறவு வங்கிகள்மூலம் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், நகர வங்கி, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, கோயம்புத்தூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் இரண்டு கிளைகள் ஆகிய வங்கிகளின்மூலம் 50 மலைவாழ் மக்களுக்கு கடந்த நான்காண்டுகளில் ரூ. 2.04 இலட்சம் வரை கடன் வழங்கப்பட்டுள்ளது. மலைவாழ் மக்கள் கடன் கேட்கும்பட்சத்தில் தகுதிகளுக்குட்பட்டு கடன் வழங்கப்படும்.

[2008 நவம்பர் 11

25—

விலை நிர்ணயம்

வினா எண் 43414—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மரவள்ளிக் கிழங்குக்கு விலை நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

வேளாண் / தோட்டக்கலை விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யவும் மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை தலைவராகக் கொண்ட தமிழ்நாடு விவசாய மேம்பாட்டுக் குழுவும் இந்தக் குழுவிற்கு ஆலோசனை வழங்கும் வகையில் மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட சிறப்புக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுக்கள்மூலம் வேளாண் மற்றும் தோட்டக்கலை விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான உரிய பிரேரணையினை மரவள்ளிக் கிழங்கு அதிகம் பயிரிடப்படும் மாவட்டங்களான சேலம், நாமக்கல், விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர், திருச்சி மற்றும் திண்டுக்கல் மாவட்ட அலுவலர்களிடம் இருந்து பெற்று ஒட்டுமொத்த பிரேரணையினை மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் இயங்கும் விளைபொருட்கள் விலை நிர்ணயக் குழுவின் முடிவிற்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் விவசாயிகள் பயிரிடும் மரவள்ளிக் கிழங்கிற்கான விலை நிர்ணயம், எடை, எடை கழிவு போன்ற பிரச்சினைகள் தொடர்பாக அவ்வப்போது மாவட்ட நிர்வாகத்தால் விவசாயிகள், சவ்வரிசி, ஸ்டார்ச் உற்பத்தி செய்யும் ஆலை உரிமையாளர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் அடங்கிய முத்தரப்புக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டு, முத்தரப்புக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

2008 நவம்பர் 11]

26—

சார்பு நீதிமன்றம்

வினா எண் 54524—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரத்திலுள்ள புதிய நீதிமன்ற வளாகத்தில் விரைவு நீதிமன்றம் மற்றும் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரத்தில் புதிய விரைவு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் தாம்பரத்தில் சார்பு நீதிமன்றம் அமைப்பது குறித்த அறிவிப்பு 2008-2009 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இதுகுறித்த செயற்குறிப்புமீது தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

27—

தொழில்நுட்பப் பாடப் பிரிவு

வினா எண் 51127—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, கோணம், அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் காற்றாலை மின்சக்தி தொழில்நுட்பப் பாடப் பிரிவு (Wind Energy Technology) தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 நவம்பர் 11

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) விளவங்கோடு தொகுதி, கோணம், அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் காற்றாலை மின்சக்தி தொழில்நுட்பப் பாட பிரிவு தொடங்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

28—

கூடுதல் நகரப் பேருந்து

வினா எண் 13077—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூரிலிருந்து தாரமங்கலம் வழியாக சித்தர் கோவிலுக்கு O-16 நகரப் பேருந்து மற்றும் சேலம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து சித்தர்கோவில், எளம்பிள்ளை வழி பெருமாகவுண்டம்பட்டி வேம்படி தாளம்வரை கூடுதல் நகரப் பேருந்து விடவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம் மூலமாக நகரப் பேருந்து தடம் எண் O-16 ஓமலூரிலிருந்து எளம்பிள்ளை வழியாக சித்தர் கோவில் வரை 4 நடைகளும், எளம்பிள்ளை வரை 10 நடைகளும், சேலத்திலிருந்து சித்தர்கோவில் எளம்பிள்ளை, பெருமாகவுண்டம்பட்டி வழியாக வேம்படிதாளம் வரை தடம் எண் 68 மற்றும் 68ஏ மூலமாக தினசரி 10 நடைகள் மற்றும் சேலத்திலிருந்து சித்தர்கோவில், எளம்பிள்ளை வரை தடம் எண் 68, 68ஏ, 68பி, 91, 107 மற்றும் 75 தடப் பேருந்துகள்மூலம் தினசரி 90 நடைகள் இயக்கப்படுகின்றது. எளம்பிள்ளை, வேம்படிதாளம் தடத்தில் தடம் எண் 15 பேருந்துமூலம் தினசரி 76 நடைகள் இயக்கப்படுகின்றன. இது தவிர தடம் எண் 65 மற்றும் 65ஏ தடப்பேருந்துகள்மூலம் சேலத்திலிருந்து அரியானூர், வேம்படிதாளம், பெருமாள்கவுண்டம்பட்டி, எளம்பிள்ளை வழியாக தினசரி 26 நடைகளும், தடம் எண் 55 மூலம் சேலத்திலிருந்து அரியானூர்

2008 நவம்பர் 11]

வழியாக வேம்படிதாளம் வரை தினசரி 32 நடைகளும், இயக்கப்பட்டு வருவதால் இவ்வழித்தடங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்கிட வழிவகையில்லை.

29—

நகரப் பேருந்துகள்

வினா எண் 13079—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலிருந்து எளம்பிள்ளை வரை இயங்கி வந்த தடம் எண் 68சி, 107, 93 ஆகிய நகரப் பேருந்துகள் மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம் மூலமாக நகரப் பேருந்து தடம் எண் 107 மற்றும் 93 அதற்கு அனுமதி வழங்கப்பட்ட வழித்தடங்களில் கீழ்க்கண்டவாறு இயங்கி வருகின்றது.

வ. எண்	தடம் எண்	இயக்கப்பட்டு வரும் வழித்தடம்	நடைகள்
1.	107	சேலம்-புதுப்பாளையம் (வழி) எளம்பிள்ளை சேலம்-பாப்பம்பாடி (வழி) எளம்பிள்ளை சேலம்-எளம்பிள்ளை	4 4 6
2.	93	சேலம்-பனங்காடு (வழி) சேலம் புதிய பேருந்து நிலையம், பழைய சூரமங்கலம்	10
		சேலம்-போடிநாய்க்கன்பட்டி (வழி) சேலம் புதிய பேருந்து நிலையம், பழைய சூரமங்கலம்	10

மேலும், தடம் எண் 68சி, நகரப் பேருந்து என இதுவரை சேலம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

30—

புதிய தடத்தில் பேருந்து

வினா எண் 26435—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், குன்னத்தூர் - சதுரங்கப்பட்டினம் - திருக்கழுக்குன்றம் புதிய தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

குன்னத்தூர் - சதுரங்கப்பட்டினம் - திருக்கழுக்குன்றம் தடத்தின் நீளம் 22.0 கி.மீ. ஆகும். இத்தடத்தில் திருக்கழுக்குன்றத்திலிருந்து சதுரங்கப்பட்டினம் வரை 124 நடைகளும், சதுரங்கப்பட்டினத்திலிருந்து மாமல்லபுரத்திற்கு குன்னத்தூர் கூட்டுச் சாலை வழியாக தினசரி 50 நடைகளும் பேருந்து வசதி உள்ளது. புதுப்பட்டினம்-மாமல்லபுரம் சாலையில் உள்ள குன்னத்தூர் கூட்டுச் சாலையிலிருந்து, குன்னத்தூர் 0.5 கி.மீ. தூரத்தில் உட்புறமாக அமைந்துள்ளது. இது நடந்து செல்லக் கூடிய தூரமாகும். எனவே தற்பொழுது உள்ள போக்குவரத்து வசதியே போதுமானது என கருதப்படுகிறது.

31—

பேருந்து வசதி

வினா எண் 28745—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், தத்தலூர் கிராமத்திற்கு பள்ளி நேரத்தில் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தத்தலூர் கிராமம், திருக்கழுக்குன்றத்திலிருந்து மதுராந்தகம் செல்லும் சாலையில் 20-வது கி.மீ.-ல் உள்ள தத்தலூர் கூட்டுச் சாலையிலிருந்து இடது புறமாக உட்புறம் 0.8 கி.மீ. தூரத்தில் அமைந்து உள்ளது. இத்தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்

2008 நவம்பர் 11]

(விழுப்புரம்) லிமிடெட், காஞ்சிபுரம் மண்டலம் தினசரி 38 நடைகளை இயக்குகிறது. இந்தப் பேருந்து வசதிமூலம் தத்தலூர் கிராம மாணவர்கள் தத்தலூர் கூட்டுச் சாலை வந்து பயணம் செய்கின்றனர். தத்தலூர் பிரதான சாலையிலிருந்து 0.8 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளதால் இது நடந்து செல்லக் கூடிய தூரம். மேலும், இத்தடத்தில் நகரத் தடம் டி12 காலை, மாலை வேளைகளில் திருக்கழுக்குன்றம் வந்து பயிலும் மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் இயக்கப்படுகிறது. எனவே, தத்தலூர் கிராமத்திற்குத் தனியாக பள்ளி நேரத்தில் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் இல்லை.

32—

புதிய பேருந்து

வினா எண் 32430—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கரூரிலிருந்து கீரனூருக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் உள்ள கரூர் - கீரனூர் (வழி) புலியூர், உப்பிடமங்கலம், மஞ்சநாயக்கன்பட்டி, பி. உடையாப்பட்டி வழித்தட நீளம் 39.8 கிமீட்டர் ஆகும். மேற்படி கீரனூர் கிராமம் கீழ்க்கண்டுள்ளவாறு கரூரிலிருந்து நேரிடையாகவும், பகுதி, பகுதியாகவும் போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது.

1. கரூர் – கீரனூர் நேரடி பேருந்து வசதி:

	தினசரி இயக்கப்படும் பேருந்துகள்	நடைகள்
அ. கழகப் பேருந்து கரூர்-கீரனூர் (வழி) உப்பிடமங்கலம், பி. உடையாப்பட்டி	1	2
ஆ. தனியார் பேருந்து கரூர்-மணப்பாறை (வழி) மாயனூர், பி. உடையாப்பட்டி கீரனூர்	1	6

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. கரூர்—பஞ்சப்பட்டி மற்றும் பஞ்சப்பட்டி—கீரனூர் இணைப்பு வழித்தடம்:

	தினசரி இயக்கப்படும் பேருந்துகள்	நடைகள்
1. கரூர்—பஞ்சப்பட்டி வழித்தடம்		
அ. கழக பேருந்து		
கரூர்-பஞ்சப்பட்டி (வழி) சேங்கல்	3	16
கரூர்-பி. உடையாப்பட்டி	2	4
குளித்தலை-கரூர் (வழி) பஞ்சப்பட்டி	1	1
திருச்சி-கரூர் (வழி) பஞ்சப்பட்டி	1	1
ஆ. தனியார் பேருந்து		
குளித்தலை-கரூர் (வழி) பஞ்சப்பட்டி	1	6
2. பஞ்சப்பட்டி—கீரனூர் வழித்தடம்:		
குளித்தலை-கொசூர் (வழி) பஞ்சப்பட்டி	1	6
குளித்தலை-கொட்டாம்பட்டி	2	4
குளித்தலை-வாழ்வார்மங்கலம்	1	2

33—

புதிய வழித்தடத்தில் பேருந்து

வினா எண் 42813—திரு. வெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியிலிருந்து கொப்பம்பட்டி, செங்காட்டூர், முத்தாம்பட்டி, ஓலைப்பட்டி வழியாகப் புதிய பேருந்து வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மேச்சேரியிலிருந்து கொப்பம்பட்டி, செங்காட்டூர், முத்தாம்பட்டி, ஓலைப்பட்டி வழித்தடத்தில் செங்காட்டூருக்கும்

2008 நவம்பர் 11]

முத்தாம்பட்டிக்கும் இடையே ஆள் இல்லாத இரயில்வே கேட் உள்ளதால் இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கிட இயலாது. இருப்பினும் மேச்சேரியிலிருந்து கொப்பம்பட்டி செங்காட்டூர், கரட்டூர், கோவிலூர், தொளசம்பட்டி வழியாக தடம் எண் எஸ் 11 மற்றும் ஓ8 பேருந்துகள் மூலம் தினசரி 7 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும் மேச்சேரியில் இருந்து முத்தாம்பட்டி, ஓலைப்பட்டி வழியாக 5 நகரப் பேருந்துகள் மற்றும் ஒரு புறநகரப் பேருந்துமூலம் 39 நடைகள் இயங்கி வருகின்றன. இது தவிர தனியார் பேருந்துகள் இரண்டுமூலம் தினசரி 8 நடைகள் இயக்கப்படுகின்றன. இதுவே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

34—

புதிய நகரப் பேருந்து

வினா எண் 42817—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், மேட்டூரிலிருந்து மேச்சேரிக்கு, காக்கையன் தெரு, எம்.டி. தெரு, அமெரிக்கா காடு, வாத்து வளவு, புருடையன் தெரு வழியாக புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல நகரப் பேருந்துகள் தடம் எண் 13, 13ஏ, 25ஏ, 37 மற்றும் 38 மூலமாக மேட்டூரிலிருந்து குஞ்சாண்டியூர் வழியாக ஆண்டிக்கரை வரை தினசரி 32 நடைகள் இயக்கப்படுகின்றன. ஆண்டிக்கரையிலிருந்து நலுங்குபள்ளம் வரையிலான 1.8 கி.மீட்டர் வரை மட்டுமே சாலை வசதி உள்ளது. நலுங்குபள்ளம் - பெருமாள் கோயில் (வழி) காக்கையன் தெரு, அமெரிக்கா காடு, எம்.டி.தெரு, வாத்து வளவு வரையிலான 3.2 கி.மீட்டர் பாதை கரடு முரடாக, கனரக வாகனங்கள் இயக்கிட இயலாத நிலையில் உள்ளது. எனவே, இவ்வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கிட இயலவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

35—

பேருந்து நீட்டிப்பு

வினா எண் 43331—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, கருக்கல்வாடி ஊராட்சி, குடியிருப்புப் பகுதி பேருந்து நிறுத்தத்தில் எல்.எஸ்.எஸ். பேருந்து நின்று செல்லவும், விருதாசாம்பட்டி ஊராட்சி, விருதாசாம்பட்டி வரை வந்து செல்லும் 011 எண் பேருந்தை மல்லப்பனூர் வரை நீட்டிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல நகரப் பேருந்து தடம் எண் 86 சேலத்தில் இருந்து ஜங்சன், கொல்லப்பட்டி, கருக்கல்வாடி மற்றும் முத்துநாயக்கன்பட்டி வழியாக ஓமலூர் வரை சாதாரண நகரப் பேருந்தாக தினசரி 4 நடைகள் இயங்கி வருகின்றது. இந்நடைகள் அனைத்தும் கருக்கல்வாடி குடியிருப்புப் பகுதி பேருந்து நிறுத்தத்தில் நின்று பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்கின்றன.

தடம் எண் ஓ11 ஓமலூரிலிருந்து தாரமங்கலம், தொளசம்பட்டி வழியாக விருதாசாம்பட்டி வரை தினசரி 4 நடைகள் இயங்கி வருகிறது. இந்நடைகளை மல்லப்பனூர் வரை நீட்டிக்கும்போது, விருதாசாம்பட்டி கிராம பயனாளிகள் குறிப்பாக பள்ளி மாணவர்கள் பாதிப்படைவர். எனினும், மல்லப்பனூர் கிராமம் வழியாக நகரப் பேருந்துகள் தடம் எண் 11, 11இ, 16 மற்றும் 27 மூலமாக தினசரி 38 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே, மல்லப்பனூர் கிராம மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

36—

பேருந்து வசதி

வினா எண் 43978—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) வால்பாறை, நல்லகாத்து குடியிருப்புப் பகுதிக்குக் காலையிலும் மாலையிலும் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையிலிருந்து நல்லகாத்து குடியிருப்புப் பகுதி வழியாகப் பேருந்து ஒன்று தினசரி 2 நடைகள் இயக்கப்பட்டு வந்தது. தற்போது இச்சாலை மிகவும் பழுதடைந்து பேருந்து போக்குவரத்திற்குத் தகுதியற்ற நிலையில் உள்ளதால், பேருந்து இயக்கம் நிறுத்தப்பட்டது. இச்சாலை சீரமைக்கப்பட்ட பின்னர் பேருந்து தொடர்ந்து இயக்கப்படும்.

37—

பேருந்து வசதி

வினா எண் 44300—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பொள்ளாச்சி—வில்லோனிக்கும், பொள்ளாச்சி—வால்பாறைக்கு இரவு 1 மணிக்கும் மற்றும் வால்பாறை நீர்வீழ்ச்சி ஊமாண்டை முடக்கு வழியாகப் பேருந்து இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், பொள்ளாச்சியிலிருந்து வில்லோனி பகுதிக்கு 3 பேருந்துகளின் மூலம் தினசரி 6 நடைகள் இயக்கி வருகிறது. தற்போது திருப்பூர்—வால்பாறை வழித்தடப் பேருந்து ஏற்கெனவே பொள்ளாச்சியிலிருந்து இரவு 1.00 மணிக்கு வால்பாறைக்குப் புறப்பட்டுச் செல்லும் வண்ணம் இயங்கி வருகிறது. வால்பாறையிலிருந்து ஊமாண்டி முடக்கு (ஊமாண்டி மொடக்கு என்பதே சரியான பெயராகும்) செல்லும்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2008 நவம்பர் 11

சாலையானது மிகவும் பழுதடைந்து பேருந்து போக்குவரத்திற்குத் தகுதியற்ற நிலையில் அமைந்துள்ளது. இச்சாலை சீரமைக்கும் பட்சத்தில் பேருந்து இயக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

38—

பேருந்து வசதி

வினா எண் 47082—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி, மன்னம் பகுதிக்கு பேருந்து இயக்கவும், காளியாபுரம் ஊராட்சி, கோட்டூர்—நரிக்கல்பதி வரும் பேருந்தினை காலையில் இயக்கவும், தென்சித்தூர் ஊராட்சி, தடம் எண் 10 பேருந்தினை மாலை நேரத்தில் தென்சித்தூர் வழியாக வந்து செல்லவும் உடுமலை—ஆனைமலை தடம் பேருந்தினை தென்சித்தூர் வழியாக செல்லவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், இரு நகரப் பேருந்துகளின்மூலம் தினசரி 4 நடைகள் பொள்ளாச்சியிலிருந்து மன்னம் பகுதிக்கும், ஒரு நகரப் பேருந்துமூலம் தினசரி 6 நடைகள் பொள்ளாச்சியிலிருந்து கோட்டூர் வழியாக நரிக்கல்பதிக்கும் இயக்கி வருகிறது.

பொள்ளாச்சியிலிருந்து தென்சித்தூர் (சோமந்துறை சித்தூர்) பகுதிக்கு அரசு மற்றும் தனியார் பேருந்துகள் (6 + 5 = 11) 11 பேருந்துகள் பல்வேறு கிராமங்கள் வழியாக தினசரி 108 நடைகள் அதிகாலை முதல் இரவு வரை இயங்கி வருகிறது. உடுமலை—ஆனைமலை (வழி) தென்சித்தூர் வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாகும். இச்சுற்று வழித்தடத்தில் நேரடிப் பயணிகள் பயணிக்க விரும்பமாட்டார்கள். மேலும், தென்சித்தூருக்கு அருகிலுள்ள சங்கம்பாளையத்திலிருந்து உடுமலைக்கு போதுமான பேருந்துகள் இயங்கி வருகின்றன.

2008 நவம்பர் 11]

39—

பேருந்து வசதி

வினா எண் 47086—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, உடுமலை—ஆனைமலை பேருந்து மீண்டும் மஞ்சநாயக்கனூர் வழியாகச் செல்லவும், கவர்க்கல்—சக்தி எஸ்டேட் வரை பேருந்து இயக்கவும், அர்த்தநாரிபாளையம்—பொள்ளாச்சி வரும் தடம் என் 16-ஐ கூடுதலாக இயக்கவும், பாரலை குடியிருப்புப் பகுதிக்குப் பேருந்து இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் புறநகர் பேருந்து ஒன்று ஆனைமலை-உடுமலை செல்லும்போது மாலை நேரத்தில் மஞ்சநாயக்கனூர் வழியாக ஒரு நடையும், 3 நகரப் பேருந்துகள் தினசரி 19 நடைகளும் இயங்கி வருகிறது. வால்பாறையிலிருந்து கவர்க்கல் வழியாக தலநார் எஸ்டேட் வரை அரசு பேருந்து ஒன்று தினசரி 4 நடைகள் இயங்கி வருகிறது. தலநார் எஸ்டேட்டிலிருந்து சக்தி எஸ்டேட் வரை செல்லும் சாலை மிகவும் பழுதடைந்து பயணிகள் போக்குவரத்திற்குத் தகுதியற்றதாக உள்ளதால், பேருந்து இயக்கிட இயலாத நிலை உள்ளது. மேலும், பொள்ளாச்சியிலிருந்து அர்த்தநாரிபாளையத்திற்கு 4 பேருந்துகள் தினசரி 50 நடைகளும், வால்பாறையிலிருந்து பாரலை குடியிருப்புப் பகுதிக்கு பேருந்து ஒன்று தினசரி 4 நடைகளும் இயங்கி வருகின்றன. எனவே, இப்பகுதி மக்களுக்கு தற்போது இயங்கிவரும் பேருந்துகளே போதுமானதாகும்.

40—

சொந்தக் கட்டடம்

வினா எண் 9210—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 11

(அ) வால்பாறை தொகுதி, முடீஸ் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முடீஸ் நகர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட பம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேசனுக்குச் சொந்தமான க.ச. எண் 17/3 அ.2 பி-ல் 50 சென்ட் நிலம் வருடம் ரூ.101/- என்ற குத்தகை அடிப்படையில் 99 வருட குத்தகைக்குப் பெறப்பட்டு, 08-01-2007—ல் சம்பந்தப்பட்ட பொதுப் பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) பொதுப் பணித் துறை அவர்கள் தற்போது முடீஸ் நகர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட ரூ.31.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு தேவைப்படுவதாகவும், ரூ.31.50 இலட்சத்திற்கான திருத்திய மதிப்பீட்டிற்குத் திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்குமாறும் கோரியுள்ளார். இக்கருத்துரு சம்பந்தமாக தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) பொதுப் பணித் துறை அவர்களிடம் கூடுதல் விவரங்கள் கோரப்பட்டுள்ளன. அரசு ஆணை வெளியிடப்பட்டதும் முடீஸ் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்டி முடிக்கப்படும்.

41—

புதிய கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 9315—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி மற்றும் வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனைகளில் புதிய கட்டடங்களைக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், கோட்டூர் அரசு மருத்துவமனைக்கு 10-8-2007-இல் ரூ.10 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட பணிகளுக்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

2008 நவம்பர் 11]

(1) தற்போது இருக்கின்ற கட்டடங்களைப் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் (Repairs and Renovation to the existing buildings)

(2) மருத்துவக் கழிவு சேமிக்கும் அறை (Bio Medical Wastage storage room)

(3) குருதி சேமிப்பு அறை, நோயாளிகளுக்கு அறிவுரை வழங்கும் அறை உள்ளடக்கிய கட்டடப் பணிகள் (The civil works shall include provision of a blood storage room and a patient counselling booth/cubicle)

மற்றும்

கோவை மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனைக்கு தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் 7-8-2007-ல் ரூ.35.50 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட பணிகளுக்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

1. தற்போது இருக்கின்ற கட்டடங்களைப் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் (Repairs and Renovation to the existing buildings)

2. 12 படுக்கைகள் கொண்ட ஒருங்கிணைந்த மகப்பேறு கட்டடம் (Construction of maternity block with 12 beds)

3. மருத்துவக் கழிவு சேமிக்கும் அறை (Bio Medical Wastage storage room)

4. குருதி சேமிக்கும் அறை மற்றும் நோயாளிகளுக்கு அறிவுரை வழங்கும் அறை உள்ளடக்கிய கட்டடப் பணிகள் (The civil works shall include provision of a blood storage room and a patient counselling booth/cubicle)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

42—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 17236—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காரணம்பாளையம் ஊராட்சி, ஆரம்ப சுகாதார நிலையம் பழுதடைந்துள்ளதை சீரமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் சட்டமன்ற தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், வெள்ளாளப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த நாரணம்பாளையம் (காரணம்பாளையம் அல்ல) துணை சுகாதார நிலைய பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக ரூ. 1,40,000/- மற்றும் மின் பழுதுபார்ப்புப் பணிகளுக்கு ரூ. 5000/- ஆக மொத்தம் ரூ. 1,45,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறைமூலம் பணிகள் நடைபெற்று முடிவடைந்து, கிராம சுகாதார செவிலியர் மேற்கண்ட துணை சுகாதார நிலையத்தில் தங்கி பணிபுரிந்து வருகிறார்.

43—

அட்டைப் பூச்சி ஒழிப்பு

வினா எண் 21274—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைப்பகுதிகளில் மனிதர்களின் இரத்தத்தை உறிஞ்சும் அட்டைப் பூச்சிகளை ஒழிக்க மருந்து கண்டுபிடிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மனிதர்களின் இரத்தத்தை உறிஞ்சும் அட்டைப் பூச்சி பொதுவாக ஈரப்பதமான பசுமைக் காடுகளில் உள்ளன. மழைக்காலங்களில் இவை அதிக அளவில் காணப்படும். பணி நிமித்தமாக வனப் பணியாளர்கள்/மலைவாழ் மக்கள் வனப் பகுதிக்குள் செல்லும் போது மேற்படி அட்டைப் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க, சோப்புக் கரைசல் அல்லது யூகாலிப்டஸ் தைலம் போன்றவற்றை பூசிக்கொள்வர். மேற்படி அட்டைப் பூச்சிகள் உடலில் கடித்து விட்டால் அதனை

2008 நவம்பர் 11]

அப்புறப்படுத்த சாதாரண உப்பு அல்லது புகையிலைத்தூள் போன்றவற்றை உபயோகப்படுத்துவர். மேலும். அட்டைக் கடிக்கென மருந்துகள் பொதுவாக கடைகளில் கிடைக்கின்றன. வனத் துறையால் அட்டைப் பூச்சிகளை ஒழிக்க எவ்வித நடவடிக்கையோ அல்லது திட்டமோ இல்லை. மேலும், மேற்படி பூச்சி இனங்களில் பலவித சூழ்நிலை மாறுபாடுகள் (Ecological functions) உருவாவதால் இவ்வகை இனங்களை அழிப்பது சாத்தியமில்லை.

44—

ஸ்கேன், ஊடுகதிர் வசதிகள்

வினா எண் 22645—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு ஸ்கேன், ஊடுகதிர் பட வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் சமுதாய நல மையம் செயல்பட்டு வருகிறது. இதுவரை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே ஸ்கேன் மற்றும் ஊடுகதிர் பட வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேற்படி திருப்புவனம் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படும் பொழுது ஸ்கேன், ஊடுகதிர் வசதி செய்து தரப்படும்.

45—

குடியிருப்பு வசதி

வினா எண் 25070—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, பெரணமல்லூர் அரசு மருத்துவமனை ஊழியர்களுக்குக் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2008 நவம்பர் 11

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

செய்யாறு வட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் பெரணமல்லூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அரசு மருத்துவமனை ஊழியர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. குடியிருப்புகள் கட்ட பரிசீலனை செய்யும்போது, பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையக் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

46—

சுற்றுச் சுவர் கட்டுதல்

வினா எண் 28407—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், பூண்டிவீரனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம், சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பூண்டி வீரனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பூண்டிவீரனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் 1996-1997 ஆம் ஆண்டு ரூ.6 இலட்சம் செலவில் கட்ட அனுமதிக்கப்பட்டு கட்டிமுடிக்கப்பட்டது. கூடுதலாக பிரசவ அறை, உள்நோயாளிகள் அறை, மருந்தகம் ஆகிய வசதிகள் தேவைப்படுவதால் நடப்பு நிதியாண்டில் பராமரிப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து கூடுதல் வசதிகளைச் செய்து கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி பெற்று பூண்டிவீரனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்குமாறும் துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2008 நவம்பர் 11]

47—

குடியிருப்புகளைப் பழுது பார்த்தல்

வினா எண் 28457—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், திருப்புக்குழி ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடியிருப்புகளைப் பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-2008 ஆம் நிதி ஆண்டில் தேசிய ஊரக நலத் திட்டப் பணிகள்மூலம் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்புக்குழி ஆரம்ப சுகாதார நிலையம், குடியிருப்புக் கட்டட பழுதுபார்ப்புப் பணிகளுக்காக ரூ. 43,000/- நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும், திருப்புக்குழி ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள 16 குடியிருப்புக் கட்டடங்களின் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக ரூ. 26.16 இலட்சம் தொகைக்கான முன்னுரிமைப் பட்டியல் பெறப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் முன்னுரிமை அளித்து நிதி ஒதுக்கீடு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

48—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 28466—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், பெரும்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கழிப்பிடம், குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பெரும்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடிநீர் வசதிகள் மற்றும் கழிவறை வசதிகள் அனைத்தும் செய்து தரப்பட்டுள்ளது.

49—

சுற்றுச் சுவர்

வினா எண் 30004—திரு. செ. பொன்னுதுரை: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெருந்துறை தொகுதி, பெத்தாம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்று சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாராபுரம் சுகாதார மாவட்டம், பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் பெத்தாம்பாளையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகின்றது.

அரசாணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அதி2) துறை, நாள் 17-5-2007-ன் படி 2007-2008 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வரையறுக்கப்படாத செலவினமாக ரூ. 60 இலட்சத்தில் தடை செய்யப்பட்ட பணிகளாக இருப்பினும் சிறப்பினமாக ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையின் வழிகாட்டு நெறிகளின்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி பெற்று இவ்வாண்டிலேயே சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்குமாறு தாராபுரம் சுகாதார மாவட்ட துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2008 நவம்பர் 11]

50—

குழாய்க் கிணறு

வினா எண் 30364—திரு. கோ. அரி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, பேரம்பாக்கம் அரசு மருத்துவமனைக்குப் புதிய குழாய்க் கிணறு மின் மோட்டார் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

2008-2009 நிதியாண்டில் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியைச் சார்ந்த பேரம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடப் பழுதுபார்ப்புப் பணிகள் மற்றும் புதிய குழாய்க் கிணறு மின் மோட்டார் அமைக்க அதிக முன்னுரிமை அளித்து நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

51—

அரசு மருத்துவமனைக் குடியிருப்புகள்

வினா எண் 31635—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முகையூர் தொகுதி, முகையூர் அரசு மருத்துவமனை குடியிருப்புகளைச் சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-2008 நிதியாண்டில் தேசிய ஊரக நலப் பணிகள் திட்டத்தின்மூலம் கள்ளக்குறிச்சி சுகாதாரப் பகுதி மாவட்டம் சார்ந்த முகையூர் ஆரம்ப சுகாதார நிலையம் குடியிருப்புக் கட்டடப் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக ரூ. 43,000/- நிதி ஒதுக்கீடு

வழங்கப்பட்டுள்ளது. மேலும், பணிகளை நிறைவு செய்ய துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

52—

கட்டட வசதி

வினா எண் 31636—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, முகையூர் அரசு மருத்துவமனையில் புறநோயாளி பிரிவு கட்டடத்தைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* 2007-2008 நிதியாண்டில், கள்ளக்குறிச்சி சுகாதார பகுதி மாவட்டம் சார்ந்த முகையூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டட (சிவில்) பழுதுபார்ப்புப் பணிகளுக்காக ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறைமூலம் பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு, தற்போது நல்லமுறையில் இயங்கிவருகிறது.

53—

செவிலியர் குடியிருப்புகள்

வினா எண் 32676—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வெங்கடாம்பேட்டை கிராம ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர், செவிலியர் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் வெங்கடாம்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. குடியிருப்புகள் கட்டுவதற்கு வெங்கடாம்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதிய இட வசதி இல்லை. எனவே, வெங்கடாம்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் குடியிருப்புகள் கட்டுவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை.

54—

சொந்தக் கட்டடம்

வினா எண் 32702—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, பீச்சனூர் கிராம துணை சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் சுகாதார பகுதி மாவட்டம், பீச்சனூர் துணை சுகாதார நிலையம், பீச்சனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. பீச்சனூர் துணை சுகாதார நிலையம் 1986 ஆம் ஆண்டு டினிப் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு, அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது.

பீச்சனூர் துணை சுகாதார நிலையத்தின் ஆஸ்பெஸ்டாஸ் தகடு வேயப்பட்ட கூரையினைக் கான்கிரீட் மேல் தளமாக மாற்றுவதற்கும் மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கும் ரூ. 2,00,000/- மற்றும் மின் பணிகளுக்காக ரூ. 20,000/- ஆக மொத்தம் ரூ. 2,20,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது கூரை அகற்றப்பட்டு கான்கிரீட் மேல்தளம் இடப்பட்டுள்ளது. சுவர்களைப் பூசும் பணி நடைபெற்று

வருகிறது. விரைவில் பணி முடிக்கப்பட்டு கட்டடம் பொது சுகாதாரத் துறையிடம் ஒப்படைக்கப்படும்.

55—

கட்டடங்களைப் புதுப்பித்தல்

வினா எண் 32711—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், கான்சியனூர், ஆதிச்சனூர் சொரையப்பட்டு, வினந்தை, குடமிரட்டி, வீரபாண்டி 1, 2 மடவிளாகம், ஆலம்பாடி, மாரங்கியூர் காரணை சென்னகுளம், ஆற்காடு, கொடுங்கால், முகையூர் ஆகிய துணை சுகாதார மையக் கட்டடங்களைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள துணை சுகாதார நிலையக் கட்டடங்களைப் புதுப்பிக்க செயற் பொறியாளர், பொதுப் பணித் துறை, விழுப்புரம், அவர்களிடம் மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டதும், எல்லா துணை சுகாதார நிலையக் கட்டடங்களையும் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

56—

கூடுதல் கட்டடம்

வினா எண் 33812—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, நாங்கூர் துணை சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, சீர்காழி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது நாங்கூர் துணை சுகாதார நிலையம். இத்துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் ஊராட்சி ஒன்றியத்தினால் கட்டப்பட்டு சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாகிறது. இங்கு போதுமான வசதி இல்லாததால் தற்போது காலியாக உள்ள இடத்திலேயே விரிவுபடுத்திட வேண்டும். தற்போது காலியாக உள்ள நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு எதும் இல்லை. எனவே, நாங்கூர் துணை சுகாதார நிலையத்திற்கு மேற்படி கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா. அதி2) துறை, நாள் 17-5-2007-ல் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிதி கிடைக்கப்பெறும்பொழுது, கூடுதல் கட்டடம் கட்டப்படும்.

57—

சுற்றுச் சுவர்

வினா எண் 34148—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, சேனூர் செர்ரப்பம்பாளையம், கிராம சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம். கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சேனூர் செர்ரப்பம்பாளையம் துணை சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு எதும் செய்யப்படவில்லை. நிதி ஒதுக்கீடு செய்யும்போது. முன்னுரிமை

கொடுத்து, மேற்கண்ட துணை சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

58—

கூடுதல் பணியாளர் நியமனம்

வினா எண் 34408—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர், செவிலியரைக் கூடுதலாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் திருப்பாச்சேத்தியில் துணை சுகாதார நிலையம் இயங்குகிறது. இந்தத் துணை சுகாதார நிலையம் பூவந்தி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் இயங்கி வருகிறது. திருப்பாச்சேத்தி துணை சுகாதார நிலையத்தில் தற்போது ஒரு கிராம சுகாதார செவிலியர் பணியாற்றி வருகிறார். மேலும் துணை சுகாதார நிலையத்தில் மருத்துவர் பதவி ஒப்பளிப்பு கிடையாது.

59—

சுற்றுச் சுவர்

வினா எண் 37142—திரு. ந. கணபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, தைலாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தைச் செப்பனிட்டு சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியத்தில் கிளியனூர் (தைலாபுரம்) முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தின் பழுதுபார்ப்புப் பணிகளுக்கென 2005-2006 ஆம் ஆண்டு ரூ. 3,60,000/- நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, பழுதுபார்ப்புப் பணிகள் நடைபெற்றுள்ளன. தைலாபுரம் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச் சுவர் கட்ட அரசாணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் (மா. அதி.2) துறை நாள் 17-5-2007 - இல் கூறப்பட்ட வழிமுறைகளின்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி கோரப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைக்கப் பெற்றவுடன், சுற்றுச் சுவர் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

60—

மருத்துவ அலுவலர்

வினா எண் 38133—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, டாப்சிலிப் மருத்துவமனையில் இரவு நேரங்களில் மருத்துவர் தங்கி பணிபுரிய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, டாப்சிலிப் ஆரம்ப சுகாதார நிலையம், கோவை சுகாதார தொகுதியின்கீழ் இயங்கி வருகிறது. இந்நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடத்தில் மருத்துவ அலுவலர் பணியில் உள்ளார். இரவு நேரங்களில் மருத்துவ அலுவலர் தங்கி பணிபுரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில்

3 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு 24 மணி நேர பிரசவ சேவையளிக்கும் மையமாகத் தரம் உயர்த்தப்படும்.

61—

சுற்றுச் சுவர்

வினா எண் 38520—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, முத்தனேந்தல் அரசு மருத்துவமனைக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் முத்தனேந்தல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தின் மொத்த சுற்றளவு 574 மீ. இதில், தெற்குப் பகுதியில் 222.6 மீ. நீளத்திற்கு மட்டும் சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள சுற்றுச் சுவர் கட்டுவது சம்பந்தமாக அரசாணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி.2)த் துறை, நாள் 17-5-2007-ன்படி கூறப்பட்ட அறிவுரைகளின்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர், அடுத்த நிதியாண்டில் 2008-2009 நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வதாகத் தெரிவித்துள்ளார். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

62—

சிறப்பு மருத்துவ முகாம்

வினா எண் 39444—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் அரசு மருத்துவமனையில் சிக்குன்குனியா தடுப்புப் பிரிவு சிறப்பு மருத்துவ முகாம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* 2008 ஆம் ஆண்டில், சிக்குன்குனியா நோய்த் தடுப்பு நடவடிக்கையாக, தமிழ்நாடு முழுவதும் 3850 தற்காலிக மஸ்தூர்கள் கொசு ஒழிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள 385 வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் கொசு உற்பத்தியாகும் இடங்களைக் கண்டறிந்து கொசு மருந்து தெளித்தல், மற்றும் புகைப்பான்மூலம் கொசு மருந்து அடிப்பது ஆகிய பணிகள் செய்யப்பட்டுள்ளன. சிக்குன்குனியா நோய் கண்டவர்களுக்கு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து தாலுகா மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் தகுந்த மருத்துவச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன. கொசு ஒழிப்புப் பணிகள் தீவிரமான முறையில் மேற்கொள்ளப்பட்டதில், தமிழ்நாட்டில் சிக்குன்குனியா நோய் முழுவதுமாக ஒழிக்கப்பட்டுள்ளது. எனவே, தனியாக சிக்குன்குனியா தடுப்புப் பிரிவு சிறப்பு மருத்துவ முகாம் நடத்துவதற்கான அவசியம் எழவில்லை.

63—

கூடுதல் வசதிகள்

வினா எண் 39447—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தை மராமத்து செய்து சுற்றுச் சுவர் கட்டி, கூடுதலாகக் கட்டடம், மின் விளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* பரமக்குடி சுகாதாரப் பகுதி மாவட்டம், சார்ந்த பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலைய அறுவை அரங்கு, கட்டட பழுதுபார்ப்புப் பணிகளுக்காக 2007-2008 ஆம் நிதியாண்டில் ரூ. 1.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, பொதுப் பணித் துறை மூலம் பணிகளை நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டட மராமத்துப் பணிகள் மற்றும் மின்விளக்கு வசதிகள் செய்ய, வரும் 2008-2009 ஆம் நிதியாண்டில் பொதுப் பணித் துறை மூலம் தோராய மதிப்பீட்டுத் தொகை விவரம் பெற்று முன்னுரிமை அளித்து நிதி ஒதுக்கீடு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், பரமக்குடி, சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகம் மூலம் அரசாணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அதி.2) துறை, நாள் 17-5-2007-ன்படி கூறப்பட்ட வழிமுறைகளின்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் பார்த்திபனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

64—

மராமத்துப் பணிகள்

வினா எண் 39451—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கொம்புக்காரனேந்தல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சிவகங்கை மாவட்டம், கொம்புக்காரனேந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆர்.எஸ்.வி.ஒய். திட்டத்தின்கீழ்

2008 நவம்பர் 11]

2005-06 ஆம் ஆண்டில் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து ரூ. 13.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெற்று, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டு, 7-8-2007 அன்று கொம்புக்காரனேந்தல் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டது. புதிய கட்டடத்தில் இந்த ஆரம்ப சுகாதார நிலையம் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

65—

கட்டட வசதி

வினா எண் 39786—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், காஞ்சிரங்குளத்தில் கிராம சுகாதார நிலையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், காஞ்சிரங்குளம் துணை சுகாதார நிலையம், கொந்தகை ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. காஞ்சிரங்குளம் துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட சிவகங்கை மாவட்ட துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அவர்களால் மாவட்ட ஆட்சியரின் நிதியிலிருந்து நிதியுதவி கோரப்பட்டுள்ளது. நிதி கிடைக்கப்பெற்றவுடன் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

66—

கட்டடச் சீரமைப்பு

வினா எண் 42489—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 1]

மேல்மலையனூர் தொகுதி, பொன்னங்குப்பம் துணைச் சுகாதார நிலையக் கட்டடத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் சுகாதாரப் பகுதி மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, அனந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட பொன்னங்குப்பம் துணைச் சுகாதார நிலையக் கட்டடத்தைச் சீரமைக்க, பொதுப் பணித் துறையிடம் மதிப்பீடு அறிக்கை பெற்று, இந்த நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் கட்டடத்தைச் சீரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

67—

கட்டட வசதி

வினா எண் 44665—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் வட்டம், நெரும்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், நெரும்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய அரசு கட்டடம் 1994 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இக்கட்டடத்தின் பாதி தற்போது பழுதடைந்துள்ளதால், நெரும்பூர் ஆரம்ப சுகாதார நிலையம் தற்சமயம் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. பழுதடைந்துள்ள கட்டடப் பகுதியை மட்டும் நீக்கிவிட்டு புதிதாக கூடுதல் கட்டடம் கட்ட Tsunami Emergercy Assistance-Times Trust Funds-ன்மூலம் தேவையான நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன், நெரும்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்டித் தரப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 11]

68—

தடுப்பு மருந்து

வினா எண் 45039—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

யானைக்கால் நோய் பரவும் காலத்தைக் கணக்கிட்டு கிராமப்புறங்களுக்கு தடுப்பு மருந்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

யானைக்கால் நோய் தடுப்பு நடவடிக்கையாக அரசு எடுத்துவரும் திட்டங்களில் ஒன்றாக, 1997 முதல் யானைக்கால் நோய் பாதிப்பு அதிகமாக பரவியிருக்கும் மாவட்டங்களில் உள்ள (கர்ப்பிணிப் பெண்கள், இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், நோயுற்றோர் தவிர) அனைவருக்கும் யானைக்கால் நோய் தடுப்பு மாத்திரை வழங்கப்பட்டு வருகிறது. 2007 ஆம் ஆண்டும் டிஇசி மற்றும் ஆல்பேண்டசால் மாத்திரைகள் யானைக்கால் நோய் மிகுதியாக உள்ள மாவட்டங்களில் உள்ள கிராமங்கள் மற்றும் நகர்ப் புறங்களில் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் மக்களுக்கு யானைக்கால் நோய் பரவாமல் தடுக்கப்பட்டு வருகிறது.

69—

மலேரியா காய்ச்சல்

வினா எண் 45098—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பேரூராட்சிப் பகுதியில் மலேரியா காய்ச்சல் பரவுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தேர்வுநிலை பேரூராட்சிப் பகுதியிலுள்ள முத்தனேந்தல் ஆரம்ப சுகாதார நிலைய சுகாதாரப் பணியாளர்கள்மூலமாக மலேரியா கண்காணிப்புப் பணி, ஆய்வு, சிகிச்சை மற்றும் மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட தொடர் கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளினால், சிவகங்கை மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டில் 59-ஆக இருந்த மலேரியா காய்ச்சல் கண்டவர்களின் எண்ணிக்கை 2008 ஆம் ஆண்டில் 19-ஆக குறைந்துள்ளது. மலேரியாவால் பாதிக்கப்பட்ட இந்த 19 நபர்களும் அண்டை மாவட்டங்கள்/மாநிலங்களைச் சார்ந்தவர்களே ஆவர். மேலும், மலேரியா காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் அனைத்தும் மானாமதுரை தேர்வுநிலை பேரூராட்சி பகுதியில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

70—

சிறு தொழில் மையங்கள்

வினா எண் 34163—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை, பூவந்தி, பொட்டப்பாளையம் பகுதிகளில் சிறு தொழில் மையங்கள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் பூவந்தி, பொட்டப்பாளையம் பகுதிகளில் புதிதாக தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2008 நவம்பர் 11]

2. சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் கீழ்க்கண்ட இடங்களில் ஏற்கெனவே தொழிற்பேட்டைகள் சிட்கோவினால் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன:—

தொழிற் பேட்டையின் பெயர்	தொழிற் கூடங்கள்	தொழிற் மனைகள்	காலியாக உள்ளது	
			தொழிற் கூடங்கள்	தொழில் மனைகள்
சிவகங்கை (அரசு)	16	..	..	..
காரைக்குடி (அரசு)	24	9	3	5
கிருங்காக்கோட்டை	5	..	3	..
மானாமதுரை	5 (குறுந்தொழிற் கூடம்)	..	..	..

போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும் தொழில் தொடங்க ஆர்வமுள்ள குறைந்தபட்சம் 20-க்கும் குறையாமல் தொழில் முனைவோர் (Non-Refundable Commitment Charges) திரும்பப் பெறாத வைப்புத் தொகையுடன் முன்வந்தால் தொழில் முனைவோரின் தேவையின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர் பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியோருடன் கலந்தாலோசித்து தக்க மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

71—

கால்நடை மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 51092—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்மலையனூர் தொகுதி, நல்லான்பிள்ளை பெற்றாள் மற்றும் ஆலம்பூண்டி கால்நடை மருத்துவமனைகளுக்கு மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேல்மலையனூர் தொகுதி, நல்லான்பிள்ளை பெற்றாள் இடத்தில் கால்நடை கிளை நிலையமே உள்ளது. தற்போது அங்கு கால்நடை ஆய்வாளர் பதவி காலியாக உள்ளது. மேற்படி கிளை நிலையத்திற்கு அருகாமையில் உள்ள சத்தியமங்கலம் கால்நடை மருந்தகத்தில் பணிபுரிந்துவரும் கால்நடை ஆய்வாளரால் வாரத்திற்கு இரண்டு நாட்கள் நல்லான்பிள்ளை பெற்றாள் கிளை நிலையத்தில் கூடுதல் பணி மேற்கொள்ளப்பட்டு சிகிச்சைப் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் கால்நடை ஆய்வாளர் பணியிடம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆலம்பூண்டி என்ற இடத்தில் கால்நடை கிளை நிலையமோ, கால்நடை மருந்தகமோ, கால்நடை மருத்துவமனையோ செயல்படவில்லை. எனவே, அவ்விடத்தில் கால்நடை மருத்துவரை நியமிக்க வாய்ப்பில்லை.

72—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 39749—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டி கிராமம், சர்வே எண் 65/282 கிராம நத்தம் புறம்போக்கில் 500 வீடுகளுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பாகல்பட்டி கிராமம், புல எண் 65/1,282 கிராம நத்தம் புறம்போக்கு நிலங்கள் தமிழ்நாடு புறநகர் வளர்ச்சி திட்டத்தின்கீழ் மனைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பயனாளிகளின் பட்டியல் தயார் செய்யப்பட்டு, மனைகளின் அளவிற்கேற்ப மனைக்

கிரயம் நிர்ணயம் செய்து, அதன்படி 20 ஆண்டு கால மாதத் தவணைகள் நிர்ணயம் செய்து மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, முழு நிலக் கிரயம் செலுத்தியவர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்கப்படும்.

73—

ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம்

வினா எண் 57053—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், செட்டிக்குளம் ஊராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ராஜீவ் காந்தி மறுவாழ்வு திட்டத்தின்மூலம் வீடு கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

செட்டிக்குளம் ஊராட்சி பெருமணல் கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ராஜீவ் காந்தி மறுகட்டமைப்பு திட்ட வழி முறைகளின்படி 0-200 மீட்டருக்குள் சுனாமியால் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய 41 வீடுகள் தேர்வு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் சுனாமி அவசரகால புனரமைப்புத் திட்டத்தின்கீழ் அரசின் வழிமுறைகளின்படி செட்டிக்குளம் ஊராட்சியில் தகுதியுள்ள நபர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

74—

கண்காணிப்புக் குழு

வினா எண் 7882—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் பொது விநியோகத் துறையின் கண்காணிப்புக் குழு செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

கோவை மாவட்டத்தில் பொது விநியோகத் துறையின் கண்காணிப்புக் குழு தற்போது நடைமுறையில் இல்லை.

75—

கூடுதல் கிடங்கு கட்டுதல்

வினா எண் 41919—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் நெல் கொள்முதல் மையத்திற்குக் கூடுதலாகக் கிடங்கு கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

திருக்கழுக்குன்றத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற வட்டக் கிடங்கில் தற்பொழுது நெல் கொள்முதல் செய்யப்படுகின்றது. இனிவரும் காலங்களில், மாவட்டத்தில் இனாமாக நிலம் பெறப்படும் இடங்களில் நேரடி கொள்முதல் நிலையங்களுக்காகப் படிப்படியாக சொந்த கட்டடங்கள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எனவே, தற்போது திருக்கழுக்குன்றத்தில் கூடுதலாகக் கிடங்கு கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

76—

குடும்ப அட்டை

வினா எண் 44311—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், குளிப்பட்டி கிராம மலைவாழ் மக்களுக்கு குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளிப்பட்டி வனக் கிராமத்தில் மொத்தம் 83 குடும்பங்கள் உள்ளன. மேற்படி 83 குடும்பங்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. புதிதாக குடும்ப அட்டைக் கோரி விண்ணப்பம் ஏதும் வரவில்லை. மனு ஏதும் வரப்பெற்றால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

77—

கூடுதல் வசதிகள்

வினா எண் 44317—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கிடங்கிற்கு கூடுதல் கட்டடம் கட்டவும், சுற்றுச் சுவர் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

தற்பொழுது கிடங்குகள் இல்லாத வட்டங்களில் படிப்படியாக கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன. அவை நிறைவுற்றபின், வருங்காலங்களில், கிடங்குகள் உள்ள இடங்களில் கூடுதல் கிடங்குகள் கட்ட திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்பொழுது ஓமலூரில் கூடுதல் கிடங்கு கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், சுற்றுச் சுவர் கட்டுவதற்கு கூடுதல் செலவினம் ஆவதால் முள் கம்பி வேலி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

78—

புதிய குடும்ப அட்டைகள்

வினா எண் 47573—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வைத்தியநாதபுரம் கிராமத்தில் மக்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வைத்தியநாதபுரம் கிராமத்தில் மக்களுக்கு இதுவரை பழைய குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக 342 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. புதிய அட்டை கோரி வரப்பெற்ற 12 மனுக்களில் 4 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு, மீதமுள்ள 8 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. மேலும் வைத்தியநாதபுரத்தில் தனியாக மகளிர் அங்காடி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

(ஆ) தற்பொழுது புதிய குடும்ப அட்டை வழங்கக்கோரி வைத்தியநாதபுரம் கிராம மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

79—

தொலைக்காட்சிப் பெட்டி

வினா என் 22071—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட அரசு மாணவ, மாணவியர் விடுதிகளில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இத்துறையின்கீழ் இயங்கும் பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

80—

உதவி பயிற்சி அலுவலர்

வினா எண் 47534—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, கடத்தூர் ஊராட்சி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் உதவிப் பயிற்சி அலுவலர் பதவியை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி தொகுதியில் கடத்தூர் ஊராட்சியில் அமைந்துள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 7 உதவிப் பயிற்சி அலுவலர் பதவிகளில் 6 பதவிகள் நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள ஒரு உதவிப் பயிற்சி அலுவலர் பதவி பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) விரைவில் நிரப்பப்படும்.

81—

மகளிர் தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 47535—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதியில் மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் தனியாக துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், கடகத்தூர் ஊராட்சியில் அமைந்துள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 7 தொழிற்பிரிவுகளில் 242 இருக்கைகள் உள்ளன. மேலும், இம்மாவட்டத்தில் தனியார் தொழிற்பயிற்சி மையங்களும் 893 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. இந்நிலையில் தருமபுரி தொகுதியில் மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் தனியாகத் தொடங்க அரசுக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

82—

வாகனங்கள், அறைகலன்கள் மாற்றுதல்

வினா எண் 48864—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொழிற் பயிற்சி நிலையத்தில் அறைகலன்கள் மற்றும் வாகனங்களை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு, அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள தொழிற் பிரிவிற்கான புதிய வாகனங்கள் கொள்முதல் செய்வதற்கும், அறைகலன்கள் கொள்முதல் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

83—

பழுதுபார்ப்புப் பணி

வினா எண் 50737—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் தொழிலாளர் நல உதவி ஆய்வாளர் அலுவலகத்தைப் பழுதுபார்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் தொழிலாளர் நல உதவி ஆய்வர் அலுவலகம் அமைந்துள்ள தொழிலாளர் நல வாரிய கட்டடத்தில் 31-3-2007-ல் பழுதுபார்ப்புப் பணிகள் முடிக்கப்பட்டு அவ்வலுவலகம் இயங்கி வருகிறது.

84—

அடிப்படை வசதிகள்

வினா எண் 50738—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகத்தை விரிவு படுத்தி அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் தொழிலாளர் ஆய்வர் அலுவலகம் இயங்கவில்லை.

85—

நில ஆக்கிரமிப்பு

வினா எண் 7187—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, புலியூரில் உள்ள அருள்மிகு முருகன் கோயிலுக்குச் சொந்தமான 40 ஏக்கருக்கும் மேலான நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்பினை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், புலியூர் காட்டுச்சாகை கிராமத்தில் கீழ்க்கண்ட விவரப்படியான திருக்கோயில்கள் குழுக்கோயிலாக உள்ளன:—

(1) அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில், புலியூர், (முருகன் கோயில்)

(2) அருள்மிகு திருமூலநாதசாமி திருக்கோயில், புலியூர்.

(3) அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், புலியூர்காட்டுச்சாகை

(4) அருள்மிகு அய்யனார் திருக்கோயில், புலியூர்காட்டுச்சாகை

(5) அருள்மிகு முனீஸ்வரர் திருக்கோயில், புலியூர்காட்டுச்சாகை

(6) அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், புலியூர்காட்டுச்சாகை

(7) அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், வாசவனம் குப்பம்

(8) அருள்மிகு அய்யனார் திருக்கோயில், வாசவனம் குப்பம்

மேற்படி திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 54.41 ஏக்கர் நிலங்களில் 24.74 ஏக்கர் நிலங்கள் குத்தகை சாகுபடியில் உள்ளது. 18.90 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பில் உள்ளன. 10.77 ஏக்கர் நிலங்கள் திருக்கோயில் வசம் காலியாக உள்ளன. ஆக்கிரமிப்பு நிலங்கள் 18.90 ஏக்கரில் நெல், முந்திரி, வாழை மற்றும் கரும்பு ஆகியவை சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இதில் சுமார் 30-க்கும் மேற்பட்டவர்கள் ஆக்கிரமிப்பு செய்து சாகுபடி செய்து வருகிறார்கள். இதைத்தவிர 6 நபர்கள் குடிசை கட்டிக் கொண்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். எனவே, மேற்படி நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புதாரர்களை சட்டபூர்வமாக அகற்றி, அவற்றை பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

86—

கோயில் சீரமைப்பு

வினா எண் 44214—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் நெல்முடிக்கரை செல்வ விநாயகர் மற்றும் நாகம்மாள் கோயிலைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் நெல்முடிக்கரை செல்வ விநாயகர் மற்றும் நாகம்மாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே இத்திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் சீரமைத்திட இயலாது.

87—

கழிப்பறைக் கட்டடம்

வினா எண் 48189—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, வெள்ளிமலை பஞ்சாயத்து திருநயினார்குறிச்சி அருள்மிகு கரகண்டேஸ்வரர் ஆலயத்திற்கு அருகில் கழிப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், திருநயினார்குறிச்சி அருள்மிகு கரகண்டேஸ்வரர் திருக்கோயில், சுசீந்திரம், இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களில் ஒன்றாகும். ஆலயத்திற்கு அருகில் கழிப்பறை கட்ட போதிய நிதி வசதி இல்லை. சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதிமூலம் செய்வதற்கான நடவடிக்கைகள் திருக்கோயில் நிர்வாகத்தால் எடுக்கப்பட்டு வருகிறது.

88—

அரண்மனைப் பாதுகாப்பு

வினா எண் 44926—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தெங்கரக்கோட்டையில் கிருஷ்ணதேவராயர் காலத்தில் கட்டப்பட்ட அரண்மனையைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தெங்கரக்கோட்டையில் கிருஷ்ணதேவராயர் காலத்தில் கட்டப்பட்ட அரண்மனை வரலாற்று சான்றுகளாக, கலை நுணுக்கத்துடன் கூடிய நாயக்கர் கால பாணி கட்டடக் கலையைத் தவிர மேற்படி எவ்வித சான்றுகளும் இல்லை. அரண்மனை கோட்டைச் சுவர் பெரும்பாலும் சிதிலமடைந்தும், கற்கள் அகற்றப்பட்டும் மண் கோட்டையாக காணப்படுகிறது. கோட்டைக்குள் உள்ள ஆலயங்கள் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இருப்பினும், சொத்துக்கள் அனைத்தும் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களின் பெயருக்கே பட்டா அளிக்க அலூர் உரிமையியல் நீதி மன்றத்தால் பகரப்பட்டுள்ளது. கோட்டையின் உட்புறத்தில் உள்ள கட்டடப் பகுதியும் பராமரிப்பு இல்லாத நிலையில் வெகுவாக பாதிப்பு அடைந்துள்ளது. கோட்டையின் எல்லை வரம்புகள் முழுமையான ஆக்கிரமிப்பால் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிலைகளைக் கருத்தில் கொண்டு, எதிர்காலத்தில் இதன் பாதுகாப்பு தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்வது இயலாது.

89—

கூடுதல் கட்டடம்

வினா எண் 11319—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 11]

வேலூர், அலுமேலுமங்காபுரத்தில் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், அலுமேலுமங்காபுரம் அருகில் உள்ள வீட்டு வசதி வாரியத்திலிருந்து நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு ஆதி திராவிடர் நலத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு தற்போது அலுமேலுமங்காபுரம் ஆதி திராவிடர் நல மேனிலைப் பள்ளியில் ஆர்.சி.சி. கட்டடத்தில் 15 வகுப்பறைகள் இயங்கி வருகின்றன. கூடுதலாக 2006-2007 ஆம் ஆண்டில் SSA (சர்வ சிக்ஷ அபியான்) திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 5 வகுப்பறைகள் கட்டப்பட்டு கட்டுமானப் பணி முடிக்கப்பட்டு தற்போது மாணவ/மாணவியர்களுக்கு பாதுகாப்பாகவும், எவ்வித இடையூறும் இல்லாமல் வகுப்பறைகள் நடைபெறுகின்றன. 2007-2008 ஆம் நிதியாண்டில் நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.16.97 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உட்கட்டமைப்பு பணிகள் தாட்கோவின் மூலமாக மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

90—

பள்ளிக் கட்டடம்

வினா எண் 24263—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொண்டல் அரசு ஆதி திராவிடர் நல மேனிலைப்பள்ளி வளாகத்தில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடத்தைப் பூர்த்தி செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, கொண்டல் அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்

மூலம், அப்பள்ளியின் கிராமக் கல்விக் குழுவினரால் கட்டப்பட்ட இரண்டு வகுப்பறைக் கட்டடப் பணிகள் யாவும் நிறைவுற்று 31-3-2007 அன்று திறக்கப்பட்டு தற்போது கட்டடம் பள்ளிப் பயன்பாட்டில் உள்ளது.

91—

குடிநீர் வசதி

வினா எண் 43780—திரு. ஞா. ஜான் ஜோசப்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தொகுதி, செறுகடத்துக்காணி மலைவாழ் மக்களுக்கு புதிய குடியிருப்புகள் மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, செறுகிடத்துக்காணி கடையால் பேரூராட்சிக்குட்பட்ட பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதனால், வனத் துறை அனுமதி பெறப்பட்டவுடன் அப்பகுதியில் வீடுகள் கட்டவும், குடிநீர் வசதி செய்து தரவும் அரசு ஆவன செய்யும்.

92—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 46922—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், பராக்கிரமபாண்டி கிராமம், புல எண் 554-ல், மேற்படி கிராமம் மஜராகுலசேகர நத்தத்தைச் சேர்ந்த ஆதி திராவிட இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

2008 நவம்பர் 11]

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், பராக்கிரமபாண்டி கிராமம், மஜராகுலசேகர நத்தத்தில் புல எண் 554 இடம் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானது. அதில் தார்ச்சாலை உள்ளது. ஆகவே இந்த இடத்தில் ஆதி திராவிட இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

93—

புதிய மீன் விற்பனை நிலையம்

வினா எண் 52765—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை உடுமலை, பொள்ளாச்சி, தொண்டாமுத்தூர், தாராபுரம், திருப்பூர், பொங்கலூர், அவிநாசி, சிங்காநல்லூர், மேட்டுப்பாளையம், கோவை கிழக்கு, கோவை மேற்கு, பேரூர் மற்றும் கிணத்துக்கடவு ஆகிய தொகுதிகளில் புதிய மீன் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்தில் வால்பாறை, உடுமலை, பொள்ளாச்சி, தொண்டாமுத்தூர், தாராபுரம், திருப்பூர், பொங்கலூர், அவிநாசி, சிங்காநல்லூர், மேட்டுப்பாளையம், கோவை கிழக்கு, கோவை மேற்கு, பேரூர் மற்றும் கிணத்துக்கடவு ஆகிய இடங்களிலும், அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகவும் தனியார்மூலமாகவும் ஏற்கெனவே மீன் விற்பனை நிலையங்கள் நடத்தப்பட்டு பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் போதுமான அளவில் மீன் விற்பனை செய்யப்பட்டு வருவதால், மேற்காணும் இடங்களில் மீன் துறைமூலம் தனியாக புதிய மீன் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம் ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

94—

புதிய கட்டடம்

வினா எண் 37618—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் நிதிநிலைமை தற்பொழுது திருப்திகரமாக இல்லாததால், புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறு இல்லை.

95—

புதிய பால் உற்பத்தியாளர் சங்கம்

வினா எண் 43608—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் புதிய பால் உற்பத்தியாளர் சங்கங்கள் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதியில் தற்போது 35 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், சுனாமி மறுவாழ்வு திட்டத்தின்கீழ் செங்கல்பட்டு தொகுதிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் 10 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்குவதற்கு கோரிக்கைகள் வரப்பெற்றால், அதனைப் பரிசீலித்து புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

96—

பனைவெல்லம் மற்றும் தும்பு கூட்டுறவு இணையம்

வினா எண் 44150—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பனைவெல்லம் மற்றும் தும்பு கூட்டுறவு இணையத்தை விரிவுபடுத்தி, நவீனப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) தற்போது தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்தை விரிவுபடுத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

97—

கோரைப்பாய் தயாரிப்பு

வினா எண் 47270—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பகுதியில் கோரைப்பாய் தயாரிக்கும் தொழிலை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) கோரைப்பாய் தயாரிக்கும் தொழிலை நவீனப்படுத்த தற்போது வாரியத்தில் திட்டம் ஏதும் இல்லை. இருப்பினும் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும்பொருட்டு, தமிழ்நாடு கதர் கிராமத்

தொழில் வாரியம் தற்போது மும்பை கதராணைக்குழுமூலம் கிராமிய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகை மானியம் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்மூலம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் (116 குடிசைத் தொழில்களுக்கு) கடனுதவி வழங்கப்பட்டு, 25% முதல் 30% வரை மானியமாக வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே, எந்தத் தனிநபரும் கோரைப்பாய் தயாரிக்கும் தொழில் செய்ய விரும்பினால், சம்பந்தப்பட்ட மாவட்ட உதவி இயக்குநர் (கதர் கிராமத் தொழில்கள்) அலுவலகத்தில் நேரில் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்று பயன் அடையலாம்.

(ஆ) வினா எழவில்லை.

98—

கதர் கிராமத் தொழில்

வினா எண் 47600—திரு. செ. குருசாமி: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதியில் கதர் கிராமியத் தொழிலை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

அந்தியூர் தொகுதி நீர்ப் பாசனமுள்ள ஒரு இடமாகும். அப்பகுதியில் உள்ள மக்கள் விவசாயத்திலே அதிக கவனம் செலுத்தி வருவதால், கதர் கிராமியத் தொழிலில் அதிக அக்கறை காட்டுவதில்லை. மேலும் அந்தியூர் தொகுதியின் அருகில் மூங்கில்பட்டி என்னும் இடத்தில் 2 கிராமிய நூற்பு நிலையங்களும், ஒரு கதர் உபகிளையும் இயங்கி வருகின்றன.

கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் அங்கீகாரம் செய்யப்பட்ட 116 கிராமத் தொழில்களுக்குக் கிராமிய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகை மானியம் அளிக்கப்பட்டு

2008 நவம்பர் 11]

வரும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கடன் பெற்று தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், அவர்கள் தேசியமயமாக்கப்பட்ட / வாரியம் அங்கீகாரம் செய்த கூட்டுறவு மற்றும் தனியார் வங்கிகளை அணுகி விளிம்புத் தொகை திட்டத்தின் கீழ் பயனடையலாம்.

99—

மண்பாண்டத் தொழிற்கூடம்

வினா எண் 48707—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதியில் மண்பாண்டத் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரியில் மண்பாண்டத் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. தருமபுரி மாவட்டத்தில் மண்பாண்ட கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் பூந்தொட்டிகள், தண்ணீர்ப் பானைகள், அடுப்பு வகைகள் மற்றும் கைவினைப் பொருட்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தற்போது மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின்மூலம் கிராமிய சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகை மானியம் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

தருமபுரி பகுதியில் உள்ள மக்கள் மண்பாண்டங்கள் உற்பத்தி செய்ய மண்பாண்டத் தொழிற்கூடம் அமைக்க தொடர்புடைய திட்டத்துடன் முன்வருவார்களேயானால், அவர்களுக்கு கதர் ஆணைக் குழுவின் விளிம்புத் தொகை திட்டத்தின்கீழ் 25% முதல் 30% வரை மானியத்துடன் விளிம்புத் தொகை கடன் பெற்று இத்தொழில் தொடங்க வரய்ப்புள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

[2008 நவம்பர் 11

100—

கோரைப்பாய் தொழிற்சாலை

வினா எண் 51784—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி சேத்துமடையில் கோரைப்பாய் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) கோரைப்பாய் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்குவதற்கு தற்போது வாரியத்தில் திட்டம் ஏதும் இல்லை. இருப்பினும் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும்பொருட்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தற்போது மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு மூலம் கிராமிய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகை மானியம் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்மூலம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின்மூலம் (116 குடிசைத் தொழில்களுக்கு) கடனுதவி வழங்கப்பட்டு 25% முதல் 30% வரை மானியமாக வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே, எந்த ஒரு தனிநபரும் கோரைப்பாய் தயாரிக்கும் தொழில் செய்ய விரும்பினால், சம்பந்தப்பட்ட மாவட்ட உதவி இயக்குநர் (கதர் கிராமத் தொழில்கள்) அலுவலகத்தில் நேரில் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்று பயன் அடையலாம்.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

எண்	கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில் வருவாய்	மூலதனம்	கடன்
41	வருவாய்த் துறை	6,36,97	21,25,00	..
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	280,82,85	237,13,00	..
43	பள்ளிக் கல்வித் துறை	82,83,22	164,00,00	..
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	10,00,00	..	..
45	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	16,31,35	..	..
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	32,05	..	..
48	போக்குவரத்துத் துறை	2,78,00	..	..
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	3,83,75	..	..
	பெருமொத்தம்	1,787,98,95	1,184,21,23	57,77,68

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) என்ன? விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கம். அதை ஆதரித்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

4. அறிவிப்புகள்

(அ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2008–2009– மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 10–11–2008 ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, 2008–2009 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும் மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், ஒவ்வொரு மானியக் கோரிக்கையின்மீதும் தலா ஐந்து வெட்டுத் தீர்மானங்களுக்கு மிகாமல் இன்று (11–11–2008) மாலை 3–00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)–ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் ஒன்பதாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி

(இ) திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. புதிதாக அமைக்கப்பட்ட திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு (Syndicate) அலுவல் சார்பற்ற உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு ஒரு சட்டமன்றப் பேரவை உறுப்பினரைத் தேர்ந்தெடுக்குமாறு அப்பல்கலைக்கழகத்தின் பதிவாளரிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய ஆட்சிக் குழுவின் உறுப்பினர் பதவி முடிவடையும்.

தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை *11—11—2008*, அதாவது இன்று மாலை *4—00* மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்பு மனுப் படிவங்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்பு மனுக்கள் *12—11—2008* அன்று மாலை *3—00* மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்புகின்ற வேட்பாளர்கள் *12—11—2008* மாலை *4—00* மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடத்திற்கு மேற்படுமாயின், அப்பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு (Syndicate) உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11—00

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டே அவையிலிருந்து வெளியேறினர்.)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள். (குறுக்கீடுகள்) நான் வாசிக்கவில்லை, எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. மணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் இப்போது சொல்கிறேன், நான் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிற விவரத்தைக் கேட்டுவிட்டு, அதற்குப் பிறகு பேசுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சி. ஞானசேகரன், நான் சொல்கிற விவரத்தைக் கேட்டுவிட்டு, அதற்குப் பிறகு பேசுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. மணி, உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். நான் சொல்கிறேன் இல்லையா? (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேட்டுவிட்டுப் பிறகு எழுந்திருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேட்டுவிட்டு நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள், திரு. வேல்முருகன், உட்காருங்கள், (குறுக்கீடுகள்)

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள். முதலில் உரத் தட்டுப்பாட்டால் தமிழ்நாடு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து, அது சம்பந்தமாக (குறுக்கீடுகள்) எடுக்கிறேன். ஒவ்வொன்றாக எடுப்பேன். நான் சொல்கிறேன். முதலில் எவற்றையெல்லாம் எடுக்கப் போகிறேன் என்பதைச் சொல்கிறேன், முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வேண்டுமென்றே வில்லங்கம் செய்யக்கூடாது, முதலில் உட்காருங்கள், (குறுக்கீடுகள்) No, No. முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சி. ஞானசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லாமே important issue தான். உட்காருங்கள். இரண்டாவது, கன்னியாகுமரி மாவட்டம், நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் தண்ணீர் வருவதைக் கேரள அரசு தடுத்து வருவதால், சுமார் 4,000 எக்டேர் பயிர் கருகுவது குறித்து. மூன்றாவது, மதுரை நகரில் இயக்கப்படும் அரசுப் போக்குவரத்துக் கழக தாழ்தளப் பேருந்துகளில் திருச்சி, விருதுநகரில் உள்ள கட்டணத்தைவிட அதிகமாக வசூலிப்பது குறித்து. நான்காவது, தமிழகத்தில் நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசி பிற மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படுவது குறித்து. ஐந்தாவது, வால்பாறை மற்றும் செங்கல்பட்டு தொகுதிகளில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் போதிய

2008 நவம்பர் 11] [பேரவைத் தலைவர்]

ஆசிரியர்கள் இல்லாததால், மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து ஆகிய இந்த ஐந்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை இன்று சிறப்புக் கவன ஈர்ப்பாக நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) தமிழகத்தில் உரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில், உரத் தட்டுப்பாட்டால் தமிழ்நாடு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அ.தி.மு.க. சார்பாகவும், திரு. சி. ஞானசேகரன் அவர்கள் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாகவும் விதி 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன்.

இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்களில், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். அ.தி.மு.க. சார்பாக யார் முதலில் பேசுவது? (குறுக்கீடு) முதன்முதலாக அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், உங்களைப் பேச அழைத்தாகிவிட்டது. நீங்கள் பேசுகிறீர்களா அல்லது அடுத்த உறுப்பினரை நான் கூப்பிடவா? (குறுக்கீடுகள்) பேசுங்கள். நான் சொல்லியாகிவிட்டது, நான் உங்களைப் பேசச் சொல்லிவிட்டேன். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிட்டால், நீங்கள் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–05

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) சபையைக் கட்டுப்படுத்துங்கள். (குறுக்கீடுகள்)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பில், நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுகிறீர்களா? சரி, திரு. ஓ. பன்னீர்செல்வம், பேசுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புக் கவன ஈர்ப்பில் எங்கள் கட்சியின் கொறடா திரு. செங்கோட்டையன் அவர்களைப் பேச அழைத்தீர்கள். (குறுக்கீடுகள்) இவர்களை அமைதியாக இருக்கச் சொல்லுங்கள். அவரால் பேச முடியவில்லை. (குறுக்கீடுகள்)

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் நின்றுகொண்டு கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களின் உணர்வு எல்லோருக்கும் இருக்கின்றது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இரண்டு பேரில் யார் முதலில் பேசுகிறீர்கள்? நான் பேசச் சொன்னவுடன், நீங்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) மைக் உங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) அவ்வளவுதான் நான் சொல்வேன். (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும், தங்கள் கவனத்திற்கு சில பிரச்சினைகளை எழுப்புவதற்காகத் தங்கள் அனுமதியைக் கோருகிறார்கள். என்ன பிரச்சினை என்பதை நீங்கள் கேட்டுக்கொண்டு, அதை எப்பொழுது எழுப்ப நீங்கள் அனுமதிப்பீர்கள் என்பதைத் தெரிவித்தால், தொடர்ந்து மற்ற அலுவல்கள் நடப்பதற்குத்

2008 நவம்பர் 11][திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

தோதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, அவர்கள் என்ன சொல்ல நினைக்கிறார்கள் என்பதைப் பதிவு செய்து கொண்டு, அதற்குத் தகுந்தவாறு உங்களுடைய தீர்ப்பினை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர், நான் எது, எதை எடுத்துக்கொள்ளப் போகிறேன் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஐந்து சிறப்புக் கவன ஈர்ப்புகளை எடுக்கிறேன் என்பதைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன். இந்த ஐந்தில் அவரும் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு) அவரும் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: அதைக் கேட்டு, பிறகு எடுக்கிறேன் என்பதைச் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு சம்பந்தம் இல்லாத சப்ஜெக்ட்டை அவர் எழுப்புவார். அதை எப்படி நான் ஏற்றுக்கொள்ள முடியும்? (குறுக்கீடுகள்) நான் இதைத்தான் எடுப்பேன் என்று சொல்லியாகிவிட்டது. மற்ற பிரச்சினைகளை நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம், இந்தப் பிரச்சினையைத்தான் நான் எடுக்கிறேன். இதில் உள்ளவற்றை மட்டும் பேசுங்கள். மற்றவற்றை அப்புறம் என்னுடைய அறையில் வந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) அதாவது, கவன ஈர்ப்பு என்று அவர் கொடுத்ததைத்தான் நான் எடுத்திருக்கிறேன். இன்றைக்கு உள்ளதைத்தான் எடுப்பேன். நாளைக்கு உள்ளதை, கலந்து பேசி எடுப்போம். அறைக்கு வாருங்கள்; அதுபற்றிக் கலந்து பேசி முடிவு எடுப்போம். திரு. O.P.S. பேசுங்கள். (குறுக்கீடு) திரு. மணி, நீங்கள் கொடுத்ததையும்தான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நீங்களும் கவன ஈர்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த சப்ஜெக்ட்டையும் சேர்த்துத்தான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நான் பேசிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) உங்கள் சார்பாக நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருப்பதைத்தான் Zero Hour–ல் எடுத்திருக்கிறேன், தெரிகிறதா? நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பைத்தான் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்திருக்கிறேன். ஒரு நாளைக்கு மூன்றுக்கு மேல் எடுக்கக்கூடாது. இருந்தாலும் சிறப்புக் கவன ஈர்ப்பாக ஐந்தை நாம் எடுத்திருக்கிறோம். நீங்கள் கொடுத்ததைத்தான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) அதற்குப்பிறகும்

[பேரவைத் தலைவர்] [2008 நவம்பர் 11

இவற்றுக்குச் சம்பந்தம் இல்லாத இன்னொரு subject–ஐ நீங்கள் open செய்தால் எப்படி நான் ஏற்றுக்கொள்ள முடியும்? (குறுக்கீடு) நீங்கள் என்னுடைய அறைக்கு அப்புறம் வாருங்கள்; பேசி முடிவெடுப்போம். உட்காருங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சட்டமன்ற மரபுப்படி, கேள்வி நேரம் முடிந்தவுடன் Zero Hour–ல் அன்றன்றைக்கு நடக்கின்ற பிரச்சினைகளை, முன் வரிசையிலே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்கள் எழுப்புவதற்கு உரிமை இருக்கின்றது. என்ன பிரச்சினைகளை அவர்கள் எழுப்புகின்றார்கள் என்பதை நீங்கள் காதிலே கேட்டுக்கொண்டு, நாளை எடுக்கப்படும் அல்லது நாளை மறுதினம் எடுக்கப்படும், இல்லையென்றால் எடுக்கவே முடியாது என்று ஏதாவது ஒரு பதிலைச் சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பதில் சொல்லாமலேயே அடுத்த நிகழ்ச்சிக்கு நீங்கள் போவது என்பது சரியான நடைமுறை அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சரும், இந்நாள் எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான திரு. பன்னீர்செல்வம் அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை, 'முதலில் என்ன என்பதைக் கேட்டுக்கொண்டு, அது என்றைக்கு எடுக்கப்படும் என்ற தீர்ப்பைச் சொல்லுங்கள்' என்று தங்களைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே அது வரவேற்கத்தக்க ஒன்று. ஆனால், என்ன சங்கடம் என்றால், யார் என்ன பிரச்சினையை எழுப்புகிறார்கள் என்றே, அருகிலே உட்கார்ந்து இருக்கின்ற எங்களுக்கே தெரியவில்லை. சில நேரங்களில் 'ஈழம்' என்று காதிலே விழுகிறது; 'இலங்கை' என்று காதிலே விழுகிறது; "அங்கே செத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று காதிலே விழுகிறது. ஆக, ஈழப் பிரச்சினையில் இங்கே எழுந்து நின்று உரக்கப் பேசியவர்கள் எந்தக் கருத்தைக் கொண்டிருக்கிறார்கள்? வேறுபட்ட கருத்துக் கொண்டவர்களும் எதிர்த் தரப்பிலே இருக்கிறார்கள். எல்லோரும் ஒரே கருத்தைக் கொண்டவர்கள் அல்ல. ஒரே கருத்தைக் கொண்டவர்களாக இருந்தால், என்ன சொல்கிறார்கள் என்று புரிந்துகொண்டு பதில் சொல்ல இயலும். இரு வேறு கருத்துகள் அல்லது மூன்று கருத்துகள் கொண்டவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தால், அதைப் புரிந்துகொள்ள இயலவில்லை. ஆகவே, தனித்தனியாக நாங்கள் இந்தப் பிரச்சினை குறித்துப் பேசுகிறோம் என்று கூறிவிட்டு, அந்தப்

2008 நவம்பர் 11] [கலைஞர் மு. கருணாநிதி]

பிரச்சினை குறித்துப் பேசினால், அதற்குப் பதில் சொல்ல எங்களுக்கு சுலபமாக இருக்கும். அப்படி அந்த முறையைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

காலையில் தங்களுடைய அறையிலே அமர்ந்து, ஐந்து கவன ஈர்ப்புத் தீர்மானங்களை இன்று எடுப்பது என்று குறிக்கப்பட்டது. ஆனால், அதில் ஒன்றுகூட இப்போது எடுக்கப்படவில்லை. தேவைப்பட்டால், அந்த ஐந்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, இப்போது பிரதானமாக என்ன பிரச்சினையை எழுப்ப எண்ணுகிறார்களோ, அதிலே அந்தப் பக்கத்திலே உள்ளவர்கள், அவர்களுடைய கட்சியின் சார்பாக ஒரே ஒருவர் எழுந்து அதைப்பற்றிப் பேசுவார்களானால், தாங்களும் புரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும்; மற்ற கட்சிக்காரர்களுக்கும் அதைப்பற்றிப் பதில் சொல்ல வழி இருக்கும்; எங்களுக்கும் அதிலே எந்தவிதமான விளக்கமும் அளிக்கின்ற வகையும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி, நீங்கள் உங்களுடைய issue—வைச் சொன்னீர்கள். அதை முதலிலே எடுக்க வேண்டுமா, எடுக்க வேண்டாமா என்று முடிவு எடுத்ததற்குப் பிறகுதான் நான் எடுக்க முடியும். அது என்றைக்கு எடுக்கப்படும், எப்போது எடுக்கப்படும், என்ன சொல்கிறீர்கள் என்று என்னிடம் கேட்டுக்கொண்டிருந்தால், நான் என்ன சொல்ல முடியும்? இப்போதே அதை எடுக்க வேண்டுமென்று சொன்னால் என்ன அர்த்தம்?

திரு. ஜி.கே. மணி: ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, சில பிரச்சினைகளில் ஒருங்கிணைந்த சூழ்நிலையை உருவாக்கிவிட்டு எடுப்பது பொருத்தமாக இருக்கும். அதிலே மாறுபட்ட கருத்து எங்களுக்கு இல்லை. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் சொல்வதை நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம். இலங்கைத் தமிழர் பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. அதில் என்றைக்கு நல்ல சூழ்நிலை ஏற்படுகிறது என்று முதலமைச்சர் அவர்களும், தாங்களும் கருதுகிறீர்களோ அன்று எடுத்து நிறைவேற்றிக்கொள்ளுங்கள்.

அதைப்போல, மின் வெட்டுப் பிரச்சினை, விலைவாசி உயர்வுப் பிரச்சினை என்று மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே, இதைப்போன்ற பிரச்சினைகளை எல்லாம் எழுப்புகின்ற நேரத்திலே அலுவலுக்கு ஒதுக்கப்படாத நேரத்தில் நீங்கள்

அனுமதி கொடுத்து, கேட்டு, 'இன்று எடுக்கிறேன்' அல்லது 'நாளை எடுக்கிறேன்' என்று சொல்லிவிட்டால் நாங்கள் அமர்ந்து விடுவோம். அப்படிப்பட்ட நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று தனி நபர் தீர்மானமாகக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறீர்கள். இலங்கைப் பிரச்சினை சம்பந்தப்பட்டதைக் கொடுத்திருக்கிறீர்கள். நான் இது சம்பந்தமாக உங்களிடத்திலேயே discuss பண்ணியிருக்கிறேன். (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். ஒரு சில குற்றச்சாட்டுகளோடு கொடுத்திருக்கிறீர்கள். அந்தக் குற்றச்சாட்டுகளிலே எது, எது admissible-ஓ அதைத்தான் எடுக்க முடியும், மற்றவற்றை எடுக்க முடியாது என்று உங்களிடத்திலேயே சொல்லியிருக்கிறேன். அதையும் Finance Bill இருக்கும்போது எடுக்க முடியாது; Rule அப்படியிருக்கிறது, Finance Bill முடிந்ததற்குப் பிறகு நாம் அதை எடுப்போம் என்று உங்களிடமே நான் discuss பண்ணியிருக்கிறேன். அதற்குப் பிறகும் நீங்கள் வேண்டுமென்றே அந்த subject-ஐக் கிளப்பினீர்கள் என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) Finance Bill இருக்கும்போது வேறு எந்த subject-ம் எடுக்கத் தீர்மானங்கள் கொண்டு வரக் கூடாது என்று இருக்கிறது இல்லையா? (குறுக்கீடுகள்)

6. இலங்கையில் தமிழர் பகுதிகளில் நடைபெறும் போரினால் அங்குள்ள தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பணிவன்போடு தங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இலங்கைப் பிரச்சினை, இலங்கையிலே வாழ்கிற தமிழர் பிரச்சினை என்றால், அவர்கள் தனித் தீர்மானம் கொண்டு வருவதுபற்றி நீங்கள் ஒருமித்த கருத்தோடு அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. இலங்கையிலே போர் நிறுத்தப்பட வேண்டும், அங்கேயிருக்கக்கூடிய தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதிலே காங்கிரஸ் கட்சி துளியளவும்கூட பின்வாங்கவில்லை என்பதை நாங்கள் சொல்லிக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே யாருக்குமே மாறுபட்ட கருத்தே

ஒருங்கிணைந்து குரல் கொடுக்கிறார்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சுமுகத் தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை நீங்கள் வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே அரசியல் கட்சிகள், பல்வேறு இயக்கங்கள், மாணவர்கள் எல்லாரும் குரல் கொடுக்கிறார்கள். அப்படியானால், ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டுப் பிரச்சினையாக, தமிழர்களுடைய குரலாக ஒலிக்க வேண்டும்; அதற்கு அனைவரும் ஆதரவு கொடுக்க வேண்டும்: இதை வேறுபடுத்தி, பிரச்சிணையாகப் பார்க்க வேண்டாம் என்று பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுகிறீர்களா, அல்லது அவர் பேசுகிறாரா? (குறுக்கீடு) சரி, அவர் பேசட்டும்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு ஓர் உண்மை தெரிந்தாக வேண்டும். மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர், மாண்புமிகு பெரியவர் சுதர்சனம் அவர்கள் பேச எழுந்தவுடன், சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள், 'உட்காருங்கள், உட்காருங்கள் தலைவர் அவர்கள் பேசப் போகிறார்கள்' என்கிறார்கள். சட்டப் பேரவைத் தலைவருக்கு யார் தலைவர் என்பது எங்களுக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கட்சித் தலைவர். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் என்று சொன்னேன்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: அப்படி நீங்கள் சொல்லவில்லை. (குறுக்கீடு) மற்றவர்களைப் பார்த்து, 'உட்காருங்கள், உட்காருங்கள்' என்றீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No, No. காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து, உங்கள் கட்சியின் தலைவர் பேசப் போகிறார் என்று நான் சொன்னேன்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: அப்படி நீங்கள் சொல்லவில்லை.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்தவுடன் இந்த zero hour-ல் யார், யார், என்னென்ன பிரச்சினைகளைப் பேச ஆரம்பிக்கின்றார்களோ, அந்தப் பொருளை நீங்கள் புரிந்துகொண்டு... (குறுக்கீடு)

2008 நவம்பர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலிலே நீங்கள் விஷயத்தைச் சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: சொல்லிவிடுகிறேன். யார் பிரச்சினையை எழுப்புகிறார்களோ, அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து, பொருளைப் புரிந்துகொண்டு, 'இன்றைக்கு நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள், நாளை அல்லது நாளை மறுநாள் எடுத்துக்கொள்ளப்படும், ஆய்விலே இருக்கிறது' என்று ஏதாவது சொன்னால், அவர்கள் பேசாமல் உட்கார்ந்துவிடுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, thanks for your suggestion. உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: தேவையில்லாமல் 40 நிமிடங்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு ஏதாவது இருக்கிறதா? சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: இருக்கிறது. ஏன் வெளியே சென்றோம் என்பதைச் சொல்ல வேண்டும் அல்லவா நாங்கள்? மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த 30-10-2008 அன்று தேவர் திருமகனாருக்கு நினைவஞ்சலி செலுத்த பசும்பொன் கிராமத்திற்குச் சென்றபோது நடைபெற்ற கொலை வெறித் தாக்குதல் (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். எவ்வளவு நேரம் பொறுமையாக இருந்தேன்? நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர், (குறுக்கீடுகள்) One minute, கேளுங்கள், ஒரு subject-ஐச் சொன்னார்கள். அதற்கு அவர் பதில் சொல்லப் போகிறோம் என்று சொல்கிறார். மத்திய அரசாங்கத்தைக் குறை சொன்ன மாதிரி அவர் feel பண்ணி, அதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்கிறார். நீங்கள் different subject-க்குப் போகிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை நான் என்ன சொல்கிறேன் என்றால், இலங்கைத் தமிழர் சம்பந்தப்பட்ட பிரச்சினையை அவர்கள் பேசிக்கொண்டு வந்தார்கள். அது சம்பந்தமாக அவர் சொல்ல வருகிறார். நீங்கள் வேறு subject-க்குப் போகிறீர்கள். அடுத்த தடவை பேசுங்களேன். (குறுக்கீடு)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: ஒரு கட்சிக்கு, எத்தனை பேருக்குப் பேச வாய்ப்புக் கொடுப்பீர்கள்? தெரியாமல்தான் கேட்கிறேன், சொல்லுங்கள்.

[2008 நவம்பர் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் இருக்கட்டும். உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். திரு. செங்கோட்டையன் பேசினார், அடுத்து நீங்கள் பேசுகிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாறுபட்ட கருத்து கிடையாது. உங்களுக்கு வாய்ப்புத் தரமாட்டேன் என்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) அது என்னுடைய discretion. முதலில் அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பன்னீர்செல்வம் கேட்கிறார், நீங்கள் எப்படி, யார் யாருக்குக் கொடுக்கலாம் என்று. இந்த அவையில், யார், யாருக்கு, எத்தனை பேருக்கு, எவ்வளவு நேரம் கொடுப்பது என்பது சட்டமன்றத் தலைவருக்குரிய முழு உரிமை. அதிலே கேள்வி கேட்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. எனவே, அவையை சுமுகமாக நடத்த, ஒரே கட்சியிலே இரண்டு பேரையும் கூப்பிடலாம்; ஒரு கட்சியைக் கூப்பிடாமலும் இருக்கலாம். அது அவைத் தலைவருடைய முழுப் பொறுப்பு. அதை நீங்கள் கேட்க முடியாது. ஆனால், உங்கள் ஆட்சியில் யாரையுமே கூப்பிடாமல் ஒரு காட்டு தர்பார் நடத்தினீர்களே, அப்படி அல்ல இது. (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One minute, நீங்கள் உட்காருங்கள். திரு. சுதர்சனம், பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் வேறு subject–க்குள்ளே போகிறீர்கள். நான் அவரை பேசச் சொல்லப் போகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இந்த அவையைப் பொறுத்த அளவிலே, யாரைப் பேசக் கூப்பிடவேண்டும், யாரை பேசக் கூப்பிடவேண்டாம் என்று நான்தான் முடிவெடுக்கவேண்டும். நீங்கள் சொல்லி நான் எடுக்கவேண்டிய அவசியம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பன்னீர்செல்வம் அவர்கள் ஏற்கெனவே முதலிலே ஒரு பிரச்சினையை எழுப்பி வெளிநடப்புச் செய்து, மறுபடியும் உள்ளே வந்திருக்கிறார்கள்.

2008 நவம்பர் 11] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இதற்கிடையில் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்து பல்வேறு கட்சித் தலைவர்கள் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், அவர்களுக்குப் பதில் சொல்ல வாய்ப்புக் கேட்கிறார். அவருக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டு, அந்தப் பிரச்சினை முடிந்ததற்குப் பிறகு, தேவைப்பட்டால் மறுபடியும் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நானும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இலங்கைத் தமிழர் சம்பந்தமாக அவர்கள்மேல் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். அதற்குப் பதில் சொன்னதற்குப் பிறகு உங்களுக்குத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் அந்த subject-க்குள்ளே போகமாட்டேன் என்கிறீர்களே? நீங்கள்தான் முதலிலேயே ஒரு prejudiced mind-உடனேயே அல்லவா வருகிறீர்கள்?

6. இலங்கையில் தமிழர் பகுதிகளில் நடைபெறும் போரினால் அங்குள்ள தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு—தொடர்ச்சி

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கட்சித் தலைவர்கள், இலங்கையிலே உடனடியாகப் போர் நிறுத்தப்படவேண்டும் என்று இங்கே வேண்டுகோள் வைத்தார்கள். இலங்கையிலே உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்பதிலே காங்கிரஸ் பேரியக்கத்திலும் மாற்றுக் கருத்து யாருக்கும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதை காங்கிரஸ் கட்சி ஒரு நாளும் ஏற்றுக்கொள்ளாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றி, அந்தத் தீர்மானங்களின் அடிப்படையிலே, இன்றைக்கு டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற அரசானது பல்வேறு காரியங்களைச் செய்து வருகிறது. அப்படிப் பல்வேறு காரியங்கள் செய்திருப்பதன் பயனாக, அங்கே இருக்கின்ற அப்பாவித் தமிழ் மக்களுக்கு மத்திய அரசு 800 டன் உணவுப் பொருட்களை உடனடியாக வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) யாரையும் எதிர்பார்க்காமல் வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசு நிதி வசூல் செய்து அதன்மூலமாக அவர்களுக்கு வேண்டிய உணவும், உடையும், இந்திய, தமிழக அரசின் சார்பாக

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கின்றேன். (கூச்சல்—குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். நான் ஒவ்வொன்றாக எடுக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டே அவையிலிருந்து வெளியேறினர்.)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

3. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2008–2009, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008–2009 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின்முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூபாய் 3,055.37 கோடி அளவிலான நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. (குறுக்கீடுகள்)

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: இதில், ரூபாய் 1,813.38 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 1,241.99 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2008 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20 ஆம் நாளன்று 2008–2009 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டம் சட்டமன்றப் பேரவையில்

@ 392 முதல் 395 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்று 'புதுப் பணிகள்' குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. 2008–2009 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக இவ்வரசு மேற்கொண்ட சில புதிய செலவுப் பொறுப்புகளுக்காக சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் பொருட்டும் இவை தாக்கல் செய்யப்படுகின்றன. மாநில வரி வருவாயில் ஏற்படும் வளர்ச்சி மற்றும் வருவாய்க் கணக்கில் செலவினங்களை சிறந்த முறையில் நிருவாகம் செய்தல் ஆகியவற்றின் மூலம் இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள கூடுதல் செலவு ஈடு செய்யப்படும்.

3. கடந்த ஆண்டு பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டிற்கான மாநில அரசின் பங்காக, அரசு கூடுதலாக ரூபாய் 110.52 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)' என்பதன்கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. நமது மாநிலத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மளிகைப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்க ரூபாய் 100.00 கோடியும், சமையல் எரிவாயு உருளைகளுக்கு மானியம் வழங்க ரூபாய் 80.00 கோடியும் அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)' என்ற தலைப்பின்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. தமிழ்நாடு மின் வாரியத்திற்குக் கூடுதல் பங்கு மூலதன உதவி வழங்குவதற்காக ரூபாய் 570.50 கோடி தேவைப்படுகிறது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

6. நலிந்த பிரிவினரின் வீட்டு வசதிக் கடன்களை அரசு தள்ளுபடி செய்ததையொட்டி, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திற்கு இழப்பீடு வழங்க அரசு ரூபாய் 593.68 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை' என்பதன்கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

2008 நவம்பர் 11] [பேராசிரியர் க. அன்பழகன்]

முற்பகல் 10—55

7. கழிவு நீர்க் குழாய்களில் துப்புரவுப் பணியாளர்கள் இறங்கிப் பணிபுரிவதைத் தவிர்க்கும் பொருட்டு, இப்பணிக்கான இயந்திரங்கள் வாங்குவதற்கு, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்திற்கு மானியமாக மூன்று கோடி ரூபாய் வழங்க அரசு கருதியுள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை' என்பதன்கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

8. 2007—2008 ஆம் ஆண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்ட கிராமங்களில், நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் ரூபாய் 414.58 கோடி மதிப்பீட்டில் சாலைகளை மேம்படுத்த இவ்வாண்டில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக 'மானியக் கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை' என்பதன்கீழ் ரூபாய் 166.00 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

9. கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வருவாயைத் தொகுத்துப் பகிர்ந்தளிப்பதற்காக அரசு கூடுதலாக ரூபாய் 257.97 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை' என்பதன்கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

10. சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்துவதற்காக அரசு ரூபாய் 70.50 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை' என்பதன்கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

11. நபார்டு வங்கியின் நிதியுதவியுடன், ரூபாய் 410.74 கோடி மதிப்பீட்டில் அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக, 'மானியக் கோரிக்கை எண் 43—பள்ளிக் கல்வித் துறை' என்பதன்கீழ் ரூபாய் 160.00 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

12. நூற்று இருபத்தைந்து KVA வரை திறன் கொண்ட மின்னாக்கிகளை (Generators) வாங்கும் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோருக்கு, அவற்றின் விலையில் 25 சதவிகிதத்தை (அதிகபட்சம் ரூ.1.5 இலட்சம் வரை) மானியமாக அளிக்க அரசு

கருதியுள்ளது. இதற்காக 'மானியக் கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை' என்பதன்கீழ் ரூபாய் 10.00 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

13. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2008–2009 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

எண்.	கோரிக்கை.	ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
2.	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	86,48	..	..
3.	நீதி நிருவாகம்	4	..	..
4.	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	6,36,52	3,23,01	..
5.	வேளாண்மைத் துறை	45,39,50	11,58,94	..
6.	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)	12,64,48	..	..
7.	மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)	10,68,00	..	..
9.	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	3,88,49	..	..
10.	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	1,20,47	..	..
12.	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	143,13,90	11,40,34	9,94,34
13.	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	194,84,64	1,58,00	..

TRUTH ALONE TRIUMPHS

எண்.	கோரிக்கை.	ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
14.	எரிசக்தித் துறை	..	570,50,00	..
15.	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	24,25	..	..
16.	நிதித் துறை	1,26,38	..	..
17.	கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	3,32,38	..	75,54
18.	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	32,11	..	..
19.	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	87,32,43	..	..
20.	உயர் கல்வித் துறை	8,32,05	2,84,00	..
21.	நெடுஞ்சாலைகள் துறை	1,00,00	2,34,24	..
22.	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	21,95,03	4	..
23.	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	4,92,19	..	..
24.	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	25,60	..	..
25.	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	6,80,13	..	..

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

எண்	கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில் வருவாய்	மூலதனம்	கடன்
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	593,99,63	..	..
27	தொழில் துறை	44,02,32	2,63,38	5,29,38
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	1,07,80	..	5,43,42
29	சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)	93,49	1,03,50	..
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	67,38	15,00,00	36,35,00
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	65,85	2,29,78	..
33	சட்டத் துறை	11,28	..	..
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	184,20,50	19,95,38	..
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	27,02	..	..
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	14,00	4,59,27	..
38	பொதுத் துறை	2,38,35	..	..
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	51,55	1,31,50	..
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	95,92	111,51,85	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

எண்	கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில் வருவாய்	மூலதனம்	கடன்
41	வருவாய்த் துறை	6,36,97	21,25,00	..
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	280,82,85	237,13,00	..
43	பள்ளிக் கல்வித் துறை	82,83,22	164,00,00	..
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	10,00,00	..	..
45	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	16,31,35	..	..
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	32,05	..	..
48	போக்குவரத்துத் துறை	2,78,00	..	..
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	3,83,75	..	..
	பெருமொத்தம்	1,787,98,95	1,184,21,23	57,77,68

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) என்ன? விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கம். அதை ஆதரித்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

4. அறிவிப்புகள்

(அ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2008–2009– மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 10–11–2008 ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, 2008–2009 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும் மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், ஒவ்வொரு மானியக் கோரிக்கையின்மீதும் தலா ஐந்து வெட்டுத் தீர்மானங்களுக்கு மிகாமல் இன்று (11–11–2008) மாலை 3–00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)–ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் ஒன்பதாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) என்ன? விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கம். அதை ஆதரித்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

4. அறிவிப்புகள்

(அ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2008-2009- மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 10-11-2008 ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, 2008-2009 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும் மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், ஒவ்வொரு மானியக் கோரிக்கையின்மீதும் தலா ஐந்து வெட்டுத் தீர்மானங்களுக்கு மிகாமல் இன்று (11-11-2008) மாலை 3-00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் ஒன்பதாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி

(இ) திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. புதிதாக அமைக்கப்பட்ட திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு (Syndicate) அலுவல் சார்பற்ற உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு ஒரு சட்டமன்றப் பேரவை உறுப்பினரைத் தேர்ந்தெடுக்குமாறு அப்பல்கலைக்கழகத்தின் பதிவாளரிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய ஆட்சிக் குழுவின் உறுப்பினர் பதவி முடிவடையும்.

தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 11–11–2008, அதாவது இன்று மாலை 4–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்பு மனுப் படிவங்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்பு மனுக்கள் 12–11–2008 அன்று மாலை 3–00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்புகின்ற வேட்பாளர்கள் 12–11–2008 மாலை 4–00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடத்திற்கு மேற்படுமாயின், அப்பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு (Syndicate) உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–00

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டே அவையிலிருந்து வெளியேறினர்.)

2008 நவம்பர் 11] [பேரவைத் தலைவர்]

ஆசிரியர்கள் இல்லாததால், மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து ஆகிய இந்த ஐந்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை இன்று சிறப்புக் கவன ஈர்ப்பாக நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) தமிழகத்தில் உரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில், உரத் தட்டுப்பாட்டால் தமிழ்நாடு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அ.தி.மு.க. சார்பாகவும், திரு. சி. ஞானசேகரன் அவர்கள் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாகவும் விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன்.

இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்களில், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். அ.தி.மு.க. சார்பாக யார் முதலில் பேசுவது? (குறுக்கீடு) முதன்முதலாக அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், உங்களைப் பேச அழைத்தாகிவிட்டது. நீங்கள் பேசுகிறீர்களா அல்லது அடுத்த உறுப்பினரை நான் கூப்பிடவா? (குறுக்கீடுகள்) பேசுங்கள். நான் சொல்லியாகிவிட்டது, நான் உங்களைப் பேசச் சொல்லிவிட்டேன். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிட்டால், நீங்கள் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-05

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) சபையைக் கட்டுப்படுத்துங்கள். (குறுக்கீடுகள்)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பில், நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுகிறீர்களா? சரி, திரு. ஓ. பன்னீர்செல்வம், பேசுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புக் கவன ஈர்ப்பில் எங்கள் கட்சியின் கொறடா திரு. செங்கோட்டையன் அவர்களைப் பேச அழைத்தீர்கள். (குறுக்கீடுகள்) இவர்களை அமைதியாக இருக்கச் சொல்லுங்கள். அவரால் பேச முடியவில்லை. (குறுக்கீடுகள்)

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் நின்றுகொண்டு கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களின் உணர்வு எல்லோருக்கும் இருக்கின்றது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இரண்டு பேரில் யார் முதலில் பேசுகிறீர்கள்? நான் பேசச் சொன்னவுடன், நீங்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) மைக் உங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) அவ்வளவுதான் நான் சொல்வேன். (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும், தங்கள் கவனத்திற்கு சில பிரச்சினைகளை எழுப்புவதற்காகத் தங்கள் அனுமதியைக் கோருகிறார்கள். என்ன பிரச்சினை என்பதை நீங்கள் கேட்டுக்கொண்டு, அதை எப்பொழுது எழுப்ப நீங்கள் அனுமதிப்பீர்கள் என்பதைத் தெரிவித்தால், தொடர்ந்து மற்ற அலுவல்கள் நடப்பதற்குத்

புலிகள், 'நாங்கள் போரை நிறுத்தத் தயார்' என்று அறிவித்தார்கள். ஆனால் இன்றைக்குப் பத்திரிகையில் வந்த செய்திகளின்படி, இலங்கை இராணுவம் 'போரை நிறுத்த முடியாது' என்று சொல்லியிருக்கின்றது. அதற்குப் பின்னால், இன்றைக்கு இருக்கிற மத்திய அரசு, கடந்த காலங்களில் ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு ஒப்பந்தங்களில் எதுவுமே நடைபெறாத சூழ்நிலையில், அங்கே வாழ்கின்ற நம்முடைய இலங்கைத் தமிழர்களைக் காக்கின்ற பொறுப்பினை நல்ல முறையில் எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், விடுதலைப் புலிகள் போரை நிறுத்துவதற்குத் தயார் என்று அறிவித்த பிறகும், இராணுவம் நிறுத்த முடியாது என்று சொல்லியிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், தொடர்ந்து இராணுவம் அங்கே அப்பாவித் தமிழ் மக்கள் வாழ்கின்ற குடியிருப்புப் பகுதிகள், பள்ளிக்கூடங்கள், பச்சிளம் குழந்தைகள் படிக்கின்ற பள்ளிக்கூடங்கள், வழிபாட்டுத் தலங்கள், இவற்றை எல்லாம் சர்வநாசம் ஆக்கிக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை; அங்கே இலட்சக்கணக்கான பேர் அகதிகளாக வாழ்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசை உடனடியாகத் தொடர்புகொண்டு, இலங்கையின் இராணுவமும் போரை நிறுத்துவதற்குண்டான வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். அதற்குரிய வழிவகைகளை இங்கே இருக்கின்ற நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்களும், மத்தியிலே இருக்கின்ற மத்திய அரசும் அந்த வேண்டுகோளை விடுத்து, இலங்கை இராணுவம் போரை நிறுத்தி, இரு தரப்பும் சுமுகமான தீர்வு காண்பதற்குரிய நல்ல வழியைக் கண்டுபிடித்து, அங்கே வாழ்கின்ற இலங்கைத் தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதற்குண்டான வழிவகைகளைச் செய்வது ஒன்றுதான் தீர்வுக்கு வழி. ஆகவே, நாம் முரண்பட்ட கருத்துகளை, அரசியல் ரீதியான கருத்துகளை, இங்கே தெரிவித்து, அந்தப் பிரச்சினையை வேறு திசைக்கு, வேறு பக்கம் திருப்ப வேண்டாம் என்று அனைவரையும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–45

5. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(அ) தமிழகத்தில் உரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்புக்குப் போகலாமா? (குறுக்கீடு) உரத் தட்டுப்பாட்டால் தமிழ்நாடு

விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நிலவி வரும் கடுமையான உரத் தட்டுப்பாட்டால் தமிழ்நாட்டில் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலை குறித்தும், உரக் கடத்தலில் ஈடுபட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது குறித்தும் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை உங்கள்முன் கொண்டு வந்திருக்கிறோம்.

இந்த அரசைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ உரத் தட்டுப்பாடு ஏற்பட்டு, பல நாட்களாக விவசாயிகள் துன்பத்திலும், துயரத்திலும் இருக்கிறபோது, விவசாயிகளுக்கு மின் வெட்டாலும், சரியான முறையிலே தங்கள் விவசாயத்தைப் பேணிக் காக்கமுடியாத அந்தச் சூழ்நிலையிலும், ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரை 2.50 கோடி ரூபாய் மதிப்புள்ள 3,435 டன் பொட்டாஷ் குளோரைடு உரத்தை வெளிச் சந்தையிலிருந்து கொண்டு வந்து விற்கிற நேரத்தில், அது துறைமுகத்திலேயே மாற்றுக் கைக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்ற செய்திகள் வந்ததும், அதை மத்தியப் புலனாய்வுத் துறை கண்டறிந்ததற்குப் பிறகு, மாநில அரசின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்ததற்குப் பிறகு, இங்கேயிருக்கிற புலனாய்வுத் துறை அதன்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது என்கிற செய்திகளை நாம் பத்திரிகைகள் வாயிலாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம்.

காரணம், இன்றைக்கு இருக்கிற நிலை, விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டிருக்கிற இன்னல்கள், இடர்ப்பாடுகள் கொஞ்சநஞ்சமல்ல. அவர்களுக்குத் தேவையான மின்சாரம் குறிப்பிட்ட காலத்திலே கிடைக்காமலும், வாடிக்கொண்டிருக்கிற பயிரைக் காப்பாற்ற முடியாத சூழ்நிலை ஏற்படுகிறபொழுதும், காலத்தில் உரமிட வேண்டும் என்ற நிலையில் இன்றைக்கு விவசாயிகள் தத்தளித்துக் கொண்டிருக்கிற நிலையிருக்கிறது. இந்த உரத்திற்காக மத்திய அரசு கொடுத்திருக்கிற மானியம் 10.50 கோடி ரூபாய். இந்த 10.50 கோடி ரூபாய் அப்படியே கை மாறி இருக்கிறது என்று சொன்னால், இந்த அரசு அதற்கு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

குறிப்பாக, மாநில சர்க்கார் இன்றைக்கு எடுக்கிற நடவடிக்கையின் அடிப்படையில்—உர விற்பனையைப் பொறுத்தவரையிலும், அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் உரத்தினுடைய விலை, யூரியா

2008 நவம்பர் 11] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

251 ரூபாயிலிருந்து 240 ரூபாய்க்கு விற்கப்பட்டது. M.R.P. என்று குறிப்பிடப்பட்டிருக்கிற அந்த விலையைக் காட்டிலும் குறைந்த விலைக்கு விற்கப்பட்டது. பொட்டாஷ் 231 ரூபாயிலிருந்து 220 ரூபாய்க்கு விற்கப்பட்டிருக்கிறது; D.A.P. 486 ரூபாயிலிருந்து 475 ரூபாய்க்கு விற்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஏ. செங்கோட்டையன், இவ்வளவு details எல்லாம் தேவையில்லை.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: கொஞ்சம் பேசியாக வேண்டும் தலைவர் அவர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Elaborate ஆகப் பேசாதீர்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இன்றைக்கு இருக்கிற ஆட்சியாளர்களுடைய நிலையில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினுடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு, உட்காருங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: சொல்லிவிடுகிறேன். ஆகவேதான், இப்போதைய ஆட்சியாளர்களுடைய காலத்தில், வெளிச் சந்தையில் விற்கப்படுகிற விலை, யூரியா 265 ரூபாய், பொட்டாஷ் 250 ரூபாய், D.A.P. 700 ரூபாய், பாக்டம்பாஸ் 675 ரூபாய். இதுபோன்ற நிலைமை இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், மத்திய அரசு வழங்கும் மானியம் இந்த மாநிலத்திலே இருக்கிற விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, 10.50 கோடி ரூபாயை மானியமாகத் தந்ததற்குப் பிறகு, அந்த மானியம் அப்படியே கைமாறியிருக்கிறது; அது விவசாயிகளுக்குக் கிடைக்கப்பெறவில்லை என்று சொல்கிறபோது, இதற்கு என்ன நடவடிக்கையை இந்த அரசு எடுத்திருக்கிறது? இந்தத் துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இந்தத் துறையின்மூலமாக எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை என்ன? மீண்டும் இதுபோன்ற தவறுகள் நடக்காமல், விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் கூறியதைப்போல, இங்கே செயற்கையான முறையிலே இப்போது உரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய, தொகுப்பிலிருந்து வரக்கூடிய உரம், இப்போது Agriculture Department–லிருந்து, P.A.C.B.க்கு கொடுக்கப்படுகிறபோது, அது முறையாக விவசாயிகளைச் சென்றடையாமல், அது கள்ள மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்கப்படுகிற காரணத்தினாலே, இப்போது விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் குறைந்த விலையில் கிடைக்கக்கூடிய உரம் கிடைக்காமல், அவர்கள் ஏமாற்றப்படக்கூடிய ஒரு சூழல் இருந்து கொண்டிருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போர்க் கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, இதிலே இரண்டு துறைகளும்–P.A.C.B. as well as Agriculture Department—இந்த இரண்டு துறைகளும் இணைந்து, உரிய முறையில் விவசாயிகளுக்கு அந்த உரம் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முற்பகல் 11–50

பொதுவாக யூரியா, பொட்டாஷ் மற்றும் D.A.P. போன்ற உரங்கள் இப்போது கிடைக்காமல் விவசாயிகள் பெரும் அவஸ்தைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்கள் உரிய நேரத்தில் அந்த உரத்தை தங்களுடைய பயிர்களுக்கு இடமுடியாமல் போகக்கூடிய ஒரு சூழல் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, விவசாயிகளுக்குக் குறைந்த விலையிலே உரிய நேரத்தில் அந்த உரத்தைச் சேர்ப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரத் தட்டுப்பாடு குறித்து அரசினுடைய கவனத்திற்கு மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும் (குறுக்கீடு) அவர்தான் முதலில் தீர்மானம் கொடுத்திருக்கிறார், எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்களும், சட்டப் பேரவை உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் அவர்களும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. சி. ஞானசேகரன் அவர்களும், சட்டப் பேரவை உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

அவர்களும் அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லுவதைப்போல தமிழகத்தில் உரத் தட்டுப்பாடு இல்லை என்பதுதான் உண்மை. அதற்கான சில விளக்கங்களை இந்த அவைக்குத் தருவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தமிழகத்தில் ஆண்டுக்கு சராசரியாக 17 இலட்சம் முதல் 20 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, D.A.P. , பொட்டாஷ் மற்றும் காம்ப்பிளக்ஸ் உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. 2008 ஆம் ஆண்டு காரிப் பருவத்தில், ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான உரத் தேவை, பல்வேறு பயிர்களின் சாகுபடிப் பரப்பினை அடிப்படையாகக் கொண்டு, யூரியா 4 இலட்சத்து 35 ஆயிரம் மெட்ரிக் டன், D.A.P. 2 இலட்சம் மெட்ரிக் டன், பொட்டாஷ் 2 இலட்சத்து பத்தாயிரம் மெட்ரிக் டன், காம்ப்பிளக்ஸ் 1 இலட்சத்து 58 ஆயிரம் மெட்ரிக் டன் என, தேவையின் அடிப்படையிலே கணக்கிடப்பட்டது. 2007–2008 ஆம் ஆண்டில் D.A.P. தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருளான பாஸ்ஃபாரிக் அமிலத்தின் விலையேற்றத்தினால் இந்தியாவில் D.A.P. உர உற்பத்தி வெகுவாகக் குறைந்துவிட்டது. தமிழ்நாட்டில் ஸ்பிக் நிறுவனம் D.A.P. உற்பத்தியை முழுமையாக நிறுத்திவிட்டது. இந்நிலையில், தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் D.A.P. உரத்திற்குத் தட்டுப்பாடு நிலவியது.

இந்தியாவிலேயே தமிழக அரசு மட்டும்தான் முதன்முதலாக டான்ஃபெட் நிறுவனத்தினை மாநில முகமை நிறுவனமாக நியமித்து, வட்டியில்லா முன்பணமாக, அரசாணை எண் 218, வேளாண்மை (வே.உ.3) துறை, நாள் : 20–6–2007–ன்படி ரூபாய் 10 கோடியும், அரசாணை எண் 353, வேளாண்மை (வே.உ.3) துறை, நாள் : 24–8–2007–ன்படி மேலும் ரூபாய் 20 கோடியும், ஆக மொத்தம் ரூபாய் 30 கோடியை டான்ஃபெட் நிறுவனத்திற்கு வழங்கியது. தமிழகத்திற்கு 2007–2008 ஆம் ஆண்டு ரபி பருவத்திற்குத் தேவையான D.A.P. உரத்தினை ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு மத்திய இரசாயனம், எஃகு மற்றும் உரத் துறை அமைச்சர் அவர்களுக்கு 23–11–2007 அன்று ஒரு நேர்முகக் கடிதம் எழுதினார்கள். டான்ஃபெட் நிறுவனம் இந்த நிதியினைக் கொண்டு 2007–2008 ஆம் ஆண்டில் 1 இலட்சத்து 4 ஆயிரத்து 100 மெட்ரிக் டன் D.A.P. உரம் கொள்முதல் செய்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக எந்தவிதத் தட்டுப்பாடும் இன்றி விவசாயிகளுக்குத் தேவையான D.A.P. உரத்தை வழங்கியது. இந்தியாவில் D.A.P. உர உற்பத்தியில்

எவ்வித முன்னேற்றமும் இல்லாத நிலையில், 2008–2009 ஆம் ஆண்டில் இறக்குமதியையே முற்றிலும் நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலை தொடர்ந்தது. எனவே, மாநில முகமையான 'டான்ஃபெட்' நிறுவனம் கேட்டுக்கொண்டதற்கிணங்க முன்பணமாக வழங்கிய ரூபாய் 30 கோடியை, 2008–2009 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து பயன்படுத்த அனுமதி வழங்கியது மட்டுமின்றி, தமிழக விவசாயிகளுக்கு 2008 காரிப் பருவத்திலும் தங்குதடையின்றி D.A.P. உரம் விநியோகம் செய்வதை உறுதி செய்யும் வகையில் இவ்வரசு அரசாணை எண் 198, வேளாண்மைத் துறை நாள் 26–5–2008-ன்படி மேலும் ரூபாய் 20 கோடி வழங்கி, இதுவரை ரூபாய் 50 கோடி 'டான்ஃபெட்' நிறுவனத்திற்கு வழங்கியிருக்கிறது.

முற்பகல் 11–55

2008 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தொலைக்காட்சிகளிலும், நாளேடுகளிலும், தமிழகத்தில் உரத் தட்டுப்பாடு நிலவுவதாகவும், D.A.P.யினை அரசு நிர்ணயித்த விற்பனை விலையைவிட அதிக விலைக்கு உர வியாபாரிகள் விற்பதாகவும் அரசுக்குச் செய்திகள் வந்தன. தமிழக அரசு உடனடியாகச் செயல்பட்டு, உர உற்பத்தியாளர்களுடன் 23–6–2008 அன்று அவசரக் கூட்டம் நடத்தி, துறைமுகத்திலுள்ள இருப்பினை விரைந்து மாவட்டங்களுக்கு அனுப்ப அறிவுறுத்தப்பட்டது.

செயற்கையான உரத் தட்டுப்பாட்டை தனியார் உரக் கடைகளுடன், உர நிறுவனங்களும் சேர்ந்து உருவாக்குவதைச் சீர்செய்ய 24–6–2008 அன்று தமிழக அரசு, 11–7–2008–க்குள் தனியார் உர நிறுவனங்கள் வசமிருந்த D.A.P. உரத்தினை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யவும், மீதமுள்ள D.A.P. இருப்பினை 12–7–2008 அன்று டான்ஃபெட் நிறுவனத்திற்கு ஒப்படைப்புச் செய்யுமாறும் உத்தரவு பிறப்பித்தது. மேலும், 12–7–2008–க்குப்பின், உர உற்பத்தியாளர்கள் விநியோகம் செய்யும் D.A.P. உரம் அனைத்தையும் 'டான்ஃபெட்' நிறுவனத்திற்கு மட்டுமே வழங்கவும் உத்தரவிடப்பட்டது. இந்த நடவடிக்கையின்மூலம் விவசாயிகளுக்குத் தேவையான D.A.P. உரம் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதுமட்டுமின்றி, அரசு நிர்ணயித்த விலையான 50 கிலோ மூட்டை விலை, ரூபாய் 486 என D.A.P. உரம் விவசாயிகளுக்குக் கிடைப்பதும் உறுதி செய்யப்பட்டது.

மேலும், மாவட்ட ஆட்சியர் தலைமையில் காவல் துறை, வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை அலுவலர்கள் அடங்கிய ஒருங்கிணைந்த

கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, தமிழகத்திலுள்ள 677 மொத்த விற்பனையாளர்கள் மற்றும் 2,733 சில்லறை விற்பனையாளர்களின் விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டன. இதன் மூலம், D.A.P. உரம் பெருமளவில் உரிமம் பெற்ற வியாபாரிகளால் பதுக்கி வைக்கப்பட்டது தெரிய வந்தது. அதன் அடிப்படையில், உரக் கட்டுப்பாடு சட்டம், 1985—ன்கீழ் 97 உர விற்பனை நிலையங்களின் உர உரிமம் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டது. 408 உர விற்பனை நிலையங்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீசும், 244 உர விற்பனை நிலையங்களில் விற்பனையைத் தடை செய்யும் ஆணையும் வழங்கப்பட்டது.

நண்பகல் 12—00

2008—2009 ஆம் ஆண்டு காரிப் பருவத்திற்குத் தேவையான D.A.P. உரத்தை ஒதுக்கீடு செய்யும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசின் மாண்புமிகு இரசாயனம், எஃகு மற்றும் உரத் துறை அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் 4—4—2008 அன்று நேர்முகக் கடிதம் எழுதினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையின்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள, தனது துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக 11—4—2008 அன்று மாண்புமிகு மத்திய இரசாயனம், எஃகு மற்றும் உரத் துறை அமைச்சர் அவர்கள் தமிழக அரசுக்குத் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில் 2008 காரிப் பருவத்தில் யூரியா 4,49,395 மெட்ரிக் டன்னும், D.A.P. 1,86,255 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 2,68,661 மெட்ரிக் டன்னும், காம்ப்ளக்ஸ் 1,21,043 மெட்ரிக் டன்னும் விநியோகம் செய்யப்பட்டது. 2008 அக்டோபர் மாதத்திற்கு யூரியா தேவையான 1,16,750 மெட்ரிக் டன்னுக்கு 1,27,816 மெட்ரிக் டன்னும், D.A.P. தேவையான 50,620 மெட்ரிக் டன்னுக்கு 85,915 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் உரத் தேவையான 46,670 மெட்ரிக் டன்னுக்கு 51,459 மெட்ரிக் டன்னும், காம்ப்ளக்ஸ் 28,330 மெட்ரிக் டன் தேவைக்கு 39,500 மெட்ரிக் டன்னும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது கையிலே இருப்பது யூரியா 36,000 மெட்ரிக் டன். இந்த 36,000 மெட்ரிக் டன் அரசாங்கத்தினுடைய கையிருப்பில் இருக்கிறது. இது தவிர, ராஷ்ட்ரீய கெமிக்கல்ஸ் நிறுவனம் 50,000 மெட்ரிக் டன்னும், கிரிப்கோ நிறுவனம் 28,000 மெட்ரிக் டன்னும், இஃப்கோ நிறுவனம் 29,000 மெட்ரிக் டன்னும் இறக்குமதி செய்ய உத்தேசித்துள்ளது. எனவே, யூரியா விநியோகத்தில் குறைபாடு எழவில்லை.

[திரு. வீரபாண்டி. எஸ். ஆறுமுகம்] [2008 நவம்பர் 11

D.A.P. உரம் கையிலே இருப்பது 38,167 மெட்ரிக் டன். வெளிநாடுகளிலிருந்து வரவேண்டியது இஃப்கோ மூலம் 15 ஆம் தேதிக்குள் காகிநாடாவுக்கு வரவுள்ளது. மேலும், I.P.L. நிறுவனத்தின் D.A.P. கப்பல் 12 ஆம் தேதி தூத்துக்குடி துறைமுகத்திற்கு வந்தடைய உள்ளது. எனவே, நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்குத் தேவையான D.A.P. உரமும் இருக்கிறது. கையிலும் 38,167 மெட்ரிக் டன் இருக்கிறது. அதைப்போல, பொட்டாஷ் 80,107 மெட்ரிக் டன் இருக்கிறது. காம்ப்ளக்ஸ் 825 மெட்ரிக் டன் இருக்கிறது.

இங்கே அரசாங்கம் ஒதுக்கிய பணத்தை அப்படியே ஏதோ தனியார் மோசடி செய்துவிட்டதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டார்கள். அதிலே ஒரு விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய ஆட்சியிலே அது நடைபெறவில்லை. அது இன்னொரு ஆட்சியில் நடைபெற்றது. நான் குற்றம் சொல்ல விரும்பவில்லை. ஆனால் புதுக்கோட்டை மொத்த விற்பனையாளர் திரு. நடராஜன் பிற விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்த பொட்டாஷ் M.O.P. உரம் வங்காள தேசத்திற்குக் கடத்தப்பட்டுள்ளதாகவும், தமிழகத்தில் வேளாண்மை அல்லாத பணிகளுக்குப் பயன்படுத்தப்படுவதாகவும் அனாமதேயமாக ஒரு கடிதம் எங்களுக்குக் கிடைத்தது. அதன்மீது தகுந்த விசாரணை நடைபெற வேண்டுமென்று துறைக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் நாங்கள் உத்தரவிட்டதன்பேரில், புதுக்கோட்டை மொத்த உர விற்பனையாளர் திரு. நடராஜன்—தமிழகத்திலே 800 உப உர விற்பனையாளர்கள் (Sub dealers) உள்ளனர்—விற்பனை செய்த விற்பனையாளர்களில் சென்னையிலுள்ள ஸ்ரீகாந்த் நாகேஷ் என்ற உர விற்பனையாளர் ஒருவர். அவர் sub dealer. நடராஜனிடம் sub dealer ஆக உள்ளார். அவர் அரசாங்கம் நியமித்த டீலர் தான்.

அவர் அதை வாங்கி, ஸ்ரீகாந்த் நாகேஷ் என்ற உர விற்பனையாளர், புதுக்கோட்டை மொத்த விற்பனையாளரிடமிருந்து பெறப்பட்ட M.O.P. உரத்தை, அம்பத்தூரில் உள்ள உர உரிமம் பெறாத ஸ்ரீ கெமிக்கல்ஸ் என்ற நிறுவனத்திற்கு 3,514 மெட்ரிக் டன் அளவிற்கு விற்றிருக்கின்றார். இந்த ஸ்ரீ கெமிக்கல்ஸ் நிறுவன உரிமையாளர், இந்த உரங்களை ஆந்திர மாநிலத்தில் தனக்கும், தனது உறவினர்களுக்கும் சொந்தமான நிலங்களில் பயன்படுத்துவதாக விசாரணையில் அவர் தெரிவித்தார்.

2008 நவம்பர் 11] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

பிற்பகல் 12–05

அந்த அடிப்படையில் ஸ்ரீகாந்த் நாகேஷ் உர விற்பனை மையத்திற்கு வேளாண்மைத் துறையினரால் வழங்கப்பட்ட உரிமம் உடனே இரத்துச் செய்யப்பட்டது. அவருடைய உரிமத்தை நாங்கள் இரத்துச் செய்து விட்டோம். இது தவிர, 1973 ஆம் ஆண்டு ஆணை மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சட்டம், 1955 ஆகியவற்றை மீறிய செயல் என்பதாலும், ஆந்திர மாநிலத்தில் நிகழ்ந்த நடவடிக்கை சம்பந்தப்பட்டுள்ளதால், சி.பி.சி.ஐ.டி. பிரிவு இதை விசாரிக்கலாம் என்று மாநில அரசாங்கம்—நாங்கள் பரிந்துரை செய்தோம். அவர்கள் விசாரித்துவிட்டு, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சட்டம் 1955—ன்படி, இந்த நிகழ்வினை குடிமைப் பொருள்கள் வழங்கும் புலனாய்வு—Civil Supplies C.I.D. தான் விசாரிக்க வேண்டுமென்று அவர்கள் எழுதி அனுப்பிவிட்டார்கள். இப்போது அது விசாரணையில் இருக்கிறது.

ஆகவே, உரத் தட்டுப்பாடு என்பதும் இல்லை. தவறு எங்கே நடந்தாலும், அதைக் கண்டுபிடித்து, சரியான நடவடிக்கையினை எடுக்கக்கூடிய அரசுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, கலைஞர் அரசு என்பதை நான் இங்கு தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு தெளிவாக அமைச்சரவர்கள் சொன்னதற்குப் பிறகும் வேறு என்ன கேட்கப் போகிறீர்கள்? உட்காருங்கள்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் தண்ணீர் வருவதை கேரள அரசு தடுத்து வருவதால் சுமார் 4,000 எக்டேர் பயிர்கள் கருகுவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, கன்னியாகுமரி மாவட்டம், நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் தண்ணீர் வருவதை கேரள அரசு தடுத்து வருவதால் சுமார் 4,000 எக்டேர் பயிர்கள் கருகுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். ஜெயபால், திரு. எச். வசந்த குமார், திரு. கே. கோபிநாத், திருமதி டி. யசோதா, திரு. து. செல்வராஜ், திரு. கே.எஸ்.கே. இராஜேந்திரன், திரு. போ. கோபாலன், டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, திரு. எம்.ஆர். சுந்தரம், திரு. ராம சுப்புராம், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. ஆர்.எம். பழனிசாமி,

அனுமதி கொடுத்து, கேட்டு, 'இன்று எடுக்கிறேன்' அல்லது 'நாளை எடுக்கிறேன்' என்று சொல்லிவிட்டால் நாங்கள் அமர்ந்து விடுவோம். அப்படிப்பட்ட நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று தனி நபர் தீர்மானமாகக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறீர்கள். இலங்கைப் பிரச்சினை சம்பந்தப்பட்டதைக் கொடுத்திருக்கிறீர்கள். நான் இது சம்பந்தமாக உங்களிடத்திலேயே discuss பண்ணியிருக்கிறேன். (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். ஒரு சில குற்றச்சாட்டுகளோடு கொடுத்திருக்கிறீர்கள். அந்தக் குற்றச்சாட்டுகளிலே எது, எது admissible-ஓ அதைத்தான் எடுக்க முடியும், மற்றவற்றை எடுக்க முடியாது என்று உங்களிடத்திலேயே சொல்லியிருக்கிறேன். அதையும் Finance Bill இருக்கும்போது எடுக்க முடியாது; Rule அப்படியிருக்கிறது, Finance Bill முடிந்ததற்குப் பிறகு நாம் அதை எடுப்போம் என்று உங்களிடமே நான் discuss பண்ணியிருக்கிறேன். அதற்குப் பிறகும் நீங்கள் வேண்டுமென்றே அந்த subject-ஐக் கிளப்பினீர்கள் என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) Finance Bill இருக்கும்போது வேறு எந்த subject-ம் எடுக்கத் தீர்மானங்கள் கொண்டு வரக் கூடாது என்று இருக்கிறது இல்லையா? (குறுக்கீடுகள்)

6. இலங்கையில் தமிழர் பகுதிகளில் நடைபெறும் போரினால் அங்குள்ள தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பணிவன்போடு தங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இலங்கைப் பிரச்சினை, இலங்கையிலே வாழ்கிற தமிழர் பிரச்சினை என்றால், அவர்கள் தனித் தீர்மானம் கொண்டு வருவதுபற்றி நீங்கள் ஒருமித்த கருத்தோடு அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. இலங்கையிலே போர் நிறுத்தப்பட வேண்டும், அங்கேயிருக்கக்கூடிய தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதிலே காங்கிரஸ் கட்சி துளியளவும்கூட பின்வாங்கவில்லை என்பதை நாங்கள் சொல்லிக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே யாருக்குமே மாறுபட்ட கருத்தே

இல்லை. ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கம். அது தடை செய்யப்பட்டது சரியானதே என்று டெல்லி உயர் நீதிமன்றம்கூட இன்றுகூட ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறது. அப்படி இருக்கிறபோது, விடுதலைப் புலிகளை ஆதரித்து இங்கே பல அரசியல் கட்சிகளினுடைய தலைவர்கள், பல இயக்கங்களினுடைய தலைவர்கள், பல சினிமா நடிகர்கள், இயக்குநர்கள் என்றெல்லாம் புறப்பட்டு, இன்று அவர்கள் விடுதலைப் புலிகளை வெளிப்படையாக ஆதரித்து, ராஜீவ் காந்தி கொலையையே கொச்சைப்படுத்தி, கொச்சைப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே முதல் குற்றவாளியாக இருக்கிற விடுதலைப் புலிகளுடைய தலைவன் பிரபாகரனை ஓர் உலகத் தமிழன் என்றெல்லாம் புகழ்ந்து, பாராட்டி, புகழாரம் சூட்டி இன்று தமிழகத்தில் தனியான ஒரு சூழலை உருவாக்கி, கலவரத்தைக் கட்டவிழ்த்துவிடக்கூடிய நிலை எங்கு பார்த்தாலும் வந்துகொண்டிருக்கிறதே, விடுதலைப் புலிகளை வெளிப்படையாக ஆதரித்துப் பேசுபவர்களைப் பற்றி நாங்கள் இங்கே அவையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும், அதேபோல காவல் துறையினுடைய கவனத்திற்கும் கொண்டு வந்து, அவர்கள்மீது—எப்படி வைகோ, அதேபோல அருமை அண்ணன் மு. கண்ணப்பன் மற்றும் அமீர், சீமான் போன்றவர்கள் கைது செய்யப்பட்டார்களோ, அதேபோல, மற்றவர்களும்,—யார், யாரெல்லாம் விடுதலைப் புலிகளை வெளிப்படையாக ஆதரித்து—அவர்கள் திட்டமிட்டே இப்படிப்பட்டதொரு பிரச்சாரத்தைத் தமிழகத்திலே கட்டவிழ்த்துவிட்டு, இங்கே கலவரத்தையும் கட்டவிழ்த்துவிட்டு அதிலே குளிர் காய நினைக்கக்கூடியவர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டுமென்பதுதான் எங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய ஒரேயொரு நோக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நோக்கத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்பதற்காகத்தான் நாங்கள் ஒரு தீர்மானத்தை, விடுதலைப் புலிகளை ஆதரிப்போரைப் பற்றி ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, அது எப்போது எடுக்கப்படும் என்பதைத்தான் நாங்கள் தங்களுடைய வாயிலாக அறிய விரும்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்திலே என்ன சொல்லியிருக்கிறீர்களோ, அவை அனைத்தையும் இப்போது இங்கேயே சொல்லிவிட்டீர்கள். அப்புறம் இன்னொரு நாளைக்கு எடுக்க வேண்டுமென்று சொல்லுகிறீர்களே? (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், நீங்கள் சொல்லுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். அங்கே போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்பதுதான் இங்கே இருக்கிற அனைவருடைய ஒட்டுமொத்தக் கருத்தாக இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு வேண்டுகோளை கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக வைத்தார்கள். போர் நிறுத்தம் என்பது ஒரு தரப்பிலே இருக்க முடியாது; ஆகவே, இரு தரப்பும் அதைப்பற்றி யோசிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்தார்கள். அந்த வேண்டுகோள் இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த வேண்டுகோளின் அடிப்படையில் எங்களுடைய மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் அவர்கள் பொதுவாக ஊடகங்கள்மூலமாக ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள். அதற்குப் பதிலாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய மாநிலச் செயலாளர் அவர்களுக்கும் பதில் online மூலமாகவே கிடைத்திருக்கிறது. அது வெளியிலே பத்திரிகைச் செய்தியாகவும் வந்திருக்கிறது. அந்த அரசியல் பிரிவினுடைய தலைவராக இருக்கிற நடேசன் அவர்கள், விடுதலைப் புலிகள் போரை நிறுத்தச் சம்மதம் தெரிவிக்கிறோம் என்று அறிவித்துவிட்டார்கள். ஆனால் இலங்கை அரசு நேற்றையதினம் அந்த நாடாளுமன்றத்திலே, போர் நிறுத்தம் என்பது செய்ய இயலாது, நாங்கள் தொடருவோம் என்று அறிவித்திருக்கிறார்கள்.

ஆகவேதான், இதிலேயிருக்கிற பிரச்சினை என்பது ஒரு ஒட்டுமொத்தமான கருத்துருவாக்கம், ஒரு தரப்பு ஒப்புக்கொள்ளாது என்று சொன்ன நிலையிலிருந்து, போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதற்குப் பின்னாலும் இலங்கை அரசாங்கம் பிடிவாதம் காட்டி அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறதே, இந்த நிலைமையிலே, நமது அண்டை நாடு என்ற முறையில், நம்முடைய தமிழ்ச் சகோதரர்கள் அங்கே படுகொலை செய்யப்படுகிறார்கள் என்ற முறையில், நம்முடைய மத்திய அரசாங்கம் இதிலே துரிதமான கவனத்தைச் செலுத்தினால், அங்கே போர் நிறுத்தப்படும்; அரசியல் தீர்வு காணப்படும்; சமாதானம் கிடைக்கும். ஆனால் அதைச் செய்வதற்கு நம்முடைய மத்திய அரசு ஏன் பாராமுகமாக இருக்கிறது என்பதுதான் இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய கேள்வி. இதை, இலங்கை அரசாங்கத்தை நாங்கள் இந்தச் சபையின் மூலமாகக் கண்டிப்பதோடு போர் நிறுத்தம் செய்ய அவர்கள் முன்வரவேண்டுமென்பதை வலியுறுத்துவதோடு, மத்திய

அரசாங்கம் அதற்கு உரிய முயற்சிகளை விரைவாக, உடனடியாகச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துவதற்காகத்தான் இந்த அவையிலே நாங்கள் இந்தக் கருத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இது நம்முடைய தமிழ்நாட்டினுடைய ஓர் உணர்வுப் பிரச்சினையாக இருக்கிறது.

முற்பகல் 11—20

இதிலே மாண்புமிகு உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். எங்களுக்கு அதிலே மாற்றுக் கருத்து இல்லை. அவர் சொன்ன விஷயங்கள் எல்லாம் சட்ட திட்டத்திற்கு உட்பட்ட விஷயங்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரையிலும், நாங்கள் தீவிரவாதத்தை ஆதரிப்பவர்கள் அல்ல. ஆகவே, தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் நாங்கள் ஆதரிக்கவில்லை. விடுதலைப் புலிகள் என்ற காரணத்தினாலேயே இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் அங்கே கொல்லப்படுவதை அண்ணன் ஞானசேகரன் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? காங்கிரஸ் கட்சி அதை ஏற்றுக்கொள்கிறதா? அதைப்பற்றி இங்கே சொல்ல வேண்டாமா? (குறுக்கீடுகள்) இதுதான் எங்களுடைய உணர்வு. அவர்களுடைய உணர்வு அது. அதை நான் மதிக்கிறேன்; அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தில் அமைதி நிலவ வேண்டும் என்று சொன்னால், இலங்கையிலே அமைதி நிலவ வேண்டும். தமிழர்களுக்குத் தேவையான பாதுகாப்பு வழங்க வேண்டும். இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்ய வேண்டும். மத்திய அரசுதான் இதில் உடனடியாகத் தலையிட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வலியுறுத்துகிறோம். அதை என்றையதினம் எடுத்து தீர்மானமாக நிறைவேற்றுவீர்கள் என்பதைத்தான் இந்த அவையிலே இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் தலைவர் பேசப் போகிறார். உட்காருங்கள். அவருடைய கருத்தை அவர் சொல்லட்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஹசன் அலி, உட்காருங்கள் முதலில்.

திரு. கு. ஹசன் அலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

முனைவர் கு. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: You please sit down. (குறுக்கீடுகள்) No, no. sit down. திரு. சுதர்சனம், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுங்கள்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுதர்சனம் பேசி முடித்துவிடட்டும். பிறகு நீங்கள் பேசுங்களேன். (குறுக்கீடுகள்) சரி, திரு. சி. கோவிந்தசாமி, பேசுங்கள்.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் நடைபெற்று வருகின்ற பிரச்சினையையும், அங்கே இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுவதையும் மனிதாபிமானமுள்ள யாரும் ஏற்றுக்கொள்ளமுடியாது என்பதிலே எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இலங்கையிலே நடைபெறுகிற போர் இரு தரப்பிலும் நிறுத்தப்பட வேண்டும். அந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்கு, அரசியல் ரீதியாக ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு நியாயமான அரசியல் தீர்வை, இலங்கைத் தமிழ் மக்கள் அனைவருக்கும் ஒரு பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒரு தீர்வை உருவாக்க வேண்டும் என்ற முறையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி இன்றல்ல, இந்தப் பிரச்சினை துவங்கியது முதல் அன்னை இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் இந்திய நாட்டின் பிரதமராக இருந்தபோது 1983 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில், இன்னும் சொல்லவேண்டுமானால் ராஜீவ் காந்தி அவர்களுடைய மரணத்திற்கு முன்பும் சரி, ராஜீவ் காந்தி அவர்களுடைய கொடூரமான அந்தக் கொலைக்குப் பின்பும் சரி, ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்கள் அனைவருக்கும் முழுமையான சுய ஆட்சி கிடைக்கக்கூடிய ஓர் அரசியல் தீர்வினை இலங்கை அரசு உருவாக்க வேண்டும் என்கிற நிலையை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அந்த வகையில், இன்றைக்கு நடைபெறுகின்ற போரில் தமிழ் மக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டும். தமிழ் மக்களுக்கு உரிய நிவாரணங்கள் உடனடியாகக் கிடைக்கவேண்டும் என்ற முறையில், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுத்த முடிவைத் தொடர்ந்து, மத்திய அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்திருப்பது தொடரவேண்டும், இன்னும் இலங்கை அரசாங்கத்தை வலுவாக, பலமாக, அங்கே நிர்பந்தப்படுத்தி, போரை இரு தரப்பும் நிறுத்தி, அங்கே இரு தரப்பும் ஒரு சுமுகமான அரசியல் தீர்வினை, ஒன்றுபட்ட

இலங்கைக்குள் உருவாக்குவதற்கு நம்முடைய மத்திய அரசு இலங்கை அரசாங்கத்தை உரிய முறையிலே நிர்பந்தப்படுத்த வேண்டும் என்ற கருத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலே இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் இலங்கைத் தமிழர்கள் இன்றைய சூழ்நிலையில் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையில் மாறுபட்ட கருத்தே இருப்பதற்கு வாய்ப்பில்லை. எல்லாத் தரப்பிலும் வெளியிலே கட்சியினுடைய தலைவர்கள் அறிக்கைகளை வெளியிடுவது, அந்தந்த இயக்கத்தின் சார்பிலே அவர்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தக்கூடிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

முற்பகல் 11–25

இன்று இதுவரையில் இல்லாத அளவிற்கு, இலங்கையில் வாழக்கூடிய அப்பாவித் தமிழர்களை, தமிழ் இனமே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு அடியோடு அழித்துவிட வேண்டும் என்று அங்கே ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், அது போராளிகள் என்று அப்பாவித் தமிழர்கள் என்று பிரித்துப் பார்க்காமல், அமைதியான சூழ்நிலை உருவாக வேண்டும். அதற்கு முதல் தீர்வு, அங்கு போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற நிலை; தொடர்ந்து ஒரு சமரசத் தீர்வு வேண்டும் என்ற நிலை. இதிலே மாறுபட்ட கருத்து இல்லாத சூழ்நிலையினாலே, இங்கே வீற்றிருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களையும் நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி, பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரும்புகிற தேதியில், அரசின் சார்பிலே ஒரு நல்ல தீர்மானத்தை வடிவமைத்து, மத்திய அரசுக்கு அனுப்பி வைப்பதற்கான நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும்; அதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும்; தமிழ்நாட்டிலே இருக்கிற தமிழர்கள் அனைவரும்

ஒருங்கிணைந்து குரல் கொடுக்கிறார்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சுமுகத் தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை நீங்கள் வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே அரசியல் கட்சிகள், பல்வேறு இயக்கங்கள், மாணவர்கள் எல்லாரும் குரல் கொடுக்கிறார்கள். அப்படியானால், ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டுப் பிரச்சினையாக, தமிழர்களுடைய குரலாக ஒலிக்க வேண்டும்; அதற்கு அனைவரும் ஆதரவு கொடுக்க வேண்டும்: இதை வேறுபடுத்தி, பிரச்சினையாகப் பார்க்க வேண்டாம் என்று பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுகிறீர்களா, அல்லது அவர் பேசுகிறாரா? (குறுக்கீடு) சரி, அவர் பேசட்டும்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு ஓர் உண்மை தெரிந்தாக வேண்டும். மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர், மாண்புமிகு பெரியவர் சுதர்சனம் அவர்கள் பேச எழுந்தவுடன், சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள், 'உட்காருங்கள், உட்காருங்கள் தலைவர் அவர்கள் பேசப் போகிறார்கள்' என்கிறார்கள். சட்டப் பேரவைத் தலைவருக்கு யார் தலைவர் என்பது எங்களுக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கட்சித் தலைவர். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் என்று சொன்னேன்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: அப்படி நீங்கள் சொல்லவில்லை. (குறுக்கீடு) மற்றவர்களைப் பார்த்து, 'உட்காருங்கள், உட்காருங்கள்' என்றீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No, No. காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து, உங்கள் கட்சியின் தலைவர் பேசப் போகிறார் என்று நான் சொன்னேன்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: அப்படி நீங்கள் சொல்லவில்லை.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்தவுடன் இந்த zero hour-ல் யார், யார், என்னென்ன பிரச்சினைகளைப் பேச ஆரம்பிக்கின்றார்களோ, அந்தப் பொருளை நீங்கள் புரிந்துகொண்டு... (குறுக்கீடு)

2008 நவம்பர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலிலே நீங்கள் விஷயத்தைச் சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: சொல்லிவிடுகிறேன். யார் பிரச்சினையை எழுப்புகிறார்களோ, அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து, பொருளைப் புரிந்துகொண்டு, 'இன்றைக்கு நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள், நாளை அல்லது நாளை மறுநாள் எடுத்துக்கொள்ளப்படும், ஆய்விலே இருக்கிறது' என்று ஏதாவது சொன்னால், அவர்கள் பேசாமல் உட்கார்ந்துவிடுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, thanks for your suggestion. உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: தேவையில்லாமல் 40 நிமிடங்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு ஏதாவது இருக்கிறதா? சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: இருக்கிறது. ஏன் வெளியே சென்றோம் என்பதைச் சொல்ல வேண்டும் அல்லவா நாங்கள்? மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த 30-10-2008 அன்று தேவர் திருமகனாருக்கு நினைவஞ்சலி செலுத்த பசும்பொன் கிராமத்திற்குச் சென்றபோது நடைபெற்ற கொலை வெறித் தாக்குதல் (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். எவ்வளவு நேரம் பொறுமையாக இருந்தேன்? நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர், (குறுக்கீடுகள்) One minute, கேளுங்கள், ஒரு subject-ஐச் சொன்னார்கள். அதற்கு அவர் பதில் சொல்லப் போகிறோம் என்று சொல்கிறார். மத்திய அரசாங்கத்தைக் குறை சொன்ன மாதிரி அவர் feel பண்ணி, அதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்கிறார். நீங்கள் different subject-க்குப் போகிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை நான் என்ன சொல்கிறேன் என்றால், இலங்கைத் தமிழர் சம்பந்தப்பட்ட பிரச்சினையை அவர்கள் பேசிக்கொண்டு வந்தார்கள். அது சம்பந்தமாக அவர் சொல்ல வருகிறார். நீங்கள் வேறு subject-க்குப் போகிறீர்கள். அடுத்த தடவை பேசுங்களேன். (குறுக்கீடு)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: ஒரு கட்சிக்கு, எத்தனை பேருக்குப் பேச வாய்ப்புக் கொடுப்பீர்கள்? தெரியாமல்தான் கேட்கிறேன், சொல்லுங்கள்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2008 நவம்பர் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் இருக்கட்டும். உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். திரு. செங்கோட்டையன் பேசினார், அடுத்து நீங்கள் பேசுகிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாறுபட்ட கருத்து கிடையாது. உங்களுக்கு வாய்ப்புத் தரமாட்டேன் என்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) அது என்னுடைய discretion. முதலில் அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பன்னீர்செல்வம் கேட்கிறார், நீங்கள் எப்படி, யார் யாருக்குக் கொடுக்கலாம் என்று. இந்த அவையில், யார், யாருக்கு, எத்தனை பேருக்கு, எவ்வளவு நேரம் கொடுப்பது என்பது சட்டமன்றத் தலைவருக்குரிய முழு உரிமை. அதிலே கேள்வி கேட்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. எனவே, அவையை சுமுகமாக நடத்த, ஒரே கட்சியிலே இரண்டு பேரையும் கூப்பிடலாம்; ஒரு கட்சியைக் கூப்பிடாமலும் இருக்கலாம். அது அவைத் தலைவருடைய முழுப் பொறுப்பு. அதை நீங்கள் கேட்க முடியாது. ஆனால், உங்கள் ஆட்சியில் யாரையுமே கூப்பிடாமல் ஒரு காட்டு தர்பார் நடத்தினீர்களே, அப்படி அல்ல இது. (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One minute, நீங்கள் உட்காருங்கள். திரு. சுதர்சனம், பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் வேறு subject–க்குள்ளே போகிறீர்கள். நான் அவரை பேசச் சொல்லப் போகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இந்த அவையைப் பொறுத்த அளவிலே, யாரைப் பேசக் கூப்பிடவேண்டும், யாரை பேசக் கூப்பிடவேண்டாம் என்று நான்தான் முடிவெடுக்கவேண்டும். நீங்கள் சொல்லி நான் எடுக்கவேண்டிய அவசியம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பன்னீர்செல்வம் அவர்கள் ஏற்கெனவே முதலிலே ஒரு பிரச்சினையை எழுப்பி வெளிநடப்புச் செய்து, மறுபடியும் உள்ளே வந்திருக்கிறார்கள்.

2008 நவம்பர் 11] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இதற்கிடையில் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்து பல்வேறு கட்சித் தலைவர்கள் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், அவர்களுக்குப் பதில் சொல்ல வாய்ப்புக் கேட்கிறார். அவருக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டு, அந்தப் பிரச்சினை முடிந்ததற்குப் பிறகு, தேவைப்பட்டால் மறுபடியும் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நானும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இலங்கைத் தமிழர் சம்பந்தமாக அவர்கள்மேல் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். அதற்குப் பதில் சொன்னதற்குப் பிறகு உங்களுக்குத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் அந்த subject–க்குள்ளே போகமாட்டேன் என்கிறீர்களே? நீங்கள்தான் முதலிலேயே ஒரு prejudiced mind–உடனேயே அல்லவா வருகிறீர்கள்?

6. இலங்கையில் தமிழர் பகுதிகளில் நடைபெறும் போரினால் அங்குள்ள தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு—தொடர்ச்சி

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கட்சித் தலைவர்கள், இலங்கையிலே உடனடியாகப் போர் நிறுத்தப்படவேண்டும் என்று இங்கே வேண்டுகோள் வைத்தார்கள். இலங்கையிலே உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்பதிலே காங்கிரஸ் பேரியக்கத்திலும் மாற்றுக் கருத்து யாருக்கும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதை காங்கிரஸ் கட்சி ஒரு நாளும் ஏற்றுக்கொள்ளாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றி, அந்தத் தீர்மானங்களின் அடிப்படையிலே, இன்றைக்கு டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற அரசானது பல்வேறு காரியங்களைச் செய்து வருகிறது. அப்படிப் பல்வேறு காரியங்கள் செய்திருப்பதன் பயனாக, அங்கே இருக்கின்ற அப்பாவித் தமிழ் மக்களுக்கு மத்திய அரசு 800 டன் உணவுப் பொருட்களை உடனடியாக வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) யாரையும் எதிர்பார்க்காமல் வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசு நிதி வசூல் செய்து அதன்மூலமாக அவர்களுக்கு வேண்டிய உணவும், உடையும், இந்திய, தமிழக அரசின் சார்பாக

வழங்கியிருக்கிறது. அது ஐ.நா. சபையின் மூலமாக, இந்திய தூதரகத்தின் மூலமாக, செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக வழங்கியிருக்கிறது. இப்படியிருக்கின்ற நிலையில், திடீரென்று விடுதலைப் புலிகள் நேற்று, 'நாங்கள் போர் நிறுத்தத்திற்குத் தயார்' என்று அறிவித்தார்கள். அறிவித்தவுடனே இந்திய அரசு என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்துகொண்டிருக்கிறது. தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களும் என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டுமே தவிர, இந்தியா என்பது ஒரு நாடு, இலங்கை என்பது வேறு நாடு. இரண்டு நாட்டுப் பிரச்சினைகளை ஒரு நிமிடத்திலே தீர்த்துக்கொள்ளமுடியாது. ஆனால், அங்கே இருக்கின்ற அப்பாவித் தமிழர்களுக்கு வாழ்வைத் தேடிக் கொடுக்க வேண்டியது நம்முடைய கடமை. அந்தக் கடமையிலேயிருந்து யாரும் பின்வாங்கப் போவதில்லை. இந்திய அரசும் பின்வாங்கப் போவதில்லை. தமிழக அரசும் பின்வாங்கப் போவதில்லை. இதுவரை இந்திய அரசு என்னென்ன செய்தது என்பதைப் பற்றி, நீங்கள் ஒரு தேதி குறிப்பிட்டு எங்களுக்குத் தெரிவிப்பீர்களேயானால், இந்திய அரசு இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு, அப்பாவித் தமிழர்களுக்கு என்னென்ன நன்மைகளை இந்தக் குறுகிய காலத்திலே செய்திருக்கிறது என்பதைப் பற்றி விவரமாகவும், விளக்கமாகவும் நாங்கள் சொல்லத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தயவுசெய்து உடனடியாக ஒரு தேதியைக் குறிப்பிடவேண்டும். அந்தத் தேதியிலே இந்த விவாதத்தை வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே, இலங்கையிலே வாழ்கின்ற அப்பாவித் தமிழர்களுக்குத்தான் எங்களுடைய ஆதரவே தவிர, இலங்கையிலே போர் நிறுத்தம் என்ற பெயரிலே அறிவிப்புச் செய்கின்ற விடுதலைப் புலிகளுக்கோ, தமிழகத்திலே இருக்கின்ற விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கோ காங்கிரஸ் கட்சியும், மற்ற இயக்கங்களும் ஒரு நாளும் ஆதரவாக இருக்கமாட்டோம் என்ற உறுதிமொழியை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுகின்றவர்கள்மீது தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கொள்கை. அதைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. இராமகிருஷ்ணன்.

முற்பகல் 11-35

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே நடைபெறுகின்ற இனப் படுகொலை அத்து மீறிச் சென்றிருக்கின்றது. (குறுக்கீடு) சும்மா இருங்கள் சார். (குறுக்கீடு) நீங்க பாட்டுக்கு இருங்கள். (குறுக்கீடு) எங்களுக்குத் தெரியும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: உங்களைப் பார்த்துத்தான் பேசுகிறேன் சார். அவர் என்னைப் பார்த்துப் பேசுவதற்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அவரைப் பார்த்து ஏன் கையை நீட்டுகிறீர்கள்? என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: அவர் என்னைப் பார்த்துப் பேசுவதற்கு நீங்கள் கண்டனம் தெரிவிக்க வேண்டும். (குறுக்கீடு) அவர் என்னைப் பார்த்துப் பேசுகிறார். (குறுக்கீடு) இப்போது பிரச்சினை தீவிரம் அடைந்திருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் பேசி முடித்த பிறகு கடைசியிலே நீங்கள் கையைத் தூக்கிக் கொண்டு நிற்கிறீர்களே? அது ஏன்?

திரு. நா. இராமகிருஷ்ணன்: மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களைச் சந்தித்து, அங்கே நடக்கின்ற இனப் படுகொலைக்கு இந்திய அரசு எந்த வகையிலேயும், ஆயுதங்களையோ, ரேடார்களையோ, தொழில்நுட்ப வல்லுநர்களையோ அனுப்பக்கூடாது என்று வேண்டுகோள் வைத்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு பிரதமர் அவர்களும், 'நிச்சயமாக அனுப்பமாட்டோம்' என்று சொல்லியிருந்தார்கள். இந்தச் சூழ்நிலையில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றபோது, இந்தியாவிற்கும், இலங்கைக்கும் பாதுகாப்புப் படை அமையவிருப்பதாகக் கேள்விப்பட்டு, பிரதமரைச் சந்தித்து, 'அப்படி அமைக்கக் கூடாது' என்று சொன்னார்கள். அதற்கும் பிரதமர் ஒத்துக்கொண்டார்கள். ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. இராமகிருஷ்ணன், இந்த subject–ஐ ஏற்கெனவே

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எல்லோரும் discuss செய்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) என்ன இது? (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன பீட்டர்? சொல்லுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் சில தவறான தகவல்களை இந்த அவைக்குத் தருகிறார். அந்தத் தகவல்களை அனுமதிப்பதும், அவற்றை இந்த அவைக் குறிப்பேட்டில் பதிவு செய்வதும் மிகத் தவறு. அவர் சொல்லிய, மத்திய அரசுக்கு எதிரான அந்தத் தவறான குற்றச்சாட்டுகளை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள், தேவைப்பட்டால் இதைப் பற்றிய ஒரு வாதத்திற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். தமிழகம் எதிர்நோக்கியுள்ள இந்த மிகப் பெரிய அரசியல் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய கடமை இந்த அவைக்கு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் எவ்வளவு முக்கியமான கோரிக்கைகளை வைத்துக்கொண்டு, போராடிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். ஈழத் தமிழர்கள்பால் அக்கறை கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்திலே, இதை ஒரு அரசியலாக்கி, காங்கிரஸ் கட்சியையும், அதனோடு கூட்டணி கொண்டிருக்கின்ற கட்சிகளையும் பலவீனப்படுத்தி, அரசியல் ஆதாயம் தேடுவதை காங்கிரஸ் கட்சி அனுமதிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய இறையாண்மைக்கும், இந்திய ஒருமைப்பாட்டுக்கும், இந்த நாட்டிலே வன்முறையற்ற அரசியலுக்கும், ஜனநாயகத்திற்கும் காங்கிரஸ் கட்சி என்றும் துணை நிற்கும். அதைப்போன்ற நடவடிக்கைகளைத்தான் அரசியல் ரீதியாக எல்லோரும் எதிர்பார்க்கிறோம். மத்திய அரசையோ, காங்கிரஸ் கட்சியையோ தவறாகக் குற்றம் சாட்டுகின்ற அந்தத் தவறான தகவல்களைத் தாங்கள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று நான் காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கான ஒரு நாள் குறியுங்கள். அந்த நாளிலே அவர்களும் தங்கள் தரப்பு வாதங்களை வைக்கட்டும். நாங்களும் எங்கள் தரப்பு வாதங்களை வைக்கிறோம். இந்த மன்றத்திலே, மக்கள் அனுப்பியிருக்கிற அத்தனை அரசியல் கட்சிகளும் இந்த ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து தங்கள் நிலைகளை இந்த மன்றத்திலே தெளிவாக்கட்டும். நாட்டு மக்கள், அவற்றில் யாருடைய் நிலைப்பாடு சரியானதோ, அதை ஏற்றுக்கொள்ளட்டும். அதற்கு நாங்கள்

தயாராக இருக்கிறோம். பயந்தவர்கள் அல்ல. எனவே, இந்தத் தவறான தகவல்களைத் தாங்கள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் மத்திய அரசு பற்றிச் சொன்ன அந்தக் குற்றச்சாட்டுகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

***டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** Speaker Sir, யாருக்கும் தெரியாமல், கள்ளத்தோணியிலே போக வேண்டிய அல்லது அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை.

(முற்பகல் 11–40)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோவோ அல்லது நம் கண்ணப்பனோ இந்திய ஒருமைப்பாட்டுக்கோ, ஒருங்கிணைப்புக்கோ, இறையாண்மைக்கோ குந்தகம் விளைவிக்கக்கூடியவர்கள் அல்ல. அவர்களுடைய அரசியல் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் நாட்டிற்குத் தெரியும். தேசிய நதிகளை இணைக்க வேண்டுமென்று சொல்வது தவறா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், திரு. இராமகிருஷ்ணன். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இப்போது debate இல்லை. நீங்கள் என்ன சப்ஜெக்டை சொல்லப் போகிறீர்கள் என்பதற்குத்தான் அனுமதி. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே,. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுசம்பந்தமாக விவாதம் கிடையாது. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்ட இரண்டு நபர்கள்மீது வழக்குத் தொடுக்கப்பட்டு நீதிமன்றத்தில் இருக்கின்றது. அவர்கள் குற்றவாளிகளா, இல்லையா என்பதற்கு, அந்த நபர்களுக்காக இவர் வாதாடக்கூடாது. அதை அனுமதிக்கக்கூடாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், திரு. இராமகிருஷ்ணன். நீங்கள் என்ன சப்ஜக்ட்டை சொல்லப் போகிறீர்கள் என்பதுதானே தவிர, நீங்கள் உங்கள் கருத்தைப் பூராவும் இப்போது சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) சரி.

திரு. நா. இராமகிருஷ்ணன்: இலங்கையிலே (குறுக்கீடு) நீங்கள் சொன்னதற்கு நான் சொல்ல வேண்டும் அல்லவா? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதோ பாருங்கள், இங்கே பார்த்துப் பேச வேண்டும்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: அவர்களையும் உங்களைப் பார்த்துச் சொல்லச் சொல்லுங்கள். என்னைப் பார்த்துச் சொல்கிறார்கள் சார். இலங்கையிலே... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. நா. இராமகிருஷ்ணன்: இலங்கையில் நடைபெறுகின்ற போரை நிறுத்துவதற்கு இந்திய அரசுக்கு அழுத்தம் தருகின்ற வகையிலே தமிழக அரசு இந்த அவையிலே தீர்மானம் கொண்டு வரவேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைப் பிரச்சினை குறித்து பல்வேறு கட்சிகள் தங்களுடைய கருத்துகளை இங்கே தெரிவித்தன. இலங்கைவாழ் தமிழர்கள், அப்பாவித் தமிழர்கள் அங்கு கொல்லப்படுவதை, இங்கே இருக்கின்ற அத்தனை பேரும், நாம் அனுமதிக்க முடியாது என்ற ஒத்த கருத்தை நாம் கொண்டுள்ளோம். ஆனால், இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த விவாதம் திசை திரும்பி, வேறு எங்கோ சென்றுகொண்டிருக்கிறது. அதனால் அங்கு இருக்கின்ற தமிழர்களுக்கு எம்மாதிரியான தீர்வு கிடைக்கும் என்பதற்கு, கேள்விக்குறியான ஒரு சூழ்நிலை நம்முடைய தமிழகச் சட்டமன்றத்திலிருந்து கிடைக்கக்கூடாது என்பதனை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அங்கே இலங்கை இராணுவம் போரை நிறுத்தவேண்டுமென்று நாம் அனைவரும் இங்கே குரல் கொடுத்தோம். அப்போதுகூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒரு தரப்பு மட்டும் போரை நிறுத்திவிட்டால் போர் முடியுமா என்று சொன்னார்கள். முதலாவதாக விடுதலைப்

புலிகள், 'நாங்கள் போரை நிறுத்தத் தயார்' என்று அறிவித்தார்கள். ஆனால் இன்றைக்குப் பத்திரிகையில் வந்த செய்திகளின்படி, இலங்கை இராணுவம் 'போரை நிறுத்த முடியாது' என்று சொல்லியிருக்கின்றது. அதற்குப் பின்னால், இன்றைக்கு இருக்கிற மத்திய அரசு, கடந்த காலங்களில் ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு ஒப்பந்தங்களில் எதுவுமே நடைபெறாத சூழ்நிலையில், அங்கே வாழ்கின்ற நம்முடைய இலங்கைத் தமிழர்களைக் காக்கின்ற பொறுப்பினை நல்ல முறையில் எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், விடுதலைப் புலிகள் போரை நிறுத்துவதற்குத் தயார் என்று அறிவித்த பிறகும், இராணுவம் நிறுத்த முடியாது என்று சொல்லியிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், தொடர்ந்து இராணுவம் அங்கே அப்பாவித் தமிழ் மக்கள் வாழ்கின்ற குடியிருப்புப் பகுதிகள், பள்ளிக்கூடங்கள், பச்சிளம் குழந்தைகள் படிக்கின்ற பள்ளிக்கூடங்கள், வழிபாட்டுத் தலங்கள், இவற்றை எல்லாம் சர்வநாசம் ஆக்கிக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை; அங்கே இலட்சக்கணக்கான பேர் அகதிகளாக வாழ்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசை உடனடியாகத் தொடர்புகொண்டு, இலங்கையின் இராணுவமும் போரை நிறுத்துவதற்குண்டான வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். அதற்குரிய வழிவகைகளை இங்கே இருக்கின்ற நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்களும், மத்தியிலே இருக்கின்ற மத்திய அரசும் அந்த வேண்டுகோளை விடுத்து, இலங்கை இராணுவம் போரை நிறுத்தி, இரு தரப்பும் சுமுகமான தீர்வு காண்பதற்குரிய நல்ல வழியைக் கண்டுபிடித்து, அங்கே வாழ்கின்ற இலங்கைத் தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதற்குண்டான வழிவகைகளைச் செய்வது ஒன்றுதான் தீர்வுக்கு வழி. ஆகவே, நாம் முரண்பட்ட கருத்துகளை, அரசியல் ரீதியான கருத்துகளை, இங்கே தெரிவித்து, அந்தப் பிரச்சினையை வேறு திசைக்கு, வேறு பக்கம் திருப்ப வேண்டாம் என்று அனைவரையும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–45

5. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(அ) தமிழகத்தில் உரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்புக்குப் போகலாமா? (குறுக்கீடு) உரத் தட்டுப்பாட்டால் தமிழ்நாடு

2008 நவம்பர் 11] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

பிற்பகல் 12–05

அந்த அடிப்படையில் ஸ்ரீகாந்த் நாகேஷ் உர விற்பனை மையத்திற்கு வேளாண்மைத் துறையினரால் வழங்கப்பட்ட உரிமம் உடனே இரத்துச் செய்யப்பட்டது. அவருடைய உரிமத்தை நாங்கள் இரத்துச் செய்து விட்டோம். இது தவிர, 1973 ஆம் ஆண்டு ஆணை மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சட்டம், 1955 ஆகியவற்றை மீறிய செயல் என்பதாலும், ஆந்திர மாநிலத்தில் நிகழ்ந்த நடவடிக்கை சம்பந்தப்பட்டுள்ளதால், சி.பி.சி.ஐ.டி. பிரிவு இதை விசாரிக்கலாம் என்று மாநில அரசாங்கம்—நாங்கள் பரிந்துரை செய்தோம். அவர்கள் விசாரித்துவிட்டு, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சட்டம் 1955—ன்படி, இந்த நிகழ்வினை குடிமைப் பொருள்கள் வழங்கும் புலனாய்வு—Civil Supplies C.I.D. தான் விசாரிக்க வேண்டுமென்று அவர்கள் எழுதி அனுப்பிவிட்டார்கள். இப்போது அது விசாரணையில் இருக்கிறது.

ஆகவே, உரத் தட்டுப்பாடு என்பதும் இல்லை. தவறு எங்கே நடந்தாலும், அதைக் கண்டுபிடித்து, சரியான நடவடிக்கையினை எடுக்கக்கூடிய அரசுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, கலைஞர் அரசு என்பதை நான் இங்கு தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு தெளிவாக அமைச்சரவர்கள் சொன்னதற்குப் பிறகும் வேறு என்ன கேட்கப் போகிறீர்கள்? உட்காருங்கள்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் தண்ணீர் வருவதை கேரள அரசு தடுத்து வருவதால் சுமார் 4,000 எக்டேர் பயிர்கள் கருகுவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, கன்னியாகுமரி மாவட்டம், நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் தண்ணீர் வருவதை கேரள அரசு தடுத்து வருவதால் சுமார் 4,000 எக்டேர் பயிர்கள் கருகுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். ஜெயபால், திரு. எச். வசந்த குமார், திரு. கே. கோபிநாத், திருமதி டி. யசோதா, திரு. து. செல்வராஜ், திரு. கே.எஸ்.கே. இராஜேந்திரன், திரு. போ. கோபாலன், டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, திரு. எம்.ஆர். சுந்தரம், திரு. ராம சுப்புராம், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. ஆர்.எம். பழனிசாமி,

திரு. பெ.சு. விஜயகுமார், திரு. மா. ராஜசேகரன், திரு. போளூர் ம. வரதன், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் காங்கிரஸ் கட்சி சார்பாகவும்; செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. ஞா. ஜாண் ஜோசப், திருமதி ரா. லீமா றோஸ், திரு. சி. கோவிந்தசாமி, திரு. ப. டில்லி பாபு, திரு. வே. மாரிமுத்து, திருமதி ஜி. லதா ஆகியோர் இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பாகவும்; திரு. தி. வேல்முருகன், திரு. ஜி.கே. மணி, பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகவும் விதி 56—ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்தவர்களில், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் காங்கிரஸ் கட்சி சார்பாக திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்யாறு இடதுகரைக் கால்வாய்த் திட்டம், விளவங்கோடு தாலுகா, விவசாயப் பெருங்குடி மக்களின் அடிப்படைத் தேவை. விளவங்கோடு தாலுகாவில், வருவாய்க் கிராமங்களான, பளுகல், இடைக்கோடு, விளவங்கோடு, மெதுகும்மல், குளப்புறம், கொல்லங்கோடு மக்கள் விவசாயத்திற்கு, குறிப்பாக நெற்பயிர், தென்னை, வாழை, மரச்சீனி, குடிநீர், கால்நடை பராமரிப்பு ஆகியவற்றிற்குப் பயன்படுத்தி வந்தனர். சுமார் 25 ஆயிரம் ஏக்கர் பயிர் நிலங்களை நெய்யாறு அணையின் தண்ணீர்மூலம் பயிர் செய்து வந்தனர். நெய்யாறு அணை தமிழ்நாடு—கேரளா எல்லையில், திருவனந்தபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. தமிழக எல்லை மலைப் பகுதி கிராமமான களியல் கிராமத்தில் அதிகப் பரப்பு மலைப் பகுதியில் மழை நீர் மற்றும் மழை ஊற்றுத் தண்ணீர் சிறு கால்வாய்களாக நெய்யாறு அணையில் சேருகிறது.

நெய்யாறு அணை மொத்த நீர்த்தேக்கத்தில் பாதிக்கு மேல் தமிழ்நாடு மலைப் பகுதி தண்ணீர் என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, மலைப் பகுதி நம் மாவட்டத்திற்குச் சொந்தம். நெய்யாறு அணை கேரளத்திற்குச் சொந்தம் என்பதுதான். இந்த அணையின் தண்ணீரைக் கேரள மாநிலத்தின் திருவனந்தபுரம் மாவட்டம், நெய்யாற்றங்கரைத் தாலுகாவிற்கும், தமிழ்நாடு, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவிற்கும்தான் இயற்கையாகப் பயன்படுத்தமுடியும். இதனைக் கருத்திற்கொண்டுதான், 1952 ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு காமராஜர் அவர்களும், கேரள முதலமைச்சர்

2008 நவம்பர் 11] [திரு. எஸ். ஜாண் ஜேக்கப்]

மாண்புமிகு சங்கர் அவர்களும் சேர்ந்து ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, நெய்யாறு இடதுகரை channel திட்டத்தை நிறைவேற்றினார்கள். அரசு முதலீட்டில் நிறைவேற்றப்பட்டது. 2003 ஆம் ஆண்டு வரை நெய்யாறு இடதுகரை channel பழுதுபார்க்கப்பட்டு, கேரள அரசு தண்ணீரைத் தந்து வந்தது.

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த subject-ஐச் சொல்லி, அரசினுடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்பதை மாத்திரம் சொல்லி, உட்காருங்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: அவ்வளவுதான், முடிந்துவிட்டது. கேரள சட்டமன்றத்தில், தமிழகத்திற்குத் தண்ணீர் தரமுடியாது என்று தீர்மானித்து, தண்ணீர் தருவதை நிறுத்தியது. விவசாயிகள் அரசியல் கட்சிகளின் மூலமாக, காங்கிரஸ் கட்சி பலவேறு அறப் போராட்டங்களை நடத்தி, தமிழகத்தில் அன்றைய அண்ணா தி.மு.க. ஆட்சியின் கவனத்தை ஈர்த்தும், எந்த நடவடிக்கையும் இல்லை. தற்போதைய தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை காங்கிரஸ் தொடர்ந்து வருகிறது. நெய்யாறு தண்ணீரைத் தமிழகத்திற்குப் பெறுவது நமது உரிமை. அதைப் பெற்றுத் தர போர்க் கால நடவடிக்கை தேவை. ஒருவேளை கேரள அரசுக்கு, தண்ணீருக்குக் கட்டணம் கட்ட வேண்டுமானாலும், தமிழக அரசு கட்டி, அதை இந்தப் பகுதி மக்களுக்குப் பெற்றுத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை முன்மொழியக்கூடிய நேரத்தில், கேரள அரசு நெய்யாறு இடதுகரைக் கால்வாய்த் தண்ணீரைத் தடுத்து நிறுத்தியுள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது அடிப்படையிலேயே தவறு என்பதை முதலிலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

40 ஆண்டு காலமாக நெய்யாறு இடதுகரைக் கால்வாய்க்குத் தண்ணீர் கிடைத்து வந்தது. 2003 ஆம் ஆண்டில், அந்த மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த ஐக்கிய ஜனநாயக முன்னணி அரசு, காங்கிரஸ் தலைமையிலான அரசு, ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து,

நெய்யாறு இடதுகரைக் கால்வாய்க்குத் தண்ணீர் தருவதை நிறுத்தியது. அந்தச் சட்டத்தின் 30—வது ஷரத்தில் இரண்டு பிரதானமான விஷயங்கள் இடம்பெற்றுள்ளன. கேரளாவிலிருந்து பிற மாநிலங்களுக்கோ, வேறு யூனியன் பிரதேசங்களுக்கோ தண்ணீர் வழங்க வேண்டுமெனில், இரண்டு நடைமுறைகளை அரசு பின்பற்ற வேண்டுமென்று 30—வது ஷரத்து சொல்கிறது. அதில் ஒன்று, கேரள சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இன்னொன்று, எந்த மாநிலத்திற்கு அல்லது யூனியன் பிரதேசத்திற்குத் தண்ணீர் வழங்கப்படுகிறதோ, அந்த மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தோடு ஓர் ஒப்பந்தம் போடவேண்டுமென்று இரண்டு பிரதானமான ஷரத்துகள் அதில் இடம் பெற்றிருக்கின்றன. இந்த ஷரத்துகளோடு, 40 ஆண்டு காலமாகத் தந்து கொண்டிருந்த தண்ணீரை, காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கம் நிறுத்தியது. இதற்குப்பின், 2006—ல் தமிழகத்திலும், கேரளாவிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. தமிழகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசும், கேரளாவில் மாண்புமிகு முதலமைச்சர் தோழர் வி.எஸ். அச்சுதானந்தன் தலைமையிலான இடதுசாரி அரசாங்கமும் பொறுப்பேற்றது. இடதுசாரி அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, கேரள முதலமைச்சர் நமது முதலமைச்சர் அவர்களை சென்னையில் 10—6—2006 அன்று சந்தித்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்ற கோரிக்கையைக் கேரள முதலமைச்சரிடத்தில் வைத்தார்.

பிற்பகல் 12—15

இதனடிப்படையில், கேரள அமைச்சரவையில் ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, அந்தக் கொள்கை முடிவின் அடிப்படையில், 3—10—2006 அன்று கேரள முதலமைச்சர் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில் அவர் சொல்லியிருந்தார்; 'நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் தண்ணீர் திறந்து விடுவதற்கு கேரள அரசாங்கம் கொள்கை முடிவு எடுத்திருக்கிறது; அது தொடர்பாக இரண்டு மாநிலங்களும் ஒரு ஒப்பந்தத்தை எட்ட வேண்டியிருக்கிறது. ஒப்பந்தம் சம்பந்தமான பேச்சுவார்த்தையை எங்கே நடத்தலாம், எப்பொழுது நடத்தலாம் என்பது பற்றிய விவரத்தை தமிழக அரசு தெரிவிக்க வேண்டும் என்று

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அதோடு நில்லாமல், 18–10–2006 அன்று கேரள சட்டசபையில் நெய்யாறு இடதுகரைக் கால்வாய்க்குத் தண்ணீர் தருவதற்கு சாதகமான ஒரு தீர்மானத்தை திரு. வி.எஸ். அச்சுதானந்தன் தலைமையிலான இடதுசாரி அரசாங்கம் நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தை இடதுசாரி அரசாங்கம் கொண்டு வந்து நிறைவேற்றக்கூடிய நேரத்தில், எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப் அவர்களுடைய கட்சி, கேரளாவிலுள்ள காங்கிரஸ் கட்சி அன்றைக்கு வெளிநடப்புச் செய்தது. அதையும் மீறி அந்தத் தீர்மானம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. அது தொடர்பாகவும், பல கடிதங்கள் கேரள அரசாங்கத்தால் தமிழக அரசுக்கு எழுதப்பட்டிருந்தது. ஆனால், ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: முடித்துவிடுகிறேன். ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தை எதுவும் நடைபெறவில்லை. தமிழக அரசு, கேரள அரசு எழுதிய கடிதங்களுக்கும், கேரள முதலமைச்சர் எழுதிய கடிதத்திற்கும் பதில் எழுதியது உண்மை. ஆனால், கேரள அரசாங்கம் தங்களுடைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்த அந்தப் பேச்சுவார்த்தை சம்பந்தமான விவரங்கள் எதுவும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்ட கடிதத்தில் இடம்பெறவில்லை. ஓர் ஒப்பந்தம் ஏற்படாமல் கேரள அரசாங்கம் தமிழகத்திற்கு நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் தண்ணீர் திறந்துவிடுவதற்கான வாய்ப்பு இல்லை என்று தமிழக அரசுக்கு நன்கே தெரியும். காரணம், அதற்கு முட்டுக்கட்டையாக இருப்பது 2003–ல் UDF அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட சட்டம். இந்தச் சட்டம் தடையாக இருக்கிறது என்பதை அறிந்துகொண்டுதான், பேச்சுவார்த்தை சம்பந்தமாக எதுவும் குறிப்பிடப்படாமல், ஒப்பந்தம் சம்பந்தமாக எதுவும் குறிப்பிடப்படாமல், வெறும் கடிதப் போக்குவரத்துகளை மட்டும்தான் தமிழக அரசு இதுவரையிலும் நடத்திக்கொண்டிருந்தது. குறிப்பாக, 3–10–2006 அன்று கேரள முதலமைச்சர் எழுதிய கடிதத்திற்கு இதுவரையிலும், அதில் குறிப்பிடப்பட்டிருந்த அந்தப் பேச்சுவார்த்தை சம்பந்தமாக எந்த . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜாண் ஜோசப், கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: இது மிக முக்கியமான பிரச்சினை சார். அதனால் இரண்டு நிமிடங்கள் கூடுதலாகக் கொடுங்கள் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு, உட்காருங்கள்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: சொல்லப் போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அதற்குப் பிறகு பதில் சொல்ல வேண்டும்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: சொல்லப் போகிறேன். ஒரே ஒரு நிமிடம். 2 வருட காலமாக கேரள முதலமைச்சர் தன்னுடைய கடிதத்தில் குறிப்பிட்ட அந்தப் பேச்சுவார்த்தை சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் அதிகாரிகள் மட்டத்திலோ அல்லது அமைச்சர்கள் மட்டத்திலோ இதுவரையிலும் நடத்தப்படவில்லை. ஆகவே, கேரள அரசு இந்த நிலையில்கூட 26-6-2008 அன்று ஒரு நகல் ஒப்பந்தத்தைத் தயாரித்துத் தமிழக அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அந்த நகல் ஒப்பந்தத்தினுடைய சாதக பாதகமான அம்சங்களை நேரடிப் பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்த்துக்கொண்டு, நெய்யாறு இடதுகரைக் கால்வாய் சம்பந்தமாக ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, அந்த நகல் ஒப்பந்தத்தை இறுதிப்படுத்தி, தண்ணீர் பெற்றுத் தருவதற்கான கடமை இந்த அரசுக்கு இருக்கிறது. அதைச் செய்ய இந்த அரசு முன்வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கிட்டத்தட்ட 1,000 ஏக்டேர் விவசாய பூமி பாசனமற்று 4 வருடங்களாக விவசாயிகள் கண் கலங்கி நிற்கிறார்கள். இந்த நேரத்திலும் தண்ணீர் விநியோகம் செய்யாமல், தண்ணீர் வரி அந்த விவசாயிகளிடத்தில் வசூலிக்கப்படுகிறது. எனவே, ஒப்பந்தத்தை இறுதிப்படுத்த, கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன், தண்ணீர் வருவது வரையிலும் தண்ணீர் வரி வசூலிப்பதை தமிழக அரசு கைவிட வேண்டும் என்றும், இந்த விஷயத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

2008 நவம்பர் 11]

பிற்பகல் 12–20

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டப் பகுதியில் கேரள மாநிலத்தின் வழியாக வரக்கூடிய நெய்யாற்றங்கரையினுடைய இடதுகரைக் கால்வாய் நமக்குத் தொடர்ந்து 40 ஆண்டு காலமாகப் பாசனத்தைக் கொடுத்து வந்தது. கடந்த நான்காண்டு காலமாக கேரள அரசு அடம்பிடித்து நெய்யாற்றங்கரைக் கால்வாயில் தண்ணீர் விட மறுத்து வருகிறது. தமிழக அரசுக்கும், கேரள அரசுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே கடந்த காலங்களில் இது வழங்கப்பட்டு வந்ததை நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இப்போது நம்முடைய உறுப்பினர்களுடைய பேச்சின் அடிப்படையில் பார்த்தால், கேரளத்திலே ஆளுகின்ற அரசு அல்லது ஆட்சி செய்த அரசு, எந்தக் கட்சி அரசு என்று பார்க்காமல், நம்மைப் பொறுத்தவரையிலே தமிழ்நாட்டில் இடம் பெற்றிருக்கிற நாமெல்லாம் இதைத் தமிழ்நாட்டினுடைய உரிமைப் பிரச்சினை என்ற அளவோடு அந்த அளவில் பார்க்க வேண்டுமென்று என்னுடைய அன்பான வேண்டுகோளை நான் முன் வைக்க விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாக, கேரள அரசு, அது முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, நெய்யாற்றங்கரைக் கால்வாய்த் தண்ணீர்ப் பிரச்சினையாக இருந்தாலும்கூட, தமிழ்நாட்டுக்கு எதையும் வழங்கமாட்டோம், ஒப்பந்தத்தை மதிக்கமாட்டோம் என்று மீறுகிற நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. இந்தச் செய்தி கடந்த சில நாட்களுக்கு முன்பு தமிழகத்தினுடைய செய்தி ஏடுகளிலேகூட வெளிவந்தது. நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சருடைய பதிலுரை, அங்கே இருக்கிற கட்சிகளினுடைய, அந்த மாவட்டத்திலே இருக்கிற முரண்பட்ட நிலை எல்லாம் அந்த செய்தித்தாள்களிலே வந்ததைப் பார்த்தோம். ஆகவே, ஒட்டுமொத்தமாக அரசை வேண்டிக்கொள்வது, அந்த மாவட்டத்திலே இருக்கிற அரசியல் கட்சிகளை வேண்டிக்கொள்வது, இது தமிழ்நாட்டினுடைய உரிமைப் பிரச்சினை என்ற அளவில் அணுகவேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை வைக்கின்றேன்.

அதிலும் குறிப்பாக, நான்கு ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது கேரள அரசு சொல்வதெல்லாம், நாங்கள் தமிழகத்திற்குத் தண்ணீர் தருகிறோம், ஆனால், அந்தத் தண்ணீருக்குண்டான கட்டணத்தைத் தமிழக அரசு செலுத்த

வேண்டும் என்பதுதான் இருக்கிற பிரச்சினை. ஆனால், கடந்த காலங்களில் நாம் கட்டணம் செலுத்தவில்லை. (குறுக்கீடு)

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பிரச்சினை அதுவல்ல; நமக்குத் தண்ணீர் தேவை. நம்முடைய சகோதரர் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். என்னவென்றால் கேரள மாநில அரசினுடைய தலைமைச் செயலாளர் நம்முடைய தலைமைச் செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்புகிறார்கள். ஓர் ஒப்பந்தம் போடலாம், நீங்கள் வாருங்கள், பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்று சொன்னார்கள்; இதில் ஏற்பட்ட காலதாமதம். ஆகவே, அதைச் சரி செய்தால் நாம் தண்ணீர் பெற முடியும். மற்றபடி, அவர்கள் செலவுத் தொகை கேட்டார்கள்; அது அந்த ஒப்பந்தத்தில் இருக்கக்கூடிய, அந்தச் சட்ட முன்வடிவில் இருக்கக்கூடிய ஒரு ஷரத்து. இதைப்பற்றிக்கூட நாம் பேசலாம். ஆனால், அந்தப் பேச்சுவார்த்தைக்கு நாம் போகவேண்டும். அதுதானே தவிர, அதுதான் காரணம் என்பது இல்லை.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சகோதரி பாலபாரதி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்; நாம் விரைவாகச் செல்ல வேண்டும் என்பதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. பேச்சுவார்த்தை வேண்டும், ஒப்பந்தம் தொடர வேண்டும், விரைந்து பிரச்சினையை முடிக்க வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், இருக்கிற பிரச்சினை, இப்போது தண்ணீருக்குக் கட்டணம் வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். கடந்த காலங்களில் ஒப்பந்தத்தின் அடிப்படையிலே நாம் கட்டணம் கொடுக்கவில்லை. ஆகவே, கட்டணத்தைக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை வருமானால், மேற்கொண்டு புதிய ஒப்பந்தங்கள், பல்வேறு பிரச்சினைகள் உருவெடுப்பதற்கு வாய்ப்பாக அமையும். ஆகவே, கடந்த கால ஒப்பந்தம் என்ன அடிப்படையில் இருக்கிறதோ, அந்த ஒப்பந்தம் தொடர வேண்டும் என்பதுதான் நம்முடைய நிலைப்பாடாக இருக்க வேண்டும். அதனால், தமிழக அரசு, நம்முடைய சகோதரி பாலபாரதி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நம்முடைய காங்கிரஸ் கட்சி, பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, விரைந்து முடிக்க வேண்டும், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதிலே விரைவாகத் தலையிட்டு காலம் தாழ்த்தாமல்—ஏனென்றால் நான்கு வருடங்களாக அங்கே பயிர் பாதிக்கப்பட்டிருக்கிறது. வேளாண்மையைத் தவிர வேறு எந்தத் தொழிலும் செய்யாத அந்த மக்கள் இப்போது தண்ணீர் வரி

செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் நான்கு ஆண்டும் தண்ணீர் வரியை இரத்துச் செய்திருக்க வேண்டும். ஆகவே, இப்போது நான்கு ஆண்டு காலம் தண்ணீர் வரி செலுத்தியதை, நீங்கள் உரிமை பெற்றுக் கொடுத்தால், அந்த நான்கு ஆண்டு காலத்திற்குச் செலுத்திய தொகைக்கு நீங்கள் ஈடு செய்ய வேண்டுமென்ற அந்த வேண்டுகோளையும் வைத்து, விரைந்து பிரச்சினையை முடித்து, அந்தப் பகுதி மக்களுடைய பாசனத்திற்கு, கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அரசின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்தவர் மட்டும் கட்சிக்கு ஒருவர் பேசலாம்; கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுக்காதவர் பேசுகிற மரபை நீங்கள் கடைப்பிடிப்பீர்களானால், எங்களுக்கும் அந்த மரபை அமல்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த மரபு எல்லாம் கிடையாது. உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

பிற்பகல் 12–25

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்யாற்றுத் தண்ணீர்ப் பிரச்சினை குறித்து சுமார் 25 மாண்புமிகு உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறார்கள். பத்திரிகையில் பரபரப்பாக அறிக்கைகளை வெளியிடுகிற ஒரு பிரச்சினை. கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சித் தோழர்கள் தொடர் உண்ணாவிரதத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினை என்பதில் எனக்கு மாறுபட்ட கருத்தில்லை. ஆனால், இந்தப் பிரச்சினையில் இந்த அரசு, கலைஞருடைய அரசு மெத்தனமாக இருப்பதைப்போல மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினரவர்கள் இங்கே பேசினார்கள். இவ்வளவு பெரிய பிரச்சினையில், அதனுடைய முக்கியத்துவத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இந்த அவையில் சில விஷயங்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கேரள மாநிலத்திலுள்ள விவசாயிகளுக்காகவும், தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகளுக்காகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப்

அவர்கள் சொன்னதைப்போல, இந்த நெய்யாறு அணை கட்டப்பட்டது. இந்த அணையைக் கட்டுவதற்காகப் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பெருமுயற்சி எடுத்தார்கள். முதலில் திருவிதாங்கூர் அரசாங்கத்தோடு இருந்தபோது ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. பிறகு நெய்யாற்றங்கரை போன்ற பகுதிகளுக்கும், விளவங்கோடு பகுதியில் இருக்கின்ற விவசாயிகளுக்கும் அந்த நெய்யாற்றிலிருந்து தண்ணீர் வரும் என்று சொன்னார்கள். இது ஒரு Inter-state river. மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் இதைப்பற்றி அழகாகச் சொன்னார். இந்த நெய்யாற்று அணையினுடைய catchment areas தமிழ்நாட்டிலே இருக்கின்றன. இதை முதலில் நாம் மனதிலே பதிய வைத்துக்கொள்ளவேண்டும். இது பன்மாநிலங்களில் ஓடுகின்ற ஓர் ஆறு, Inter-state river. பிறகு அணையைக் கட்டி முடித்த பிறகு, இடதுபுறக் கால்வாயை வெட்டிவிட்டு, திருவிதாங்கூர் ரெகுலேட்டர் — முன்னாலே Madras Regulator என்பார்கள், பிறகு திருவிதாங்கூர் ரெகுலேட்டர் என்றார்கள். அதிலே 152 கன அடி தண்ணீர் விடவேண்டும். பின்னர் 150 கன அடி தண்ணீர் வந்தாலே பாசனத்திற்குப் போதும் என்ற நிலைகூட இருந்தது. அதுவரையிலே தண்ணீர் வேகமாக வந்துகொண்டுதான் இருந்தது. ஆனால், அது ஒரு unwritten Agreement. அணை கட்டப்பட்டது. தமிழ்நாட்டுக்குத் தண்ணீரையும் திறந்துவிட்டார்கள். ஆனால், அதற்கு என்ன ஒரு நிரந்தர பரிகாரம்? எப்பொழுது, எப்பொழுது திறக்கவேண்டும்? பராமரிப்பை எப்படிச் செய்யவேண்டும் என்பதைப் போன்ற agreement எதுவும் இல்லாமல் இருந்தது. அதற்காக 1971 ஆம் ஆண்டு தமிழக அரசு ஒரு வரைவு ஒப்பந்தத்தைத் தயார் செய்து, இந்த நெய்யாற்றுத் தண்ணீரின் பங்கீடு குறித்து வரைவு ஒப்பந்தம் என்று சொல்லி, கேரளாவுக்கு அனுப்பியது. நாம் மெத்தனமாக இருக்கிறோம் என்றார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தோழர். 1971-லே அனுப்பிய ஒப்பந்தம் அப்படியே இருக்கின்றது. அதற்கு எந்தவிதமான பதிலும் இல்லை. ஏற்றுக்கொள்கின்றோம் என்றும் இல்லை, ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் இல்லை. இருந்தாலும் தண்ணீர் வந்துகொண்டிருந்தது.

2003 ஆம் ஆண்டு ஒரு சட்டத்தை கேரள சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். The Kerala Irrigation and Water Conservation Act, 2003 என்பது அந்தச் சட்டம். இந்தச் சட்டத்தின் முக்கிய அம்சம் என்னவென்று கேட்டால், ஒன்று, எந்த மாநிலத்திற்காவது கேரள மாநிலம் தண்ணீரைத் தர விரும்பினாலும், அது குறித்து ஒரு தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் முதலில் நிறைவேற்றவேண்டும்.

2008 நவம்பர் 11] [திரு. துரைமுருகன்]

நாங்கள் தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் கொடுக்கப் போகின்றோம் என்று அவர்கள் தீர்மானம் போடவேண்டும். இரண்டு, அவ்வாறு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு எந்த மாநிலத்திற்குத் தண்ணீர் தருகின்றார்களோ, அந்த மாநிலத்தோடு கேரள அரசு ஓர் ஒப்பந்தம் போடவேண்டும்—agreement. இப்படி ஒரு சட்டத்தை 2003–ல் போட்டார்கள். காங்கிரஸ் ஆட்சியிலே போடப்பட்டது என்று சொன்னார்கள். இப்படி ஒரு சட்டத்தைப் போட்டார்களே தவிர, இதை அமல்படுத்துவதற்கு வேறு எந்தவொரு முயற்சியையும் செய்யாமல் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். ஆனால், நமக்கு அதுபற்றிக்கூடத் தெரியாது.

பிற்பகல் 12–30

பிறகு 2003 ஆம் ஆண்டு வரையிலே கால்வாயில் வந்த தண்ணீர் பிறகு நின்றுபோய்விட்டது மாண்புமிகு பன்னீர்செல்வம் அவர்களுக்கும் தெரியும் இந்தப் பழைய கதை. பிறகு என்ன ஆயிற்று? (குறுக்கீடுகள்) நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 6–2–2007 அன்று கேரள நீர்ப்பாசனத் துறை அமைச்சருக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். அதில் "I am to inform that the consent of the Government of Kerala for execution of the agreement sent by Tamil Nadu for this Project in April 1971 is still awaited"—ஒரு வரைவு ஒப்பந்தம் 1971–ல் அனுப்பியது இருக்கிறதே, அது அப்படியே இருக்கிறதே, நீங்கள் பதில் சொல்லவில்லையே என்று நான் எழுதியிருந்தேன். இது முதல் point. இரண்டாவது என்ன கேட்டிருந்தேன் என்றால், "I request you kindly to arrange to release water from the Neyyar Dam to the Neyyar channel system in Tamil Nadu" என்று நான் எழுதியிருந்தேன்.

நான் 6–2–2007 அன்று அந்த நீர்ப்பாசனத் துறை அமைச்சர் மாண்புமிகு பிரேமசந்திரன் அவர்களுக்கு எழுதிய கடிதத்திற்கு, 20–4–2007 அன்று அவர் எனக்கு ஒரு பதில் எழுதினார். என்ன பதில் எழுதினார் என்றால் நான் எழுதிய கடிதத்திற்கு, "I would like to inform you that as the circumstances changed a lot, the agreement drafted in 1971 cannot be executed now."—கால மாறுதல்கள் ஆகிவிட்டன. ஏற்கெனவே 1971–ல் நீங்கள் மாதிரி வரைவு ஒப்பந்தம் அனுப்பினீர்களே, அதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று மறுத்து எழுதியதோடு, அடுத்துச் சொன்னார். அவர் சொன்னார். அவர்கள்—மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி. "On 18-10-2006 the Kerala Legislative Assembly adopted the resolution wherein it has been resolved to give water to Tamil Nadu from Neyyar Irrigation Project after realising the

value of the water so given." முதலில் எனக்கு பிரேமசந்திரன் என்ன எழுதுகிறார்? 1971-ல் நீங்கள் அனுப்பிய Draft Agreement-ஐ நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றார். அடுத்து அவரே சொல்கிறார், நாங்கள் 18-10-2006 அன்று சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தைப் போட்டிருக்கிறோம்: அதன் அடிப்படையில்—என்ன தீர்மானம் என்றால், தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் தருவது, அந்தத் தண்ணீரை எப்படிக் கொடுப்பது என்று கேட்டால், "After realisation of the value of water so given"—நாங்கள் கொடுக்கின்ற தண்ணீருக்குப் பணத்தை வசூல் பண்ணிக்கொண்டுதான் நாங்கள் உங்களுக்குத் தண்ணீர் கொடுப்போம்—"realisation of water value" என்று சொன்னார். 18-10-2006-ல் இடதுசாரி அரசு இப்படி ஒரு தீர்மானத்தைப் போட்டு இருக்கின்றது என்பதே எனக்கு அப்போதுதான் தெரியும். நீங்கள் இதில் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும். 6-2-2007-ல் நான் கடிதம் எழுதுகிறேன். 20-4-2007-ல் அவர் பதில் கடிதம் எழுதுகிறார். அந்த பதிலில், "18-10-2006-ல் பணம் கொடுத்தால்தான் தண்ணீர் கொடுக்கப்படும் என்ற தீர்மானத்தைப் போட்டு வைத்திருக்கிறேன்; ஆகையினால், அந்த அடிப்படையில் நீங்கள் தண்ணீருக்குக் கட்டணம் கொடுத்து எடுத்துக்கொள்ளுங்கள்" என்று அவர் சொல்லிவிட்டார். இதனால் அதே மாதிரி நாங்கள் தண்ணீர் கொடுத்தால், நீங்கள் பணம் கொடுத்து வாங்கவேண்டும். நான் அதற்கு ஒரு draft தயார் பண்ணி வைத்திருக்கிறேன்; அதைக்கூடச் சொல்கிறார், "As soon as the draft agreement is finalised—அதைப் பண்ணிமுடித்தவுடன், we shall furnish the same for consideration of the Government of Tamil Nadu." நீங்கள் அந்த Agreement-ல் கையெழுத்துப் போட்டுவிட்டுப் போய்விடுங்கள் என்று எங்களுக்கு ஓர் உத்தரவு போட்டார்.

நான் ஒன்றைக் கேட்கிறேன், இந்த இரண்டு லெட்டரிலும், முதலில் மாண்புமிகு பிரேமசந்திரன் அவர்கள், 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு கொடுத்த Draft Agreement-ஐத் தள்ளிவிட்டோம் என்று சொல்லிவிட்டார். இரண்டாவது என்ன சொல்கிறார்? தண்ணீர் தருகிறேன், ஆனால் 'Pay cost; take water'. அதுதான் எங்கள் திட்டம்; அதற்கு நீங்கள் கொடுக்கவேண்டும் என்று சொன்னார். இந்தச் செய்தி எங்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. காரணம், இது Inter-State River. இரண்டாவது, ஏற்கெனவே அந்தத் தண்ணீரை விளவங்கோடுதாலுகா மக்கள் பெற்று, பயிரிட்டு, riparian right-ஐ வைத்துக்கொண்டிருக்கிறவர்கள். ஆகவே, விளவங்கோடு தாலுகாவில் இருக்கின்ற விவசாயிகளுக்கு நெய்யாற்றுத் தண்ணீரில் riparian right உண்டு. Apart from that, it is an Inter-State river. ஆனால்,

அந்த river water–க்கு—தண்ணீருக்குப் பணம் கொடு, 'Pay cost, take water' என்றால், இது என்ன என்று எங்களுக்குப் பெரிய அதிர்ச்சியாயிற்று. அதிர்ச்சியாகி, என்ன செய்வதென்று நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம்.

பிற்பகல் 12–35

அப்போதுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவராக இருக்கிற திரு. பிரகாஷ் காரத் அவர்கள் தலைவரை வந்து பார்த்தார்கள். உடனே தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னை அழைத்தார்கள். நான் அவரிடத்திலே இந்த விளக்கத்தைச் சொன்னேன். எப்படித் தண்ணீர் விட வேண்டும் என்கிறீர்கள்? கையெழுத்து ஒன்றும் போடமாட்டேன் என்கிறீர்களே என்றார். எப்படி சார் போட முடியும் நான்? இன்றைக்கு நான் கையெழுத்துப் போட்டேன் என்றால் நாளை நிலைமை என்ன ஆகும்? நாளைக்குக் கேட்கமாட்டார்களா? ஒரு Inter-State river, நமது உரிமையை விட்டுக் கொடுத்தீர்களே, எப்படிக் கொடுத்தீர்கள் என்று கேட்கமாட்டார்களா?

இன்னொன்று. அதிலே இந்த மன்றத்திற்கு ஒன்று தெரிவிக்கிறேன். அவர்கள் ஒரு சட்டம் போட்டார்கள் என்று சொன்னேன் அல்லவா? Kerala Irrigation and Water Conservation Act, 2003; அந்தச் சட்டத்திலே இருப்பது என்னவென்று கேட்டால், எந்தெந்த அணை கேரளாவில் இருக்கிறது என்று அந்தச் சட்டத்திலே அவர்களுக்குக் குறிக்க உரிமை உண்டு. அந்த ஒவ்வொரு அணையிலும் எவ்வளவு தண்ணீர் நிறுத்திக்கொள்வது என்று நிர்ணயிக்கிற உரிமையும் அவர்களுக்கு உண்டு. அப்படித்தான் இந்தச் சட்டத்தின் வலைக்குள்ளே பெரியாறு அணையைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டு, இது எங்கள் அணை, இந்தச் சட்டப்படி 136 அடி தான் நிறுத்த வேண்டுமென்று ஷரத்து ஒன்று போட்டார்கள். ஏன் போட்டார்கள் என்றால், 142 அடி நிறுத்தலாம் என்று சுப்ரீம் கோர்ட் சொன்ன அந்தத் தீர்ப்பை முடக்குவதற்காக பெரியாறு அணை எங்கள் அணை, எங்கள் அணையிலே எவ்வளவு உயரம் என்று நிர்ணயிப்பதற்கு Kerala Irrigation and Water Conservation Act-லே உரிமை இருக்கிறது என்று அதில் கொண்டு வந்துவிட்டார்கள்.

இன்றைக்கு இந்தச் சட்டத்தைக் காட்டி இதே நிலைக்கிணங்க பணம் வசூல் செய்தார்களேயானால், நாளைக்கு பெரியாறு அணையிலேயிருந்தும் நாங்கள் தண்ணீர் விட வேண்டுமானால், அது எங்கள் அணை, எங்கள் அணையிலிருந்து தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் விட வேண்டுமானால், கேரளா அசெம்பிளியிலே ஒரு தீர்மானம் வர

[திரு. துரைமுருகன்] [2008 நவம்பர் 11

வேண்டும்; தீர்மானம் வந்த பிறகு விலை நிர்ணயம் செய்ய வேண்டும்; விலை நிர்ணயம் செய்த பிறகு அதற்கு நீங்கள் பணம் கட்ட வேண்டும் என்றால், என்ன ஆகும் என்று கருதுகிறீர்கள்?

நான் இந்த அவைக்கு ஒரு பயங்கரமான செய்தியையும் சொல்கிறேன். அவர்கள் பெரியாறு அணையை மட்டும் இந்தச் சட்டத்தினுடைய வலைக்குள் கொண்டு வரவில்லை. PAP- பரம்பிக்குளம் அணையையும் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படியானால் என்ன நிலைமையாகும்? PAP–யினுடைய உரிமையும் பறிபோகும்; பரம்பிக்குளம் ஆற்றின் உரிமையும் பறிபோகும்; முல்லைப் பெரியாறு அணையினுடைய உரிமையும் பறிபோகும். தமிழ்நாட்டின் உரிமையையே கொண்டு போய் நீங்கள் கேரளத்திலே அடகு வைத்து விட்டீர்கள் என்று இதே மாமன்றம் கொதித்தெழுந்து கேட்காதா? வரலாறு நம்மை சபிக்காதா? ஆண்டாண்டு காலமாகத் தமிழ்நாடு அனுபவித்து வந்த பெருமையை எல்லாம் கொண்டு போய் நெய்யாற்றில் கையெழுத்துப் போட்டு முடக்கிவிட்டீர்களே என்று, இங்கிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்க மாட்டார்களா? எவ்வளவு பெரிய பயங்கரத்திலே கொண்டு வந்து நம்மை சிக்க வைக்க இடதுசாரி அரசு அங்கே தத்தளிக்கிறது என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, தோழர் பிரகாஷ் காரத் அவர்கள் வந்தார்கள்; மதிப்பிற்குரிய திரு. வரதராஜன் அவர்கள் வந்தார்கள். அதேபோன்று டெல்லியிலே இருக்கிற இன்னொரு வரதராஜனும் வந்து பார்த்தார். திரு. உ.ரா. வரதராஜன் வந்தார். பிறகு இங்கே இருக்கிற திரு. ரங்கராஜன் வந்தார். இவர்களுக்கெல்லாம் நான் எடுத்துச் சொன்னது மட்டுமல்ல. அவர்களை எங்கள் செயலாளர் அவர்களிடத்திலே கொண்டு சென்று, அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள், அதனால் என்ன பாதகம் என்பதை விளக்கச் சொன்னோம். இவ்வளவு பெரிய நிலைமை இருக்கிறபொழுது—ஆனால் அதே நேரத்தில் எப்படியும் நெய்யாற்று விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும், அதுவும் செய்ய வேண்டுமென்பதற்காக, கலைஞர் அவர்கள் ஒரு கடிதத்தை இந்த நெருக்கடி நிலையில் *3-10-2007*-லே ஒரு கடிதத்தை எழுதுகிறார். எங்கே, யாருக்கு? கேரள Chief Minister-க்கு. அதிலே எழுதுகிறார், "I wish to draw your kind attention to the request made by the Tamil Nadu Government to release water to Neyyar in Kanyakumari District. I am to state that the request repeatedly made is yet to be complied with" இன்னும் அடுத்த வரியில் இன்னும் முக்கியமானதைச் சொல்கிறார்.

"whatever may be the problems"—தண்ணீர் விலை என்றெல்லாம் சொல்கிறீர்களே, அவர் சொல்கிறார்—"whatever may be the problems in releasing water to Neyyar, they may be addressed separately for a suitable solution."—இப்போது உங்களுக்கும், தமிழ்நாட்டு அரசுக்கும் ஒரு சில காரணங்களால் கருத்து மாறுபட்டிருக்கலாம். ஆனால் அந்த மாறுபட்ட காரணங்களை நாம் தனியாகப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம்—"Therefore, once again I request you to release water" என்று, மறுபடியும் கேரள அரசுக்கு ஒரு கடிதத்தைக் கலைஞர் அவர்கள் எழுதினார்கள்.

பிற்பகல் 12–40

ஏதோ நாங்கள் கடிதமே எழுதாததைப் போலவும்,—அவர்களே கையெழுத்தில் "Neyyar—Immediately" என்று எழுதிவிட்டுக் கேட்டிருக்கிறார்கள்.—அவர்கள்தான் கடிதங்களை எழுதிக் கொண்டிருந்ததைப் போலவும், நாங்கள் எழுதாததைப் போலவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஆனால் 3-10-2007-ல் இந்தக் கடிதம் மாண்புமிகு தமிழக முதல்வர், கேரள முதல்வருக்கு எழுதிய கடிதம் நான் கேட்கிறேன், அவர்களைக் கடிதம் எழுதச் சொன்னீர்களே? இதற்கு ஒரு courtesy-யாவது உண்டா? இல்லை. தமிழக முதல்வர் எப்படிக் கேட்கிறார்?

"Whatever may be the problems in releasing water to Neyyar, they may be addressed separately for a suitable solution." A statesmanship-ஐ உள்ளடக்கி எழுதினார். அதற்கு, தண்ணீர் கொடுக்கிறேன், இல்லை என்று ஒரு வரி இதுவரையில் மாண்புமிகு அச்சுதானந்தன் அவர்கள் எழுதி இருக்கிறார்களா? ஆனால், யார் எழுதினார்கள் தெரியுமா? அதற்கு பதில் 5 நவம்பர் 2007 அன்று யார் எழுதியிருக்கிறார்கள் தெரியுமா? அந்த மாநில Chief Secretary. தமிழக முதலமைச்சர் எழுதிய கடிதத்திற்கு பதிலாக, கேரளத்து Chief Secretary நம் Chief Secretary–க்கு எழுதுகிறார்.

"Dear Tripathy,

'Please refer the letter dated 3-10-2007 from the Hon'ble Chief Minister of Tamil Nadu to the Hon'ble Chief Minister of Kerala regarding supply of water for irrigation purpose to Vilavankode Taluk in Tamil Nadu from Neyyar Irrigation Project' என்று சொல்லிவிட்டுச் சொல்கிறார். 'I write this to inform you that based on the Resolution of

the Kerala Legislative Assembly, the Government have agreed to the proposal. I request you to depute an official team to Thiruvananthapuram to finalise the agreement for this purpose'."

பிரச்சினைகளைப் பிறகு பேசித் தீர்த்துக்கொள்ளலாம். விவசாயிகளது உயிரை, பயிர்களைக் காப்பாற்றுங்கள் என்று முதல்வர் எழுதிய கடிதத்திற்கு, 'எங்களால் முடியும், முடியாது' என்று மாண்புமிகு கேரள முதல்வர் பதில் எழுதி இருந்தால், நான் அவரை இன்றும் மதிக்கிறேன்; மரியாதை செலுத்தலாம். ஆனால், ஒரு Chief Secretary-ஐ விட்டு உங்களுடைய முதலமைச்சர் இப்படி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். உங்களுக்கு ஒரு நிலைமை இருக்கிறது. (குறுக்கீடு) உங்களுக்கு இப்படி ஒரு நிலைமை இருக்கிறது. நீங்கள் வேண்டுமானால், நாங்கள் பணம் வாங்கிக் கொண்டுதான் தண்ணீர் விடப் போகிறோம். அதைப் பற்றிப் பேசுவதற்கு agreement–க்கு நீங்கள் உங்கள் team-ஐ அனுப்புங்கள் என்று எழுதினார்கள் என்றால், இந்த அரசு மெத்தனமாக இருக்கிறதா, கேரள இடது சாரி அரசு இருக்கிறதா என்பதை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் தெரிவிக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாலபாரதி, அமைச்சர் பேசி முடித்த பிறகு சொல்லலாம்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: நான் பேசுகிறேன். அப்புறம் பேசுங்கள் நீங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, பாலபாரதி, உட்காருங்கள். அமைச்சர் பேசி முடித்துவிடட்டும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: ஆக அவர்களுடைய எண்ணமெல்லாம், எப்படியாவது இதிலே சிக்க வைக்க வேண்டும் என்பதற்காகத்தான், ஒரு draft-ஐ அவர்கள் இப்போது நமக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். எப்படிப் பணம் கொடுக்க வேண்டும், எவ்வளவு கொடுக்க வேண்டும், எப்படி அளப்பது என்பது பற்றி 26-6-2008 அன்று ஒரு வரைவு ஒப்பந்தத்தை எங்களுக்கு அனுப்பினார்கள். ஒரு வரைவு ஒப்பந்தத்தைக்கூட நமக்கு முதலில் அனுப்பாமலேயே, நாங்கள் அங்கே வைத்துக்கொண்டு இருக்கிறோம்; அங்கே உங்கள் team-ஐ அனுப்புங்கள், பேசலாம் என்றால், முதலில் இங்கே அதை அனுப்ப

வேண்டாமா? எங்கள் Expert-உடன் நாங்கள் பேச வேண்டாமா? நீங்கள் வாருங்கள், draft-ஐக் காண்பிக்கிறேன், நீங்கள் படித்துவிட்டுப் போங்கள், depute பண்ணுங்கள்' என்று சொன்னால் என்ன அர்த்தம்? ஆனால், அதற்குப் பிறகு அவர்கள் அழைப்புகிறார்கள். அதற்கு நாங்கள் சரியான பதிலை 31-10-2006 அன்றே elaborate ஆக அவர்களுக்குத் திருப்பி எழுதி அனுப்பி விட்டோம். ஆக, இப்போது இருக்கிற பிரச்சினை என்னவென்றால், இந்த மாமன்றமே எடுக்க வேண்டிய முடிவு என்னவென்று கேட்டால், நெய்யாற்றுப் பிரச்சினையோடு இந்தப் பிரச்சினை முடியவில்லை. அவர் சொன்னார். எங்கள் கேரளத்து முதலமைச்சர் எழுதினார், 3-10-2007-ல் எழுதினார் என்று. எழுதினார். நெய்யாற்றைப் பற்றியல்ல, பரம்பிக்குளம்–ஆழியாற்றைப் பற்றிப் பேசுகிறபோது, அதிலே பேசினார். "The issue of Neyyar water arose as I explained then, in response to the dispute over sharing of water from Parambikulam-Aliyar Project. Notwithstanding the fact that dispute. . ." என்று சொல்லிவிட்டுச் சொல்கிறார், ". . . அந்த gesture of goodwill and as a Proactive measure to create the right environment for mutual dialogue, I am happy to announce our decision to release Neyyar water to Tamil Nadu" என்றார்.

பிற்பகல் 12—45

நான் அனுப்பிவிடுகிறேன், என்று 3-10-2007-ல் எழுதினாரே அன்றைக்கு? இதுவரையிலே அதற்குத் தண்ணீர் விட்டார்களா? ஆனால், என்ன செய்கிறார்கள் என்று கேட்டால், Panchayat election வந்தபோது இவர்கள், 'விளவங்கோடு தாலுகாவிற்குத் தண்ணீரைத் திறந்துவிட்ட மாண்புமிகு கேரளத்து முதல்வருக்கு நன்றி, நன்றி' என்று நோட்டீஸ் அடித்து ஒட்டினார்கள். ஆனால் தண்ணீர் வந்ததா? அப்போது அதை election-க்குப் பயன்படுத்திக்கொண்டீர்கள். இப்பொழுது election வரப் போகிறது. இப்போதைய election-ல் கேரள அரசு கொடுக்கவில்லை என்று சொல்லப்போவதில்லை. தமிழ்நாடு அரசு வாங்கவில்லை, ஆகையினால் ஓட்டுப் போடுங்கள் என்று கேட்பதற்கு: இது election-க்காக அடிக்கிற stunt-ஏ தவிர. இதில் நியாயம் இல்லை. எந்த stunt நீங்கள் அடித்தாலும், விளவங்கோடு தாலுகாவில் இருக்கிற அந்த விவசாயிகளுக்காக தண்ணீர் பெற வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், உரிமையை விட்டுக் கொடுக்காமல் இந்த அரசு எப்படியும் போராடி வாங்கித் தரும். காரணம், இங்கே நாம் உரிமையை விட்டால், பரம்பிக்குளத்திலே விட வேண்டி வரும், பெரியாறிலே விட வேண்டி வரும். இதைப்

பார்த்தால் மற்றவர்களும் நம்மிடத்திலே தண்ணீர் கேட்க ஆரம்பித்து விடுவார்கள். இந்த நிலைமை இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்த அரசு உறுதியாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி, சொல்லுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்ட ஒரு விளக்கத்தை கொடுத்திருக்கிறார்கள். அதிலே எனக்குத் தெரிந்த சில உண்மைகளை நான் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். 2003-ல் கேரளாவில் ஆளும் அரசாங்கமாக இருந்தது காங்கிரஸ் அரசாங்கம். அவர்கள்தான் நெய்யாற்றிலே வந்த தண்ணீரை நிறுத்தியது. அதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது காங்கிரஸ் அரசாங்கம். அப்போது மத்தியில் இருந்தது பி.ஜே.பி. அரசாங்கம். இப்பொழுது 6-2-2006-ல் இடதுசாரி அரசு வந்த பிறகு, தண்ணீர் விடவேண்டுமென்று சொல்கிற கருத்தை ஏற்றுக்கொண்டு ஏற்கெனவே போடப்பட்ட அந்தச் சட்டத்தில் இருந்த இரண்டு ஷரத்துகளை எடுத்துக்கொண்டார்கள். ஒன்று, இடது முன்னணி அரசு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய அரசு சட்டமன்றத்தில் கொண்டு வந்த தீர்மானம் நெய்யாற்றில், குமரி மாவட்டத்தில் தண்ணீர் விடுவது என்பது. ஆகவே, ஏற்கெனவே காங்கிரஸ் அரசு போட்ட சட்டத்திற்கு மாறாக, அந்தச் சட்டத்தில் இருக்கக்கூடிய ஒரு ஷரத்தை ஏற்று தீர்மானத்தை அவர்கள் நிறைவேற்றினார்களா, இல்லையா? (குறுக்கீடு) அண்ணன் அவர்களும் அதை ஒத்துக்கொண்டார்கள். தீர்மானத்தை நிறைவேற்றியது எதற்காக? தண்ணீர் தர வேண்டும் என்பதற்காக.

இரண்டாவது, அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் எந்த மாநிலத்திற்குத் தண்ணீர் கொடுக்கிறார்களோ, அந்த மாநிலத்தோடு ஓர் ஒப்பந்தம் போடவேண்டும். ஒப்பந்தம் போடுவது என்பது, அந்த அரசாங்கமாகப் போட்டுக்கொள்ள முடியாது. அதை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அது தெரியாத அரசும் அல்ல. தமிழக அரசும் சேர்ந்து ஒப்பந்தம் போட வேண்டும். 'ஒப்பந்தம் போடுவதற்கு வாருங்கள்' என்று அந்த அரசாங்கத்தின் தலைமைச் செயலாளர் ஒரு கடிதம் எழுதினார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குக் கேரள முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதவில்லை என்பது உண்மையிலேயே எங்களுக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. உண்மையிலேயே தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு கேரள முதலமைச்சர் அவர்கள் கட்டாயமாக பதில் கடிதம் எழுதியிருக்க

வேண்டும். உண்மைதான். அதே சமயத்தில் இந்தத் தலைமைச் செயலாளரும், அந்தத் தலைமைச் செயலாளரும் கடிதப் பரிமாற்றம் செய்கிறார்கள். அப்போது இந்த ஒப்பந்தம் போடுவதற்கு இன்னின்ன ஷரத்து இருக்கிறது, நீங்கள் வாருங்கள், பேசிக்கொள்ளலாம் என்று அவர்கள் சொல்கிறார்கள். இதுவரைக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கடிதங்கள் நிறைய எழுதியிருக்கிறார்கள். தாமதமெல்லாம் இல்லை என்பதை நாங்களும் ஒத்துக்கொள்கிறோம். ஆனால், ஒரேயொரு முறையாவது அந்த ஆகிடம் சென்று, 'எங்கள் கருத்து இந்தக் கருத்தாக இருக்கிறது, நீங்கள் போட்டிருக்கிற செலவுத் தொகையை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படி ஏற்றுக்கொண்டால் பிற நதிகளிலிருந்தும் தண்ணீரை வாங்குவதற்கு நாங்கள் இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டி வரும்' என்ற கருத்தை அவர்களிடம் நேரடியாகச் சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்வதற்கு எது தடையாக இருந்தது என்பது என்னுடைய தாழ்மையான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒரு நிமிடம். இப்போது நாம் தண்ணீர் பெற வேண்டிய இடத்தில் இருக்கிறோம். நீங்கள் சொல்லியிருக்கக்கூடிய எல்லாப் பிரச்சினைகளும் புரிகின்றன. தண்ணீர் பெற வேண்டிய இடத்தில் நாம் இருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரேயொரு முறையாவது கேரள அரசாங்கத்தோடு—நீங்கள் போகவில்லையென்றாலும் பரவாயில்லை—அதிகாரிகளையாவது ஒரு குழுவாக அனுப்பி, 'இதிலே எங்களுக்கு உடன்பாடு கிடையாது; இந்தச் செலவுத் தொகையை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, மாற்று ஒப்பந்தம் போடலாம், முன்வர முடியுமா, முடியாதா' என்று நீங்கள் கேளுங்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையிலே கட்டாயமாக உங்களுக்கு நாங்கள் ஆதரவு தருவோம். குமரி மாவட்டத்தில் 2003-லிருந்து இருந்து வரக்கூடிய இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வும் கிடைக்கும். நெய்யாறு என்பது கடிதங்கள் மூலமாக வராது. ஒருவருக்கொருவர் நேரடியாகப் பேசுவதன் மூலமாகத்தான் வரும். மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்குத் தெரியாத விஷயமே இல்லை. எல்லாமே அவருக்குத் தெரியும். இருந்தாலும், அரசியல் சூழ்நிலையோ, என்னவோ, எங்களைப் போட்டு இப்படி வாங்கு, வாங்கு என்று வாங்கிக்கொண்டிருக்கிறார். இருந்தாலும் பரவாயில்லை. நமக்கு நெய்யாற்றிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படவேண்டும் என்பதை நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு, கொஞ்சம் நடவடிக்கை எடுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்தச் சட்டத்தை, Kerala Irrigation and Water Conservation Act-ஐக் கொண்டு வந்தது காங்கிரஸ்தான்; அந்தச் சட்டத்தின் அடிப்படையில்தான் இடதுசாரிகள் இந்தத் தீர்மானத்தை 18-10-2006-ல் போட்டார்கள் என்று சொன்னார்கள். காங்கிரஸ் கொண்டு வந்தார்கள்; அதை அப்படியே கிடப்பில் போட்டு வைத்தார்கள். நீங்கள் என்ன செய்திருக்க வேண்டும்? இப்படி பக்கத்து மாநிலத்திடம் river water-க்கு, தண்ணீருக்குக் கட்டணம் கேட்கிற சட்டம் இருக்கிறதே என்று சொல்லி, அந்தச் சட்டத்தை இடதுசாரிகள் இரத்துச் செய்திருந்தால் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதைச் செய்யவில்லை. (குறுக்கீடு) 2003-ல் போட்டதற்கு நீங்கள் 2006-ல்தானே சட்டம் போட்டீர்கள்? ஆனால் செய்யவில்லை.

பிற்பகல் 12—50

இரண்டாவது, எது தடை என்று கேட்கிறார்கள். நான் இப்போதுகூடச் சொல்கிறேன், எங்களுக்கு draft-ஐ அனுப்பி, அந்த draft-ஐ நாங்கள் இங்கே படித்துப் பார்த்து, எங்கள் அதிகாரிகளோடு consult செய்து, அதற்குப் பிறகு எங்களைப் பேச்சுவார்த்தைக்கு வா என்று கூப்பிட்டால் பரவாயில்லை. Draft-லே என்ன சொல்லி இருக்கிறார்கள் என்று நான் படித்துப் படித்துக் காண்பித்தேன். இங்கே நாங்கள் செய்து வைத்திருக்கிறோம், இங்கே வாருங்கள், இதை finalise செய்யலாம் என்று சொன்னால், half mind உடன் போய் நாம் அங்கொன்றும் செய்துவிட்டு வர முடியாது. ஆகையினால்தான் அவர்கள் draft அனுப்பட்டும் என்று இருந்தோம். கடைசியில் இப்போதுதான் draft அனுப்பியிருக்கிறார்கள். அதற்கு நாங்கள் எங்களுடைய பதிலை அனுப்பியிருக்கிறோம். அந்த பதிலின்மீது அவர்கள் விவாதத்திற்குக் கூப்பிட்டால் தமிழ்நாடு அரசு உடனடியாகச் செல்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளத்தில் காங்கிரஸ் அரசு இருந்த வரையில் தண்ணீர் வந்துகொண்டிருந்தது என்பது உண்மைதானா? இடதுசாரி கட்சிகள்

ஆட்சிக்கு வந்த பிறகுதான் தண்ணீர் வரவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது; இது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் போட்டது 2003-ல்; தண்ணீர் நின்றுபோனது 2004—ல். அதற்குப் பிறகு தண்ணீர் வரவில்லை.

செல்வி கே. பாலபாரதி: அதுமட்டுமல்ல, இடதுசாரி அரசில் 2006—ல் ஒரு தீர்மானம், தமிழ் மாநிலத்திற்கு நெய்யாற்றிலிருந்து தண்ணீர் விடுவது என்று போட்ட தீர்மானத்தை அங்கே இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சி கண்டித்து வெளிநடப்புச் செய்திருக்கிறது. ஒரு மாநிலத்திலே அது நடக்குமா என்றால், சட்டாயம் நடக்கும். ஏனென்றால், அந்த மாநில மக்களுடைய பிரதிநிதிகளாக இருப்பவர்கள் செய்வார்கள். அதில் நான் குற்றம் சொல்லவில்லை. நடந்திருக்கக்கூடிய உண்மைகளை நான் சொல்கிறேன். ஆகவே, நாம் அதற்குள்ளே போக வேண்டாம். நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவைத் தயவுசெய்து அனுப்புங்கள் என்று நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் அனுப்பிய அந்த draft மீது நம்முடைய கருத்தைத் தெரிவித்து நாங்கள் கேரள அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். ஏனென்றால், அவர்கள் opinion, நம்முடைய opinion இரண்டும் போய்விட்டது. அது குறித்து பேசுவதற்கு வாருங்கள் என்று நாளைக்கு அழைத்தால்கூட, அதிகாரிகள் அல்ல, நானே போவதற்குத் தயாராக இருக்கிறேன். காரணம், நமக்குப் பிரச்சினை தீரவேண்டும் என்பதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், கேரள அரசு கூப்பிட்டால், அங்கு சென்று பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த பதிலுக்கு நன்றி. நிச்சயமாக நீங்கள் சென்றால், வெற்றியோடு திரும்புவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சியின் சார்பில் ஒன்றும் முன்னறிவிப்புக் கொடுக்கவில்லையே! என்ன கேட்கப்போகிறீர்கள்?

திரு. ஓ. பன்னீர்செல்வம்: கொடுக்கவில்லை. பொதுப் பணித் துறை அமைச்சரிடம் ஒரு சிறிய விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2008 நவம்பர் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நெய்யாறு பிரச்சினை குறித்து நீண்ட, நல்ல விளக்கத்தை இங்கே தந்தார்கள். கேரள அரசு 2003 ஆம் வருடம் Kerala Irrigation and Water Conservation Act என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. 2006 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், 2003 ஆம் ஆண்டு கொண்டு வந்த கேரள சட்டத்திற்கு ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்தார்கள். அதாவது, அந்தச் சட்டத்தின் அடிப்படையில் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தத் திருத்தச் சட்டத்தின்மூலம், முல்லைப் பெரியாறினுடைய நீர் மட்டத்தை 136 அடி அளவுக்கு, அதனுடைய உயரத்தை நிர்ணயித்து ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். உடனே மாண்புமிகு அம்மா அவர்கள், ஏற்கெனவே முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் உச்ச நீதிமன்றத்தில் ஒரு நல்ல தீர்ப்பைப் பெற்றுத் தந்தார்கள். மத்திய அரசினுடைய அனைத்து ஆய்வுகளும் முடிக்கப்பட்டு, மத்திய நீர்வளக் குழும ஆய்வுகள் முடிக்கப்பட்டு, 136 அடியிலிருந்து 142 அடியாக அதனுடைய உயரத்தை, நீர் மட்டத்தின் உயரத்தை அதிகரித்து, தண்ணீரைத் தேக்கிக்கொள்ளலாம் என்ற ஒரு நல்ல தீர்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்றுத் தந்தார்கள். பெற்றுத் தந்ததற்குப் பின்னால் (குறுக்கீடு) சொல்லிவிடுகிறேன், கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நெய்யாறு சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருக்கும்போது நீங்கள் ஏன் முல்லைப் பெரியாறுக்குப் போய்க்கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடு) No, no, subject நெய்யாறு சம்பந்தமாக உள்ளதுதான். முல்லைப் பெரியாறுக்கு ஏன் வருகிறீர்கள்?

திரு. ஓ. பன்னீர்செல்வம்: முழுமையாகக் கேளுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டு கேரள அரசு கொண்டு வந்த சட்டத்தின் அடிப்படையில்தான் இந்தப் பிரச்சினையே, நெய்யாறு பிரச்சினையே ஓடிக்கொண்டிருக்கிறது. முழுமையாகக் கேட்டு முடியுங்கள். அதற்குள்ளே ஏன் அவசரப்படுகிறீர்கள்? பேசுகிறபோது இப்படிக் குறுக்கே பேசினால் எப்படிப் பேசமுடியும்? (குறுக்கீடு) நான் நன்றாகப் பார்த்துவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் கட்சியின் சார்பில் எதுவும் கொடுக்கவில்லை. இருந்தாலும் அனுமதித்திருக்கிறேன். நீங்கள் அதிக நேரம் எடுத்துக்கொள்ள முடியாது. சீக்கிரம் சொல்லுங்கள்.

2008 நவம்பர் 11]

பிற்பகல் 12-55

திரு. ஓ. பன்னீர்செல்வம்: 2006 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து முல்லைப் பெரியாறு அணை உயரத்தை 136 அடியாக அவர்கள் நிர்ணயம் செய்தார்கள். அந்தத் திருத்தச் சட்டத்தையும் எதிர்த்து—2003 ஆம் ஆண்டே கேரள அரசு கொண்டு வந்த சட்டத்தையும் எதிர்த்து, அந்தச் சட்டம் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு முரணான சட்டம், அந்தச் சட்டத்தைச் செயலற்றதாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். அந்த வழக்கு இப்போது என்ன நிலையில் இருக்கின்றது என்பதைத்தான் இன்றைக்கு ஆளுகின்ற அரசின் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகின்றேன், போதுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒன்றும் இல்லை. எல்லோரும் பேசினார்கள், காங்கிரஸ் கட்சியினர் பேசினார்கள், மார்க்சிஸ்ட் கட்சியினர் பேசினார்கள். நம்முடைய அம்மாவைப்பற்றிச் சொல்லிவிடலாமே என்கிற ஓர் ஆதங்கம்தான் அவருக்கு. வேறு ஒன்றும் இல்லை. பரவாயில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகச் சொன்னார்கள். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பன்னீர்செல்வம் அவர்கள் சொன்னார்கள் (குறுக்கீடு) அவர் சொன்னார்; அந்தக் கேரள அரசாங்கம் சட்டம் கொண்டு வந்தார்களே 2003-லே, அதிலே ஒரு amendment கொண்டு வந்துதான் பெரியாறை இணைத்தார்கள். நாம் அதை challenge பண்ணியிருக்கிறோம். எதை? அந்தச் சட்டத்தை, அந்த amendment-ஐ. ஆகையினாலே, ஒரு பக்கம் challenge பண்ணிவிட்டு, இன்னொரு பக்கம் போக முடியாது. அவரே கேட்டார், அப்போது நாம் கொண்டு வந்தோமே, அது என்னவென்று கேட்டார். அது challenge பண்ணி, இப்போது கோர்ட்டிலே இருக்கிறது. அடுத்த வாரம் வழக்கு வருகிறது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிப்ரவரி மாதம் கொண்டு வந்த அந்தத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து உடனடியாக உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றோம். ஆனால், நெய்யாற்றுப் பிரச்சினைக்கு அவர்கள் தீர்மானம் நிறைவேற்றியது 2006 ஆம் ஆண்டு 10-வது மாதம். அதற்குப் பின்னாலே நீங்கள் அந்த வழக்கைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தீர்களா என்றுதான் கேட்க விரும்புகின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: என்னது, யார்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பின்னாலேயிருந்துகொண்டு யாரும் comment அடிக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: எல்லாவிதமான முறைப்படி, அரசு எவ்வளவு வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பேசுகிறவர்கள் யாராக இருந்தாலும் தைரியமாகப் பேசலாம், நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறேன். ஆனால், உங்களைவிட பின்னாலேயிருந்து பேசி செய்ததிலே எல்லாம் நான் இந்த அவையிலே Doctorate வாங்கியவன் இப்போது பொறுப்பிலே இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் உறுப்பினர்களை முதலில் அவரவர்கள் சீட்டிலே போய் உட்காரச் சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: அதை நான் கட்டுப்படுத்துகிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் அவையிலே ஒழுங்காக இருக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்போது பின்னாலேயிருந்து comment அடித்துக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது பின்னாலேயிருந்து comment அடிக்கிறார்கள். உறுப்பினர்களை அவரவர்கள் சீட்டிலே போய் உட்காரச் சொல்லுங்கள், முதலிலே. (குறுக்கீடுகள்)

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) இன்று எடுத்துக்கொள்ளப்படவிருந்த உறுப்பினர்களின் மூன்று அறிவிப்புகளை நாளை எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதுரை நகரில் இயக்கப்படும் அரசுப் போக்குவரத்துக் கழகத் தாழ்தள பேருந்துகளில், திருச்சி, விருதுநகரில் உள்ள கட்டணத்தைவிட அதிகமாக வசூலிப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. என். நன்மாறன், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்

மாண்புமிகு திரு. துரைமுருகன்: என்னது, யார்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பின்னாலேயிருந்துகொண்டு யாரும் comment அடிக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: எல்லாவிதமான முறைப்படி, அரசு எவ்வளவு வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பேசுகிறவர்கள் யாராக இருந்தாலும் தைரியமாகப் பேசலாம், நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறேன். ஆனால், உங்களைவிட பின்னாலேயிருந்து பேசி செய்ததிலே எல்லாம் நான் இந்த அவையிலே Doctorate வாங்கியவன் இப்போது பொறுப்பிலே இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் உறுப்பினர்களை முதலில் அவரவர்கள் சீட்டிலே போய் உட்காரச் சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: அதை நான் கட்டுப்படுத்துகிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் அவையிலே ஒழுங்காக இருக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்போது பின்னாலேயிருந்து comment அடித்துக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது பின்னாலேயிருந்து comment அடிக்கிறார்கள். உறுப்பினர்களை அவரவர்கள் சீட்டிலே போய் உட்காரச் சொல்லுங்கள், முதலிலே. (குறுக்கீடுகள்)

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) இன்று எடுத்துக்கொள்ளப்படவிருந்த உறுப்பினர்களின் மூன்று அறிவிப்புகளை நாளை எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதுரை நகரில் இயக்கப்படும் அரசுப் போக்குவரத்துக் கழகத் தாழ்தள பேருந்துகளில், திருச்சி, விருதுநகரில் உள்ள கட்டணத்தைவிட அதிகமாக வசூலிப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. என். நன்மாறன், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி

2008 நவம்பர் 11] [பேரவைத் தலைவர்]

சார்பாகவும், திரு. சி. ஞானசேகரன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாகவும், திரு. தி. வேல்முருகன், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகவும் விதி 56-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதைத் 'தகவல் கோரல்' என்ற முறையில் நாளை எடுத்துக்கொள்ளலாம் என்று நினைக்கின்றேன். அதேபோல், தமிழகத்தில் நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசி பிற மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படுவது குறித்தும், வால்பாறை மற்றும் செங்கல்பட்டு தொகுதிகளில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்தும் கொடுத்துள்ள கவன ஈர்ப்புகளும் நாளை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சார்பாகவும், திரு. சி. ஞானசேகரன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாகவும், திரு. தி. வேல்முருகன், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகவும் விதி 56-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதைத் 'தகவல் கோரல்' என்ற முறையில் நாளை எடுத்துக்கொள்ளலாம் என்று நினைக்கின்றேன். அதேபோல், தமிழகத்தில் நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசி பிற மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படுவது குறித்தும், வால்பாறை மற்றும் செங்கல்பட்டு தொகுதிகளில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்தும் கொடுத்துள்ள கவன ஈர்ப்புகளும் நாளை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் *1-00*

(ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2008* ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

சட்டமன்றம் LEGISLATURE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 1-00

(ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஈ) தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச்*

(இ) தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஈ) தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச்*

சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(உ) பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(உ) பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2008 நவம்பர் 11] [திரு. என். சுரேஷ் ராஜன்]

"2008 ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஊ) தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

"2008 ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஊ) தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(எ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(எ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(எ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஏ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஏ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை, மீண்டும் நாளை (12-11-2008) புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள் (திரைப்படம்) துறையின் 4-3-2008 ஆம் நாளிட்ட 318 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2. யாதொரு வணிகர், கடுகு, சோம்பு மற்றும் வெந்தயத்தின் மொத்த வியாபாரத் தொகை ஆண்டொன்றுக்கு ரூபாய் முந்நூறு கோடிக்கு மேற்படாத அளவிற்கு விற்பனையின்மீது வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 5-5-2008 ஆம் நாளிட்ட 43 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை, மீண்டும் நாளை (12–11–2008) புதன்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள் (திரைப்படம்) துறையின் 4–3–2008 ஆம் நாளிட்ட 318 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2. யாதொரு வணிகர், கடுகு, சோம்பு மற்றும் வெந்தயத்தின் மொத்த வியாபாரத் தொகை ஆண்டொன்றுக்கு ரூபாய் முந்நூறு கோடிக்கு மேற்படாத அளவிற்கு விற்பனையின்மீது வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 5–5–2008 ஆம் நாளிட்ட 43 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

3. திருநெல்வேலி, முதன்மை மாவட்ட நீதிபதி திரு. கே. பாஸ்கரன் அவர்களை சென்னையிலுள்ள, தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவராக நியமித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (இ2) துறையின் 22–5–2008 ஆம் நாளிட்ட (3டி) 20 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

4. (i) யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (ii) யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, கட்டுமான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் பொருட்களைப் பயன்படுத்துவதற்குரிய உரிமைக்காகச் செலுத்தத்தக்க வரியினைக் குறைத்தது குறித்தும்; (iii) யாதொரு வணிகர், 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் நான்காவது விவர அட்டவணையின்கீழ் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள சில இனங்களின் கொள்முதல்மீது செலுத்தத்தக்க வரியினை விலக்களித்தது குறித்தும்; (iv) யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, வணிகப் பெயர் கொண்ட ஆல்கஹால் அல்லாத பானங்கள், பானங்கள், ஐஸ்கிரீம் ஆகியவற்றின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; மற்றும் (v) யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, தமிழ்நாடு மாநிலத்திற்குள் பதிவு செய்யப்பட்டுள்ள, பயன்படுத்தப்பட்ட மோட்டார் வண்டிகளின் விற்பனை குறித்து, வர்த்தக வண்டிகள், இருசக்கர வண்டிகள் மற்றும் மூன்று சக்கர வண்டிகள் உள்ளிட்ட மோட்டார் வண்டிகளின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும், வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின், 1–4–2008 ஆம் நாளிட்ட 36 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

5. வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையினால் 21–8–1974 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்-II—ல்

வெளியிடப்பட்ட II(1)/வ.வ.அ.நி/1021/74 ஆம் எண் அறிவிக்கையினை இரத்துச் செய்தும்; (ii) சென்னை–93, சாலிகிராமம், சேவா சமாஜம் சிறுவர் இல்லத்தினால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியினை விலக்களித்தது குறித்தும் வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 13–3–2008 ஆம் நாளிட்ட 27 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

6. (1) வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையினால் 5–3–1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-II-ல் வெளியிடப்பட்ட II(1)/வ.வ.அ.நி/22(a–8)/97 ஆம் எண் அறிவிக்கை, 27–3–1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-II-ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் II(1)/வ.வ. 140(d–8)/99 ஆம் எண் அறிவிக்கை மற்றும் 27–3–1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-II-ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் II(1)/வ.வ. 140(e–8)/99 ஆம் எண் அறிவிக்கை ஆகியவற்றை ரத்து செய்தது குறித்தும்; (2) தங்க நகை ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மத்திய அரசின் தங்கம் ஈடுசெய்யும் திட்டத்தின்கீழ் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தங்கத்தை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு கனிமங்கள் மற்றும் உலோகங்கள் வர்த்தக நிறுவனம் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ள 14 வணிக வங்கிகளினால் தங்க நகை ஏற்றுமதியாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட தங்கத்தின்மீது வங்கிகள் மற்றும் மேற்படி நிறுவனம் செலுத்தத்தக்க வரியினை விலக்களித்தது குறித்தும், (3) தங்க நகை ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மத்திய அரசின் தங்கம் ஈடுசெய்யும் திட்டத்தின்கீழ் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தங்கத்தை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு கனிமங்கள் மற்றும் உலோகங்கள் வர்த்தக நிறுவனம் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ள 14 வணிக வங்கிகளிடமிருந்து தங்க நகை ஏற்றுமதியாளர்கள் வாங்கும் தங்கத்தின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும் வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 31–10–2007 ஆம் நாளிட்ட 178 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு

மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

7. திருவாளர்கள் பி.எம்.டபிள்யு. இந்தியா (தனியார்) நிறுவனம் தயாரித்த பயணிகள் கார்கள் மற்றும் பாகங்களின் பன்மாநில விற்பனைமீது செலுத்தத்தக்க வரியினை அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு ஒரு சதவீதமாக இருக்கவேண்டும் என்பது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (சி1) துறையின் 14—3—2008 ஆம் நாளிட்ட 29 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

8. யாதொரு வணிகர், காஞ்சிபுரம் மாவட்டம், மேல்மருவத்தூரிலுள்ள திருவாளர்கள் ஆதிபராசக்தி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு விற்பனை செய்யும் மருத்துவமனை தொடர்பான அனைத்து வகை சாதனங்கள், அறைக்கலன்கள் மற்றும் மருத்துவப் பொருட்களின்மீது செலுத்தத்தக்க வரியினைக் குறைத்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 23—5—2008 ஆம் நாளிட்ட 51 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

9. யாதொரு வணிகர், அதிவேக டீசல் எண்ணெய் விற்பனையின் மீது செலுத்தத்தக்க வரியினை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள அளவிற்கு குறைத்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 5—6—2008 ஆம் நாளிட்ட 57 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

10. அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு திருவாளர்கள் ஃபோர்டு இந்தியா லிமிடெட் நிறுவனத்தால் தளவாடம் மற்றும் இயந்திரம் நீங்கலாக உயர் வேகம் கொண்ட டீசல் எண்ணெய், இலகு ரக டீசல் எண்ணெய் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு அல்லாத பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் பெயர்ச்

சீட்டுகள் உட்பட பொருட்களை கொள்முதல் செய்த யாதொரு பொருட்கள் மற்றும் சில பொருட்கள் கொண்டு பயணியர் கார்கள் மற்றும் அவற்றின் பாகங்கள் தயாரிப்பதற்கு பயன்படுத்துவதற்காகவும் மற்றும் அத்தகைய தயாரிப்பு தொடர்புடையதாக ஒன்று சேர்ப்பதற்கு, சிப்பமாக்குவதற்கும் அல்லது பெயர்ச் சீட்டு ஒட்டுவதற்கு பயன்படுத்துவதற்காகவும் அவற்றின்மீது செலுத்தப்பட்ட வரியைத் திருப்பிக் கொடுப்பதன் வாயிலாகவும் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும் வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி1) துறையின் 23–5–2008 ஆம் நாளிட்ட 49 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

11. யாதொரு வணிகர், சென்னையிலுள்ள திருவாளர்கள் இந்திய மின்கட்டமைப்புக் கழகத்திற்கு தமிழ்நாடு மாநிலத்தின் மின் அனுப்புகை ஏற்பாடு முறையில் பயன்படுத்துவதற்காக பெட்ரோல், டீசல் மற்றும் சிமெண்ட் நீங்கலாக விற்பனை செய்யப்படும் யாதொரு பொருள்களின்மீது அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு செலுத்தத்தக்க வரியினை குறைத்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 24–6–2008 ஆம் நாளிட்ட 63 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

12. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டம், 30–7–2008 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என அறிவித்தது குறித்து சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந3) துறையின் 30–7–2008 ஆம் நாளிட்ட 92 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/2008) 20 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

13. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (6) துறையின் 22–4–2008 ஆம் நாளிட்ட 21 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு

மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

14. 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (தன் சொந்த நுகர்வுக்காக வைத்திருத்தல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (3) துறையின் 17–8–2007 ஆம் நாளிட்ட 65 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

15. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் நான்காம் விவர அட்டவணையின்கீழ் குறிப்பிட்டுள்ள சில இனங்களுக்கு, அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள சில நிபந்தனைகளுக்குட்பட்டு சமையல் பொருள்களை ஓட்டல்கள், உணவு விடுதிகள், இனிப்புக் கடைகள், கிளப்புகள், உணவு தயாரிப்பகங்கள் மற்றும் ஏனைய சாப்பிடுமிடங்கள், அவற்றைக் கொள்முதல் செய்யும்போது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 26–8–2008 ஆம் நாளிட்ட 80 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

16. அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு திருவாளர்கள் ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிட்டெட் நிறுவனத்தால் தளவாடம் மற்றும் இயந்திரம் நீங்கலாக உயர்வேகம் கொண்ட டீசல் எண்ணெய், இலகு ரக டீசல் எண்ணெய் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு அல்லாத பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் பெயர்ச் சீட்டுகள் உட்பட பொருட்களை கொள்முதல் செய்த யாதொரு பொருட்கள் மற்றும் சில பொருட்கள் கொண்டு பயணியர் கார்கள் மற்றும் அவற்றின் பாகங்கள் தயாரிப்பதற்கு பயன்படுத்துவதற்காகவும் மற்றும் அத்தகைய தயாரிப்பு தொடர்புடையதாக ஒன்று சேர்ப்பதற்கு, சிப்பமாக்குவதற்கும் அல்லது பெயர்ச் சீட்டு ஒட்டுவதற்கு பயன்படுத்துவதற்காகவும் அவற்றின்மீது செலுத்தப்பட்ட வரியைத் திருப்பிக் கொடுப்பதன் வாயிலாகவும் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும் வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி1) துறையின் 7–11–2007 ஆம் நாளிட்ட 184 ஆம் எண்

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

17. யாதொரு வணிகர், வணிகப் பெயரில் விற்பனை செய்யப்பட்ட பன்கள், ரஸ்குகள், பிஸ்கட்டுகள் மற்றும் கேக்குகள் உட்பட பேக்கரி பொருள்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 30–7–2008 ஆம் நாளிட்ட 73 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

18. யாதொரு வணிகர், காகிதக் கூம்புகள் மற்றும் குழாய்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வேறுபாட்டுத் தொகையை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவுக்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (டி.2) துறையின் 20–3–2008 ஆம் நாளிட்ட (2டி) 48 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

19. திருவாளர்கள் ஆட்ஸ் மல்டி கிளீன் லிமிடெட் நிறுவனத்தால் செலுத்தத்தக்க வரித் தொகையை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவுக்கு தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (டி.2) துறையின் 16–4–2008 ஆம் நாளிட்ட (2டி) 54 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

20. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 2–7–2008 ஆம் நாளிட்ட 12 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

21. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மது (மொத்த விற்பனையில் வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து. உள். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 4-8-2008 ஆம் நாளிட்ட 54 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

22. 1964 ஆம் ஆண்டு இந்து சமய அறநிறுவனங்கள் (அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்) பணி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து தமிழ் வளர்ச்சி. அறநிலையங்கள் மற்றும் செய்தித் (அ.நி.4-2) துறையின் 16-6-2008 ஆம் நாளிட்ட 224 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண்1/2008)

2. 2008 ஆம் ஆண்டு சென்னை நகரக் காவல் (சென்னை நகரத்தின் புறநகர் பகுதிகளுக்கு நீட்டித்தல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2008)

3. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2008)

4. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2008)

5. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2008)

21. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மது (மொத்த விற்பனையில் வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 4–8–2008 ஆம் நாளிட்ட 54 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

22. 1964 ஆம் ஆண்டு இந்து சமய அறநிறுவனங்கள் (அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்) பணி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (அ.நி.4–2) துறையின் 16-6-2008 ஆம் நாளிட்ட 224 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண்1/2008)

2. 2008 ஆம் ஆண்டு சென்னை நகரக் காவல் (சென்னை நகரத்தின் புறநகர் பகுதிகளுக்கு நீட்டித்தல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2008)

3. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2008)

4. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2008)

5. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2008)

6. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2008)

7. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2008)

8. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/2008)

9. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின்கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/2008)

10. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 10/2008)

11. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

12. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

13. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

14. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

15. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS